உ

கணபதி துணை.

சேரர் பரம்பரையினராகிய

ஐயனாரிதனாரருளிச் செய்த

# புறப்பொருள் வெண்பாமாலை மூலமும்

## சாமுண்டி தேவநாயகரியற்றிய உரையும்.

இவை

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

## டாக்டர் உ. வே. சாமிநாதையரால்


சென்னை:

கேஸரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன.

நான்காம் பதிப்பு.

பவஹு மார்கழிமீ

1934.



*Copyright Registered.*]


[விலை ரூ. **1—9—0**.

K.C. KAMALIAH'S COLLECTION
REFERENCE ONLY



# இப்புத்தகத்திலடங்கியவை.

பக்கம்

1. இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூல்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி .... .... .... iv
2. முகவுரை .... .... .... v
3. பொருளமைப்பு .... .... .... 1—20
4. புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும் க - கசுஉ
கடவுள் வாழ்த்து .... .... .... க
சிறப்புப்பாயிரம் .... .... .... ,,
க. வெட்சிப்படலம் .... .... .... உ
உ. கரந்தைப்படலம் .... .... .... கஉ
ந. வஞ்சிப்படலம் .... .... .... கசு
ச. காஞ்சிப்படலம் .... .... .... ந0
ரு. நொச்சிப்படலம் .... .... .... சஉ
சு. உழிஞைப்படலம் .... .... .... சசு
எ. தும்பைப்படலம் .... .... .... சு0
அ. வாகைப்படலம் .... .... .... எந
சு. பாடாண்படலம் .... .... .... அஅ
க0. பொதுவியற்படலம் .... .... .... ககக
கக. கைக்கிளைப்படலம் .... .... .... கந0
ஆண்பாற்கூற்று .... .... .... ,,
பெண்பாற்கூற்று .... .... .... கநச
கஉ. பெருந்திணைப்படலம் .... .... .... கநசு
பெண்பாற்கூற்று .... .... .... ,,
இருபாற்பெருந்திணை .... .... .... கசஎ
ஒழிபு .... .... .... கருரு
5. சூத்திர அகராதி .... .... .... கசுந
6. துறையகராதி .... .... .... ,,
7. கொளுவின் முதற்குறிப்பகராதி .... .... கசுஎ
8. வெண்பா முதலியவற்றின் முதற்குறிப்பகராதி .... களக
9. இடம்விளங்கா மேற்கோள்கள் .... .... களசு
10. அரும்பத முதலியவற்றின் அகராதி .... களஎ-உகசு

# இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூல்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அகநா - அகநானூறு
அடியார் - அடியார்க்குநல்லாருரை
ஆசார - ஆசாரக்கோவை
இராமா - இராமாயணம்
இ-வி - இலக்கண விளக்கவுரை
இ-ள் - இதன்பொருள்
இளம் - இளம்பூரணருரை
இறை - இறையனாரகப்பொருள்
உத்தர - உத்தரகாண்டம்
எ-று - என்றவாறு
என்-னின் - என்பது சூத்திரம் என்னுதலிற்றோவெனின்
ஐங்குறு - ஐங்குறுநூறு
கம்ப - கம்பராமாயணம்
கலி - கலித்தொகை
கலிங்க - கலிங்கத்துப்பரணி
கள, களவழி - களவழி நாற்பது
காஞ்சிப் - காஞ்சிப்புராணம்
குறள் - திருக்குறள்
குறிஞ்சி - குறிஞ்சிப்பாட்டு
குறுந் - குறுந்தொகை
கூர்ம - கூர்மபுராணம்
கொ - கொளு
சிலப் - சிலப்பதிகாரம்
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை
சீவக - சீவகசிந்தாமணி
சூ - சூத்திரம்
சூளா - சூளாமணி
செய் - செய்யுள்
சே - சேனாவரையருரை
தக்க, தக்கயாக - தக்கயாகப்பரணி
தஞ்சை - தஞ்சைவாணன்கோவை
திரி - திரிகடுகம்
திருச்சிற் - திருச்சிற்றம்பலக்கோவையார்
திருவாய் - திருவாய்மொழி
திருவிளை - திருவிளையாடற் புராணம்
திருவேங்கடத் - திருவேங்கடத்தந்தாதி
திவ் - திவ்யப்ரபந்தம்
தொல் - தொல்காப்பியம்
ந - நச்சினார்க்கினியருரை
நற் - நற்றிணை
நன் - நன்னூல்
நாற்கவி - நாற்கவிராச நம்பியகப்பொருள் விளக்கம்
நான்மணி - நான்மணிக்கடிகை
ப, பக் - பக்கம்
ப-செய் - பழைய செய்யுள்
பட், பட்டின - பட்டினப்பாலை
பதி - பதிகம்
பதிற் - பதிற்றுப்பத்து
பரி - பரிபாடல்
பரிமேல் - பரிமேலழகருரை
பழ - பழமொழி
பன்னிரு - பன்னிருபடலம்
பி-ம் - பிரதிபேதம்
பு-வெ - புறப்பொருள்வெண்பாமாலை
புறநா - புறநானூறு
பெருங் - பெருங்கதை
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்படை
பேர் - பேராசிரியருரை
பொருந - பொருநராற்றுப்படை
மணி - மணிமேகலை
மது, மதுரை - மதுரைக்காஞ்சி
மயிலை - மயிலைநாதருரை
மலைபடு - மலைபடுகடாம்
மாறன் - மாறனலங்காரம்
முருகு - திருமுருகாற்றுப்படை
முல்லை - முல்லைப்பாட்டு
மேற் - மேற்கோள்
யா-வி - யாப்பருங்கலவிருத்தி
வ-று - வரலாறு
வி - விசேடவுரை
வி-பாரதம் - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்
விரு - விருத்தியுரை
வெ - வெண்பா

# முகவுரை.

திருச்சிற்றம்பலம்.

என்னையப் பாவஞ்ச லென்பவ ரின்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாயுவ மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
அன்னையொப் பாயெனக் கத்தனொப் பாயென் னரும்பொருளே.

திருச்சிற்றம்பலம்.

(திருவாசகம்.)

தமிழ் இலக்கணம் ஐந்தனுட் பொருளின்பகுதியாகிய அகம் புறம் என்னும் இரண்டிற் புறப்பொருளுக்கு இலக்கியமாகிய வெண் பாக்களின் வரிசை (மாலை)யையுடையதாகலின் இந்நூல் புறப்பொருள் வெண்பாமாலை என்று பெயர்பெற்றது.

மேற்கூறிய பொருளின் பகுதியாகிய அகம்புறமென்னு மிரண்டனுள்,

அகமாவது: ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் தம்முட் கூடுகின்ற காலத்துப் பிறந்து அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவராலும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்த தெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பம்; இன்பம்பற்றி அகத்தே நிகழும் ஒழுக்கத்தை அகமென்றது ஆகுபெயர்; அகம் - உள்.

புறமாவது: மேற்கூறிய ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லாராலும் அனுபவித்து உணரப்பட்டு இஃது இவ்வாறு இருந்த தெனப் பிறர்க்குக் கூறப்படுவதாய் அறனும் பொருளுமென்னும் இயல்பினையுடையதாய்ப் புறத்தே நிகழும் ஒழுக்கம்; அறனும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறமென்றது ஆகுபெயர்; புறம் - வெளி.

இந்நூல் புறத்தின் இலக்கணமாகிய சூத்திரங்களையும், அவற்றின் இலக்கியமாகிய வெண்பாக்களையும், அவ்வெண்பாக்களின் கருத்தைத் தனித்தனியே புலப்படுத்தி ஒவ்வொன்றன் முன்னும் நிற்பனவாகிய *கொளுக்களையும் உடையது. கைக்கிளைப் படலத்தில் உள்ள இலக்கியச் செய்யுட்கள் மருட்பாக்களே. ஒழிபிலுள்ள வெண்பாக்களுக்கு முன்புமட்டும் கொளுக்கள் காணப்படவில்லை. 'யாவை? நிரையென முற்றுக்கிச் சூத்திரத்திற் கேற்பப் பொருளுரைப்பாருமுளர்' (1) என்று இந்நூலுரையாசிரியரும், 'ஒலிகடல் வையகத்து, நலிவுகண்டு நயப்பவிந்தன்று என்னும் வெண்பாமாலையுள் வாகைத் திணையுள் இறுதிச்சூத்திரத்தா னுணர்க' (சூ. கூ௩,உரை) என்று மாறனலங்கார உரையாசிரியரும் கூறுவனவற்றால் இந்நூலிலுள்ள கொளுக்கள் சூத்திரங்களெனவும் வழங்கப்படுமென்று தெரியவருகிறது.

இந்நூலாசிரியராகிய ஐயனாரிதனார் சேரர் பரம்பரையிலுதித்தவரென்பதும் இதற்கு முதனூல், ஆசிரியர் அகத்தியனாருடைய மாணாக்கர் பன்னிருவராலும் அருளிச்செய்யப்பட்ட பன்னிரு படலமென்பதும் "மன்னிய சிறப்பின்" என்னும் இந்நூற் சிறப்புப் பாயிரத்தாலும், "மெய்யி னார்தமிழ் வெண்பா மாலையுள், ஐய னாரிதனமர்ந்துரைத் தனவே" என்னும் இந்நூலின் கஅ-ஆம் சூத்திரத்தாலும், "பன்னிரு படல முதனூலாக வழிநூல் செய்த வெண்பாமாலை ஐய னாரிதனாரும் இது கூறினார்" (தொல். மரபு. சூ. கூச, பேர்.) என்பதனாலும் உணரப்படும்; பன்னிருபடலத்தின் வழிநூலென்பதற்கேற்ப வெட்சிப்படலமுதற் பெருந்திணைப்படலம் இறுதியாகப் பன்னிரண்டு படல உறுப்புக்களை இதன்பாற் காணலாம்.

ஐயனாரிதனார் தமிழ் நூல்களிற் சிறந்த அறிவு வாய்ந்தவர். சைவ சமயத்தினர். தாம் சேரர் மரபினராயினும் சோழபாண்டியர்களையும் ஒப்பச் சிறப்பித்தலும் சைவரேனும் திருமாலைப்பற்றி உரிய இடங்களிற் கூறுதலும் இவருடைய நடுநிலையின் உயர்வைப் புலப்படுத்துகின்றன.

இந்நூல் பெரும்பாலும் வெண்பாமாலையெனவே வழங்கப்படும். இதிலுள்ள வெண்பாக்களுட் பலவும் கொளுக்களுட் சிலவும் இளம்பூரணர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், புறநானூற்றுரையாசிரியர் முதலியவர்களால் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டும் உரைநடையாக எழுதப்பட்டும் உள்ளன.

* கொளு - கருத்து.

இலக்கண விளக்க உரையாசிரியர் இந்நூலைப் பெரும்பாலும் எடுத்தாண்டிருக்கின்றனர்.

இதனால், பண்டைக் காலத்திருந்த அரசர் பகைவருடைய பசுக்களைக் கவர்தல் முதலிய போர்முறையும், அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் முதலியோர் ஒழுகலாறும், பிறவும் புலப்படும். பெரும்பாலும் வீரத்தைப்பற்றிய செய்திகளே இதனுள் அமைந்துள்ளன. இதிற் கூறப்பட்ட யுத்தமுறை முதலியவற்றிற்கும் தொல்காப்பியப் புறத்திணையியலிற் கூறப்பட்டுள்ளவற்றிற்கும் ஆங்காங்குச் சிற்சில வேறுபாடுகள் காணப்படினும், சொன்முடிபும் பொருண்முடிபும் வேறுபடாமையின் 'மரபுநிலை திரியாதன' என்று பெரியோர் கூறுவர். புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல் உரைகளில் புறப்பொருட் செய்திகளுக்கு இலக்கணம் கூறவந்த அந்நூலாசிரியர்கள் இந்நூலிற் கூறப்பட்ட முறையைப் பின்பற்றியே எழுதுகின்றனர்.

இதற்கு முதனூலாகிய பன்னிருபடலச் சூத்திரங்களுட் சில யாப்பருங்கலவிருத்தியுரை, இலக்கணவிளக்கவுரை முதலிய பழையவுரைகளில் ஆங்காங்குக் காணப்படுகின்றனவேயன்றி, அந்நூல் முழுவதும் இக்காலத்து அகப்படாமையால் இதிலுள்ள சில திணைகளின் இலக்கணமும் துறைப்பெயர்கள் பலவற்றின் பொருட்காரணமும் புலப்படவில்லை. இந்நூலுரையாலும் அவை விளங்கவில்லை. ஆயினும், தொல்காப்பியப் புறத்திணையியற்குரிய உரைகளால் அவற்றுட் பெரும்பாலன நன்கு விளங்குகின்றன.

இந்நூலுறுப்புக்களாகிய பன்னிரண்டு படலத்தும் முறையே அமைந்த வெட்சி முதலிய திணைகளுள்,

(க) வெட்சித் திணையாவது:—பகைவருடைய பசுக்களைக் கவர்தல்; இதற்கு வெட்சிப் பூவையேனும், மாலையையேனும் சூடுதல் மரபு. வெட்சியென்பது ஒருவகை மரம்; இதன் மலர் செந்நிறமுடையது. இத்திணை வெட்சியரவம் முதலிய பத்தொன்பது துறைகளையுடையது. இதனை அகத்திணைகளுள் ஒன்றாகிய குறிஞ்சியின் புறனென்பர் தொல்காப்பியர்.

(உ) கரந்தைத் திணையாவது:—பகைவர் கவர்ந்த பசுக்களை மீட்டல்; இதற்குக் கரந்தைப்பூவைச் சூடுதல் உரியது. கரந்தையென்பது கொட்டைக் கரந்தையென்னும் பூடு; "நாகுமுலை யன்ன

நறும்பூங் கரந்தை " (புறநா. உகூக) என்பதனால் அதன்பூவின் இயல்பு பெறப்படும். இத்திணை கரந்தையரவ முதலிய பதின்மூன்று துறைகளையுடையது. இது வெட்சித்திணைக்கு மறுதலைத்திணை ; " வெட்சியுங் கரந்தையுந் தம்முண் மாறே " (பன்னிரு.) ; இது வெட்சிக் கரந்தையென்றும் கூறப்படுவதுண்டெனத் தெரிகிறது. கரந்தையென்று ஒருதிணை கொள்ளாது நிரைமீட்டலை வெட்சித்திணையுள் அடக்குவர் தொல்காப்பியர். அவர்கூறும் கரந்தையென்னும் பகுதி தன்னுறுதொழிலாக வேத்தியலின் வழுவிவந்த பொதுவியலைக் குறிக்கின்றது.

(ஈ) வஞ்சித்திணையாவது :—பகைவருடைய நாட்டைக் கொள்ள நினைந்து போர்செய்தற்கு மேற்செல்லல். இதற்கு வஞ்சிப் பூவைச் சூடுதல் உரித்து ; வஞ்சியென்பது ஒருவகைக் கொடி ; இப்பெயரினதாகிய மரமொன்றும் உண்டு. இத்திணை வஞ்சியரவ முதலிய இருபது துறைகளையுடையது ; இதனை மண்ணசையால் மேற்சேறலென்றும், முல்லைத்திணையின் புறனென்றும் கூறுவர் தொல்காப்பியர்.

(ச) காஞ்சித்திணையாவது :—போர்செய்தற்கு வந்த பகைவர்க்கு எதிர்சென்று ஊன்றுதல் ; இதற்குக் காஞ்சிப் பூவைச் சூடுதல் உரித்து ; காஞ்சியென்பது ஒரு மரம். இத்திணை காஞ்சியெதிர்வு முதலிய இருபத்தொரு துறைகளையுடையது ; இது வஞ்சித்திணைக்கு மறுதலைத்திணை ; " வஞ்சியுங் காஞ்சியுந் தம்முண் மாறே " (பன்னிரு.) ; இத்திணை வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றுங் குறிப்பினதென்றும் பெருந்திணையின் புறமென்றும் உரைப்பர் தொல்காப்பியர்.

(ரு) நொச்சித்திணையாவது :—தம்முடைய மதிலைக் காத்தல். இதற்கு நொச்சிப்பூவைச் சூடுதல் உரித்து. இத்திணை மறனுடைப்பாசி முதலிய எட்டுத் துறைகளையுடையது; நொச்சியென ஒருதிணை கொள்ளாமல் இதனை உழிஞைத் திணையுள் அடக்குவர் தொல்காப்பியர்.

(சு) உழிஞைத் திணையாவது :—பகைவருடைய மதிலை வளைத்துக்கொள்ளுதல். இதற்கு உழிஞைப்பூவைச் சூடுதல் உரித்து ; உழிஞையென்பது ஒருவகைக் கொடி. உழிஞையைக் கொற்றானென்றும் அது குடநாட்டார் வழக்கென்றும் கூறுவர் புறநானூற்றுரையாசிரியர். இத்திணை குடைநாட்கோள் முதலிய இருபத்தெட்டுத்

துறைகளையுடையது. இதுவும் நொச்சித்திணையும் மறுதலைத்திணை; "உழிஞையு நொச்சியுந் தம்முண் மாறே" (பன்னிரு.); இதனை மருதத்தின் புறனென்பர் தொல்காப்பியர்.

(எ) தும்பைத் திணையாவது:—பகைவரோடு போர் செய்தல்; இதற்குத் தும்பைப் பூவைச் சூடுதல் உரித்து; தும்பை ஒரு வகைச் செடி. "பொருதல் தும்பை புணர்வ தென்ப" (பன்னிரு.); இது தும்பையரவ முதலிய இருபத்துமூன்று துறைகளையுடையது. தமது வலியினை உலகம் மீக்கூறுதலே தமக்குப் பொருளாகக் கருதிப் பொருவது தும்பையென்றும் இதனை நெய்தற்றிணையின் புறனென்றும் சொல்வர் தொல்காப்பியர்.

(அ) வாகைத்திணையாவது:—பகைவரை வெல்லுதல். இதற்கு வாகைப்பூவைச் சூடுதல் உரித்து; வாகையென்பது பாலை நிலத்துக்குரியதொரு மரம். இத்திணை வாகையரவம் முதலிய முப்பத்திரண்டு துறைகளையுடையது. அந்தணர் முதலிய நான்கு வருணத்தோரும், அறிஞரும், தாபதர் முதலியோரும் தம்முடைய கூறுபாடுகளை மிகுத்தல் வாகைத் திணையென்றும், இதனைப் பாலைத் திணையின் புறனென்றும் கூறுவர் தொல்காப்பியர்.

(கூ) பாடாண்திணையாவது:—ஒருவனுடைய கீர்த்தி வலி கொடை தண்ணளி முதலியவற்றை ஆராய்ந்து சொல்லுதல். இது வாயினிலை முதலிய நாற்பத்தேழு துறைகளையுடையது. இதனைக் கைக்கிளைத் திணையின் புறனென்பர் தொல்காப்பியர். பாடாணென்பது பாடப்படுகின்ற ஆண்மகனுடைய ஒழுகலாறென்னும் பொருளையுடையது; இதனை வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையென்பர் நச்சினார்க்கினியர்.

(கo) பொதுவியலாவது:—மேற்கூறிய புறத்திணைகட்கெல்லாம் பொதுவாயுள்ளனவும் அவற்றிற் கூறுதொழிந்தனவுமாகிய இலக்கணங்களைக் கூறுவது. இது நான்கு பகுப்புக்களையும் போர்தை முதலிய முப்பத்தேழு துறைகளையுமுடையது.

(கக) கைக்கிளைத் திணையாவது:—ஒருமருங்கு பற்றிய கேண்மை; இஃது ஆண்பாற்கூற்று பெண்பாற்கூற்று என்னும் இரண்டு பகுப்புக்களையும் காட்சி முதலிய பத்தொன்பது துறைகளையுமுடையது. பிரமமுதலிய எண்வகை மணத்தினுள்ளே

ஆசுரம் இராக்கதம் பைசாசம் என்னும் இம்மூன்றும் இதற்குரியன வென்பர் தொல்காப்பியர்.

(கஉ) பெருந்திணையாவது :—பொருந்தாக் காமம். இஃது ஆண்பாற்கூற்று, இருபாற் பெருந்திணையென்னும் இரண்டு பகுப்புக்களையும் செலவழுங்கல் முதலிய முப்பத்தாறு துறைகளையும் உடையது. கைக்கிளையும் அகனைந்திணையுமாகிய ஆறு திணைகளும் பிரம முதலிய எண்வகை மணத்தினுள்ளே ஆசுரம் இராக்கதம் பைசாசம் காந்தருவமென்னும் நான்கு மணங்களைப் பெறத் தான் ஒன்றுமே பிரமம் பிராசாபத்தியம் ஆரிடம் தெய்வமென்னும் நான்கு மணம்பெற்று நடத்தலான், எல்லாவற்றினும் பெரிதாகிய திணையென்று பொருட்காரணங்கூறுவர் நச்சினார்க்கினியர். இத்திணையிற் கூறப்படும் செய்திகளிற் சிலவற்றிற்கும் நற்காமத்துக்குரிய செய்திகளிற் சிலவற்றிற்கும் உள்ள வேறுபாடு நுணுகி ஆராய்ந்து அறிதற்குரியது.

ஒழிபு :—பாடாண் பகுதியிலும் வாகையிலும் கூறப்படா தொழிந்த புறத்துறைகளை யுணர்த்துவது ; கொடுப்போரேத்திக் கொடாஅர்ப்பழித்தலென்னும் துறை முதலிய பதினெட்டுத் துறைகளையுடையது.

இந்நூலிலுள்ள கக-ஆம் சூத்திரத்தினும், " உழிஞையு நொச்சியுந் தம்முண் மாறே " (பன்னிரு.) என்பது முதலியவற்றானும் உழிஞைப் படலத்திற்குப்பின் நிற்றற்குரியதாக அறியப்படும் நொச்சிப்படலம் எல்லாப் பிரதிகளிலும் அதற்கு முன்பே காணப்பட்டமையால், அவ்வாறே பதிப்பிக்கப்பட்டது.

" வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
அதுவளைத்த லாகு முழிஞை—அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம் "

என்னும் பழைய செய்யுளினும், ' இவ்வாறன்றி இவற்றினிடையிடை கரந்தை நொச்சி என்பவற்றையும் இறுதியிற் பொதுவியல் கைக்கிளை பெருந்திணை என்பவற்றையுங்கூட்டிப் பன்னிரு படலமாக்கி அவற்றிற்கு இருபது, பதினாறு, இருபத்தொன்பது, இருபத்திரண்டு, ஒன்பது, இருபத்தோன்பது, இருபத்துநாலு, முப்பத்துமூன்று, நாற்பத்தெட்டு, முப்பத்தேழு, பத்தொன்பது, முப்பத்தாறு எனத்

திணையுந் துறையுமாக விரித்து வெண்பாமாலையாகிய வழிநூலுள் ஐயனாரிதனார் கூறியதூஉம்' (மாறனலங்காரம், சூ. எக, உரை) என்பதிலும் நொச்சிக்குப்பின் உழிஞையை வைத்த முறையே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நூலின் உரை, பதவுரையாக மட்டும் இருப்பதன்றிப் பெரும்பாலும் அந்வயித்து எழுதப்படவில்லை. பதவுரையின் பின் முடிபுகள் பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன. அம்முடிபுகளிற் சில வினாவிடையிறுக்கு முறையில்அமைந்துள்ளன. இலக்கணக் குறிப்பு முதலியன மிகுதியாகக் காணப்படவில்லை. இது பெரும்பாலும் வடசொற்கள் பயின்றதாக அமைந்துள்ளது. இவ்வுரை இல்லையாயின் இந்நூலின் அருமைபெருமைகளும் பாடல்களின் பொருள்களும் நன்கு புலப்படா.

*இவ்வுரையை எழுதிய ஆசிரியர் †ஜயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர்கிழார் சாமுண்டி தேவநாயகரென்பவர். அவருடைய பெயரால் அவர் வேளாண்மரபினரென்பது பெறப்படுகிறது.

இந்நூலின் முதன் மூன்று பதிப்புக்கள் முறையே 1895, 1915, 1924-ஆம் வருஷங்களில் வெளியாயின. அவற்றைப்பற்றிய வரலாறுகள் அவ்வப்பதிப்புக்களின் முகவுரைகளால் விளங்கும்.

எனக்குக் கிடைத்த எட்டுப் பிரதிகளுள் திருநெல்வேலி ஹிந்து காலேஜ் தமிழ்ப் பண்டிதராகவிருந்த ஸ்ரீ சுவர்ணம் பிள்ளையவர்கள் தந்தபிரதியிலிருந்து வேறு பிரதிகளில் உரையில்லாமலிருந்த சில பகுதிகட்குரிய உரை கிடைத்தது. ஆழ்வார்திருநகரி ஸ்ரீ தே. லக்ஷ்மண கவிராயரவர்கள் வீட்டுப்பிரதியொன்றன் இறுதியில், "அ0ந- ஆம் ஹூ ஆவணிமீ கக-ஆம்உ வெண்பாமாலை எழுதிமுடிந்தது" என்பதும், ஆழ்வார்திருநகரிப் பிரதிகளுள் ஒவ்வொன்றன் முதலிலும்,

"தேனை நூமகிழ்த் தொடையலு மவுலியுந் திருக்கிளர் குழைக்காதும்
கானநூமலர்த் திருமுகச் சோதியுங் கயிரவத் துவர்வாயும்
மோன மாகிய வடிவமு மார்பமு முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரணதா மரையுமென் னயனம்விட் டகலாவே"

என்னும் அருமைச் செய்யுளும் வரையப்பட்டுள்ளன.

* செந்தமிழ், முதற்தொகுதி, பக்கம் 45-6 பார்க்க.
† தொண்டைநாடு.

இப்புத்தகத்துள் பிரதிபேதங்கள் அவ்வப் பக்கங்களின் கீழே குறிக்கப்பட்டுள்ளன. இந்நூல் வெண்பாக்கள் முதலியவை மேற்கோளாக எடுத்தாளப்பட்ட இடங்களும் ஒப்புமைப் பகுதிகள் முதலியனவும் அவ்வப்பக்கத்தில் அடிக்குறிப்புக்களாக விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலுள் ஒவ்வொரு படலத்திலும் கூறப்பட்ட பொருளமைப்புச் சுருக்கி வசனமாக எழுதி, படிப்போர்க்குப் பயனுறும் வண்ணம் இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டது.

வழக்கம்போல் இப்பதிப்பிற்கும் உடனிருந்து ஒப்புநோக்குதல் முதலிய உதவிகளைச்செய்த அன்பர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்படி செய்வித்தருளும்வண்ணம் ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

'தியாகராஜ விலாஸம்'
திருவேட்டீசுவரன்பேட்டை,
24-12-34.

இங்ஙனம்:
வே. சாமிநாதையர்.

# புறப்பொருள் வெண்பாமாலை

# பொருளமைப்பு.

## 1. வெட்சிப்படலம்.

ஓர் அரசன் தன்னுடைய பகையரசனோடு போர் செய்ய எண்ணி அப்பகைவனது நாட்டில் வாழும் அந்தணர் முதலியோரையும் பசு முதலியவற்றையும் அந்நாட்டினின்றும் அகற்றல் வேண்டி, [1] 'நாம் போர் செய்யப் போகின்றோமாதலின் ஆவும், ஆவினது இயல்பையுடைய அந்தணரும், மகளிரும், நோயுடையீரும், நுமது குடியில் இறந்தோர்க்குச் செய்தற்குரிய பிண்டோதகக் கிரியையைப் பண்ணும் பிள்ளைகளைப் பெறாதீரும் நுமக்குப் பாதுகாப்பாகிய இடங்களைத் தேடிக்கொள்ளுங்கள்' என்று பறையறைவிப்பான்; அங்ஙனம் பறையறைவதை உணரமாட்டாத பசுக்களைக் கைக்கொண்டுவந்து பாதுகாக்கக் கருதித் [2] தன் வீரர்களை ஏவுவான். அதன்பின் நிகழும் நிகழ்ச்சிகள் வருமாறு:—

அரசனது கட்டளையைப் பெற்ற வீரர்கள் துடியை முழக்கி [3] வெட்சிப் பூவையேனும் அதன் மாலையையேனும் சூடித் தாம் மேற்கொண்ட காரியம் வெற்றிதருமா வென்பதை உணர [4] நற்சொல்லைக் கேட்டுப் பின்னர்ப் பகைவர்களுடைய பசுக்களுள்ள இடத்தை நோக்கிச் செல்வார்கள். செல்லுகையில் இடையே ஒற்றர்கள்

---

[1] புறநா. 6.

[2] அரசனால் ஏவப்படாமல் வீரர்கள் தாமே சென்று நிரை கவர்ந்து வருதலும் உண்டு; அது தன்னுறு தொழிலெனப்படும்.

[3] வீரர்கள் அவ்வத்திணைக்குரிய பூவையேனும் அதன் மாலையையேனும் சூடுவதன்றிப் பொன்னாற் செய்த அந்தப் பூவையும் அணிவார்கள்; இதுபோர்க்களத்தில் வேறுபாடறியும் பொருட்டு மேற்கொண்ட வழக்கமென்று தோற்றுகின்றது.

[4] இது விரிச்சி பார்த்தலெனப்படும்; இக்காலத்து அசரீரி வாக்கென்று வழங்கப்படுவது இதுவே.

பகைப்புலத்தில் பசுக்கள் நின்ற இடம், அவற்றின் தொகை, அவற்றைக் காத்து நின்ற வீரர்களின் நிலையென்பவற்றை இருளிற் சென்று அறிந்து வந்து கூறுவர். உடனே, வெட்சியார் பகைப்புலத்தாரின் நிரை நின்றுள்ள குறுங்காட்டின் வாயில்களைச் சுற்றி வளைந்து காவலாளர்களைக் கொன்று அங்குள்ள நிரைகளைக் கைக்கொண்டு எதிர்த்த பகைஞர்களோடு பொருது வெல்வர். பிறகு தாம் கைக்கொண்ட நிரையை அரிய வழியிடத்தும் காட்டிடத்தும் [1]வருந்தாமற் செலுத்திச் செல்வர்.

அவர்களது வரவைச் சேய்மைக் கண்ணே கண்ட அவர்களுடைய இனத்தினர் மகிழ்வர். வெட்சியார் தாம் கொணர்ந்த நிரையை ஊர் மன்றங்களில் நிறுத்தி அப்பால் அவற்றை வீரர்களுடைய தகுதிக்கு ஏற்பப் பகுத்து அளித்து மதுவை உண்டு மனங்களித்து ஆடி மகிழ்வர். அவ்வீரர்கள் பின்னும் கிணைப்பறை கொட்டும் பொருநன், பாணன், விறலி, கள் விற்பவள் என்பவர்களுக்கு மதுவை வழங்குவார்கள். பகைப்புலத்து நிலைமையை அறிந்து வந்தவர்களுக்கும் கரிக்குருவியின் சொல்லாகிய நிமித்தத்தை அறிந்து சொன்னவர்களுக்கும் தம்மினும் மிக்க பங்கைக் கொடுத்துப் பழங்கால முதற்கொண்டே பரம்பரையாகத் துடிகொட்டி வருபவனுக்குச் சிறப்புச்செய்து வெற்றி தந்ததன் பொருட்டுத் துர்க்காதேவியை வழிபடுவர். அவ்வீரர்களின் மனைவியராகிய மறத்தியர் வள்ளிநாயகியின் வேடம்புனைந்து முருக பூசை பண்ணும் வேலனோடு [2] வெறியாட்டு ஆடி மகிழ்வர்.

## 2. கரந்தைப்படலம்.

வெட்சியார் நிரை கொள்ளவந்த காலத்தில் நிரைக்குரிய அரசருடைய படைஞர் [3] கரந்தைப் பூவையேனும் அதனாலாகிய மாலையை

---

1 ஆநிரைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற வெட்சியாரது எண்ணம் இதனாலும் புலப்படுகின்றது.

2 இது வள்ளிக்கூத்தெனவும் சொல்லப்படும்; வள்ளிக்கூத்து இழிந்தோராற் காணப்படுவதென்பர் நச்சினார்க்கினியர்.

3 கரந்தை - கொட்டைக்கரந்தையென்னும் பூடு.

யேனும் அணிந்து நிரையை மீட்டுவரல் மரபு. அப்பொழுது நிகழ்வன வருமாறு:—

பகைவர் தம் நாட்டின் பசுநிரையைக் கொண்டு சென்றதை அரசனிட்ட கட்டளைப்படி அறையப்படும் பறையினால் வீரர்கள் அறிந்தவுடன் அவர்கள் தாம் தாம் செய்துகொண்டிருந்த தொழிலை இருந்த நிலையிலேயே நிறுத்திவிட்டுக் கரந்தையைச் சூடி வீரக்கழலைப் புனைந்துகொண்டு வில்லையேந்திக் கூட்டமாகக்கூடி நிரையைக் கைக்கொண்ட பகைவர் சென்றவழியிற் பெருமுழக்கத்தோடு சென்று அவரைக்கண்டு சூழ்ந்து போர்புரிந்து [1] நிரையை மீட்டுவருவர்.

அவ்வீரருட் சிலர் முகத்தினும் மார்பினும்பட்ட [2] புண்களுடன் வருவர். சிலர் தம்புகழை நிலைநிறுத்திவிட்டுப் போரிலேபட்டுவீழ்வர்.

நிரையை மீட்டுக்கொள்ளும் ஆற்றலின்றிக் கரந்தையார் மீண்டு செல்லுதலும் உண்டு. அப்பொழுது ஒரு வீரன் தனியே நின்று ஆயுதங்களால் தன்மேற் புண் உண்டாதலை விரும்பிக் கூத்தாடிப் பகைவரை மாளச்செய்து அவர்களுடைய குடர்மாலையைச் சூடித் தன் வேலாயுதத்தைச் சுழற்றி ஆடுவான்.

நிரையை மீட்கும்பொழுது போரில் இறந்துபட்ட வீரர்களைப் பாணர் புகழ்ந்து அவர்களுக்காக இரங்குவர். வெற்றிகொண்ட மறவர் தம் மேம்பாட்டைத் தம் அரசனிடத்தே எடுத்துக்கூறி மகிழ்வர். தீய நிமித்தம் உண்டாதலையும் மதியாமல் பகைவர்பாற் சென்று பொருது வெற்றிபெற்ற வீரர்களுக்கு வயல் முதலிய வரிசைகளை அரசன் வழங்குவான்.

மறவர்கள் தம் அரசனைப் புகழ்வர். இம் மறக்குடியினர் உலகம் உண்டான காலமுதற் கொண்டு வீரத்தோடு தோன்றி விளங்குபவர்களென்று புகழப்படுவார்.

## 3. வஞ்சிப்படலம்.

பகைவருடைய நாட்டைக் கொள்ளக் கருதி வஞ்சி சூடி அரசர் படைகளுடன் மேற்செல்வர். அப்பொழுது நிகழ்வன வருமாறு :—

1 இச்செயல், துரியோதனாதியர் கைக்கொண்டு சென்ற விராடநகரத்து ஆனிரையை அருச்சுனன் பொருது மீட்டுவந்த செய்தியோடு ஒப்பிடுதற்குரியது.

2 இவை விழுப்புண்ணெனப்படும்.

வீரர்கள் பகைவர்மேற் செல்லக்கருதி முரசை முழக்குவர். யானை முதலியன முழங்கும். அரசன் தனது குடையை நல்ல நாளில் தனக்கு முன்னே செல்லவிட்டுத் தனது வாளையும் அதன் பின் நல்ல நாளில் செல்ல விடுப்பான். அக்காலத்தில் அரசனுக்கு வெற்றி உண்டாகும்பொருட்டு வீரர் துர்க்காதேவியை வழிபடுவர்; பிறகு [1] படைவகுப்பில் தத்தமக்கு ஏற்ற நிலையை மேற்கொள்வர்.

வேந்தன் சிறப்பை வீரர் புகழ்ந்து பகைவரது நாடு அழிதலுக்காக இரங்குவர். போரில் பொருத வீரர்களுக்கு அரசன் பல பொருள்களை வழங்கிச் சிறப்புச் செய்வான். பகைவர் தனக்கு அஞ்சிப் பணிந்து திறையளப்ப அரசன் சினந்தணிந்து மீளுதலும் உண்டு.

பகைவரோடு பொருது வென்ற வீரர்கள் அரசனாற் சிறப்புப் பெற்றதைச் சிலர் புகழ்வர். பகைவரோடு பொருதகாலத்திற் சில வீரர் தம்முடைய ஆண்மையை மிகுத்துக் கூறுவர். போரிற் பட்டவர்களுடைய புதல்வர்களுக்கு அரசன் விளைநிலம் முதலியவற்றை அளிப்பான்.

சில அரசர் பகைவருடைய நாட்டில் எரியூட்டுவர்; அங்குள்ள பொருள்களைக் கொள்ளைகொண்டு வருவர்; அங்ஙனம் கொணர்ந்த பொருள்களைப் பாணர் முதலியவர்களுக்குக் கொடுத்து உவப்பர். சில அரசர் தம்மை எதிர்த்துப் போர் செய்பவரால் குடிகளுக்கு உண்டாகும் துன்பத்துக்கு அஞ்சிப் பகையரசருக்கு யானை, குதிரை முதலியவற்றைத் திறையாகக் கொடுத்து அத்துன்பம் உண்டாகாதபடி பாதுகாப்பர்.

பகைமேற் சென்ற காலத்தில் அரசன் பாசறையை அமைத்து அதில் தன் படைகளுடன் தங்குவான்.

போர்செய்யுங் காலத்தில் மேல் எதிர்த்து வந்த சேனையை ஒரு வீரன் தனியே நின்று பெருவெள்ளத்தைத் தடுக்கும் அணையைப் போலக் காப்பதும் உண்டு. வீரர் தமக்குத் தோற்றுப் புறங்காட்டுபவர்மேல் ஆயுதப் பிரயோகம் செய்யார்.

பகையரசர் திறைகொடுத்துப் பணிந்து பகைமை நீங்கிய பின்னரும் சிலகாலம் அரசன் பாசறையில் இருத்தலுண்டு. சில அரசர் முதன்முறை தீயிட்ட பின்னரும் தன்னைப் பணியாத பகைவர்களது

1 முன்படை, பின்படை, பக்கப்படை முதலியன.

நாட்டில் மீட்டும் தீயிடுவர். [1] படை வீரர்களுக்குப் போர்க்களத்தி லேயே பெறும்படி உணவைத் தருதல் அரசர் வழக்கம்.

பகைவரது நாட்டின்மேற் படையெடுத்துச் சென்று தங்கிய பின்பும் அரசர்கள் சினம் தணியாமல் இருத்தலுண்டு. அக்காலத் துப் பகைவர் நாடு அழிதலையெண்ணிச் சிலர் இரங்குவர்.

---

## 4. காஞ்சிப்படலம்.

தன் நாட்டின்மேற் பகையரசன் படையெடுத்து வந்த காலத் தில் ஓரரசன் தன் படைவீரர்களோடு காஞ்சிப்பூ அல்லது அதன் மாலையைச் சூடி எதிரெழுந்து செல்வான்; அப்பொழுது நிகழ்வன வருமாறு:—

பகைவேந்தன் தன் நாட்டின்புறத்தே படைகளுடன் தங்கியிருத் தலையறிந்த ஓர் அரசன் துடியைக் கொட்டுவித்து வீரர்களைத் திரட் டிக்கொண்டு எழுந்து பகைவர் படை தன் நாட்டெல்லையுட் புகுதாத படி வழிகளைப் பாதுகாத்து நிற்பான். வீரர்களிற் சிறந்தவர்களுக்கு அரசன் ஆயுதங்களை வழங்குவான். அவற்றைப் பெற்ற வீரர் மகிழ்ந்து தத்தம் ஆற்றலைத் தோற்றுவிப்பர்.

பகையரசன் அறைகூவியபின் காஞ்சியை அணிந்த மன்னன் தன் வாளையும் குடையையும் நல்லவேளையில் முன்பு செல்லவிட்டு, [2] "இன்று சூரியன் அஸ்தமிப்பதன்முன் பகைவர்களை வெல்லே னாயின் பகைவருக்குமுன் பணிந்து நடப்பவனாவேன்" என்பன போன்ற சபதமொழிகளைக் கூறுவான். அவனாற் கொடுக்கப்பட்ட காஞ்சிப்பூவாகிய அடையாளத்தை வீரர் சூடுவர்.

---

1 சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனென்னும் அரசன் பாரதப்போரில் பாண்டவர் துரியோதனனதியரென்னும் இருவகையாரு டைய சேனைக்கும் உணவளித்தானென்னும் வரலாறு இங்கே கருதற் குரியது; புறநா. 2.

2 அருச்சுனன், 'சயத்திரதனை இன்று சூர்யாஸ்தமனத்துக்குள் கொல்வேன்; அங்ஙனம் கொல்லேனாயின் எரிபுகுவேன்' என்று சப தஞ் செய்ததாகப் பாரதத்தில் உள்ள வரலாறு இங்கே நினைவுக்கு வருகிறது.

பகைவர்களை எதிர்த்தகாலத்தில் பட்ட வீரனுடைய தலையைச் சிலர் சிறப்பிப்பர்; அத்தலையைக் கொண்டு வருபவர்களுக்கு அரசன் பரிசில் வழங்குவான். அங்ஙனம் கொணரப்பட்ட தலையைக் கண்டவுடன் அத்தலைக்குரிய வீரனுடைய மனைவி உயிர்நீப்பாள்.

அரசன் பொரும்பொழுது, பகைவருடைய வன்மையைத் தாங்காத வீரர் சிலர் அவரால் இறந்துபடுதலை விரும்பாமல் தம்மேற்பட்ட புண்ணைத் தாமே கிழித்துக்கொண்டு உயிர்விடுவர்.

வேலினாற்பட்டு விழுந்த வீரரைப் பேய் காத்து நிற்றலும், சிலரைப் பேய்கள் அச்சுறுத்தலும், வீழ்ந்த வீரனது புண்ணை அவை தொடுதலும், தொடாமல் அஞ்சிநிற்றலும் உண்டு. பொருது பட்டவர்களுடைய இயல்புகளைப் பாராட்டிக் கூறிப் பிறர் வருந்துவர்.

வீரர்களுக்கு அரசன் கள்ளைக் கொடுத்து மகிழச் செய்வான். போரிற்பட்ட வீரர்களுடைய மனைவியர் தீக்குளிப்பர்; அன்றித் தம் கணவர் பட்ட வேலினாலே குத்திக்கொண்டு தாமும் இறந்துபடுவர்.

'நின் மகளை மணஞ் செய்துகொடு' என்றுகூறி இணங்காததை அறிந்து எதிர்த்த அரசனுடன் பொருதலும் தம் நாட்டின்மேற் படையெடுத்து வந்தாரைத் துரத்துதலும் காஞ்சித் திணையினருக்குரிய வேறு செயல்கள்.

---

## 5. நொச்சிப்படலம்.

பகையரசர் தன்னுடைய மதிலின் புறத்தே வந்து முற்றுகை செய்த காலத்தில் அரசன் நொச்சிப் பூவையேனும் மாலையையேனும் சூடித் தன் மதிலைக் காத்து நிற்பான். அக்காலத்தில் நிகழ்வன வருமாறு:—

நொச்சிப் படையினர் மதிலை முற்றிய படையை எதிர்த்துக் காக்கும்பொழுது சில வீரர் பட்டு வீரசுவர்க்கம் புகுவர். வீரர் தம்முடைய காவற்காடும் அகழியும் சிதையாமல் மேல்வந்த பகைவரது சேனையொடு பொருது வெற்றி கொள்வர். அக்காலத்திற் சில வீரர் இறந்துபடுவர்.

பகைவரால் விடப்பட்ட குதிரை மதிலினுக்குள் தாவிக் கொண்டு வரும். மதிலில் நின்று போர்புரியும் வீரர் சிலர் பட,

அவர்களுடைய உடலின் பகுதிகள் மதிலுக்குப் புறத்திலும் அகத்திலும் சிதறி வீழும். பகைவருடைய போருக்கு அஞ்சி மீண்டு ஒரு சாரார் வர வேறுசிலர் அச்செயலுக்குச் சினந்து மதிலைக் காப்பர்.

மதிலில் உள்ள வீரர்மகளைப் புறத்துள்ள பகைவர் விரும்பி வேண்ட அதற்கு இணங்காமல் வீரம் பேசுதல் [1] அவ்வீரர் இயல்பு.

---

## 6. உழிஞைப்படலம்.

பகைவருடைய மதிலைக் கொள்ளக்கருதி மன்னர் உழிஞைப் பூவையேனும் மாலையையேனும் சூடிச் செல்வர். அக்காலத்தில் நிகழ்வன வருமாறு :—

அரசன் தான் செல்லுதற்குமுன் குடையையும் வாளையும் நன்னாளில் முன்னே செல்லவிடுத்து, முரசத்திற்குப் பூசை செய்து முழக்கிப் படைகளுடன் ஊக்கம் வன்மை சூழ்ச்சி முதலியவற்றை யுடையவனாகி எழுவான்.

அக்காலத்தில் திருமால் சோவென்னும் மதிலையும் சிவபெருமான் திரிபுரங்களையும் அழித்த செயல்களையும், முருகவேள் சூரபன்மாவை வெல்லக் கருதிக் காந்தளாகிய அடையாளப் பூவைப் புனைந்ததையும் அரசனுக்கு ஊக்கமுண்டாதற் பொருட்டுச் சிலர் சிறப்பித்துக் கூறுவர்.

அரசன், படைகளுடன் சென்று பகையரசனது மதிலின் புறத்தே தங்குவான். வீரர்கள் பகைவருடைய மதிலின் இயல்பை அறிந்து கூறுவார்கள். சிலர் கேடகப்படையைச் சிறப்பிப்பர்.

யானையை ஏவி அதன் கொம்பால் மதிற்கதவைப் பிளக்கச் செய்து மதிலைக் கைக்கொள்ளுவதும், காவற்காட்டைக் கடந்து புகுவதும், அக்காலத்தில் கேடகத்தை உடையவர்கள் ஆரவாரித்து ஆடிக்கொண்டு செல்லுதலும் வழக்கங்கள்.

காவற்காட்டைக் கடந்தபின்னர் அகழியின் புறத்தே தங்கி நாவாய் தோணி முதலியவற்றில் ஏறிப் பகைவருடன் வீரர் போர் புரிவர். பின்பு மதிலின்புறத்தே செறிந்த வீரர்கள் கற்பொறி முத

---

1 கலம்பக உறுப்புக்களுள் ஒன்றாகிய மறமென்பது இச்செய்தியைச் சார்ந்ததே.

வியமதிற்பொறிகள் பலவகையாகத் தம்மை வருத்தினும் அஞ்சாமல் அம்மதிலின்மேல் ஏணியைச் சாத்தி ஏறி அதற்குள்ளமைந்த காவற்காட்டிற் குதிப்பர். சிலர் அம்மதிலின் உள்ளே இருப்பவருடைய மிகுதியை அறிந்து கூறுவர்.

வீரர் அரணிலுள்ளவர்களோடு பொருது வெல்வர். விடியற்காலையில் மதிலிலுள்ள அரசனது முரசம் அதிர, அதனாற் சினமிக்குப் புறத்திலுள்ள அரசன் சமைத்தற்குரிய அகப்பை முதலிய கருவிகளை மதிலினுள் எறிந்துவிட்டு, 'இன்று மாலைக்குள் இம்மதிலைக் கைக்கொண்டு உட்புகுந்து பிறகே சமைத்து உண்போம்' என்று சபதங் கூறுவான்; மதிலை அழித்து யானைகளைக் கைக்கொள்வான்.

இங்ஙனம் புறத்தே ஓரரசன் முற்றியிருத்தலை யறிந்து மதிலிலுள்ளவனுக்கு நண்பராகிய அரசர் அவ்வேற்றரசனோடு பொருது துரத்த வருதலும் உண்டு.

மதிலைக் கைக்கொண்டபிறகு அரசன் அதனுள் கழுதையேரால் உழுவித்துக் கவடியையும் குடைவேலையும் விதைப்பான். பின்பு வீரர் அவனது வாளைத் தீர்த்த நீரால் மஞ்சனமாட்டுவர்; மன்னன் மதிலைக் கைக்கொண்ட வெற்றியைப் புகழ்வர். மதிலகத்து அரசனுடைய மகளை வேண்டி முற்றுகையிடலும் உண்டு.

சில பகையரசர் பணிந்து திறைகொடுப்ப எதிர்த்த அரசன் முற்றுகையை ஒழிவான். பகைவர் அடிபணிந்த பின்னும் நீண்டகாலம் இருந்த இருப்பிலே அவன் இருத்தலும், பல அரண்களிலுமுள்ள வேந்தர் யாவரும் அவனுக்குமுன் தம் வலியிழந்து தாழ்ந்து நிற்றலும் உண்டு.

## 7. தும்பைப்படலம்.

போர்புரியத் தொடங்குகையில் அரசர்கள் தும்பை மாலையையேனும் பூவையேனும் சூடிப் பின் போர்புரிவர். அக்காலத்து நிகழ்வன வருமாறு:—

போர் செய்வதற்கு முன்பு அரசன் தன் படைவீரர்களுக்குப் போர்ப் பூவாகிய தும்பையையும் நாடு, விளைநிலம், பொருள், யானை, குதிரை முதலிய வரிசைகளையும் வழங்குவான். அக்காலத்து,

## பொருளமைப்பு.

போரினால் இருவகைச் சேனைகளும் பொருது மடியாமற் காத்தல் அரசன் கடமையென்று சிலர் கூறுவர்; சிலர் காலந்தாழ்க்காமற் போர் செய்வதால் உறுதியுண்டாமென்று மொழிவர்; வேறு சிலர் அரசனுடைய படையின் வீரமிகுதியைப் பாராட்டிப் பகைவர் கெடுவரென இரங்குவர். யானை, குதிரை முதலியன தத்தம் ஆற்ற லிற் சிறந்து விளங்கும். வீரருட் சிலர், 'யாம் பகைவர்களுடைய முன்படையைத் தடுக்கும் வன்மையுடையேம்' என்று தம் வீரத்தை எடுத்துக் கூறுவர்.

போர்புரியுங் காலத்தில் தனியே நின்ற அரசனைப் பல பகை யரசர் சூழ்ந்துகொள்ள, அங்கேயுள்ள தனி வீரனொருவன் பொருது அவர்களை வெல்வதுண்டு.

அரசனது தேர் உதிரவெள்ளத்திற் பகைவருடைய பிணங் களின்மேல் ஊர்ந்துவரும். போரில் யானையை எறிந்து பட்டவீரரைக் குறித்துப் பாணர் நெருப்பை மூட்டிச் சாப்பண்ணாகிய விளரியைப் பாடுவர்; அவ்வீரர் வீரசுவர்க்கம் புகுவர்.

போரில் இரண்டுபக்கத்து அரசர்களும் தம் படைகளுடன் அழிதலும் உண்டு.

தம் சேனை முதுகிடுங்கால் சில வீரர் அதன் பின்னே நின்று, துரத்திவரும் பகைவரோடு போர்புரிவர். சிலர் தம் கையிலுள்ள வேல்களை யானைகளின்மேல் விட்டு ஆயுதமின்றி நின்றபொழுதும் தம் தோளையே கொம்பாகக் கொண்டு ஆணெருமையைப்போல எதிர்த்து வெற்றிகொள்வர். சிலர் பகைவரைக் கொன்று வேலைச் சுழற்றிக் கொண்டு ஆடுவர். சிலர் தம்மேல் தைத்த வேலைப் பறித்து அதனையே கொண்டு பகைவரோடு போர் செய்வர்.

வெற்றிபெற்ற வேந்தனது தேரின்முன் வீரர்கள் ஆடுவார்கள். அத்தேரின்பின் வீரர்களும் விறலியர்களும் ஆடுவார்கள். அதற்கு முன்னும் பின்னும் பேய்கள் உணவுபெற்ற உவகையாலே ஆடும்.

சிலவீரர் தம்முடைய வேல்பட்டு வீழ்ந்த யானைகளின் கீழ் அகப்பட்டு உயிர் நீப்பர். மன்னனோடு வாள்வீரர் முழங்கி ஆடுவர். இரண்டு படையினரும் ஏத்தும் வண்ணம் வீரத்தோடு படைநடுவே மன்னன் நிற்பான்.

சிலவீரர் தம் உடம்பில் அம்புகள்பட்டு நிலத்தைத் தீண்டாமற் கிடப்பார்கள். போரிற்பட்ட வீரரை அவர்கள் மனைவியர்வந்து

கண்டு தழுவுவர். அவர்களுட் சிலர் தம் கணவர்கள் விழுப்புண்ணோடு பட்டதையறிந்து ஆனந்தக் கண்ணீர் சொரிவர்.

தம் வேந்தன் போரில் இறந்துபடின் வீரர் தம் உயிரையும் போக்கிக் கொள்வர். போரிற்பட்ட தம் கணவரைக் காணும் பொருட்டுக் குடிப்பிறந்த மகளிர் தம் வீட்டை விட்டுத் தனியே போர்க்களத்தை நோக்கி வருவர்.

யாவரும் புகழை நிலைநிறுத்திப் போர்க்களத்தில் மடிவதும் உண்டு.

---

## 8. [1] வாகைப்படலம்.

**வா**கை மாலையைச் சூடிப் பகைவர்பால் வெற்றிகொள்வர் அரசர். இப்படலத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், மறமகளிர் முதலியவர்களின் இயல்பும் சிறப்பும் சொல்லப்படும். [1] அவை வருமாறு :—

அரசன்: அரசன் நடுவுநிலைமையையும் ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பலென்னும் ஐந்து தொழிலையும் நான்கு வேதத்தினையும் மூன்றுதீயினையும் இருபிறப்பினையும் உடையனாகிப் பூமியைப் பாதுகாத்துவருவான். அவனுடைய அரண்மனையில் வெற்றிமுரசு முழங்கும். சேனையாகிய வரம்பையுடைய போர்க்களமென்னும் வயலுள் கோபமாகிய விதையை விதைத்து வேலாகிய கோலையும் யானையாகிய எருதையும் உடையவனாகிப் புகழை விளைவிக்கும் உழவனாக அரசன் உருவகஞ் செய்து புகழப்படுவான். போரை வென்ற அரசன் பேய்கள் வயிறார உண்ணும் வண்ணம் [2] களவேள்வி செய்வான் ; அவனுடைய தேரின் முன்னே பேயும், பின்னே விறலியரும் வீரரும் ஆடுவர்.

'உன்னுடைய கீர்த்தியையும் பெருமையையும் எண்ணித் தருக்கிஞற் பிறரை எள்ளுதலை நீக்குவாயாக' என அறிவுடையோர் அரசனுக்குக் கூறுவர். தன்னுடைய மனைவியைப்பிரிந்து போர்மேற் சென்று பாசறையில் தங்கிய காலத்தில் ஐப்பசி கார்த்திகை மாதங்க

---

1 இப்படலத்தில் அங்கங்கே கூறப்படும் செய்திகள் சிலபயன்கருதி ஒருவகைப்படுத்திக் கூட்டி இங்கே எழுதப்படுகின்றன.

2 களவேள்வி பரணிநூல்களில் விரிவாகக் கூறப்படும்.

ளாகிய 1 கூதிர்க் காலத்திலும் 2 வாடை அதிகமாக வீசும் காலத்திலும் தான் மேற்கொண்ட செயலை விட்டுநீங்காமல் அவன் இருப்பான். குற்றமின்றி மனுநீதியின்படி செங்கோல் செலுத்தி எல்லாவுயிருக்கும் சூரியனைப்போல இருத்தல் அரசனது முறைமை. அவனுடைய காவல் இன்றியமையாததென்று யாவரும் சிறப்பித்துக் கூறுவர். போரிற் பகைவரை வென்றபின் அக்களத்தைத் தனதாக்கிக் கொள்ளல் அரசன் இயல்பு.

அரசனது குடையைப் பலர் பலவாறு சிறப்பிப்பர். 'தன் பகைஞர்களை அடக்கி உலகில் சமாதானத்தை நிலைநிறுத்தினமையால் இவனுடைய கண்கள் சினக்குறிப்பின்றி உறங்குகின்றன' என அவன் துயிலுதலைச் சிறப்பித்துச் சிலர் பாராட்டுவர்.

அந்தணர் : நான்கு வேதங்களையும் கற்ற அந்தணர் வேள்வி செய்வர்; இரண்டு பெரிய வேந்தர்களுக்கு இடையேயுள்ள மாறுபாட்டை நீக்கும்பொருட்டுத் தூதுபோவர்.

வணிகர் : உழுது அதனால் உண்டாம் பயனைக் கைக்கொண்டு பசுவைப் பாதுகாத்துக் குற்றமற்ற பண்டங்களைவிற்று நான்மறை முதலியவற்றைக்கற்று முத்தீயை ஆராதித்துப் பொருளின் தன்மையைச் சீர்தூக்காமல் வழங்கும் கொடையினையுடையவர் வணிகர்.

வேளாளர் : அந்தணர் அரசர் வணிகரென்னும் மூவரும்விரும்ப அவருக்கு வேண்டிய உதவிகளைச்செய்து கழனியின்கண் உழுவர் வேளாளர்; அவர் பூமியிலுள்ளார்க்கெல்லாம் உயிரைப்போன்றவராவர். அவர்களுடைய ஏர் வாழ்கவென்று தடாரிப் பறையைக் கொட்டிப் பொருநர் வாழ்த்துவர். அப்பொருநர்களுடைய வறுமை நீங்கும்படி வேளாளர் உபகரிப்பர்.

அறிவன் : சூரியனைப்போல மூன்று காலத்தையும் நன்றாக அறிந்து என்றும் பிறழாதபடி கூறுபவன் அறிவன்.

தாபதர் : தவஞ்செய்பவர்களாகிய தாபதர் நீரிற்பலமுறை மூழ்குவர்; வெறுந்தரையிலே படுப்பர்; மான்றோலை ஆடையாக உடுப்

---

1 தலைவன் தலைவியுடன் இருந்துஇன்புறும் குறிஞ்சித்திணைக்குரிய காலம் இக்கூதிரேயென்பது இங்கே நினைவிற் கொளற்குரியது.

2 நெடுநல்வாடை யென்னும் பாட்டில் இச்செய்தி விரிவாகக் கூறப்படும்.

பர்; சடைகள் பூமியிலே புரள உலவுவர்; அக்கினியை ஆராதிப்பர்; ஊருக்குள் வாராமற் காட்டிலேயுள்ள காய்கனி கிழங்குகளை உண்பர்; தெய்வத்தை வழிபட்டு அதிதிகளை உபசரிப்பர்.

சான்றோர்: அரசனுடைய நியாயசபையில் சான்றோர் இருப்பர். அவர் குடிப்பிறப்பு, கல்வி, நற்குணம், வாய்மை, தூய்மை, நடுவுநிலை, அழுக்காறிலாமை, அவாவின்மை யென்னும் எட்டு இயல்புகளை யுடையவராதல் முறை. வரும் வழக்கை நியாயந் தீர்த்தற்பொருட்டுப் பன்முறை வினாவிடைகளால் ஆராய்ந்து நிச்சயிப்பர்; எக்காலத்தும் தம் அமைதி குன்றார்.

சோதிடர்: உரிய நூல்களைப் பலமுறை கற்று அவற்றில் தேர்ச்சி பெற்று வானத்திலும் பூமியிலும் உண்டாகும் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து கூறுதல் சோதிடரது இயல்பு.

பிற செய்திகள்: வீரக்குடியிற் பிறந்த மகளிர்கூட வீரமுடையராகி இருத்தலும், பரம்பரையாக அக்குடியில் வீரர்கள் இருந்துவருதலும், அவர்களுடைய இடம் பிறராற் சிறப்பிக்கப்படுதலும் மரபு.

வீரர்கள் தம் அரசர் வேண்டியவற்றைத் தமக்குக் கொடுக்கவும் அவற்றைக் கொள்ளாமற் போரில் ஆசையுடையராகிச் சினத்தோடிருத்தலும், செஞ்சோற்றுக் கடன் தீர்த்தற்பொருட்டு வீரர் தம் உயிரைப் போர்க்களத்திற் பலியாகக்கொடுத்து வீரசுவர்க்கத்தையடைதலும் இப்படலத்திற் சொல்லப்படும்.

பூமியிடத்துப் பற்றையொழித்து மெய்ம்மையான பொருளை விரும்புதலும், பூமியிலுள்ள துயரத்தை எண்ணிப் பற்று நீங்குதலும் இத்திணையைச் சார்ந்தனவாகும்.

## 9. பாடாண்படலம்.

அரசர்களுடைய புகழ், வலிமை, கொடை, கருணை முதலியவற்றைச் சிறப்பித்துச் சொல்லுதலும் பிறவும் இத்திணைக்குரியன. அவை வருமாறு.—

அரசனது அரண்மனை வாயிலைக் கிட்டிய புலவர் முதலியோர் தம்முடைய நிலையை அரசனுக்குத் தெரிவிக்கும்படி வாயில் காவலரிடம் கூறல், திரிமூர்த்திகளுள் அரசனால் தொழப்படும் தெய்வத்தை

வாழ்த்தல், காயாம்பூவைத் திருமாலின் திருமேனிக்கு ஒப்பிடல், மும்மூர்த்திகளுள் ஒருவரை அரசனுக்கு உவமை கூறுதல், அரசன்பாற் பரிசில்பெறச் சென்ற புலவர் முதலியோர் அவனுக்கு முன், 'நாங்கள் பெறவிரும்பியவை இன்னபரிசு' என்றுகூறுதல், 'இன்னார் இன்னபொருளைக் கொடுத்தனராதலின் நீயும் எமக்குக் கொடுக்க வேண்டும்' என்றல், அரசனுடைய தன்மையைச் சொல்லிப்புகழ்தல், அவன் துயிலுதலைச் சிறப்பித்தல், அவனைத்துயிலினின்றும் எழுப்புதல், துயிலெழுந்த அரசனுக்கு மங்கலம் இதுவெனக் கூறுதல், அவன் மங்கலப்பொருள்களை மேவினானெனச் சிறப்பித்தல், அவனுடைய விளக்கானது காற்றெறிந்த காலத்திலும் வலமாகச் சுழன்று சோதிவிட்டு விளங்குவதனால் அவனுக்கு வெற்றியே உண்டாகுமென்று விளக்கின் நிலையைப்பாராட்டல், அவனைச் சூரியனோடு ஒப்பிடல், அவன் அந்தணர்களுக்குப் பசுவைத் தானம் செய்தல், தேவர்கள் மகிழ அவன் யாகம் செய்தல், வெள்ளியாகிய மழைக்கோளின் நிலையை உணர்ந்து மழை உண்டாகுமென்று அவன்பால் அறிஞர் மொழிதல், அவனது நாட்டைச்சிறப்பித்தல், அவனுடைய அரண்மனையில் தடாரிப்பொருநன் பெருஞ்சிறப்புப்பெற்றுத் தனது வறுமை நீங்கல், யாழையுடைய பாணர்கள் தாங்கள் போர்க்களத்தில் அரசனாற் பெற்றயானை முதலியவற்றைப்பற்றிப் பாராட்டிக் கூறல், அரசன் வேற்றரசர்கள் தன்னைப்பணிந்துநிற்பச் செம்மாந்திருத்தல், அவன் பகைவருடைய மதிலைக் கைக்கொண்டு தீட்சையை நிவர்த்தி செய்துகொள்ளல், அவன் மணஞ் செய்துகொள்ளல், அவனுக்குப் புதல்வன் பிறத்தல், அரசனது பிறந்தநாள் விழாவைக் குடிகள் கொண்டாடுதல், அரசனாற் பலவகைப் பொருள்களைப் பெற்ற இரவலர் அவன்பால் நெடுங்காலம் இருந்து பின்பு தம் சுற்றத்தாரின் வறிய நிலையைக் கருதி விடைகொள்ள எண்ணல், அரசன் அவர்களுக்கு யானை முதலியவற்றைக் கொடுத்து விடையளித்தல், அவனுடைய இல்லறவாழ்க்கை, வறியவனாக எதிரேவந்த ஒரு பாணனைப் பரிசில் பெற்று வருவானொருவன் அரசனிடத்தில் ஆற்றுப்படுத்தல், அங்ஙனமே கூத்தரைப் பரிசுபெற்ற வேறொரு கூத்தன் ஆற்றுப்படுத்தல், பொருநரையும் விறலியரையும் பரிசுபெற்றுவரும் பொருநனும் விறலியும் ஆற்றுப்படுத்தல்.

சான்றோர் பின்பு உறுதிபயக்கும் சொற்களை அரசனுக்கு அறிவுறுத்தல், அவர் அரசனுக்குரியஒழுகலாற்றை அறிவுறுத்தல்.

அரசனது குடையையும் வாளையும் சிறப்பித்தல், அவன் திருமஞ்சனம் செய்துகொள்ளல், இன்னதுசெய்தல் அரசர்க்கியல்பென்று அரசனிடம் அறிஞர்கூறல், நின்னுடைய வழிபடுதெய்வம் நின்னைப் பாதுகாப்ப நீ நீடூழி வாழ்கவென அவனை வாழ்த்தல், அவனது கொடியை மும்மூர்த்திகளுள் ஒருவரது கொடியோடு ஒப்பிட்டுப் புகழ்தல்.

திருமால் சோவென்னும் அரணத்தை அழித்த சிறப்பைக் கூறல், மகளிர் முருகவேளைக் கருதி வள்ளிக் கூத்தாடுதல், ஒரு புலவனை வேறொரு புலவன் [1] தேவருள் ஒருவர்பால் ஆற்றுப்படுத்தல், நின்னை வணங்குவதனால் இன்ன பயன் பெறுவோமென்று தெய்வத்தைப் பணிதல், பயன்பெறுதற் பொருட்டுக் கடவுளை வாழ்த்தல்.

தலைவி ஒருத்தி தலைவனது மாலையைப் பெற விரும்பியதைத் தானே கூறல், தலைவனுக்கு விருப்பமின்றேனும் அவனை அடைவதற்காகத் தலைவி இருளிற் போதல், பரத்தையின்பாற் சென்றுவந்த தலைவனோடு ஊடித் தலைவி கூறல்.

கடவுளரிடத்துக் கடவுட் பெண்டிர் காதல் கொண்டதாகக் கூறல், கடவுளரிடத்து மானிடப் பெண்டிர் காதல் கூர்ந்ததாகக் கூறல், குழந்தைப் பருவத்திலுள்ளாரை மகளிர் பாராட்டல், ஊரிலுள்ளாரது இன்பவாழ்வைக் கூறல் என்பன.

## 10. பொதுவியற்படலம்.

சேரனுடைய அடையாளமாகிய பனந்தோட்டையும், பாண்டியன் பூவாகிய வேம்பையும், சோழன் பூவாகிய ஆத்தியையும் சிறப்பித்தல் மரபு. அரசனுக்குக் குறைவு வருமாயின் வாடுதலையும் ஆக்கமுண்டாயின் தழைத்தலையுமுடைய உன்னமென்னும் மரத்தின் நிலையைக்கண்டு அரசனது ஆக்கத்தை அறிதலும், ஆட்டுக்கிடாயின் மேல் ஊர்ந்து வரினும் வீரம்குன்றானென அரசனைச் சிறப்பித்தலும், இளம்பருவத்திலேயே நாடுகாவலை அரசர் மேற்கொள்ளுதலும், வீரர்கள் காலில் வீரக்கழலை அணிதலும் பண்டை வழக்கங்கள்.

ஒரு வீரன் போரில் இறந்துபட்டால் அவனுடைய ஞாபகார்த்தமாக நடும்பொருட்டு நல்ல கல்லாகத் தேர்ந்து அதனைக்

[1] திருமுருகாற்றுப்படை இதன்பாற்படும்.

கொணர்ந்து புனலிலே இட்டு வைப்பர் ; பிறகு அதில் அவ்வீரனது பெயரையும் சிறப்பையும் எழுதுவித்து அக்கல்லை நாட்டிப் பூசை செய்து வாழ்த்துவர் ; அப்பால் அதற்குக் கோயில் அமைப்பர்.

### சிறப்பிற் பொதுவியற்பால.

பாலைநிலத்தில் தன் கொழுநனை இழந்த தலைவி வருந்துதல், அந்நிலத்தில் தன் மனைவியை இழந்த கணவன் வருந்துதல், தன் மனைவியை இழந்த பின்னர்க் கணவன் வருத்தத்துடன் தனியே வாழ்தல், தன் கணவனை இழந்தபின்னர் மனைவி கைம்மை விரதம் பூணல், ஒரு பெண் புத்திரனைப் பெறுதலாகிய தன் கடமையை நிறைவேற்றிய பின்னர் இறந்துபடுதல், ஒரு குடும்பத்திற் பிள்ளை இறந்துவிட அதனாற் சுற்றத்தார் வருந்தல், தலைவன் இறந்தபின்பு மனைவி தானும் இறப்பதற்காக மாலைக்காலத்திலே எரிபுகுதல், தலைவன் இறந்தானெனக் கேட்டவுடன் மனைவி உயிர் நீங்குதல், தலைவன் தான் நினைத்த காரியத்தை நிறைவேற்றாமற் பகைவரால் இறந்துபடல், தலைவன் வருகையை அறிதற்காக நற்சொல் முதலிய நிமித்தங்களை எதிர்பார்த்துநிற்கும் தலைவிஅவை வேறுபாடு உணர்த்துவதை அறிந்து நடுங்குதல், போர்க்குச் சென்ற தலைவனைப்பற்றி எண்ணித் தலைவிவருந்தல், போரிலே தலைவன் இறந்துபடத் தலைவி வருந்தல், மன்னன் இறந்தானாக உடனிருந்தோர் வருந்தல், இறந்தவனுடைய புகழைப் பாடுதலென்பன இப்பகுதிக்குரிய செய்திகளாம்.

### காஞ்சிப் பொதுவியற்பால.

அறிஞர் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம் பொருள் இன்பங்களைப்பற்றிக் கூறல், உலகத்து நிலையாமையைச் சொல்லல், முனிவர்களால் தெளியப்பட்ட பொருளையுரைத்தல், வீட்டுலகத்தைப்பற்றிய செய்தி, மேல்வரும் பொருளை அறிவித்து நிலையாமையை உணர்த்தல், எல்லோருடைய நிலையாமையையும் தெரிவிக்கும் மயானத்தை வாழ்த்தல் என்பன இப்பகுதிக்கு உரியனவாம்.

### முல்லைப் பொதுவியற்பால.

தலைவன் தலைவியோடு அளவளாவிய இன்பத்தைக் கூறுதல், பாசறையிலுள்ள தலைவன் வருவதற்கு முன் தோன்றிய மேகத்தைக்கண்டு தலைவி துயரத்துடன் சொல்லுதல், பகைவரோடு போர்

செய்யச் சென்ற தலைவன் அவர் திறைகொடுப்ப அதனைப் பெற்றுக்கொண்டு தேரில் வரும்பொழுது அத்தேரின் வரவைச் சிறப்பித்தல், தலைவன் போர்க்குப் பிரிந்த பின்னர்த் தலைவி நாணே காவலாகத் தனித்திருத்தல், தலைவி தன் கணவனை வாழ்த்தி இல்லறத்தைச் சிறப்பித்தல், தளராமல் உழைத்து இல்லறம் நடத்தும் தலைவனுக்கு உழவுக்குரிய எருதைத் தலைவி உவமை கூறல், தலைவியோடு அளவளாவிய தலைவன் அதற்குக் காரணமாகிய ஊழை வாழ்த்தல், தலைவி தலைவனது அருளைப் புகழ்தல், தலைவன் ஒரு காரியத்தைக் கருதிப் பிரிந்த காலத்தில் தலைவி தனியே தன் நிறையே காவலாக இருத்தல், தன் தலைவன் தன் வீட்டிற்கு வந்த பின்னர் அவனோடு பொருந்தி இல்லறம் செய்யும் செல்வத்தைத் தலைவி வாழ்த்தல் என்பன இப்பகுதியைச் சார்ந்தனவாம்.

## 11. [1] கைக்கிளைப்படலம்.

### ஆண்பாற் கூற்று.

ஒரு தலைவன் தலைவி யொருத்தியை ஒரு சோலையின்கண் கண்டு விரும்பி, 'இவள் திருமகளோ? வேறு தெய்வ மகளோ?' என ஐயுற்றுப் பிறகு அவளது நெற்றியில் வேர்வை உண்டாதலையும் அவள் அணிந்துள்ள மாலை வாடுதலையும் அவள் பாதம் பூமியிற் படுதலையும் கண்கள் இமைத்தலையும் கண்டு, 'இவள் மானிட மகளே' எனத் துணிவான். பிறகு, 'இவள் என் நெஞ்சத்திலே இருந்தும் என்னை அறியாதவளாக இருக்கிறாள்' என்று எண்ணுவான்; 'இவளைப் பெற்றவர்கள் நெடுங்காலம் வாழவேண்டும்' என வாழ்த்தி அவளது பேரழகைப் பாராட்டுவான். அப்பால் அவளது பழக்கத்தை விரும்பி அவளது அருமையை அறிந்து மிகுதியாகப் புகழ்வான். அவளோடு பழகுதற்குக் காலம் நீட்டித்தலால் வருந்துவான். பின்பு வெளிப்படையாக அவள்பால் இரப்பான்.

### பெண்பாற் கூற்று.

ஒரு தலைவி தலைவனொருவனைக் கண்டு மெலிந்து அவனை விரும்பி, 'இனி மாலைக்காலம் வரின் துயரம் அதிகமாகுமே!' என வருந்துவாள். தனது வேறுபாட்டைக் கண்டு அயலார் சொல்லும் பழிமொழிக்கு நாணி வாடுவாள். தனது மேனியிற்

1 கைக்கிளை - ஒருதலைக்காமம்.

K. C. KAMALIAH



பசலை உண்டாக அதனால் அழகுகெட மெலிந்து தலைவனை மீண்டும் காண வேண்டுமெனத் துணிவாள். பகற்பொழுதைக் கோபிப்பாள். இரவிலும் மனமயக்கம் மிகவுடையவளாகி வருந்துவாள். அப்பொழுது உண்டாகும் கனவில் தலைவனைக்கண்டு பின்னர்விழித்து அவனைக் காணாமல் வாய்விட்டுப் புலம்புவாள். பிறகு இரவில் அவனை நாடிச்செல்ல விரும்பி, 'நான் தலைவனைத் தேடிச் செல்லத் துணிந்தேன்; இதனை மகளிர் யாவரும் அறிக' எனக் கூறுவாள்.

## 12. பெருந்திணைப் படலம்.

இதிற் பொருந்தாக் காமத்தைப்பற்றிய செய்திகள் கூறப்படும். அவை வருமாறு :—

### பெண்பாற் கூற்று.

ஒரு தலைவனைக்கண்ட தலைவியொருத்தி தனது வேட்கையை அவன்முன்னே சொல்லி இரந்து அவன் பிரிந்த காலத்து ஆற்றியிருந்து அவன் வருதலை எதிர்பார்த்திருப்பாள். அவனது வரவை எதிர்நோக்கிப் பார்க்கும் நிமித்தங்கள் வேறுபடுவதையறிந்து வாரானென்று எண்ணி வருந்துவாள். பின்பு அவனைக் காணவேண்டுமென்னும் ஆசையினால் தனது வீட்டை விட்டுச் செல்வாள். அவன்பால் இல்லவைகூறி நகைத்து ஊடிப் பிறகு வருந்துவாள். மாலைக் காலத்தில் இரங்குவாள். தலைவனோடு புனல்விளையாடும் பரத்தையை ஏசுவாள். தலைவன் பரத்தையை நீங்கித் தன்பால் வந்தகாலத்தில் அவனுடைய கோலத்தைக்கண்டு சினங்கொள்வாள். அவனோடு அளவளாவி மகிழ்வாள். அவனை மாலையினாற் கட்டிக்கொணர்ந்து தன் வீட்டிற் புகுவாள். தலைவனோடு அளவளாவுங் காலத்திற் குழைவாள். ஊடலினால் நெகிழ்ந்து மிக்க துன்பத்தோடு தங்கியிருக்கும் பொழுது அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்து அவன் தன் அடியிலே பணிந்தகாலத்தில் மனமிரங்குவாள். இரவில் தன் பாயலினின்றும் நீங்கி அவன் உறங்கும் இடத்திற்குச் செல்வாள்.

தலைவன் இரவில் வேறொரு மகளேயெண்ணித் தன்னை நீங்கும் காலத்தில் அதனைக் கண்டுகொண்டு 'செல்வாயாக' என விடுப்பாள்.

### இருபாற் பெருந்திணை.

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதலை முன்பு கருதிப் பின்பு போதலை ஒழிதல், தலைவன் மடலூர்தல், தலைவியினது துன்

பத்தைக்கண்ட தோழி தலைவன்பால் தூதாகச் செல்லல், அவள் அவனுக்குத் தலைவியின் நிலையைச் சொல்லல், தலைவியின் தனிமை வருத்தத்தைக்கண்ட தோழி செயலற்று வருந்தல், பருவங்கண்ட தோழி தலைமகளை ஆற்றுவியாமல் இப்பருவம் தலைவன் சொன்னதோ அன்றோவென மயங்கல், தலைவி பருவம் அன்றெனத் தெளிதல், காமம் எல்லை கடந்தமையால் தலைவன் மயங்கியிருத்தல், தலைவி தான் விரும்பும் தலைவன் இன்னுனென்று ஊரினர் அறியா திருத்தலைக் கூறல், தலைவனது அருளைப் பெறும்பொருட்டுத் தலைவி வெறியாடல், தலைவனுடைய பாணன் வந்தமையைத் தோழி தலைவிக்குக் கூறல், தலைவன் தனக்கு எளியனென்பதைப் பரத்தை கூறல், தலைவன் பரத்தையரை விரும்புபவனென்று தோழி விறலிக்குச் சொல்லல், பரத்தையர் மூப்புடையராயினும் தலைவன் அவரை விரும்புவானென்று இற்பரத்தையின் தோழி கேட்ப விறலி கூறல், தம் சேரிக்குத் தலைவன் தேரில் வருதலைச் சேரிப் பரத்தையின் தோழி இற்பரத்தையின் தோழிக்குச் சொல்லல், தலைவன் பரத்தையர் வீட்டில் துயின்றபடியை விறலி கூறல், தன் மனைவியைக் கணவன் நீக்கிவிடுதல், தலைவன் தலைவியின்பால் விருப்பம் ஒழிதல் என்பன இப்பகுதியிற் கூறப்படும்.

---

## ஒ ழி பு.

**பா**டாண் பகுதியிலும் வாகைப் பகுதியிலும் சொல்லப்படாமல் ஒழிந்தவை இதிற் சொல்லப்பட்டன. அவை வருமாறு :—

### பாடாண் ஒழிபு.

**பா**ணர் முதலியோர் தமக்குக் கொடுத்தவரைப் புகழ்ந்து கொடாதவரைப் பழித்தல்.

### வாகையின் ஒழிபு.

**வா**ணிகர் பலவகையாற் பொருள்திரட்டிப்பிறர்க்கு உபகரிக்கும் இயல்பாகிய வாணிகவென்றி, மல்லர் தம்முள் மற்போர் செய்து வென்றி பெறுதல், உழவன் பருவங்கண்டு உழுதல் முதலியவற்றை உரியபடி செய்து பயிர்விளைத்தலாகிய உழவன் வென்றி, பறையை யறைந்துவிட்ட ஏறுகளை இடையர் தழுவுதல், கோழி

களை ஒன்றோடொன்று போர் செய்ய விடுதல், ஆட்டுக்கிடாயைப் பொரவிடுதல், யானையின் வீரத்தைக் கூறல், சிவல் குறும்பூழென்னும் பறவைகளைப் பொரவிடுதல், கிளியையும் பூவையையும் ஒன்றற்கொன்று மாறுகப் பேசவிடுங்கால் பூவையைக் கிளி வெல்லுதல், கிளியைப் பூவை வெல்லுதல், குதிரையேற்றத்தில் ஒருவரை ஒருவர் வெல்லுதல், தேரேற்றத்தில் ஒருவரை ஒருவர் வெல்லுதல், மகளிர் யாழ் வாசித்து ஒருவரையொருவர் வெல்லுதல், சதுரங்கமாடி மகளிர் ஒருவரை ஒருவர் வெல்லுதல், அவர் கூத்தாடி வெல்லுதல், பாடலில் அவர் ஒருவரையொருவர் வெற்றிகொள்ளுதல், பெண் யானையைப் போல ஆடுதலினும் அதனை நடத்துதலினும் வெல்லுதல் என்பன இதிற் கூறப்படும்.

குறிப்பு :—வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை யென்னும் ஏழு திணைகளும் புறமாகும். வாகை, பாடாண், பொதுவியல் என்னும் மூன்றும் புறப்புறமாம். கைக்கிளையும் பெருந்திணையும் அகப்புறமாம்.

K. C. KAMALIAH

உ

கணபதி துணை.

# புறப்பொருள் வெண்பாமாலை

## மூலமும் உரையும்.

### கடவுள் வாழ்த்து.

க. நடையூறு சொன்மடந்தை நல்குவது நம்மேல்
இடையூறு நீங்குவது மெல்லாம் - [1] புடையூறும்
சேனைமுகத் தாளிரியச் சீறுமுகத் தூறுமதத்
தானைமுகத் தானைநினைத் தால்.

உ. கண்ணவனைக் காண்கவிரு காதவனைக் [2] கேட்கவாய்ப்
பண்ணவனைப் பாட பதஞ்சூழ்க - எண்ணிறைந்த
நெய்யொத்து நின்றானை நீலமிடற் றானையென்
கையொத்து நேர்கூப்பு க.

### சிறப்புப் பாயிரம்.

* மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
(ரு) பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு [3]படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்
ஓங்கிய சிறப்பி னுலகமுழு தாண்ட
வாங்குவிற் றடக்கை வானவர் மருமான்

---

* 1 - 4. "அகத்திய னென்னும், அருந்தவ முனிவ னாக்கிய முதனூல், பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர், நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்" (பன்னிரு.) 1 - 6. "இனிப் பன்னிருபடல முதனூலாக வழிநூல் செய்த வெண்பாமாலை ஐயனாரிதனாரும் இது கூறினார்; என்னை ? 'மன்னிய......பகர்ந்த' எனப் பாயிரஞ் செய்தற்குடம் பட்டமையி னென்பது" தொல். மரபு. சூ. 94, பேர்.

(பிரதிபேதம்.)—[1] 'புடையூறு' [2] 'கேட்கவாய் பண்ணவனைப் பாடப் பதஞ்' [3] 'படலம்'

* ஐய னாரித னகலிடத் தவர்க்கு
மையறு புறப்பொருள் வழாலின் றுவிளங்க
வெண்பா மாலை யெனப்பெயர் நிறீஇப்
பண்புற மொழிந்தனன் பான்மையிற் [1]றெரிந்தே.

என்பது பாயிரம். இதனுட் பாயிரமுரைத்தவெல்லாம் உரைத்துக் கொள்க.

இதன்பொருள்: நின்றநிலைத்த நன்மையினையுடைய தேவர்கள் வேண்டிக்கொள்ளப் பொதியின்மலையிலிருந்த அழகமைந்த இருடிதன்னிடத்துக் குளிர்ந்த தமிழை வருத்தமின்றியறிந்த கிட்டுதற்கரிய மிக்க புகழினையுடைய தொல்காப்பியனென்னும் ஆசிரியன் முதலான பன்னிருவரான அறிஞரும் பகுதியில் மிகச்சொன்ன பன்னிரு படலமென்னும் நூலினைக் குற்றமின்றியே அறிந்தோன், உயர்ந்த மேம்பாட்டினையுடைய பூமியை முழுதுமாண்ட வளைந்த வில்லைப் பெருத்த கையிலேயுடைய சேரமான்கள் வழியினுள்ளான்; ஐயனாரிதனென்னும் பெயரினையுடையவன், பரந்த நிலத்திலுள்ளவர்க்குக் குற்றமற்ற புறப்பொருளை வழுவுதலின்றியே தெளிய வெண்பாமாலையென்னும் நாமத்தினை நிறுத்தி 2 நன்மைமிகச் சொன்னான், முறைமையாலே ஆராய்ந்து. என்றவாறு.

ஏகாரம்: ஈற்றசை. பான்மையிற் றெரிந்து பண்புற மொழிந்தனன் ஐயனாரிதனெனக் கூட்டுக. மன்னிய-தெரிந்தவென்றுமாம். முனிவரன் - இருடிகளில் 3 வரனுயுள்ளான்; அவன் அகத்தியனென்றறிக.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

முதலாவது

# வெட்சிப்படலம்.

(க.—சூத்திரம்.)

வெட்சி, வெட்சி யரவம் விரிச்சி செலவு
வேயே புறத்திறை [4]யூர்கொலை யாகோள்
பூசன் மாற்றே புகழ்சுரத் துய்த்தல்
தலைத்தோற் றம்மே தந்துநிறை பாதீ
டுண்டாட் டுயர்கொடை புலனறி சிறப்பே
பிள்ளை வழக்கே பெருந்துடி நிலையே
கொற்றவை [5]நிலையே வெறியாட் டுளப்பட

* 9 - 12. "மெய்யினார்......தனவே" பு. வெ. சூ. கஅ; ப. 156.

(பி - ம்.) 1 'தெளிந்தே' 2 'தன்மைமிக' 3 'வரிட்டனாய்' 4 'ஊர்க்கொலை' 5 'நிலையொடு'

எட்டிரண் டேனை நான்கொடு தொகைஇ
வெட்சியும் வெட்சித் துறையு மாகும்.

என்பது சூத்திரம் என்னுதலிற்றோவெனின், வெட்சித்திணையும் துறையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். வெட்சி, வெட்சியரவம், விரிச்சி, செலவு, வேய், புறத்திறை, ஊர்கொலை, ஆகோள், பூசன்மாற்று, சுரத்துய்த்தல், தலைத்தோற்றம், தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை, புலனறிசிறப்பு, பிள்ளைவழக்கு, துடிநிலை, கொற்றவைநிலை, வெறியாட்டு என இவை இருபதும் வெட்சித்திணையும் துறையுமாம். எ-று.

வெட்சி.

வெட்சியென்பது இருவகைத்து; *மன்னுறுதொழிலும் தன்னுறுதொழிலுமென.

வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்றி கன்முனை யாதந் தன்று.

இ-ள். வெற்றியினையுடைய அரசன் ஏவவும் ஏவலின்றியும்போய் மாறுபாட்டினையுடைய வேற்றுப்புலத்துப் பசுநிரையைக் கைக்கொண்டது. எ-று.

அவற்றுள்,

க.—மன்னுறுதொழில் [1]வருமாறு :—

இ-ள். முன்புசொன்ன இரண்டனுள்ளும் மன்னுறுதொழில் [2] வருமுறைமை. எ-று.

† மண்டு மெரியுண் மரந்தடிந் [3]திட்டற்றுக்
கொண்ட கொடுஞ்சிலையன் கோறெரியக் - கண்டே
அடையார் முனையலற வையிலைவேற் காளை
விடையாயங் கொள்கென்றான் வேந்து.

இ-ள். மிகக் கொளுந்தி எரியாநின்ற நெருப்பினுள்ளே மரத்தை வெட்டியிட்டதன்மைத்தாகக் கையிலே வாங்கிக்கொண்ட கொடியவில்லையுடையவன் அம்பை ஆராயக்கண்டும் பகைவர்போர் கலங்க வியக்கத்தக்க இலைத்தொழில்களாற் சிறந்த வேலினையுடைய காளாய், ஏற்றையுடைய நிரையைக் கொள்கவென்று சொன்னான் அரசன். எ-று.

யாரை? கொடுஞ்சிலையானை. கண்டுமென உம்மை விரித்துரைக்க. ஏகாரம்: ஈற்றசை. கொண்ட - கொள்ளப்பட்டன; யாவை? நிரை எனமுற்றாக்கிச் சூத்திரத்திற்கேற்பப் பொருளுரைப்பாருமுளர். (க)

உ.—[4] ‡ தன்னுறுதொழில் வருமாறு :—

இ-ள். தன்னுறுதொழில் வருமுறைமை. எ-று.

* "தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென், றன்ன விருவகைத்தே வெட்சி" (பன்னிரு.); இ-வி. சூ. 602, மேற்.

† தக்க. 569, உரை, மேற். ‡ பெருங். 3.23 : 20-21.

(பி-ம்.) 1 'வரலாறு' 2 'வருநெறி' 3 'இட்டற்றாற்' 4 'இனித்தன்னுறு'

வ - று. அருஅ நிலைச்சாடி யாடுறு தேறல்
மருஅன் மழைத்தடங் கண்ணி - பொருஅன்
கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலை
நெடுங்கடைய நேரார் நிரை.

இ - ள். கள்ளருத நிலைத்தாழியில் அடுதலுற்ற மதுத்தெளிவை மருதே ; குளிர்ந்த பெரிய கண்ணினையுடையாய், தனிசுபொருன் தறு கண்வீரன் ; காலிலே வீரக்கழலைக்கட்டினன் ; காலையிலே நின் நெடிய வாசலிடத்தனவாம், பகைவர்நிரை. எ - று.

நிரை காலை நின்கடையவாதலால் மருதே வார்ப்பாயாகவென்க.

நெடியகடையிலே வந்துநின்றன நேரார்நிரையென்று இறந்த காலப் பொருளாக்கிக் கடுங்கண்மறவன் கழல்புனைந்தவனெனப் பெய ராக்கிப் பின்பு வார்ப்பேனெனப் பொருளென்றலுமொன்று. (உ)

## ந.—வெட்சியரவம் :—

கலவார் முனைமேற்
செலவமர்ந் தன்று.

இ - ள். பொருந்தாதார் முனையிடத்துப் போதலை விரும்பியது. எ - று.

வ - று. * நெடிபடு கானத்து நீள்வேன் மறவர்
அடிபடுத் தாரதர் செல்வான் - துடிபடுத்து
† வெட்சி மலைய விரவார் மணிநிரைக்
கட்சியுட் காரி [1] கலுழ்ம்.

இ - ள். சிள்வீடு கறங்குங் காட்டிடத்து நீண்ட வேலினையுடைய மறவர் காலிலே செருப்பைத்தொட்டுக் கடத்தற்கரிய வழியிடத்துச் செல்வான்வேண்டித் துடியைக் கொட்டப்பண்ணி வெட்சிப்பூவைச் சூடப் பகைவர் மணியாற்சிறந்த பசுவினையுடைத்தான காட்டிடத்துக் காரியென்னும்புள்ளுந் துந்நிமித்தமாக [2] அழாநிற்கும். எ - று. (ந)

## ச.—விரிச்சி :—

வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்
கீண்டிருண் மாலைச் சொல்லோர்த் தன்று.

இ - ள். விரும்பியபொருளின் ஆக்கத்து அழகுணர்தற்குச் செறி யும் இருண்ட மாலையிடத்து நற்சொற்கேட்டது. எ - று.

* தொல். புறத். சூ. 3, இளம். மேற். † சிலப். 12 : "உட்குடை"
(பி - ம்.) [1] 'எழும்' [2] 'எழாநிற்கும்'

வ - று. எழுவணி சீறா ரிருண்மாலை முன்றிற்
குழுவினங் கைகூப்பி நிற்பத் - தொழுவிற்
குடக்கணீ கொண்டுவா வென்றாள் குனிவிற்
றடக்கையாய் வென்றி தரும்.

இ - ள். கணையஞ்சூழ்ந்த சீறூரில் இருளையுடைய மாலைக்காலத்து முற்றத்திலே திரண்ட நங்கூட்டம் கைகுவித்துநிற்பக் கட்சாடியிருக்கும் 1 ஏணியிற் குடத்துக்கள்ளை நீ எடுத்துக்கொண்டு வாவென்றாள்; ஆதலால், வளைந்த வில்லைப் பெரியகையிலே உடையவனே, நமக்கு வெற்றியைத் தரும். எ - று.

'குடக்கணுகொண்டுவாவென்றாள்' என்று பாடமோதி மேல்பாற்றொழுவத்திற் பசுவை அடித்துக் கொண்டுவாவென்றுளென்று பொருளுரைப்பாருமுளர். (௪)

௫.—சேலவு:—

வில்லேருழவர் வேற்றுப் [2]புலமுனிக்
கல்லேர் கானங் கடந்துசென் றன்று.

இ - ள். வில்லாகிய ஏரினையுடைய உழவர் மாற்றாரிடத்தைக் கருதிக் கற்பொருந்தின காட்டைக் கழிந்துபோனது. எ - று.

வ - று. *கூற்றினத் தன்னார் கொடுவி லிடனேந்திப்
பாற்றினம் பின்படர முன்படார்ந் - தேற்றினம்
நின்ற நிலைகருதி யேகினார் நீள்கழைய
குன்றங் கொடுவில் லவர்.

இ - ள். கூற்றின் குழுவினை யொப்பார் வளைந்தவில்லை இடப்பக்கத்திற்கொண்டு கழுகும் பருந்தும் பின்னே தொடர்ந்துவரத் தமது வலியானே நெருங்கிப்போனார், வளைந்தவில்லாளர்தம் ஏறுபொருந்திய பசுநிரைநின்ற நிலையையுடைய உயர்ந்த மூங்கிலையுடைத்தானகுன்றத்தை நினைந்து. எ - று.

ஏகினார் கூற்றினத்தன்னாரெனக் கூட்டுக. (௫)

௬.—வேய்:—

பற்றார் தம்முனைப் படுமணி யாயத்
தொற்றா ராய்ந்த வகையுரைத் தன்று.

இ - ள். பகைவர்தம்முனையிடத்து ஒலிக்குமணியினையுடைய நிரையிடத்து ஒற்றினைத்தெரிந்த கூறுபாட்டினைச் சொல்லியது. எ - று.

வ - று. நிலையு நிரையு நிரைப்புறத்து நின்ற
சிலையுஞ் செருமுனையுள் வைகி - இலைபுனைந்த
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோய் சென்றறிந்து
†நள்ளிருட்கண் வந்தார் நமர்.

---

* தோல். புறத். சூ. 3, இளம். மேற். † பெருங். 3. 24 : 136 - 7.

(பி - ம்.) 1 'மேனி' 2 'புலமுன்னி'.

இ - ள். பசுநின்ற இடமும் பசுவினுடைய அளவும் பசுவினுடைய புறங்காத்துநின்ற விற்படையினளவும் போர்ப்புலத்திற்றங்கிப் பச்சிலையுடனே விரவித்தொடுத்த தேன்பொழியுமாலையினையும் வீரக்கழலினையுமுடைய போரை விரும்பியோய், வேற்றுப்புலத்திலேபோய் ஆராய்ந்து நடுவிருளிடத்து நஞ்சுற்றத்தார் வந்தார். எ - று. (௬)

எ.—புறத்திறை:—

நோக்கருங் குறும்பி னூழையும் வாயிலும்
போக்கற வளைஇப் புறத்திறுத் தன்று.

இ - ள். பகைவராது கண்ணுற்பார்த்தற்கரிய குறும்பின் நுழையும் பெருவாயிலும் யாவரும் புறப்படாதபடி வளைந்து ஊர்மருங்கேவிட்டது. எ - று.

வ - று. * உய்ந்தொழிவா ரீங்கில்லை யூழிக்கட் டீயேபோல்
முந்தமரு ளேற்றார் முரண்முருங்கத் — தந்தமரின்
[1]ஒற்றினொற்றி யுரவோர் குறும்பினைச்
சுற்றினர் போகாமற் சூழ்ந்து.

இ - ள். பிழைத்திருப்பார் இவ்விடத்து யாவருமில்லை; யுகாந்தகாலத்து நெருப்பையொப்ப முற்படப் பூசலில் எதிர்ந்தார் மாறுபாடு கெடத் தம்முடைய உற்றாராய ஒற்றராலே ஆராய்ந்து மிகுந்தவலியினையுடையோர் அரணினை வளைந்துகொண்டார், ஒருவரும் தப்பிப்போகாதபடி விசாரித்து. எ - று.

சூழ்ந்து சுற்றினரென்க. (எ)

அ.—[2]ஊர் கொலை:—

விரைபரி கடவி வில்லுடை மறவர்
குரையழ லடப்பக் குறும்பெறிந் தன்று.

இ - ள். கடுகின செலவையுடைய பரியைமுடுக்கி வில்லினையுடைய வீரர் முழங்கெரி பரப்ப அரணினை அழித்தது. எ - று.

வ - று. † இகலே துணையா வெரிதவழச் சீறிப்
புகலே யரிதென்னார் புக்குப் - பகலே
தொலைவிலார் வீழத் தொடுகழ லார்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு.

இ - ள். மாறுபாடே துணையாக நெருப்புநடப்பக் கோபித்துப் புகுதற்கரிய இடமென்றுபாராதே உள்புக்குப் பகற்பொழுதே ஒருவர்க்குந் தோலாதார் படக் கட்டும்வீரக்கழல் ஆரவாரஞ்செய்யக் கொலைத்தொழிலாற் சிறந்த வில்லினையுடையார் அரணினைக் கைக்கொண்டார். எ - று. (அ)

---

* தொல். புறத். சூ. 3, இளம். மேற். † 'இகலே துணையா வெரித வழச் சீறி': நன். சூ. 451, மயிலை. மேற்.

(பி-ம்.) [1] 'ஒற்றினுய்ந்தாய்ந் துறுவலியோரரணம்' [2] 'ஊர்க்கொலை'

கூ.—ஆ கோள் :—

வென்றார்த்து விறன்மறவர்
கன்றோடு மாதழீஇயன்று.

இ - ள். பகைவர் முனையினைக்கடந்து ஆரவாரித்து வெற்றியினையுடைய வீரர் கன்றுடனே பசுநிரையைக்கைக்கொண்டது. எ - று.

வ - று. * கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்
நெடுவரை நீள்வேய் நரலும் - நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை.

இ - ள். புலிகள் தம்மில் இணையொத்துத் திரட்சிகொண்ட தன்மைத்து ; உயரியமலையிடத்து நீண்டமூங்கிலொலிக்கும் ஊரினடுத் திரண்டபசுவினைக் கைப்பற்றி அவ்விடத்துநின்றுநீங்காராய் நிணத்தைக் கோத்த வேலினையுடையார் நின்ற நிலை. எ - று.

ஆல் : அசை. (க)

க0.—பூசன்மாற்று :—

கணம்பிறங்கக் கைக்கொண்டார்
பிணம்பிறங்கப் பெயர்த்திட்டன்று.

இ - ள். நிரைத்திரட்சிபெருக்கக் கைப்பற்றின கரந்தையார்தம் பிணம் பெருக்க வெட்சியார் கெடுத்தது. எ - று.

வ - று. † சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்
வீழ்ந்தனர் வீழ்ந்தார் விடக்குணியத் - தாழ்ந்த
குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையா ரெய்த
புலவுக் கணைவழிபோய்ப் புள்.

இ - ள். வெட்சியார் வளைந்துகொண்ட நிரைமீளச் சூழ்ந்துகிட்டின கரந்தையார் பட்டுவீழ்ந்தார் ; வீழ்ந்தவருடைய தசையைத்தின்ன வேண்டிப் படிந்தன, வளைந்த கொடியவில்லாற் சிறந்த கையினையுடைய கூற்றத்தையொப்பார் எய்த புலால் நாறும் அம்பு போனவழியேபோய்ப் பறவைகள். எ - று. (க0)

கக.—சுரத்துய்த்தல் :—

அருஞ்சுரத்து மகன்கானத்தும
வருந்தாம னிரையுய்த்தன்று.

இ - ள். அரிய வழியிடத்தும் பரந்த காட்டின்கண்ணும் நோவுபடாதபடி பசுநிரையைச்செலுத்தியது. எ - று.

வ - று. * புன்மேய்ந் தசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்
வின்மே லசைஇயகை வெல்கழலான் - ‡ தன்மேற்

---

* தோல். புறத். சூ. 3, இளம். ந. மேற்.
† தோல். புறத். சூ. 3, இளம். மேற்.
‡ நன். சூ. 301, மயிலை. விரு. மேற்.

கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டும்
நெடுவரை நீழ லிரை.

இ - ள். புல்லைமேய்ந்து இளைப்பாறி இனத்துடன்கூடித் தம்மில் ஒக்கப்போவனவாகவென்று சொல்லாநின்றான், வில்லின்மேல் வைத்த கையினையும் வெல்லும் வீரக்கழலினையுமுடையவன்; தன்மேலே செங்குத்தான மலையினின்றும் விழாநின்ற நீர்போல் முடுகிவருங்கரந்தையாரைக்கண்டும், நீண்டவரையினது நீழலிலே ஆனிரையை. எ - று.

ஆனிரையைப் புணர்ந்துடன் செல்கென்னுமெனக்கூட்டுக. (கக)

கஉ.—தலைத்தோற்றம் :—

உரவெய்யோ னினந்தழீஇ
வரவுணர்ந்து கிளைமகிழ்ந்தன்று.

இ - ள். வலியினைவிரும்பினோன் ஆனினத்தைக் கைக்கொண்டு வருதலையறிந்து உறவுமுறையார் மனமகிழ்ந்தது. எ - று.

வ - று. * மொய்யண லானிரை முன்செல்லப் பின்செல்லும்
மையணற் காளை மகிழ்துடி - †கையணல்
வைத்த வெயிற்றியர் வாட்க ணிடனுடை
உய்த்தன் றுவகை யொருங்கு.

இ - ள். செறிந்த அலை தாடியையுடைய பசுநிரை முன்னேபோகப் பின்னே வரும் மயிராற் கறுத்த கபோலத்தினையுடைய காளை மகிழ்ந்து கொட்டுந்துடி நிரைகொண்டுவரப் போன வெட்சியாருடைய நிலைமையையறியாது வெறுப்பினாற் கையைக்கதுப்பிலேவைத்த வேட்டுவிச்சியர் வாள்போன்ற கண் இடந்துடிப்பச்செலுத்திற்று, பிரியத்தை, பலர்க்குமொக்க. எ - று.

மகிழ்துடி ஒருங்கு உய்த்தன்றென்க. மகிழ்துடி : வினைத்தொகை. (கஉ)

கங.—தந்து நிறை :—

வார்வலந்த துடிவிம்ம
ஊர்புகல நிரையுய்த்தன்று.

இ - ள். வாராலே கட்டின துடி கறங்க ஊரினுள்ளார் விரும்ப ஆனிரையை மன்றத்திடத்துச் செலுத்தியது. எ - று.

வ - று. ‡ தண்டா விருப்பின டன்னை தலைமலைந்த
வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று - கண்டாள்
அணிநிரை வாண்முறுவ லம்மா வெயிற்றி
§ மணிநிரை மல்கிய மன்று.

* தொல். புறத். சூ. 3, ந. மேற். † சீவக. 2050.
‡ தொல். புறத். சூ. 3, இளம். மேற். § புறநா. 387 : 24.

இ - ள். தணியாத உவகையினையுடையளாகித் தன்னுடைய சுவாமி தலையிலேசூடின வண்டுநிறைந்த நறுநாற்றம் வீசும் மாலை வாழ்வதாகவென்று நோக்கினாள், அலங்காரமுடைத்தாக ஒழுங்குபட்டு ஒளிவிடாநின்ற பல்லினையும் அழகிய பெருமையினையுமுடைய மறத்தி, மணியணிந்த பசுமிக்க மன்றத்தை. எ - று.

எயிற்றி கண்டாளெனக் கூட்டுக. (கந)

கச.—பாதீடு:—

கவர்கணைச் சுற்றங் கவர்ந்த கணநிரை
அவரவர் வினைவயி னறிந்தீந் தன்று.

இ - ள். கவர்த்த தலையம்பினையுடைய கிளை கொள்ளைகொண்ட பசுநிரையைச் செய்தார்செய்த தொழில்வகையை அறிந்துகொடுத்தது. எ - று.

வ - று. *ஒள்வாண் மலைந்தார்க்கு மொற்றாய்ந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் - விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரிற்
கூறிட்டார் கொண்ட நிரை.

இ - ள். ஒள்ளிய வாட்போரினை மேற்கொண்டோர்க்கும் ஒற்றுத் தெரிந்து சொன்னோர்க்கும் நிமித்தம் தப்பாவகை சொன்ன அறிவுடையோர்க்கும் தம்முடன் வேறுபடுவாரை மாறுபாடு கெடுத்த வெற்றியினையுடைய மறவினையாளர் தம் சீறூரிடத்துப் பங்கிட்டார், கைக்கொண்டு வந்த நிரையை. எ - று. (கச)

கரு.—உண்டாட்டு:—

†தொட்டிமிழுங் கழன்மறவர்
மட்டுண்டு மகிழ்தூங்கின்று.

இ - ள். கட்டி ஆர்க்கும் வீரக்கழலினையுடைய தறுகண்ணர் மதுவையுண்டு மனங்களித்து ஆடியது. எ - று.

வ - று. *இளிகொண்ட தீஞ்சொ லிளமா வெயிற்றி
களிகொண்ட நோக்கங் கவற்றத் - தெளிகொண்ட
வெங்கண் மலிய விளிவதுகொல் வேற்றூர்மேற்
செங்கண் மறவர் சினம்.

இ - ள். இளியென்னும் இசையினைக்கொண்ட இனிய சொல்லினையுடைய இளைய சிமந்தியான வேட்டுவிச்சி களிப்புக்கொண்ட பார்வை வருத்தவும் தெளிவுகொண்ட வெவ்விய கள்ளையுண்ட மகிழ்ச்சி மிகவும் கெடுவதுபோலும், பகைவர்மேற் சிவந்த கண்ணினையுடைய வீரர் செற்றம். எ - று.

சினம் விளிவதுகொலெனக் கூட்டுக.

இது ‡"ஒருமை சுட்டிய" என்பதனுள்ளமைத்த, "ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப" என்பதுபோலாம். (கரு)

---

* தோல். புறத். சூ. 3, இளம். மேற்.; 'ஒள்...நிரை': ஷை ந. மேற்.
† புறநா. 257 - 8, உரை, மேற். ‡ தோல். எச்ச. சூ. 65, சே. ந.

கசு.—கோடை:—

ஈண்டியநிரை யொழிவின்றி
வேண்டியோர்க்கு விரும்பிவீசின்று.

இ - ள். திரண்ட பசுநிரையொன்றும் தப்பாமே தம்மை வேண்டினவர்களுக்குப் பிரியப்பட்டுக் கொடுத்தது. எ - று.

வ - று. அங்கட் கிணையன் றுடியன் விறலிபாண்
வெங்கட்கு வீசும் விலையாகும் - செங்கட்
செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி
வரிச்சிலையாற் றந்த வளம்.

இ - ள். அழகிய கண்ணுற்சிறந்த கிணையையுடையவனும் துடிகொட்டுமவனும் பாணிச்சியும் பாணனும் வெவ்விய கள்ளிற்குக் கொடுக்கும் விலையாகும், சிவந்த கண்ணினையுடையராய்ப் போர்க்கு இடையாத மன்னர் பூசன்முகத்துக் கோபித்து வரிதலையுடைய வில்லாலேகொண்ட ஆனிரையாகிய செல்வம். எ - று.

வளம் வெங்கட்கு வீசும் விலையாகுமெனக் கூட்டுக. (கசு)

கஎ.—புலனறி சிறப்பு:—

வெம்முனைநிலை யுணர்த்தியோர்க்குத்
தம்மினுமிகச் சிறப்பீந்தன்று.

இ - ள். வெவ்விய வேற்றுப்புலத்தினது நிலைமையை அறிவித்தார்க்குத் தம்முடைய கூற்றினும் பெருகச் சிறப்புக்கொடுத்தது. எ - று.

வ - று. இறுமுறை யெண்ணு திரவும் பகலும்
செறுமுனையுட் சென்றறிந்து வந்தார் - பெறுமுறையின்
அட்டுக் கனலு மயில்வேலோ யொன்றிரண்
டிட்டுக் கொடுத்த வியல்பு.

இ - ள். தாம் இறும்வகையை ஆராயாதே இரவின்கண்ணும் பகலின்கண்ணும் கொல்லும் பகைப்புலத்துப்போய் ஆராய்ந்துவந்தார் பெறக்கடவ பங்கின்மேலும் கொன்று எரியும் கூர்வேலினையுடையோய், ஒன்றுதல் இரண்டாதல் பசு ஏற்றிக்கொடுத்தல்முறைமை. எ - று. (கஎ)

கஅ.—*பிள்ளைவழக்கு:—

பொய்யாது புண்மொழிந்தார்க்கு
வையாது வழக்குரைத்தன்று.

இ - ள். தப்பாமல் நிமித்தஞ்சொன்னோர்க்கு வஞ்சியாதே பெறுமுறைமையைச் சொல்லியது. எ - று.

---

* கரும்பிள்ளைநிமித்தங் கூறியார்க்கு விதந்துகொடுத்தல்; இ - வி. சூ. 603, உரை.

வ - று. புல்லார் நிரைகருதி யாஞ்செல்லப் புண்ணலம்
பல்லா ரறியப் பகர்ந்தார்க்குச் - சொல்லாற்
கடஞ்சுட்ட வேண்டா கடுஞ்சுரையா ஞன்கு
குடஞ்சுட் டினத்தாற் கொடு.

இ - ள். பகைவரது ஆனிரையைக்கொள்ள நினைந்து யாம்போக நிமித்தநன்மையைப் பலருமுணரச் சொன்னார்க்கு மொழியாற் பெறு முறைமை இதுவென்று கருதவேண்டா ; ஒன்றொருகுடம்பால் போதும் மிக்க மடியினையுடைய பசு நான்கு இனங்கடோறுங்கொடு. எ - று.

கடஞ்சுட்டவேண்டா கொடுவென்க. (கஅ)

கக.—துடிநிலை :—

தொடுகழன் மறவர் தொல்குடி மரபிற்
படுக ணிமிழ்துடிப் பண்புரைத் தன்று.

இ - ள். கட்டும் கழல்வீரர் பழங்குடி முறைமையில் மிக்க கண்ணினையுடைத்தாய் ஒலிக்கும் துடியைக் கொட்டுமவன் குணத்தைச் சொல்லியது. எ - று.

வ - று. *முந்தை முதல்வர் துடிய ரிவன்முதல்வர்
எந்தைக்குத் தந்தை யிவனெனக்கு - வந்த
குடியொடு கோடா மரபினோற் கின்னும்
வடியுறு தீந்தேறல் வாக்கு.

இ - ள். என் பாட்டனுடைய பாட்டன் முதலாயினார்க்குத் துடி கொட்டினார் இவன் பாட்டனுடைய பாட்டன் முதலாயினார் ; என்தமப்பனுக்கு இவன் தமப்பன் துடிகொட்டினான் ; இவன் எனக்குத் துடி கொட்டுவான் ; வழிவந்த குடிமுறைமையோடு பிறழாத முறைமையினையுடையவனுக்கு இன்னமும் வடித்தலுற்ற தித்தித்த மதுவினது தெளிவை வார்ப்பாயாக. எ - று. (ககூ)

உ0.—கோற்றவைநிலை :—

ஒளியினீங்கா விறற்படையோள்
அளியினீங்கா வருளுரைத்தன்று.

இ - ள். விளக்கத்தினின்றும் ஒழியாத வெற்றியான்மிக்க ஆயுதத்தையுடையோளது இரக்கத்தினின்றும் ஒழியாத கருணையைச் சொல்லியது. எ - று.

வ - று. †ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை - மீளி
அரண்முருங்க வாகோள் கருதி னடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும்.

---

* "இவற் கீத்துண்மதி" (புறநா. 290) என்பது இதனை ஒத்துள்ளது. † தோல். புறத். சூ. 4, இளம். மேற்.

இ - ள். சிங்கத்தாற் சிறந்த அழகிய கொடியினையும் பசுங்கிளியினையும் பாயுங்கலையினையும் பேய்மிக்க படையினையுமுடைய துர்க்காதேவி, தலைவன் பகைவர் குறும்புமுறிய ஆனிரையைக் கொள்கையை நினைக்கிற் பகைவர் மாறுபாடுகெடத் தான்முன்னே எழுந்தருளும். எ - று. (உ0)

உக.—வெறியாட்டு:—

வாலிழையோர் வினைமுடிய
வேலனொடு வெறியாடின்று.

இ - ள். அழகிய ஆபரணத்தையுடையார் நினைத்த தொழில்முடிய முருகபூசை பண்ணுமவனோடு *வள்ளிக்கூத்தை ஆடியது. எ - று.

வ - று. காணி லரனுங் களிக்குங் கழன்மறவன்
பூணிலங்கு மென்முலைப் போதரிக்கண் - வாணுதல்
தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப
வேன்முருகற் காடும் வெறி.

இ - ள். கண்டானுயின் நிருத்தப்பிரியனுகிய நீலகண்டனும் மகிழ்வன்; கட்டும் கழலினையுடைய மறவினையாளன்றன் ஆபரணம் விளங்கும் மெல்லிய முலையினையும் பூப்போன்ற அரிபரந்த கண்ணினையும் ஒளிமிக்க நுதலினையுமுடையவள்தான் நறுநாற்றத்தை உடம்பிலே நிறுத்தி மாலை பக்கத்தே அசைய வேலினையுடைய † பிள்ளையார்க்கு ஆடும் வள்ளிக்கூத்தை. எ - று.

வள்ளிக்கூத்தைக் காணின் அரனும் களிக்குமென்க. (உக)

வெட்சித் திணைப்பாட்டு இரண்டும் துறைப்பாட்டுப் பத்தொன்பதும் முடிந்தன.

முதலாவது வெட்சிப்படலம் முற்றிற்று.

---

இரண்டாவது

# கரந்தைப்படலம்.

(உ.—சூத்திரம்.)

கதமலி கரந்தை கரந்தை யரவம்
அதரிடைச் செலவே யரும்போர் மலைதல்
புண்ணொடு வருதல் போர்க்களத் தொழிதல்
ஆளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவே
ரு பிள்ளை யாட்டொடு கையறு நிலையே
நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி
வேத்தியன் மலிபே மிகுகுடி நிலையென

* வள்ளிநாயகியின் வேடங்கொண்டு ஆடுங்கூத்து.
† முருகக்கடவுளுக்கு.

அருங்கலை புணர்ந்தோ ரவைபதி ஞன்கும்
கரந்தையுங் கரந்தைத் துறையு மென்ப.

என்-னின், கரந்தைத்திணையும் துறையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். கரந்தை, கரந்தையரவம், அதரிடைச்செலவு, போர் மலைதல், புண்ணொடுவருதல், போர்க்களத்தொழிதல், ஆளெறிபிள்ளை, பிள்ளைத்தெளிவு, பிள்ளையாட்டு, கையறுநிலை, நெடுமொழிகூறல், பிள்ளைப்பெயர்ச்சி, வேத்தியன்மலிபு, குடிநிலை என இவை பதினன்கும் கரந்தைத்திணையும் துறையுமாம். எ - று.

உஉ.—கரந்தை:—

மலைத்தெழுந்தோர் மறஞ்சாயத்
தலைக்கொண்ட நிரைபெயர்த்தன்று.

இ - ள். மாறுபட்டெழுந்தார் மாற்சரியங் கெடக் கைப்பற்றின நிரையை மீட்டது. எ - று.

வ - று. *அழுங்கனீர் வையகத் தாருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண் டற்றாற் - செழுங்குடிகள்
தாரார் கரந்தை தலைமலைந்து தாங்கோடல்
நேரார்கைக் கொண்ட நிரை.

இ - ள். ஆரவாரியாநின்ற கடல்சூழ்ந்த ஞாலத்துப் பெறுதற்கரிய உயிரைக் கூற்றுவன் உண்டபின்பு மீட்ட தன்மைத்து; வளப்பத்தினையுடைய மறக்குடிகள் [1] கொப்புநிறைந்த கரந்தையைத் தலையிலேசூடித் தாங்கொள்ளுமது, பகைவர் கைப்பற்றின ஆனிரையை. எ - று.

கோடல் வீடுகொண்டற்றென்க. ஆல்: அசை. தாம்கோடலைப் பொறுத வெட்சியார் கையினின்றும் கொள்ளப்பட்டன நிரை; இது வீடுகொண்டற்றென்றுமாம். (க)

உங.—கரந்தையரவம்:—

†நிரைகோள் கேட்டுச் செய்தொழி லொழிய
[2] விரைவனர் குழூஉம் வகையுரைத் தன்று.

இ - ள். பசுநிரையைக் கைப்பற்றினமைகேட்டுச் செய்யாநின்ற காரியந் தவிரக் கடுகினராகித் திரளுங்கூறுபாட்டைச் சொல்லியது. எ - று.

வ - று. ‡காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் வெருவந்த தோற்றத்தார் - காலன்
கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே
உளர்ந்தார் நிரைப்பெயர்வு முண்டு.

---

* தொல். புறத். சூ. 5, இளம். மேற். † சீவக. 428, ந. மேற். ‡ நன். சூ. 354, மயிலை. மேற்.

(பி - ம்.) 1 'கொத்து' 2 'விரையினர்', 'விரையுனர்.'

இ - ள். காலிலேவீறைந்த வீரக்கழலினையுடையார், கொடியவில் லினையுடையார், கையிலேயெடுத்த வேலினையுடையார், அஞ்சத்தக்க காட்சியினையுடையார், கூற்றுவன் கோபித்தாலுமொப்பார், தடாரி யோசையைக்கேட்டு அசைந்தார்; வெட்சியார்கொண்ட ஆனிரை மீள் கையும் கூடும். எ - று. (உ)

உச.—அதரிடைச் செலவு :—

ஆற்று ரொழியக் கூற்றெனச் சினைஇப்
போற்றார் போகிய நெறியிடை யேகின் று.

இ - ள். செருவினைப்பொருதார் ஊரிலேநிற்கக் காலனையொப் பக்கோபித்துப் பகைவர்போன வழியிடத்தேசென்றது. எ - று.

வ - று. சங்குங் கருங்கோடுந் தாழ்பீலிப் பல்லியமும்
எங்கும் பறையோ டெழுந்தார்ப்ப - வெங்கல்
அழற்சுரந் தாம்படர்ந்தா ரான்சுவட்டின் மேலே
நிழற்கதிர்வேன் மின்ன நிரைத்து.

இ - ள். சங்கும் கரிய வீரக்கொம்பும் தாழ்ந்த பீலியையுடைய சில விசேடவாச்சியங்களும் பறையோடு எங்கும் எழுந்து ஆரவாரிப்ப வெவ்விய கல்லினையுடைய அழல்பரந்த காட்டிலே தாம் போயினர், நிரைபோன அடிப்பாடே, நிழல்விடும் சுடர்வேல் ஒளிவிட நிரைத்து. எ - று. (௩)

உரு.—போர்மலைதல் :—

*வெட்சி யாரைக் கண்ணுற்று வளைஇ
உட்குவரத் தாக்கி [1] புறஞ்செருப் புரிந்தன்று.

இ - ள். வெட்சியாரைக் கிட்டிச்சூழ்ந்து அஞ்சத்தாக்கி எடுப்பும் சாய்ப்புமான பூசலை மேற்கொண்டது. எ - று.

வ - று. †புலிக்கணமுஞ் சீயமும் போர்க்களிறும் போல்வார்
வலிச்சினமு மானமுந் தேசும் - ஒலிக்கும்
அருமுனை வெஞ்சுரத் தான்பூசற் கோடிச்
செருமலைந்தார் சீற்றஞ் சிறந்து.

இ - ள். புலியினதுதிரளும் சிங்கமும் போர்பொரும் யானையு மொப்பார், வலிமிக்க சீற்றமும் அபிமானமும் பெருமையும்; ஆரவாரிக் கும் கிட்டுதற்கரிய பகைப்புலவழியிலே நிரைகொண்டார் வெட்சியா ரென்னும் ஆரவாரத்தாற்கடுகிப் பூசலைச்செய்தார், கோபமிக்கு. எ - று. சிறந்து செருமலைந்தாரென்க. (௪)

உகூ.—‡புண்ணொடுவருதல் :—

மண்ணொடு புகழ்நிறீஇப்
புண்ணொடுதான் வந்தன்று.

* புறநா. 259, உரை, மேற். † தொல். புறத். சூ. 5, இளம். மேற். ‡ தொல். புறத். சூ. 5, இளம்.

(பி - ம்.) 1 'உளர்செருப்'

இ - ள். பூமியுடனே இசையை நிறுத்தி ஆயுதம்பட்ட புண்ணுடனே வீரன்றான் வந்தது. எ று.

வ - று. *வெங்குருதி மல்க †விழுப்புண் ணுகுதொறூஉம்
இங்குலிகஞ் சோரும் வரையேய்க்கும் - பைங்கண்
இனம்போக்கி நின்றா ரிகல்வாட்டி ‡வேந்தன்
மனம்போல வந்த மகன்.

இ - ள். வெவ்விய உதிரம் மிக முகத்தினும் மார்பினும்பட்ட புண்ணினின்றும் விழவிழச் சாதிலிங்கஞ்சொரியும் வரையையொக்கும்; பைங்கண்ணினையுடைய பசுவினத்தை முன்னேசெலுத்திநின்ற வெட்சியாருடைய மாறுபாட்டைக்கெடுத்து மன்னன்நெஞ்சினையொப்ப வந்த வீரன். எ - று.

வீரன் இங்குலிகஞ் சோரும்வரையை யொக்குமென்க.

வேந்தன்மனம் வெற்றியையே நினையும். (௬)

உஎ.—போர்க்களத்தொழிதல் :—

படைக்கோடா விறன்மறவரைக்
கடைக்கொண்டு களத்தொழிந்தன்று.

இ - ள். பகைவராயுதத்திற்குப் புறங்கொடாத வெற்றியினையுடைய வீரரைக்கூட்டித் தான் பூசற்களரியிலேபட்டது. எ - று.

வ - று. §உரைப்பி னதுவியப்போ வொன்னார்கைக் கொண்ட
நிரைப்பி னெடுந்தகை சென்றான் - புரைப்பின்
றுளப்பட்ட வாயெல்லா மொள்வாள் கவரக்
களப்பட்டான் றோன்றான் கரந்து.

இ - ள். சொல்லின் அஃது அதிசயமோ? பகைவர் கைப்பற்றின நிரையின்பின்னே பெரிய மேம்பாட்டினையுடையவன் சென்றான்; ஒப்பின்றிக் கருதப்பட்ட உடம்பிடமெல்லாம் ஒள்ளிய வாள் கொள்ளை கொள்ளப் போர்க்களரியிலே விழுந்தான், ஒளித்துத் தோற்றுகிலன். எ - று.

'நிரைப்பி னெடுந்தகை சென்றான்' என்றது, இந்நாள்மீண்ட நிரையென்னும் புகழுடனே சென்றானென்றல். (௭)

உஅ.—ஆளெறி பிள்ளை:—

வருவாரை யெதிர்விலக்கி
ஒருதானாகி யாளெறிந்தன்று.

இ - ள். பொருவாரை எதிரே விலக்கித் தானொருவனுமேயாகி வீரரை வெட்டியது. எ - று.

வ - று. பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க வாளெறிந்து
கொள்ளைகொ ளாயந் தலைக்கொண்டார் - எள்ளிப்

* ஒப்பு: களவழி, 7; சீவக. 2239. † குறள், 776. ‡ நன். சூ. 366, மயிலை, மேற். § தொல். புறத். சூ. 5, இளம். மேற்.

பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்ற னுளன்.

இ - ள். விளைவறியாத பிள்ளையையொப்பப் பிணம் பெருக்க வீரரை வெட்டி வெட்சியார் கொள்ளைகொண்ட ஆனிரையைக் கிட்டினார் இகழ்ந்து பூசற்செய்து கெட்டு மீண்டுபோகவும் மீளானாகித் தனியேநின்றான் ஒரு பூங்கழலானுளன். எ - று. (எ)

உகூ.—பிள்ளைத் தெளிவு :—

கண்மகிழ்ந்து துடிவிம்மப்
புண்மகிழ்ந்து புகன்றாடின்று.

இ - ள். துடியின்கண் மகிழ்ந்தொலிப்பத் தன்புண்ணைப் பிரியப்பட்டு விரும்பிக் கூத்தாடியது. எ - று.

அதனைப் புகழ்ந்தாடியதூஉமாம்.

வ - று. மேவா ருயிருணங்க மேன்முடித்த பிள்ளையன்
பூவா ளுறைகழியாப் போர்க்களத்து - ஓவான்
[1] துடியிரட்டி விம்மத் தொடுகழலார் முன்னின்
றடியிரட்டித் திட்டாடு மாட்டு.

இ - ள். பகைவர் உயிருலரத் தலையினை நீக்கிக் கவந்தமாக்கிநின்ற பிள்ளைத்தன்மையை எய்தியவன் பொலிவினையுடைய வாளினை உறையினின்றும் வாங்கிப் பூசற்களரியிலேயொழியான்; துடிகொட்டி ஆர்ப்பரவமிகக் கட்டிய வீரக்கழலினையுடையார் முன்னேநின்று இட்டவடியின்மேல் அடியிட்டு ஆடுங்கூத்து. எ - று.

ஆட்டு ஓவானென்க. (அ)

ஙo.—பிள்ளையாட்டு :—

கூடலர்குடர் மாலைசூட்டி
வேறிரித்து விரும்பியாடின்று.

இ - ள். பகைவர்குடராகிய மாலையைச்சூட்டிக் கையிலே வேலைத் திருப்பிப் பிரியப்பட்டு ஆடியது. எ - று.

வ - று. *மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
கூட்டிய வெஃகங் குடர்மாலை - சூட்டியபின்
மாறிரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
வேறிரிய விம்முந் துடி.

இ - ள். பகைவரை மாளப்பண்ணின பிள்ளைத்தன்மையை எய்தியவன், வீரருடைய மார்பங்களைத் திறந்து தெரிந்து பறித்தவேலைப் பகைவருடைய குடர்மாலையைச் சுற்றியபின் மாறுபாடுகெடக் கோபித்து ஆடுமவன் கைக்கொண்டவேலைத் திருப்பக் கறங்காநின்றது துடி. எ - று. (க)

---

* தொல். புறத். சூ. 5, இளம். மேற்.
(பி - ம்.) 1 'துடியுருட்டிவிம்ம'

௩௧.—கையறுநிலை :—

வெருவரும் வாளமர் விளிந்தோற் கண்டு
கருவி மாக்கள் கையற வுரைத்தன்று.

இ - ள். அஞ்சத்தகும் வாட்பூசலிலே பட்டோனைப் பார்த்து யாழ்ப்பாணர் அவன் பட்டபடியைச் சொல்லியது. எ - று.

வ - று. * நாப்புலவர் சொன்மாலை நண்ணார் படையுழக்கித்
† தாப்புலி யொப்பத் தலைக்கொண்டான் - பூப்புனையும்
நற்குலத்துட் டோன்றிய நல்லிசையாழ்த் தொல்புலவீர்
கற்கொலோ சோர்ந்திலவெங் கண்.

இ - ள். செந்நாப்புலவருடைய 1 கீர்த்திமாலை, பகைவர் சேனையைத் துகைத்து வலியபுலியையொப்பப் பட்டான்; பொற்றாமரைப் பூவைச்சூடும் நல்ல குலத்திலே பிறந்த அழகிய இசையினையுடைய யாழாற்சிறந்த பழைய அறிவினையுடையீர், கல்லோ அறியோம், விழுந்தில எம்முடைய கண்கள். எ - று. (௧௦)

௩௨.—நெடுமொழி கூறல் :—

மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்
தன்மேம் பாடு தானெடுத் துரைத்தன்று.

இ - ள். மன்னரின் மேம்பட்ட நிறைமதிபோலும் கொற்றக்குடையினையுடையோர்க்கு ஒருவீரன் தன்னுடைய மேம்பாட்டைத் தான் உயர்த்திச்சொல்லியது. எ - று.

வ - று. ‡ ஆளமர் வெள்ளம் பெருகி னதுவிலக்கி
வாளொடு வைகுவேன் யானாக - நாளும்
கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோ யீயப்
2 பிழிமகி ழுண்பார் பிறர்.

இ - ள். வீரராகிய போர்ப்பிரளயம் கைவளரின் அதனைவிலக்கி வாளுடனே அங்கே தங்குவேனாக யான்; நாடோறும் மிக்க உவகையாற் சிறந்த வெற்றியினையும் வீரக்கழலினையுமுடைய வெய்யோனே, நீ கொடுப்ப நினைவு இயைந்து பிழியுமதுவை நுகர்வாராக, வேறுசிலர். எ - று.

உண்பாராக, பிறரெனத் தொழிற்படச் சொல்லுக; யான் வாளொடு வைக, உண்பார் பிறரென்றுமாம். (௧௧)

௩௩.—பிள்ளைப்பெயர்ச்சி :—

போர்தாங்கிப் புள்விலங்கியோனைத்
தார்வேந்தன் றலையளித்தன்று.

இ - ள். புள்ளைவிலக்கிப் பூசலைத்தாங்கினவனை மாலையினையுடைய மன்னன் தண்ணளிசெய்தது. எ - று.

---

* "மறையவர் சொன்மாலை" பு - வெ. 189. † "தாப்புலி யனைய வெற்றிச் சராசந்தன்" கூர்ம. கண்ணன்பூமி. 70. ‡ தொல். புறத். சூ. 5, இளம். மேற்.

(பி - ம்.) 1 'கீர்த்திமாலையைத் தலைக்கொண்டு பகைவர்' 2 'பிழிமது'

வ - று. பிணங்கமருட் பிள்ளை பெயர்ப்பப் பெயரா
தணங்கஞர்செய் தாளெறித னேக்கி - வணங்காச்
சிலையளித்த தோளான் சினவிடலைக் கன்றே
தலையளித்தான் றண்ணடையுந் தந்து.

இ - ள். மாறுபடும் பூசலிடத்துக் காரியென்னும் புள் விலக்கவும் விலங்காதுய்ப் பகைவரை வருத்துந்துன்பத்தைச்செய்து வீரரைவெட்டு தலைப்பார்த்து வளையாத மலையினையொத்த தோளான் செற்றத்தினை யுடைய வீரனுக்கு அற்றைநாளே வரிசைகொடுத்தான், மருதநிலம் பலவுங்கொடுத்து. எ - று. (கஉ)

ஙச.—வேத்தியன் மலிபு :—

தோள்வலிய வயவேந்தனை
வாள்வலிமறவர் சிறப்புரைத்தன்று.

இ - ள். தோளால்வலிய மறமன்னனை வாளால்வலிய வீரர் மேம்பாட்டினைச் சொல்லியது. எ - று.

வ - று. * அங்கையு ணெல்லி யதன்பய மாதலாற்
கொங்கலர் தாரான் குடைநிழற்கீழ்த் - தங்கிச்
செயிர்வழங்கும் வாளமருட் சென்றடையார் வேல்வாய்
உயிர்வழங்கும் வாழ்க்கை யுறும்.

இ - ள். உள்ளங்கை நெல்லிப்பழத்தினது தன்மையாதலால், தேன்மலருமாலையினையுடையான் கொற்றக்குடை நிழலின்கீழே அவதரித்துக் 1 குற்றத்தினைக்கொடுக்கும் வாட்பூசலிலேபுக்குப் பகைவர்தம் வேலின் வாயிலே உயிரைக்கொடுக்குஞ் செல்வம், மிகவும் உறுதியுடைத்து. எ - று.

வாழ்க்கை, நெல்லியதன்பயமாதலால் உறுதியுடைத்தென்க. (கஙு)

ஙரு.—குடிநிலை :—

† மண்டிணி ஞாலத்துத் தொன்மையு மறனும்
கொண்டுபிற ரறியுங் குடிவர வுரைத்தன்று.

இ - ள். மண்செறிந்த பூமியிடத்துப் பழமையும், தறுகண்மையுமுட்கொண்டு பிறரறியும் குடியின் வரலாற்றினைச் சொல்லியது. எ - று.

மண்டிணிஞாலம்: மண்ணுலகு விண்ணுலகென்றாற்போலக்கொள்க.

வ - று. பொய்யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்
‡ வையகம் போர்த்த வயங்கொலிநீர் - கையகலக்
§ கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி.

---

* தோல். புறத். சூ. 5, இளம்; நன். சூ. 221, மயிலை. விரு. மேற்.
† புறநா. 2 : 1; சிலப். 26 : 42; மணி. 11 : 95. ‡ பரி. 6 : 3.
§ மதுரைக். 4.

(பி - ம்.) 1 'குரோதத்தினை'

இ - ள். பொய்ம்மைநீங்க நாடோறும் கீர்த்தியுண்டாக்குதல், என்ன அதிசயமாம், பூமியைமறைத்த தெளிந்துகறங்கும் உகாந்தவெள்ளம் விட்டு நீங்க, முற்பட மலைதோன்றிப் பூமிதோன்றாத அளவிலே வாளுடனே எல்லாரிலும் முற்பட மலையிடத்திலே தோன்றிப் பழையதாகிய குடி! எ - று.

குடி புகழ்விளைத்தல் என்னவியப்பாம். [1]எவனென்பது என்னெனக் குறைந்துநின்றது. மூத்தகுடியென்றது பூசலிலே வாளாலே பட்டகுடியென்பாருமுளர். (க௪)

கரந்தைத்திணைப்பாட்டு ஒன்றும் துறைப்பாட்டுப் பதின்மூன்றும் முடிந்தன.

இரண்டாவது கரந்தைப்படலம் முற்றிற்று.

---

மூன்றாவது

# வஞ்சிப்படலம்.

(௩.—சூத்திரம்.)

**வா**டா வஞ்சி வஞ்சி யரவம்
கூடாரப் பிணிக்குங் குடைநிலை வாணிலை
கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி
குற்றமில் சிறப்பிற் கொற்ற வள்ளை
பேராண் வஞ்சி மாராய வஞ்சி
நெடுமொழி வஞ்சி முதுமொழி வஞ்சி
உழபுல வஞ்சி மழபுல வஞ்சி
கொடையின் வஞ்சி குறுவஞ் சியயே
ஒருதனி நிலையொடு தழிஞ்சி பாசறை
பெருவஞ் சியயே பெருஞ்சோற்று நிலையொடு
நல்லிசை வஞ்சியென நாட்டினர் தொகுத்த
எஞ்சாச் சீர்த்தி யிருபத் தொன்றும்
வஞ்சியும் வஞ்சித் துறையு மாகும்.

என்-னின்,வஞ்சித்திணையும்துறையுமாமாறுஉணர்த்துதல்நுதலிற்று.

இ - ள். வஞ்சி, வஞ்சியரவம், குடைநிலை, வாணிலை, கொற்றவைநிலை, கொற்றவஞ்சி, கொற்றவள்ளை, பேராண்வஞ்சி, மாராயவஞ்சி, நெடுமொழிவஞ்சி, முதுமொழிவஞ்சி, உழபுலவஞ்சி, மழபுலவஞ்சி, கொடைவஞ்சி, குறுவஞ்சி, ஒருதனிநிலை, தழிஞ்சி, பாசறைவஞ்சி, பெருவஞ்சி, பெருஞ்சோற்றுநிலை, நல்லிசைவஞ்சி என இவை இருபத்தொன்றும் வஞ்சித்திணையும் துறையுமாம். எ - று.

---

(பி - ம்.) [1] ‘என்னவென்பது’

ங௬.—வஞ்சி:—

*வாடாவஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளல்குறித்தன்று.

இ - ள். தோலாதவஞ்சியைத் தலையிலேசூடிப் பகைவர் பூமியைக் கொள்கையைக் கருதியது. எ - று.

வ-று. செங்கண் மழவிடையிற் றண்டிச் சிலைமறவர்
†வெங்கண் மகிழ்ந்து விழவமர - அங்குழைய
வஞ்சி வணங்கார் வணக்கிய வண்டார்ப்பக்
குஞ்சி மலைந்தானெங் கோ.

இ - ள். சிவந்தகண்ணினையுடைய இளமைப்பருவத்து ஆனேற்றை யொப்ப மிகைத்தெழுந்து வில்லினையுடையவீரர் வெவ்விய மதுவை யருந்தி வில்விழாவை விரும்ப, அழகிய தளிரினையுடைய வஞ்சியைத் தன்னைப் பணியாதாரைப் பணிவிப்பான் வேண்டிச் சுரும்பு ஆரவாரிப்ப மயிரிலே சூடினான், எம்முடைய வேந்து. எ - று.

வணங்காரை வணக்கிய வேந்து சூடினனென்க. (க)

ங௭.—வஞ்சியரவம்:—

வள்வார் முரசமொடு வயக்களிறு முழங்க
வொள்வாட் டானை யுருத்தெழுந் தன்று.

இ - ள். வலியினையுடைய வாராலேவிசித்த வீரமுரசுடனே வலிய யானை முழங்க அழகிய வாளினையுடைய சேனை கோபித்துக் கிளர்ந்தது. எ - று.

வ - று. பௌவம் பணைமுழங்கப் பற்றார்மண் பாழாக
வௌவிய வஞ்சி வலம்புனையச் - செவ்வேல்
ஒளிறும் படைநடுவ ணூழித்தீ யன்ன
‡களிறுங் களித்ததிருங் கார்.

இ - ள். கடல்போல வீரமுரசம் ஆர்ப்பப் பகைவர்நிலம் அழியக் கைப்பற்றின வஞ்சியை வெற்றியாகச்சூடச் சிவந்தவேல் விட்டுவிளங்கும் சேனை நடுவே யுகாந்தகாலத்து நெருப்பையொத்த யானையும் மகிழ்ந்து முழங்காநின்றது, மேகத்தைப்போல. எ - று. உம்மை: சிறப்பும்மை. (உ)

ங௮.—குடைநிலை:—

§பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக்
கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று.

---

* மணி. 19 : 119 - 20. † புறநா. 129 : 2. ‡ பரி. 8 : 17- 8 ; அகநா. 144 - 12 - 3 ; புறநா. 81 : 1-2 ; குறிஞ்சி. 162 - 5 ; நன். சூ. 458, மயிலை. மேற். § சிலப். 5 : 89 - 93, அடியார். மேற்.

இ - ள். தன்மேலிட்டமாலையிலே வண்டுகளொலிப்ப மிக்க அறிவினையுடையோர் கீர்த்தியைச்சொல்லக் கத்தரிகையால் மட்டஞ்செய்த மாலையினையுடைய வேந்தன் குடையைப் புறவீடுவிட்டது. எ - று.

வ - று. முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானைத்
துன்னருந் துப்பிற் றொழுதெழா - மன்னர்
உடைநா ளுலந்தனவா லோதநீர் வேலிக்
குடைநா ளிறைவன் கொள.

இ - ள். தன்முன்னே வீரமுரசுமுழங்க, பெரிய கடல்போன்ற சேனையினையும் கிட்டுதற்கரிய வலியினையுமுடையராய்ப் பணிந்தெழாத வேந்தர்தம்முடைய வாணாள் கெட்டன; 1 திரைமிகுந்தகடலை வேலியாகவுடைய பூமியிடத்து, குடையை அரசன் புறவீடுவிட. எ - று.

புறவீடுவிட உடைநாளுலந்தனவென்க. ஆல்: அசை. (௩)

௩௯.—வா ளணி லை:—

*செற்றார்மேற் செலவமர்ந்து
கொற்றவா ணாட்கொண்டன்று.

இ - ள். பகைவர்மேல் எடுத்துவிடுதலை விரும்பி வெற்றியினையுடைய வாளைப் புறவீடுவிட்டது. எ - று.

வ - று. அறிந்தவ ராய்ந்தநா ளாழித்தேர் மன்னன்
எறிந்தில கொள்வா ளியக்கம் - அறிந்திகலிப்
பின்பகலே யன்றியும் பேணா ரகநாட்டு
†நன்பகலுங் கூகை நகும்.

இ - ள். சோதிடநூல்வல்லவர் தெரிந்தநாளிலே வட்டக்காலாற் சிறந்த தேரினையுடையவேந்தன் வெட்டிவிளங்கும் அழகிய வாளினது புறவீடு விடுதலையுணர்ந்து மாறுபட்டு உச்சிக்குப் பின்பன்றியும் பகைவருண்ணாட்டிடத்து உச்சிப்பொழுதும் கோட்டான் பாடாநிற்கும். எ - று. (௪)

௪௰.—கொ ற் ற வை நி லை:—

நீடோளான் வென்றிகொள்கென நிறைமண்டை வலனுயரிக்
கூடாரைப் புறங்காணுங் கொற்றவைநிலை யுரைத்தன்று.

இ - ள். நீண்ட தோளினையுடையவன் வெற்றி பெறுவானாகவெனச் சொல்லி நல்லபொருள்களால் நிரம்பிய பாத்திரத்தை வெற்றியாக வெடுத்து அரசனுடைய பகைவரை முதுகுபுறங்காணும் துர்க்காதேவி நிலைமையைச் சொல்லியது. எ - று.

---

* சிலப். 5 : 89-94, அடியார். மேற். † புறநா. 356 : 2 ; 362 :
(பி - ம்.) 1 'குளிர்ந்தகடலை'

வ - று. அணங்குடை *நோலை பொரிபுழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக் - கணம்புகலக்
[1] கையிரிய மண்டைக் கணமோடி காவலற்கு
மொய்யிரியத் தான்முந் துறும்.

இ - ள். தெய்வத்திற்குரித்தான எட்கசிவும் நெற்பொரியும் அவரை துவரையும் தருப்பணமும் நிணமும் குடரும் உதிரமுநிறைவித்துத் திரட்சி விரும்பக் கையிலே பாத்திரத்தையிருத்திய பூதகணங்களையுடைய துர்க்காதேவி வேந்தற்குப் பகைகெடத் தான் முன்னே எழுந்தருளும். எ - று. (௫)

சுக.—இதுவுமது:—

மைந்துடை யாடவர் செய்தொழில் கூறலும்
அந்தமில் புலவ ரதுவென மொழிப.

இ - ள். வலியினையுடையவீரர் செய்யுந்தொழிலைச் சொல்லுதலும் முடிவில்லாத அறிவினையுடையோர் அத்துறையென்று சொல்லுவர். எ - று.

வ - று. தமருட் டலையாத ருர்தாங்கி நிற்றல்
எமருள்யா மின்னமென் றெண்ணல் - அமரின்
முடுகழலின் முந்துறுதன் †முல்லைத்தார் வேந்தன்
தொடுகழன் மைந்தர் தொழில்.

இ - ள். தம்முடைய சுற்றத்தாரின் மேலாகுதல், தூசிப்படையைத் தடுத்து நிற்றல், எங்கள் படைவீரருள் யாம் இன்னதன்மையேமென்றெண்ணுதல், போரிடத்து விரைந்து செல்லு நெருப்புப்போல முற்படப் புகுதல், முல்லைத்தாரினையுடைய மன்னனுடைய கட்டும்வீரக்கழலினையுடைய வீரர் செய்தி. எ - று.

முல்லைத்தார்கூறியது, ‡ "வஞ்சிதானே முல்லையது புறனே" என்றதனால். (௬)

சுஉ.—§கொற்றவஞ்சி:—

வையகம் வணங்க வாளோச் சினனெனச்
செய்கழல் வேந்தன் சீர்மிகுத் தன்று.

இ - ள். உலகத்துள்ளோர் தொழ வாளாலே வெட்டினனெனச் சொல்லிப் பண்ணின வீரக்கழலினையுடைய அரசனது [2] நன்மையைப் பெருக்கச் சொல்லியது. எ - று.

வ - று. ‖அழலடைந்த மன்றத் [3] தலந்தயரா நின்றார்
நிழலடைந்தே நின்னையென் றேத்திக் - கழலடையச்
செற்றங்கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் வீந்தவியக்
கொற்றங்கொண் டெஃகுயர்த்தான் கோ.

---

* சிலப். 5 : 68 - 9. † சீவக. 547. ‡ தொல். புறத். சூ. 6.
§ சிலப். 25 : 141. ‖ நன். சூ. 440 - மயிலை. மேற்.

(பி - ம்.) 1 'கையிரீஇ மண்டை கண' 2 'தன்மை' 3 'அரந்தயரா நின்றார்.'

இ - ள். நெருப்புப் பொருந்திய பகைவர்நாட்டு அம்பலத்து நொந்து அழியாநின்றவர் நின்னை நிழலாகச்சேர்ந்தேமென்று புகழ்ந்து சீபாதத்தை வந்துசேரச் சினத்தைப்பாராட்டிக் கோபித்துவந்தார் பட்டுத் தம்பெயர்கெட வெற்றியைப்பெற்று வேலை வலமாக உயர்த்தான், வேந்து. எ - று. (எ)

சங.—*கொற்றவள்ளை :—

மன்னவன் புகழ்கிளந்
தொன்னார்நா டழிபிரங்கின்று.

இ - ள். அரசன் கீர்த்தியைச்சொல்லிப் பகைவர்தேசம் கெடுவதற்கு வருந்தியது. எ - று.

வ - று. †தாழார மார்பினன் றாமரைக்கண் சேந்தனவாற்
பாழாய்ப் பரிய விளிவதுகொல் - யாழாய்ப்
புடைத்தே னிமிர்கண்ணிப் ‡பூங்கட் புதல்வர்
நடைத்தே ரொலிகறங்கு நாடு.

இ - ள்: ஆரந்தாழ்ந்த மார்பினையுடையவன் தாமரை மலர் போன்ற கண்கள் சிவந்தன, பாழாய்க் கண்டாரிரங்கக் கெடும்போலும்; யாழையொப்ப முரன்று பக்கத்திலே வண்டுகள் ஆர்க்குமாலையினையும் பொலிவினையுடைய கண்ணினையுமுடைய மைந்தர் சிறுதேரோசை ஆரவாரிக்கும் நாடு. எ - று.

நாடு பாழாய்ப்பரிய விளிவதுகொலென்க (அ)

சச.—பேராண் வஞ்சி :—

கேளல்லார் முனைகெடுத்த
மீளியாளர்க்கு மிகவுய்த்தன்று.

இ - ள். உறவல்லாதார் பெருஞ்செருவைத் தொலைத்த தலைமையையுடைய வீரர்க்குப் பெரிதுங் கொடுத்தது. எ - று.

வ - று. பலிபெறு நன்னகரும் பள்ளி யிடனும்
ஒலிகெழு நான்மறையோ ரில்லும் - நலிவொரீஇப்
புல்லா ரிரியப் பொருதார் முனைகெடுத்த
வில்லார்க் கருள்சுரந்தான் வேந்து.

இ - ள். பலியிடும் நல்ல கோயில்களும் துறந்தாரிருக்கும் பள்ளியிடங்களும் ஓசைபொருந்திய நான்குவேதத்தோர் அகமும் நெருக்கு தலையொழிந்து பொருந்தாதார் கெட்டோடப் பொருதவீரர் செருவை வென்ற தன்னுடைய வில்லாளர்க்கு உபகாரம் பண்ணினன், மன்னன். எ - று. (௯)

சரு.—இதுவுமது :—

அருந்திறை யளப்ப வாறிய சினத்தொடு
பெரும்பூண் மன்னவன் பெயர்தலு மதுவே.

* சிலப். 25 : 145. † முந்து. 104 ; புறநா. 152 : 10 ; கம்ப. சூளா. 30. ‡ பட். 24 - 5 ; தறுந். 61 ; சீவக. 89.

இ - ள். பெறுதற்கரிய பொருளைப் பகைவர்கொடுப்பத் தணிந்த கோபத்தோடு பேரணிகலங்களையுடைய மன்னன் மீண்டுபோதலும் அத் துறையாம். எ - று.

வ - று. கூடி முரசிரங்கக் கொய்யுளைமா முன்னுகளப்
பாடி பெயர்ந்திட்டான் பல்வேலான் - கோடி
நிதியந் திறையளந்தார் நேராருந் தன்கீழ்
முதியமென் றுறி முரண்.

இ - ள். பல வாச்சியத்தோடும் பொருந்தி முரசு அதிரக் கைக் கத்தரிகையிட்டு நறுக்கின தலையாட்டத்தினையுடைய பரிகள் முன்னே சதியாகநடக்க இருந்த பாசறையினைவிட்டுப் பெயர்ந்தான், பலவேற் படையினையுடையான்; கோடிபொருளைத் திறையாக இவனுக்குப் பகை வருங்கொடுத்தார், அரசன்றன் அடிக்கீழ்ப் பழையோமென்று சொல்லி மாறுபாடொழிந்து. எ - று.

மாறுபாடொழிந்து கோடிநிதியம் திறையளந்தார் நேராருமென்க. (க0)

சசு.—*மாராய வஞ்சி:—

மறவேந்தனிற் சிறப்பெய்திய
விறல்வேலோர் நிலையுரைத்தன்று.

இ - ள். மாற்சரியத்தினையுடைய மன்னனாலே சிறப்புப்பெற்ற வெற்றிமிக்க வேலினையுடையோர் நிலைமையைச் சொல்லியது. எ - று.

வ - று. நேராரம் பூண்ட நெடுந்தகை நேர்கழலான்
சேரார் முனைநோக்கிக் கண்சிவப்பப் - போரார்
நறவேய் கமழ்தெரிய னண்ணா ரெறிந்த
மறவே விலைமுகந்த மார்பு.

இ - ள். இனமொத்த முத்தாரங்களையணிந்தன; பெரிய மேம் பாட்டினையும் பொருந்திய வீரக்கழலினையுமுடையான் பகைவர்தம் போரைப் பார்த்துக் கோபித்துக் கண்சிவப்பப் போர்வீரர் தேன் மேவிய நாறுமாலையினையுடைய சத்துருக்களெறிந்த மாற்சரியத்தான் மிக்க இலைத்தொழிலையுடைய வேலை ஏற்றுக்கொண்ட மார்புகள். எ-று.

மறவேலிலைமுகந்த போரார் மார்பு நேராரம் பூண்டனவென்க; இனி நேராரம்பூண்ட போரார் மார்பு மறவேலிலைமுகந்தனவென்றலு மொன்று. (கக)

சஎ.—நெடுமொழி வஞ்சி:—

ஒன்னார் படைகெழுமித்
தன்னாண்மை யெடுத்துரைத்தன்று.

இ - ள். பகைவர்தஞ்சேனையைக்கிட்டித் தன்னுடைய ஆண்மைத் தன்மையை உயர்த்திச்சொல்லியது. எ - று.

---

* சிலப். 25 : 142; மாராயம் - அரசனாற் செய்யப்படுஞ் சிறப்பு.

வ - று. இன்ன ரெனவேண்டா வென்னோ டெதிர்சீறி
முன்னர் வருக முரணகலும் - மன்னர்
*பருந்தார் படையமருட் பல்லார் புகழ
விருந்தா யடைகுறுவார் விண்.

இ - ள். இன்னதன்மையாரென்று சொல்லவேண்டா; என்னுடனே கோபித்து என்முன்னே பொரவருக மாறுபாட்டினை மிகுக்கும்வேந்தர்; பருந்துநிறையும் தானைப்போரிடத்துப் பலரும்போற்ற வீரசுவர்க்கத்திற் குப் புதியராய் அதனிற் கிட்டுதலைப் பெறுவார்கள். எ - று. (கஉ)

சா.—†முதுமொழி வஞ்சி:—
தொன்மரபின் வாட்குடியின்
முன்னோனது நிலைகிளந்தன்று.

இ - ள். பழையவரலாற்றினையுடைத்தாய வாளினையுடைய மறக் குடியில் 1தமப்பனுடைய நிலைமையைச் சொல்லியது. எ - று.

வ - று. ‡குளிறு முரசங் குணில்பாயக் கூடார்
ஒளிறுவாள் வெள்ள முழக்கிக் - களிறெறிந்து
புண்ணொடு வந்தான் புதல்வற்குப் பூங்கழலோய்
தண்ணடை நல்கல் தகும்.

இ - ள். முழங்கும் வீரமுரசிலே கடிப்புத்தாக்கப் பகைவருடைய விட்டுவிளங்கும் வாள்வெள்ளத்தைத் துகைத்து யானையை வெட்டிப் புண்ணுடனே வந்தொழிந்தவனுடைய மகனுக்கு, பொலிந்த வீரக்கழ லினையுடையோய், மருதநிலங்களைக் கொடுத்தல் தக்கதாம். எ - று.
மகனென்றமையால் அவன் தமப்பன் பட்டமை விளக்கும். (கந)

சகூ.—§உழபுல வஞ்சி:—
நேராதார் வளநாட்டைக்
கூரெரி கொளீஇயன்று.

இ - ள். பொருந்தாதாருடைய நல்லதேசத்தை மிக்க நெருப்பைக் கொளுத்தியது. எ - று.

வ - று. ‖அயிலன்ன கண்புதைத் தஞ்சி யலறி
மயிலன்னார் மன்றம் படரக் - குயிலகவ
ஆடிரிய வண்டிமிருஞ் செம்ம லடையார்நாட்
டோடெரியுள் வைகின வூர்.

இ - ள். வேலையொத்த விழியைப்புதைத்துப் பயப்பட்டுக் கூப் பிட்டு மயிலையொத்த குலமகளிர் மன்றென்று பாராதேசெல்ல, குயில்

*. புறநா. 179 : 11 ; 269 : 11 - 2. † தோல். புறத். சூ. 7, இளம்.
‡ நன். சூ. 458, மயிலை. மேற். § எரிபரந்தெடுத்தல். ‖ கள. 29.

(பி - ம்.) 1 'தனப்பனுடைய'

பாட, ஆளுலாவச் சுரும்பு ஒலிக்குந் தலைமையினையுடைய பகைவர் தேசத்து ஊர்கள் பரந்தோடும் நெருப்பினுள்ளே அவதரித்தன. எ - று. (கசு)

## ருo.—மழபுல வஞ்சி:—

கூடார்முனை கொள்ளைசாற்றி
வீடறக்கவர்ந்த வினைமொழிந்தன்று.

இ - ள். பகைவர் வேற்றுப்புலத்தைக் கொள்ளையூட்டி அகங்கள் பாழ்படக் கொள்ளைகொண்ட தொழிலைச் சொல்லியது. எ - று.

வ - று. களமர் கதிர்மணி காலேகஞ் செம்பொன்
வளமனை பாழாக வாரிக் - கொளன்மலிந்து
கண்ணார் சிலையார் கவர்ந்தார் கழல்வேந்தன்
நண்ணார் கிளையலற நாடு.

இ - ள். அடியாரையும் ஒளிவிடும் வயிரஅரதனங்களையும் [1]முத்து அரதனத்தினையும் சிவந்தபொன்னினையும் அழகிய அகங்களெல்லாம் வறியவாகத் திரட்டிக் கைப்பற்றிக்கொள்ளும் வகைமிக்குக் கண்ணுக்கு நிறைந்த வில்லாளர் கொள்ளைகொண்டார், வீரக்கழலினையுடைய அரசன்றன் பகைவர் சுற்றமிரங்க அவருடைய நாட்டை. எ - று.

நாடு கண்ணார் சிலையார் கவர்ந்தாரென்க. (கரு)

## ருக.—கொடை வஞ்சி:—

நீடவுங் குறுகவு நிவப்பவுந் தூக்கிப்
பாடிய புலவர்க்குப் பரிசினீட் டின்று.

இ - ள். உச்சமாகவும் மந்தமாகவும் அதன்மேற் சமமாகவும் இசையை அளந்து பாடின அறிஞர்க்குப் பரிசிலைக்கொடுத்தது. எ - று.

செந்தூக்கு முதலான எழுவகைத் தூக்கினுலுந் தூக்கியென்றுமாம். ஈண்டு நிவப்பவென்றது மந்தத்திலே ஓங்கியசமத்தை; * "ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை, முச்சீர் துணிபு நாற்சீர் கோயில், ஐஞ்சீர் நிவப்பே யறுசீர் கழாஅல், எழுசீர் தானெடுந் தூக்கென மொழிப" என்றாராகலின்.

வ - று. சுற்றிய சுற்ற முடன்மயங்கித் தம்வயி
றெற்றி மடவா ரிரிந்தோட - முற்றிக்
†குரிசி லடையாரைக் கொண்டகூட் டெல்லாம்
பரிசின் முகந்தன பாண்.

இ - ள். சூழ்ந்த பெருங்கிளை ஒக்கக் கலங்கித் தத்தம் வயிற்றிலே அடித்துக்கொண்டு மகளிர் கெட்டோடப் பகைவர் நாட்டை வளைத்துத் தலைவன் சத்துருக்களைப் பறித்துக்கொண்ட பொருண்முழுதும் தாம் பெறும் பேறாக முகந்துகொண்டன பாண்கிளை. எ - று. (கசு)

---

* சிலப். 3 : 16 ; 14 : 150, அடியார். மேற். † சிறுபாண். 247 - 8 ; மதுரை. 145 - 6 ; மலைபடு. 71 - 2 ; பதிற் 2 - ஆம்பத். பதி ; 44 :

(பி - ம்.) [1] 'முத்திறத்தினையும்' 'முத்தினையும்.' [3 - 4.

ருஉ.—குறுவஞ்சி:—

மடுத்தெழுந்த மறவேந்தர்க்குக்
கொடுத்தளித்துக் குடியோம்பின்று.

இ - ள். மண்டி எதிர்ந்த வீரத்தையுடைய மன்னர்க்குத் திறையைக் கொடுத்து நாடுடைய அரசன் குடிக்குத் தண்ணளிபண்ணிக் காத்தது. எ - று.

வ - று. தாட்டாழ் தடக்கைத் தனிமதி வெண்குடையான்
வாட்டானை வெள்ளம் வரவஞ்சி - மீட்டான்
மலையா மறமன்னன் மால்வரையே போலும்
கொலையானை பாய்மாக் கொடுத்து.

இ - ள். தாளிலே தாழநீண்ட பெரியகையினையும் ஒப்பில்லாத மதியினையொத்த கொற்றக்குடையினையுமுடையான் வாளினையுடைய சேனை வெள்ளம் தங்கள்நாட்டில் வருதற்கு அஞ்சி விலக்கினான்; எதிர்க்கமாட்டாத மாற்சரியத்தினையுடைய வேந்தன் பெரியமலையினை யொக்கும் கொலையானையினையும் சதிபாயும் குதிரையினையுங் கொடுத்து. எ - று. கொடுத்து மீட்டானென்க. (கஎ)

ருந.—இதுவுமது:—

கட்டூரது வகைகூறினும்
அத்துறைக் குரித்தாகும்.

இ - ள். *விட்டிருக்கும் பாசறையினது கூறுபாட்டைச் சொல்லினும் முற்பட்ட குறுவஞ்சிக்கு உரிமையுடைத்து. எ - று.

வ - று. அவிழ்மலர்க் கோதைய ராட வொருபால்
இமிழ்முழவம் யாழோ டியம்பக் - கவிழ்மணிய
காய்கடா யானை யொருபாற் களித்ததிரும்
ஆய்கழலான் கட்டூ ரகத்து.

இ - ள். மலர்ந்தபூவாற்சிறந்தமாலையினையுடைய மகளிர் கூத்தாட ஒரு பக்கத்திலே [1]முழங்காநின்ற முழவம் யாழுடனே [2] ஆரவாரிப்பப் பக்கத்திலே [3]கவிழ்ந்தமணியினையுடைய சீறுகின்ற மதத்தினையுடைய யானை ஒருபால் மகிழ்ந்துமுழங்கும், மேலாக நல்லோர்தெரிந்த வீரக் கழலினையுடையான் விட்டிருந்த பாசறையிடத்து. எ - று. (கஅ)

ருச.—ஒருதனிநிலை:—

பொருபடையுட் †கற்சிறைபோன்
றொருவன்றாங்கிய நிலையுரைத்தன்று.

இ - ள். போரினைச்செய்யும் சேனையிடத்து வெள்ளம்தள்ளாத படி கல்லாற்கட்டின கரையேபோலப் பெரும்படையை [4] ஒருவீரன் தடுத்த நிலையைச் சொல்லியது. எ - று.

---

*. விட்டிருக்கும்: மதுரை. 125 - 7, ந. † தொல். புறத். சூ. 8; மதுரை. 725 - 6; புறநா. 169 : 4 - 5.

(பி - ம்.) 1 'முழங்குமத்தளம்' 2 'இசைப்ப' 3 'நான்ற' 4 'ஒரு வன்'

வ - று. * வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமா லிந்நின்ற
வாடன் முதியாள் வயிற்றிடம் - கூடார்
பெரும்படை வெள்ள நெரிதரவும் போரா
இரும்புலி சேர்ந்த விடம்.

இ - ள். முத்தியினை அறிந்து எல்லாப்பற்றுமற்றோர்க்கும் அற்புதமாம், இவ்விடத்துநின்ற பொலிவழிந்த தன்மையையுடைய கிழவிதன் மடியகம்; பகைவர் அளவிறந்த சேனை நெருக்கிவந்து மேலிடவும் நின்றநிலையினின்று நீங்காத பெரிய புலியனையான் கிடந்த இடம். எ - று.

ஆல் : அசை ; ஒரு சொல்விழுக்காடாயினுமாம். (கசு)

## ருரு.—†தழிஞ்சி:—

‡அழிகுநர் §புறக்கொடை யயில்வா ளோச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று.

இ - ள். ஒருவீரன் தனக்குக் கெட்டோடுவோர் 1 முதுகுபுறத்துக் கூரிய வாளோச்சாத மிக்க மறப்பண்பை விரும்பிச்சொல்லியது. எ-று.

வ - று. கான்படு தீயிற் கலவார்தன் மேல்வரினும்
தான்படை நீண்டாத் தறுகண்ணன் - ||வான்படர்தல்
கண்ணியபி னன்றிக் கறுத்தார் மறந்தொலைதல்
2 எண்ணியபின் போக்குமோ வெஃகு.

இ - ள். காட்டிலே தோற்றின நெருப்புப்போலப் பகைவர் தன்னை மீதூர்ந்துவந்தாலும் ஆயுதந்தொடாத மறவன்றான், பகைவர் சுவர்க்கலோகத்தே போதலைக்கருதி எதிரினல்லது அவ்வெகுண்டோர் முதுகிடுதல் கருதிய பின்பு ஒக்குவனோ வாளினை? எ - று. (உ0)

## ருசு.—பாசறைநிலை:—

மதிக்குடைக்கீழ் வழிமொழிந்து மன்னரெல்லா மறந்துறப்பவும்
¶பதிப்பெயரான் மறவேந்தன் பாசறை யிருந்தன்று.

இ - ள். நிறைமதிபோன்ற கொற்றக்குடையின்கீழே தாழ்வு சொல்லி வேந்தர்பலரும் மாற்சரியத்தைவிடவும் அவ்விடத்தினின்றும் போகானாகி மறத்தினையுடைய மன்னன் பாடிவீட்டிலே இருந்தது. எ - று.

வ - று. $கரும்பொடு காய்நெற் கனையெரி யூட்டிப்
பெரும்புனல் வாய்திறந்த பின்னும் - சுரும்பின்
தொகைமலிந்த தண்குவளைத் தூமலர்த் தாரான்
பகைமெலியப் பாசறையு ளான்.

---

* புறநா. 86 : 4-5. † குறள்., 772-3, பரிமேல். தழிச்சுதல் தழிஞ்சியென்பர்; தொல். புறத். சூ. 8, ந. ‡ குறள். 766, பரிமேல். § அகநா. 4 : 5; புறநா. 8 : 7. || பு - வெ. 47. ¶ பதிற். 15 : 1. $ நான்மணி. 11.

பி - ம். 1 'முதுகுப்புறத்து' 2 'எண்ணியபினேக்குமோ'

இ - ள். கரும்பினையும் காய்த்த நெல்லினையும் முழங்குநெருப்பினை உண்ணப்பண்ணுவித்துப் பெரிய நீர்நிலைகள் பலவும் உடைத்தபின்னும் வண்டின்கூட்டமிக்க குளிர்ந்த செங்கழுநீரின் தூய்தான பூவாற் செய்த மாலையினையுடையோன் சத்துருக்கள் பொலிவழிய விட்ட படைவீட்டிலே இருந்தான். எ - று. (உக)

௫எ.—*பெருவஞ்சி :—

முன்னடையார் வளநாட்டைப்
பின்னருமுடன் றெரிகொளீஇயன்று.

இ - ள். தன்னுடைய முன்னே வந்து செறியாதார் நல்ல தேசத்தைப் பின்பும் கோபித்து நெருப்பைக் கொளுத்தியது. எ - று.

வ - று. பீடுலா மன்னர் நடுங்கப் பெரும்புகை
ஊடுலாய் வானத் தொளிமறைப்ப - நாடெலாம்
பின்னும் பிறங்கழல் வேய்ந்தன பெய்கழற்கால்
மன்னன் கனல மறம்.

இ - ள். பெருமைபரந்த மன்னர்துளங்கப் பெரியதூமம் நடுவே உலாவி ஆகாயத்தின்கண் விளக்கத்தினை மறைப்பத் தேயமுழுதும் இரண்டாவதும் மிக்கநெருப்பு மூடப்பட்டன, காலிலேயிட்ட வீரக்கழலையுடைய அரசனுடைய சினம் மூள்கையாலே. எ - று. (உஉ)

௫அ.—†பெருஞ்சோற்று நிலை :—

திருந்தார் தெம்முனை தெறுகுவ ரிவரெனப்
பெருஞ்சோ றுடவர் பெறுமுறை வகுத்தன்று.

இ - ள். பகைவர் வேற்றுப்புலத்தை நமக்கு அழித்துத்தருவரிவரென்று சொல்லி மிக்க சோற்றை வீரர் கொள்ளும்வகையிலே கொடுத்தது. எ - று.

வ - று. இயவர் புகழ வெறிமுர சார்ப்பக்
குயவரி வேங்கை யனைய - வயவர்
பெறுமுறையாற் பிண்டங்கோ ளேவினான் பேணார்
இறுமுறையா லெண்ணி யிறை.

இ - ள். அரசன் வாச்சியக்காரர் துதிப்பக் கொட்டும் வீரமுரசு முழங்க அரிவாளேபோன்ற வரியினையுடைய புலியையொத்த வீரர் பெறும்படியே சோற்றுத்திரளையைக் கொள்கையை ஏவினான்; பகைவர் படும்வகையால் விசாரித்து அரசன். எ - று. (உ௩)

௫கூ.—நல்லிசை வஞ்சி :—

ஒன்னாதார் முனைகெடவிறுத்த
‡வென்வேலாடவன் விறன்மிகுத்தன்று.

இ - ள். சத்துருக்கள் வேற்றுப்புலம் அழியவிட்ட வென்றி வேலினையுடையவன் வெற்றியை மிகுத்துச்சொல்லியது. எ - று.

---

* சிலப். 25 : 143. † தொல். புறத். சூ. 8; அகநா. 233 : 9; புறநா. 2 : 16; சிலப். 23 : 55; 25 : 144; 26 : 49; 29 : ஊசல் வரி. ‡ பு - வே. 62; மணி. 21 : 5.

வ - று. *மடங்கலிற் சீறி மலைத்தெழுந்தார் மண்மேல்
இடங்கெடச் சென்றிறுத்த பின்னும் - நுடங்கெரிபோல்
வெல்லப் பெருகும் படையாற்கு வேந்தர்மேற்
செல்லப் பெருகுஞ் சினம்.

இ - ள். சிங்கம்போற்கோபித்து மாறுபட்டெதிர்ந்தார் நிலத்தின் மேல் வெளிதூரப் படையெடுத்துப்போய் விட்டபின்பும் அசைந்தெரியும் நெருப்புப்போலச் சயிக்க வளரும் சேனையினையுடைய அரசனுக்குப் பகைமன்னர்மேல் எடுத்துச்செல்ல மிகாநிற்கும் கோபம். எ - று.

† வென்றோர் விளக்கங் கூறியது. (உச).

௯௦.—இ து வு ம து :—

இறுத்தபி னழிபிரங்கல்
மறுத்துரைப்பினு மத்துறையாகும்.

இ - ள். எடுத்துவிட்டபின்பு பகைவர் தேசத்துக் 1 கேட்டிற்கு இரங்கலை அழித்துச் சொல்லினும் முன்பு சொன்ன துறையே யாம். எ - று.

வ - று. குரைபழன் மண்டிய கோடுயர் மாடம்
2 சுரையொடுபேய்ப் பீர்க்குஞ் சுமந்த - நிரைதிண்டேர்ப்
பல்லிசை வென்றிப் படைக்கடலான் சென்றிறுப்ப
நல்லிசை கொண்டடையார் நாடு.

இ - ள். ஆரவாரமுடைய நெருப்புக் கொளுத்தின மலையை யொப்ப ஓங்கின மாளிகையெல்லாம் பேய்ச்சுரையும் பேய்ப்பீர்க்கும் மேற்கொண்டன ; ஒழுங்குபட்ட திண்ணியதேரினையும் பலகீர்த்தியாற் சிறந்த வென்றியினையும் சேனையாகிய கடலையுமுடையான்போய் எடுத்துவிட, நல்லபுகழைச்சொல்லி இவனைக்கூடாதார்தேயம். எ - று.

நாடு சுரையொடு பேய்ப்பீர்க்குஞ் சுமந்தவென்க. கொற்றவள்ளை இவ்வாறன்று. (உ௫).

வஞ்சித்திணைப்பாட்டு க-ம் துறைப்பாட்டு உச-ம் முடிந்தன.

மூன்றாவது வஞ்சிப்படலம் முற்றிற்று.

நான்காவது

## காஞ்சிப்படலம்.

(ச.—சூத்திரம்.)

**கா**ஞ்சி காஞ்சி யெதிர்வே தழிஞ்சி
பெரும்படை வழக்கொடு பெருங்காஞ் சிய்யே
வாள்செல வென்றூ குடையது செலவே
வஞ்சினக் காஞ்சி பூக்கோ ணிலையே

* கலி. 2 : 3 ; புறநா. 71 : 1. † தொல். புறத். சூ. 8.
பி - ம். 1 'கேட்டையிரங்கலை' 2 'சுரையொடுபீரஞ்'

புகழ்த்தலைக் காஞ்சி தலைமா ராயம்
தலையொடு முடிதன் மறப்பெயர்க் காஞ்சி
மாற்றரும் பேய்நிலை பேய்க்காஞ் சியே
தொட்ட காஞ்சி தொடாக்காஞ் சியே
மன்னைக் காஞ்சி கட்காஞ் சியே
ஆஞ்சிக் காஞ்சி மகட்பாற் காஞ்சி
முனைகடி முன்னிருப் புளப்படத் தொகைஇ
எண்ணிய வகையா னிருபத் திரண்டும்
கண்ணிய காஞ்சி துறையென மொழிப.

என் - னின், காஞ்சித்திணையும் துறையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். காஞ்சி, காஞ்சியதிர்வு, தழிஞ்சி, படைவழக்கு, பெருங்காஞ்சி, வாள்செலவு, குடைச்செலவு, வஞ்சினக்காஞ்சி, பூக்கோணிலை, தலைக்காஞ்சி, தலைமாராயம், தலையொடுமுடிதல், மறக்காஞ்சி, பேய்நிலை, பேய்க்காஞ்சி, தொட்டகாஞ்சி, தொடாக்காஞ்சி, மன்னைக்காஞ்சி, கட்காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, முனைகடி முன்னிருப்பு என இவை இருபத்திரண்டும் காஞ்சித்திணையும் துறையுமாம். எ - று.

௬௧.—*காஞ்சி:—

வேஞ்சின மாற்றான் விடுதர வேந்தன்
காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று.

இ - ள். வெவ்விய சினத்தையுடைய வேற்றுமன்னன் வந்துவிட அரசன் காஞ்சியென்னும் பூவை மலைந்து காவலிடத்தைக் காக்க நினைந்தது. எ - று.

வ - று † அருவரை பாய்ந்திறுது மென்பார்பண் டின்றிப்
பெருவரைச் சீறூர் கருதிச் - செருவெய்யோன்
காஞ்சி மலையக் கடைக்கணித்து நிற்பதோ
தோஞ்செய் மறவர் தொழில்.

இ - ள். செருமுனையிற்படப் பொருவாரில்லாதபடியாலே முன்பு ஏறுதற்கரிய மலையேறி விழுந்தாலும் சாவேமென்னும் வீரர், இக்காலம் இப்பெரிய மலையிடத்துச் சீறூரைக் காப்பான்வேண்டி நினைந்து பூசல் விருப்பத்தை யுடையோன் காஞ்சிப்பூவைச் சூட அணியிட்டு நிற்குமதுவோ, குற்றத்தைப்பண்ணும் வீரர் வினை? எ - று. (௧)

ஓகாரம் : எதிர்மறை.

௬௨.—காஞ்சியதிர்வு:—

மேல்வரும் படைவரன் மிகவு மாற்றா
வேல்வ லாடவன் விறன்மிகுத் தன்று.

* சிலப். 26 : 191. † புறநா. 31 : 6, அடிக்குறிப்பைப் பார்க்க.

இ - ள். எதிருன்றுஞ் சேனை மேலிடுதலைப் பொருத வேற்றொழிலைவல்ல வீரனுடைய வெற்றியை மிகுத்துச்சொல்லியது. எ - று.

வ-று. மன்மேல் வருமெனை நோக்கான் மலர்மார்பில்
வென்வேன் முகந்த * புண் வெய்துயிர்ப்பத் - தன்வேல்
பிடிக்கலு மாற்றுப் பெருந்தகை யேவத்
துடிக்கண் புலையன் றொடும்.

இ - ள். மாற்றரசன் தன்மேலே மீதூர்ந்துவருமென்று பாராஞகி அகன்ற மார்பிடத்து வென்றி 1 வேல் பாய்ந்து முதுகுபுறத்துருவியபுண் வெய்தாக உயிர்ப்பத் தன்னுடையவேலைக் கையாற்பிடிக்கவு மாட்டாத பெரிய மேம்பாட்டினையுடையவன் சொல்லத் துடியின் கண்ணைப் புலையன் கொட்டாநிற்கும். எ - று. (௨)

௯௩.—தழிஞ்சி:—

பரந்தெழுதரு படைத்தானை
வரம்பிகவாமைச் சுரங்காத்தன்று.

இ - ள். கைவளர்ந்து நடவாநின்ற ஆயுதத்தையுடைய சேனை தங்களெல்லையிற் புகுதாதபடி அருமையுடைத்தான வழியிடத்தைக் காத்தது. எ - று.

வ - று. குலாவுஞ் சிலையார் குறும்புகொள வெஃகி
உலாவு முழப்பொழிக வேந்தன்-கலாவும்
இனவேங்கை யன்ன விகல்வெய்யோர் காவல்
புனவேய் நரலும் புழை.

இ - ள். ஏறிட்ட வில்லினையுடைய காஞ்சியார்தம் அரணினைக் கைக்கொள்ளவேண்டி இயங்குமுயற்சியை ஒழிவானாக எதிர்மன்னன்; தம்மிற் கலக்கும் இனத்தாலுயர்ந்த புலியையொத்த மாற்சரியத்தைவிரும்புவோர் காக்குமிடம் புனத்தின் மூங்கில்ஆர்க்கும் நூழை. எ - று.

இகல்வெய்யோரெனப் பிறர்போற் கூறினர். வஞ்சித்தழிஞ்சி இவ்வாறன்று. (௩)

௯௪.—படைவழக்கு:—

† [2]முத்தவிர்பூண் மறவேந்தன்
ஒத்தவர்க்குப் படைவழங்கின்று.

இ - ள். முத்து விளங்கும் ஆபரணத்தையுடைய சினமன்னன் தம்மில் இனமொத்தவருக்கு ஆயுதத்தைக் கொடுத்தது. எ - று.

வ-று. †ஐயங் களைந்திட் டடல்வெங்கூற் றஞ்சிப்ப
[3]ஐயிலை யெஃக மவைபலவும் - மொய்யிடை

* சீவக. 2355. † தக்க. 622, உரை, மேற்.

(பி - ம்.) 1 'வேல்வேண்டினபடி கொண்டபுண்' 2 'மொய்த்தவிர்', 'மொய்த்தபூண்' 3 'ஐயிலைவேலெஃகம்'

*ஆட்கடி வெல்களிற் றண்ணல் கொடுத்தளித்தான்
வாட்குடி வன்க ணவர்க்கு.

இ - ள். ஐயப்பாட்டை ஒழித்துக் கொலைத்தொழிலையுடைய வெய்யகாலன் உணவுபெற்றேனென்று ஆர்த்துக்கொள்ள வியக்கத்தக்க இலைத்தொழிலான்மிக்க வேல் பலவற்றையும் பூசலிடத்து ஆளைக் கடியும் போர்வெல்லும் யானையினையுடைய தலைவன் வழங்கித் தலையளி செய்தான், மறக்குடியில் தறுகணவர்க்கு. எ - று. (ச)

சு௫.—இ து வு ம து :—

கொடுத்தபின்னர்க் கழன்மறவர்
எடுத்துரைப்பினு மத்துறையாகும்.

இ - ள். அரசன் படைவழங்கினபின்னர்க் கழல்வீரர் உயர்த்துச் சொல்லினும் முன்புசொன்ன துறையேயாம். எ - று.

வ - று. துன்னருந் துப்பிற் றொடுகழலார் சூழ்ந்திருப்பத்
தன்னம ரொள்வாளென் [1]கைதந்தான் - மன்னற்கு
மண்ணகமோ வைகின்று மாலை நெடுங்குடைக்கீழ்
விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து.

இ - ள். கிட்டுதற்கரிய வலியினையும் கட்டிய வீரக்கழலினையுமுடையார் தன்னைச்சுற்றியிருப்பத் தனக்கு மேவும் ஒள்ளியவாளை என் [2] கையிலே தந்தான்; அரசற்குப் பூமியிடமோ தங்காநின்றது, முத்தமாலையணிந்த கொற்றக்குடைக்கீழ்; சுவர்க்கலோகத்தையும் விரும்புங்கொல் அரசன். எ - று.

இஃது, † "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்" என்பதனானும், ‡ "ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து, வேந்தனும் வேந்து கெடும்" என்பதனால், வேந்து இராச்சியமென்றுமாம். இனி, வேற்றுமன்னர்க்கு மண்ணகமோ வைகுதலில்லை; அவரை விண்ணகத்தின்கண் ஏற்றலையும் அரசன் வேண்டுங்கொலென்றுமாம். இப்பொருட்கு மன்னர்க்கென்பது பாடம். (௫)

சு௬.—§பெருங்காஞ்சி :—

தாங்குதிறன் மறவர் தத்த மாற்றல்
வீங்குபெரும் படையின் வெளிப்படுத் தன்று.

இ - ள். எதிர்வரும் படையினைத் தடுக்கும் வலியினையுடைய கொடுவினையாளர் தத்தம் வலியை மிக்க பெருஞ்சேனையிடத்துத் தோற்றுவித்தது. எ - று.

வ - று. வில்லார் குறும்பிடை வேறுவே றார்த்தெழுந்த
||கல்லா மறவர் கணைமாரி - ஒல்லா

* சீவக. 321. † தொல். எச்ச. சூ. 64. ‡ குறள், 899. § சிலப். 25 : 136. || சிறுபாண். 33 ; மதுரை. 420.

(பி - ம்.) 1 'கைத்தந்தமன்னற்கு.' 2 'கையிலேதந்த அரசற்கு.'

வெருவி மறவேந்தர் வெல்களி றெல்லாம்
இருவி வரைபோன்ற வின்று.

இ - ள். விற்படைநிறைந்த அரணிடத்துப் பலவகையார ஆரவாரித்து வந்த இயற்கையான மறத்தினையுடையாருடைய அம்புமழையைப் பொறுவாய் வெருண்டு சினமன்னர் போரைவெல்லும் யானைபலவும், தினையரிந்த தாளினையுடைய மலையையொத்தன, இந்நாள். எ - று. (௬)

௬௭.—*வாள்செலவு:—

அருமுனையா னறைகூவினபின்
செருமுனைமேல் வாள்சென் றன்று.

இ - ள். வெல்லுதற்கரிய போரையுடைய வஞ்சியான் போர்க்கு அழைத்தபின்பு பொருபடையிடத்து வாள் போனது. எ - று.

வ - று. உணங்கு புலவறு வொன்னார் குரம்பை
நுணங்கரில் வெம்முனை நோக்கி - அணங்கிய
குந்த மலியும் புரவியான் கூடாதார்
வந்தபின் செல்கென்றான் வாள்.

இ - ள். உலரும் புலானாற்றம் ஒழியாத பகைவர் பாசறைக் கைநிலை செறிந்த பிணக்கத்தையுடைய கானத்திடத்து வெய்யபகையைப் பார்த்துப் பகைவரை வருத்திய வேலிட்டுப் பண்ணுதன்மிக்க குதிரையினையுடைய அரசன் சத்துருக்கள் பொர அடர்ந்தபின்பு வாளினைச் செல்கவென்று ஏவினான். எ - று. (எ)

௬௮.—*குடைசெலவு:—

முதுகுடி மறவர் முன்னுறச் சூழக்
கொதியழல் வேலோன் குடைசென் றன்று.

இ - ள். பழங்குடிக் கொடுவினையாளர் முன்னே சூழ்ந்துபோக அழலும் நெருப்புப்போன்ற வேலினையுடையவன் குடையைப் புறவீடு விடுத்தது. எ - று.

வ - று. †தெம்முனை தேயத் திறல்விளங்கு தேர்த்தானை
வெம்முனை வெற்றி ‡விறல்வெய்யோன் - தம்முனை
நாட்டிப் பொறிசெறித்து நண்ணார்மேற் செல்கென்று
கூட்டிநாட் கொண்டான் குடை.

இ - ள். பகைப்புலங்கெட, வெற்றிமிகுந்த தேராற்சிறந்த சேனையினையும் வெய்ய பூசல்வெற்றியினையுமுடைய கொற்றத்தை விரும்பியோன் இருபெருவேந்தர்தாம் பொரும்பூசலை இன்னநாளென்று நிச்சயித்துக் கட்டித் தன் இலாஞ்சனையிட்டுப் பகைவர்மேற் போகவெனச் சொல்லிச் சோதிடவருடனேகூட்டி நல்லநாளிலே குடையைப் புறவீடு விட்டான். எ - று. (அ)

* சிலப். 5 : 91. † நன். சூ. 235, மயிலை. மேற். ‡ மணி. 26 : 91.

௬௯.—*வஞ்சினக் காஞ்சி :—

வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப
வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று.

இ - ள். வெய்யகோபத்தையுடைய மன்னவன் பகைவரைத் தாழப் பண்ணுவான்வேண்டி இவ்வாறு செய்வேனெனச் சொல்லிய கூறுபாட்டைச் சொல்லியது. எ - று.

வ - று. இன்று பகலோ னிறவாமு னொன்னாரை
வென்று களங்கொள்ளா வேலுயர்ப்பின் - என்றும்
அரணவியப் பாயு மடையார்மு னிற்பேன்
முரணவிய முன்முன் மொழிந்து.

இ - ள். இற்றைநாள் ஆதித்தன் படுவதன்முன் பகைவரை வெற்றியைச்செய்து போர்க்களத்தைக்கொள்ளாதவேலை எடுப்பேனாயின் எந்நாளும் யானிருந்த அரண்கெடத் தாக்கும் பகைவர்முன்னே நிற்பேனாவேன். மாறுபாடுகெட முன்னே முன்னே தாழ வார்த்தைகளைச் சொல்லி. எ - று. (௯)

௭௦.—†பூக்கோணிலை :—

காரெதிரிய [1]கடற்றானை
போரெதிரிய பூக்கொண்டன்று.

இ - ள். மேகம் பொருந்திய கடல்போல ஒலிக்குஞ்சேனை பூசலை ஏற்றுக்கொள்வான்வேண்டி அரசன் கொடுத்த பூவினைக்கொண்டது. எ - று.

வ - று. பருதிசெல் வானம் பரந்துருகி யன்ன
குருதியா றுவதுகொல் குன்றூர் - கருதி
மறத்திறத்தின் மாறா மறவருங் கொண்டார்
புறத்திறுத்த வேந்திரியப் பூ.

இ - ள். ஆதித்தன் படும் அந்திவானம் உருகிப்பரந்தாலொத்த உதிரநதி ஆவதுபோலும், மலைசூழ்ந்த ஊர் ; நினைந்து சினக்கூற்றிற் றப்பாத கொடுவினையாளரும் கைக்கொண்டார், தங்களூர்ப்புறத்தே விட்ட வஞ்சிமன்னன்கெடப் பூவினை. எ - று.

உம்மை : சிறப்பும்மை. (௧௦)

௭௧.—தலைக் காஞ்சி :—

மைந்துயர மறங்கடந்தான்
பைந்தலைச் ‡சிறப்புரைத்தன்று.

இ - ள். வலியோங்க மாற்றார்தம் மறத்தொழிலைக் கடந்தவன் பசுந்தலைமதிப்பைச் சொல்லியது. எ - று.

---

* தொல். புறத். சூ. 24. † புறநா. 289 : 9 ; 341 : 9.

(பி - ம்.) 1 'கடற்றானையான்.'

வ - று. [1]விட்டிடினென் வேந்தன் [2]விலையிடினெ னிவ்வுலகின்
இட்டுரையி னெய்துவ வெய்திற்றால் - ஒட்டாதார்
போர்தாங்கி மின்னும் புலவா ளுறைகழியாத்
தார்தாங்கி வீழ்ந்தான் றலை.

இ - ள். போக்கிடின் என்? அரசன், தலைக்குத்தக்க விலைகொடுக்கின் என்? இந்தப்பூமியிற் சிறப்பித்துச்சொல்லும் இசையினாற் பெறுவவெல்லாம் பெற்றதால்; பகைவர் பூசலைத்தடுத்து ஒளியைவிடும் புலால் நாற்றத்தையுடைய வாளை உறையைவிட்டெடுத்து விட்ட வஞ்சியான் தூசிப்படையைத் தடுத்துப் பட்டவனுடைய தலையினை. எ - று. (௧௧)

எ௨.—தலைமாராயம் :—

தலைகொடுவந்தா னுண்மலியச்
சிலையுடைவேந்தன் சிறப்பீந்தன்று.

இ - ள். தலையைக் கொடுவந்தான் மனமுவப்ப வில்லினையுடைய மன்னன் செல்வத்தைக்கொடுத்தது. எ - று.

வ - று. உவன்றலை யென்னு முறழ்வின்றி யொன்னார்
இவன்றலையென் றேத்த வியலும் - அவன்றலை
தந்தாற்கு நல்கல் வியப்போ [3]கிளர்ந்தேத்தி
வந்தார்க் குவந்தீயும் வாழ்வு.

இ - ள். உவன் இவனுக்கு நேரென்று சொல்லும் ஒப்பின்றிப் பகைவர் எல்லாரிலும் இவன் தலையானவனென்று சொல்லி வாழ்த்த நடக்கும் அவனுடையதலையைக் கொடுவந்தவற்குச் செல்வங்கொடுத்தல் அதிசயமோ, மிகப் புகழ்ந்துவந்தார்க்கு மகிழ்ந்துகொடுக்குஞ் செல்வம்! எ - று. (௧௨)

எ௩.—தலையொடுமுடிதல் :—

மண்டமருண் மாறுமைந்திற்
கொண்டான்றலையொடு கோல்வளைமுடிந்தன்று.

இ - ள். உற்றபூசலின் ஓவாதவலியினையுடைய கைப்பிடித்தான் தலையுடனே திரண்ட வளையினையுடையாள் இறந்தது. எ - று.

வ - று. *கொலையானாக் கூற்றங் கொடிதே கொழுநன்
தலையானா டையலாள் கண்டே - முலையால்
முயங்கினாள் வாண்முகமுஞ் சேர்த்தினா ளாங்கே
உயங்கினா ளோங்கிற் றுயிர்.

இ - ள். கொலைத்தொழிலையமையாத கூற்றம் சாலக் கொடிதாயிருந்தது; கணவனதுதலையை அமையாளாய்த் தையலானவள்பார்த்தே

---

* தொல். புறத். சூ. 19, இளம். மேற்; கம்ப. முதற்போர். 236.
(பி - ம்.) 1 'விட்டிடிலென்.' 2 'விலையிடிலென்.' 3 'கிளர்ந்து.'

கொங்கையாலே தழுவினுள்; ஒளிசிறந்தவதனத்தையும் கூட்டினுள்; அவ்விடத்தே வருந்தினுள்; மேலே பறிந்தது உயிர். எ - று.

ஆதலால் கூற்றம் கொடிதேயென்க. (௧௩)

எச.—*மறக்காஞ்சி :—

இலைப்பொலிதா ரிகல்வேந்தன்
மலைப்பொழிய [1]மறங்கடைஇயன்று.

இ - ள். பச்சிலையாலே பொலிவுபெற்ற மாலையாற்சிறந்த வலியினையுடைய மன்னன் பகைவர் மாறுபாடு நீங்க மறத்தொழிலைச் செலுத்தியது. எ - று.

வ - று. கருந்தலையும் வெண்ணிணமுஞ் செந்தடியு மீராப்
பருந்தோ டெருவை படர - அருந்திறல்
வேருய மன்னர் வியப்பக் கடாயினுன்
மாரு மறவன் மறம்.

இ - ள். கறுத்ததலையையும் வெள்ளைநிணத்தையும் சிவந்த தசையையும் இழுத்துக்கொண்டு பருந்தும் கழுகுஞ்செல்ல அரியவெற்றியினையுடைய பகைவர் அதிசயிப்பச்செலுத்தினுன் நீங்காதகொடுவினையாளன், மறத்தொழிலை. எ - று. (௧௪)

எரு.—இதுவுமது :—

மண்கெழு மறவன் மாறுநிலை நோனுன்
புண்கிழித்து முடியினு மத்துறை யாகும்.

இ - ள். [2] ஒப்பனையாற்பொலிந்த மறத்தொழிலையுடைய வீரன் பகைவருடைய மாறுபாட்டுக்குப் பொருனுகிப் [3] பகைவர்வேல்பட்ட தன் மார்பிற் புண்ணைப் பிளந்து மரிப்பினும் முற்பட்ட துறையேயாம். எ - று.

வ - று †நகையமராய நடுங்க நடுங்கான்
தொகையமரோட்டிய துப்பிற் - பகைவர்முன்
நுங்கிச் சினவுத ஞேறு னுதிவேலாற்
பொங்கிப் பரிந்திட்டான் புண்.

இ - ள். மகிழ்ச்சிமேவும் தன் கூட்டங் குலையக் குலையாணுய்ச் செறிந்த போரைத் துரந்த வலியினையுடைய மாற்ருர் தன்முன்னெல்லையைக்கொண்டு கோபித்தலைப்பொருனுகி வேலின்நுதியாலே வெகுண்டு அறுத்திட்டான், புண்ணினை. எ - று. (௧௫)

* தொல். புறத். சூ. 19, இளம். மேற். நகையமராயம்: சீறுபாண். 220.

(பி - ம்.) [1] 'மறங்கடாயின்று.' [2] 'பூமியிலேபொருந்திய.' [3] 'வேலினலே புண்கிழித்து முடியினும் அத்துறையேயாம்.'

௭௬.—*பேய்நிலை :—

*செருவேலோன் றிறநோக்கிப்*
*பிரிவின்றிப் பேயோம்பின்று.*

*இ - ள். போரைச்செய்யும் வேலினையுடையான் திறப்பாட்டை நோக்கி நீங்குதலொழிந்து பேய் பரிகரித்தது. எ - று.*

வ - று. †*ஆயு மடுதிறலாற் கன்பிலா ரில்போலும்*
*தோயுங் ‡கதழ்குருதி தோள்புடைப்பப் - பேயும்*
*களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தான்*
*உளம்புகல வோம்ப லுறும்.*

*இ - ள். பலருங்கொண்டாடும் கொல்லும் வலியினையுடையாற்கு அன்பிலாதார் இல்லைப்போலும்; நிலமெல்லாம் நனையும் விரைந்த சோரி தோளிலே அலைப்பப் பேய்தானும் பூசற்களத்துள்ளார் விரும்ப வெகுண்டு ஒளியினையுடைய வேலின்வாயிலே விழுந்தவன்றன் மனமகிழப் பரிகரித்தலைச் செய்யாநின்றது. எ - று.* (௧௬)

௭௭.—பேய்க்காஞ்சி :—

*பிணம்பிறங்கிய களத்துவீழ்ந்தாற்*
*கணங்காற்ற வச்சுறீஇயன்று.*

*இ - ள். பிணமிக்க போர்க்களத்திலே பட்டாற்குப் பேய் மிகவும் அச்சமுறுத்தியது. எ - று.*

வ - று. *கொட்கு நிமிருங் குறுகுங் குடர்சூடிப்*
*பெட்ப நகும்பெயரும் பேய்மகள் - உட்கப்*
*புனலங் குருதிப் புலால்வாய்க் கிடந்து*
*கனல விழிப்பவற் கண்டு.*

*இ - ள். சுழலும், நீளும், குறுகும், குடர்மாலையைச் சூடித் தன் உள்ளம் விரும்பச் சிரிக்கும், போம், பேய்ப் பெண்; வெருவர, அழகிய உதிரமாகிய நீரிற் புலாலிடத்துக் கிடந்து அழலநோக்கும் வீரனைப் பார்த்து. எ - று.* (௧௭)

௭௮.—தோட்ட காஞ்சி :—

*வியன்மனைவிடலை புண்காப்பத்*
*துயன்முலைப்பேழ்வாய்ப் பேய்தொட்டன்று.*

*இ - ள். அகன்ற இல்லிலே தலைமகனுடைய புண்ணைப் பரிகரிக்க நான்றமுலையினையும் பெரியவாயினையுமுடைய பேய்மகள் புண்ணைத் தீண்டியது. எ - று.*

---

* தொல். புறத். சூ. 24; (பேய்ப்பக்கம்). † ஷை ஷை ஷை 19, இளம். மேற்; புறநா. 281. ‡ க[illegible] : மணி. 13 : 48.

வ - று. கொன்றுருத்த கூர்வே லவற்குறுகிக் கூரிருள்வாய்
நின்றுருத்து நோக்கி நெருப்புமிழாச் - சென்றொருத்தி
ஒட்டார் படையிடந்த வாருப்பு ணேந்தகலந்
தொட்டாள் பெருகத் துயில்.

இ - ள். கொலைத்தொழில் செய்து வெகுண்ட கூரியவேலினை உடையவனைக் கிட்டி மிக்க இருளின்கண்ணே நின்று கோபித்துப் பார்த்து அழலைக் கான்று அணுகப்போய் ஒரு பேய்மகள் பகைவர் ஆயுதம் பிளந்த தீராத புண்ணைத் தாங்கின மார்பினைத் தீண்டினாள், உறக்கம் மிக. எ - று.

உறக்கமிகுதல் - உயிர்போதல். (௧௮)

எ௯.—*தொடாக் காஞ்சி :—

அடலஞ்சா நெடுந்தகைபுண்
டொடலஞ்சித் துடித்துநீங்கின்று.

இ - ள். கொலையஞ்சாத பெரிய நிலையினையுடையவன் புண்ணினைத் தீண்டுதற்குப் பயப்பட்டு நடுங்கிப் பேய் பெயர்ந்தது. எ - று.

வ - று. †ஐயவி சிந்தி ‡நறைபுகைத் தாய்மலர் தூய்க்
கொய்யாக் குறிஞ்சி பலபாடி - மொய்யிணர்ப்
பூப்பெய் தெரிய னெடுந்தகைபுண் யாங்காப்பப்
பேய்ப்பெண் பெயரும் வரும்.

இ - ள். வெண்சிறுகடுகினைத்தூவிக் குங்கிலியமுதலான நறுநாற்றத்தைப் புகைத்துத் தெரிந்த பூவினைச்சிதறிப் பறியாக்குறிஞ்சிப்பண் பலவும்பாடிச் செறிந்த தொத்தினையுடைய மலரிட்டுத் தொடுத்த மாலையாணிறைந்த பெரிய மேம்பாட்டினையுடையவன் புண்ணை யாங்கள் பரிகரிப்பப் பேய்மகள் நீங்கும், அணுகும். எ - று.

கொய்யாக்குறிஞ்சி : வெளிப்படை. (௧௯)

௨௦.—§மன்னைக் காஞ்சி :—

வியலிடமருள விண்படர்ந்தோன்
இயல்பேத்தி யழிபிரங்கின்று.

இ - ள். அகன்ற பூமியினுள்ளார் மயங்க வீரசுவர்க்கத்தே சென்றவன் பண்பினைப் புகழ்ந்து நொந்து வருந்தியது. எ - று.

வ - று. ‖போர்க்குப் புணைமன் புரையோர்க்குத் தாணுமன்
ஊர்க்கு முலகிற்கு மோருயிர்மன் - யார்க்கும்
அறந்திறந்த வாயி லடைத்ததா லண்ணல்
நிறந்திறந்த நீளிலை வேல்.

இ - ள். பூசலுக்குத் தெப்பமனையவன், உயர்ந்தோர்க்குத் தாணுவொப்பானவன், தன் பதிக்கும் பூமிக்கும் ஓருயிரை யனையவன்,

* தொல். புறத். சூ. 24. † புறநா. 281 : 4 - 7. ‡ முருகு. 239.
§ தொல். புறத். சூ. 24 ; புறநா. 235. ‖ தொல். வேற்றுமை. யியல், சூ. 15, ந. மேற்.

யாவர்க்கும் தருமந்தோன்றின வாயிலை யடைத்தது ; தலைவன் மருமத்தைவெளிசெய்த நீண்ட இலைத்தொழிலாற்சிறந்தவேல். எ - று. (௨௦)

## ௩௧.—கட்காஞ்சி :—

நறமலியு நறுந்தாரோன்
மறமைந்தர்க்கு மட்டீந்தன்று.

இ - ள். மதுமிகும் கமழுமாலையோன் தறுகணாளர்க்கு மதுவைக் கொடுத்தது. எ - று.

வ - று. ஒன்னு முனையோர்க் கொழிக வினித்துயில்
மன்னன் மறவர் மகிழ்தூங்கா - முன்னே
படலைக் குரம்பைப் பழங்கண் முதியாள்
விடலைக்கு வெங்கள் விடும்.

இ - ள். பொருதபகைவர்க்கு இனி ஒழிவதாக உறக்கம் ; வேந்தன், கொடுவினையாளர் மதுவையுண்டு களித்தாடுவதற்கு முன்னே தழைக்கற்றையான் வேய்ந்த குடிலிடத்துப் புன்கட்கிழவி பெற்ற வீரனுக்கு வெவ்விதமான மதுவை விடாநின்றான். எ - று. (௨௧)

## ௩௨.—ஆஞ்சிக் காஞ்சி:—

காதற் கணவனொடு கனையெரி மூழ்குங்
மாதர்மெல் லியலின் மலிபுரைத் தன்று.

இ - ள். அன்பினையுடைய தன்கொழுநனோடு செறிந்த நெருப்பிலே அழுந்தும் காதலையுடைய மெத்தென்ற தன்மையாற் சிறந்தவவள் தன் மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. தாங்கிய கேளொடு தானு [1]மெரிபுகப்
பூங்குழை யாயம் புலர்கென்னும் - நீங்கா
விலாழிப் பரித்தானை வெந்திறலார் சீறூர்ப்
புலாழித் தலைக்கொண்ட புண்.

இ - ள். தரித்தகணவனோடு தானும் நெருப்பிலேபுகுவான் வேண்டிப் பொலிந்த மகரக்குழையையுடையவள் தோழிமாரை அகலப்போமின்என்று சொல்லும் ; ஒழியாத வாய்நுரையினையுடைய குதிரையாற் சிறந்த சேனைப்பகைவர் சீறூரிடத்துப் புலாலுற்றத்தினையுடைய சக்கரத்தாலே எறியப்பட்ட புண்ணை. எ - று.

புண்ணைத்தாங்கிய கேளொடு எனக்கூட்டுக. புலவென்பதனுள் அகரம் தொக்கது ; ஒற்று இரட்டாமையுமறிக. (௨௨)

## ௩௩.—இ து வு ம து:—

மன்னுயிர் நீத்த வேலின் மனையோள்
இன்னுயிர் நீப்பினு மத்துறை யாகும்.

இ - ள். தலைவன் உயிரினை நீக்கின அயிலாலே மனைக்கிழத்தி இனிய ஆவியை ஒழிப்பினும் முன்சொன்ன துறையேயாம். எ - று.

---

[illegible]

வ - று. *கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்-அவ்வேலே
அம்பிற் பிறழுந் தடங்க ணவன்காதற்
கொம்பிற்கு மாயிற்றே கூற்று.

இ - ள். ஆரவாரத்தான் மிக்க கடல்சூழ்ந்த நிலத்திற் கொடிதே காண், ஒருமையுடைமை; வெய்தான அயில்வாயிலே பட்டான் வெற்றியை விரும்பினோன்; அந்த அயிலே பகழிபோலமிளிரும் பெரிய விழியை உடையவளான அவன் அன்பினையுடைய வஞ்சிக்கொம்பனையாளுக்கும் கூற்றாயிற்று. எ - று. (உ௩)

௨௪.—மகட்பாற் காஞ்சி:—

ஏந்திழைபாட் டருகென்னும்
வேந்தனொடு வேறுநின்றன்று.

இ - ள். அழகிய ஆபரணத்தினையுடையாளை எனக்குத் தருக வென்று சொல்லும் அரசனோடு மாறுபட்டு நின்றது. எ - று.

வ - று. அளிய கழல் 1 வேந்த ரம்மா வரிவை
† எளியளென் றெள்ளி யுரைப்பிற் - குளியாவோ
பண்போற் கிளவிப் பல்வளையாள் வாண்முகத்த
கண்போற் பகழி கடிது.

இ - ள். அளியினையுடைய கழன் 2மன்னர் அழகிய திருவையனைய மடவாள் தாம் கொள்கைக்கு எளியளென்று இகழ்ந்துபேசின், தையாவோ? பண்ணையொத்த வார்த்தையினையுடைய இப்பலதொடியினையுடையவள் ஒளியினையுடைய வதனத்தவாகிய கண்போன்ற அம்பு, கடிதாக. எ - று. (உ௪)

௨௫.—முனைகடி முன்னிருப்பு:—

மன்னர்யாரையு மறங்காற்றி
முன்னிருந்த முனைகடிந்தன்று.

இ - ள். வேந்தரெல்லாரையும் சினத்தைக் காலப் பண்ணி 3 அவரை முன்னேயிருந்த பூசற்களரியினின்றும் போக்கியது. எ - று.

வ - று. கடிகமழ் வேரிக் கடைதோறுஞ் செல்லக்
கொடிமலி கொல்களி றேவித் - 4 துடிமகிழ
ஆர்த்திட் டமரு ளடையாரை யம்முனையிற்
பேர்த்திட்டான் பெய்கழலி னன்.

இ - ள். மிகநாறும் மதுவினையுடைய மாற்றார் அரணத்தின் வாயிலிடந்தோறும் போக வெற்றிக்கொடியால்மிக்க யானைகளையேவித் துடிகொட்ட ஆரவாரித்துப் போருட் பகைவரைச் செருப்புலத்தினின்றும் போகத்துரந்தான், இட்ட வீரக்கழலினையுடையான். எ - று. (உ௫)

காஞ்சித்திணைப்பாட்டு க - ம் துறைப்பாட்டு உ௪-ம் முடிந்தன.

நான்காவது காஞ்சிப்படலம் முற்றிற்று.

---

*தொல். மொழி. சூ.24, ந; ஷை புறத். சூ. 19, இளம். மேற்; ‘கவ்வை நீர்’: நன். சூ. 458, மயிலை. மேற். † நன். சூ. 451, மயிலை. மேற்.

(பி - ம்.) 1 ‘வேந்தன்.’ 2 ‘மன்னன்.’ 3 ‘பகைவரை.’ 4 ‘துடியுகள.’

ஐந்தாவது

# நொச்சிப்படலம்.

(௫.—சூத்திரம்.)

நூவலருங் காப்பி னொச்சி யேனை
மறனுடைப் பாசி யூர்ச்செரு வென்றா
செருவிடை வீழ்ந்த திண்பரி மறனே
எயிலது போரே யெயிறனை யழித்தல்
அழிபடை தாங்கன் மகண்மறுத்து மொழிதலென
எச்ச மின்றி யெண்ணிய வொன்பதும்
நொச்சித் [1]திணையுந் துறையு மாகும்.

என்-னின், நொச்சித்திணையும் துறையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். நொச்சி, மறனுடைப்பாசி, ஊர்ச்செரு, செருவிடை வீழ்தல், குதிரைமறன், எயிற்போர், எயிறனையழித்தல், அழிபடைதாங்கல், மகண் மறுத்துமொழிதல் எனச் சொல்லப்பட்ட இவ்வொன்பதும் நொச்சித்திணையும் துறையுமாம். எ - று.

௮௬.—நொச்சி:—

ஏப்புழை ஞாயி லேந்துநிலை யரணம்
காப்போர் சூடிய பூப்புகழ்ந் தன்று.

இ - ள். ஏவறையையுடைய மூடக்குக்களைத் தாங்கின நிலைமையினையுடைய எயில்காக்கும் வீரர் மலைந்த பூவைப் புகழ்ந்தது. எ - று.

வ - று. ஆடரவம் பூண்டா னழலுணச் சீறிய
கூடரணங் காப்போர் குழாம்புரையச் - சூடினார்
உச்சி மதி [2]வழங்கு மோங்கு மதில்காப்பான்
நொச்சி நுதிவே லவர்.

இ - ள். ஆடும்பாம்பையணிந்தான் நெருப்பு நுகரக் கோபித்த திரிபுரத்தைக்காக்கும் அவுணர்திரளையொப்ப மலைந்தார், மேலே திங்களூரும் உயர்ந்த புரிசையைக் காவல்செய்வான்வேண்டி நொச்சிப் பூவை, [3]நுனையாற் சிறந்த வேலினையுடையவர். எ - று.
வேலவர் நொச்சிசூடினாரென்க. (௧)

௮௭.—மறனுடைப் பாசி:—

மறப்படை மறவேந்தர்
துறக்கத்துச் செலவுரைத்தன்று.

---

(பி - ம்.) 1 'திணையது வகையெனமொழிப' 2 'தவழும்' 3 'நுனி'

இ - ள். சினச்சேனையை யுடைய சினமன்னர் வீரசுவர்க்கத் திடத்துப் போனபோக்கைச் சொல்லியது. எ - று.

வ - று.*பாயினர் மாயும் வகையாற் பலகாப்பும்
ஏயினு ரேய விகன்மறவர் - ஆயினர்
ஒன்றி யவரற வூர்ப்புலத்துத் தார்தாங்கி
வென்றி யமரர் விருந்து.

இ - ள். அரணைச் சூழப் பரந்தார் படுமுறையாற் பலகாவலையும் ஏவினர்; ஏவின மாறுபாட்டையுடையவீரர் ஆயினர், எதிரதாகக் கிட்டினவர் கெட ஊரிடத்துத் தூசிப்படையைத் தடுத்து வெற்றியினை யுடைய தேவர்கட்கு விருந்து. எ - று.

விருந்து ஆயினரென்க. (உ)

அஅ.—ஊர்ச்செரு:—

அருமிளையொடு கிடங்கழியாமைச்
செருமலைந்த சிறப்புரைத்தன்று.

இ - ள். பகைவராற் புகுதற்கரிய காவற்காட்டோடு அகழி சிதையாதபடி பூசல்செய்த மதிப்பினைச் சொல்லியது. எ - று.

வ - று. †வளையும் வயிரு மொலிப்பவாள் வீசி
இளையுங் கிடங்குஞ் சிதையத் - தளைபரிந்த
நோனர் படையிரிய நொச்சி விறன்மறவர்
ஆனு ரமர்விலக்கி யார்ப்பு.

இ - ள். சங்கும் கொம்பும் முழங்க வாளையோச்சிக் காவற்காடும் அகழுமழியக் காவற்பிணியை யறுத்த பகைவரான உழிஞையார் சேனை கெட நொச்சியிடத்து வெற்றிவீரர் ஆனர், போரைவிலக்கி ஆரவாரிப்பு. எ - று.

ஆரவாரிப்பு ஆனரென்க. (௩)

அகூ.—செருவிடை வீழ்தல்:—

ஆழ்ந்துபடு கிடங்கோ டருமிளை காத்து
வீழ்ந்த வேலோர் விறன்மிகுத் தன்று.

இ - ள். ஆழமுடைத்தான கிடங்கினோடு அரிய காவற்காட்டைக் காத்துப் பட்ட வேல்வீரர் வெற்றியைச் சொல்லியது. எ - று.

வ - று. ஈண்டரில் சூழ்ந்த விளையு மெரிமலர்க்
காண்டகு நீள்கிடங்குங் காப்பாராய் - வேண்டார்
மடங்க லனைய மறவேலோர் தத்தம்
உடம்பொடு காவ லுயிர்.

* தொல். புறத். சூ. 11, இளம். மேற். † பு - வெ. 130.

இ - ள். திரண்ட பிணக்குச் சுற்றின காவற்காடும் நெருப்புப் போன்ற பூவினையுடைய காணத்தக்க நீண்ட அகழும் காவல் புரிவாராய் வேண்டுகிலர் ; சிங்கமொத்த சினவேலோர் தத்தமுடைய மெய்யுடன் உயிரைக் காத்தலை. எ - று.

காத்தலை வேண்டாரென்க. (ச)

கூ0.—குதிரைமறம் :—

[1]ஏமாண்ட நெடும்புரிசை
வாமானது வகையுரைத்தன்று.

இ - ள். எய்யுந்தொழில் மாட்சிமைப்பட்ட பெரியமதிலிடத்துப் பாயும் குதிரையது பகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. * தாங்கன்மின் றாங்கன்மின் றானை விறன்மறவிர்
ஓங்கன் மதிலு ளொருதனிமா - ஞாங்கர்
†மயிரணியப் பொங்கி மழைபோன்று மாற்றார்
உயிருணிய வோடி வரும்.

இ - ள். தடுத்தற்கரிது ! தடுத்தற்கரிது !! தடாதேகொண்மின் ! தடாதேகொண்மின் !! சேனையிடத்து வென்றிவீரர்காள், மலைபோன்ற புரிசையிடத்து ஒப்பில்லாததொருகுதிரை பக்கத்தே கவரியிட எழுந்து மேகத்தையொத்துப் பகைவருயிரை உண்பான்வேண்டிக் கடுகிவரும். எ - று. (இ)

கூக.—எயிற்போர் :—

அயிற்படையி னரண்காக்கும்
எயிற்படைஞ ரிகன்மிகுத்தன்று.

இ - ள். கூரிய ஆயுதத்தாலே குறும்பினைக்காக்கும் மதிலிடத்துப் போர்வீரர் மாறுபாட்டைச் சிறப்பித்தது. எ - று.

வ - று. மிகத்தாய செங்குருதி மேவரு மார்பின்
உகத்தா முயங்கியக் கண்ணும் - அகத்தார்
புறத்திடைப் போதந் தடல்புரிந்தார் பொங்கி
மறத்திடை மானமேற் கொண்டு.

இ - ள். பெருகப்பரந்த சிவந்தசோரி பொருந்தின அகலத்தினின்றும் வீழத் தாம் வருந்தியவிடத்தும் உள்ளுள்ளார் அரணிற்குப் புறம்பே போந்து கோறலை விரும்பினர், கோபித்துச் சினத்தின்நடுவே அபிமானத்தை மேற்கொண்டு. எ - று. (சு)

கூஉ.—எயிறனையழித்தல் :—

துணிவுடைய தொடுகழலான்
அணிபுரிசை யழிவுரைத்தன்று.

---

* புறநா. 299, 303 - 4. † மதுரை. 391.

(பி - ம்.) [1] 'நிலையுரைத்தன்று.'

இ - ள். தெளிவுடைத்தான கட்டுங்கழலோன் அழகிய மதிலின் கட் கேட்டினைச் சொல்லியது. எ - று.

வ - று. *அகத்தன வார்கழ லேனொன்று ளரணின்
புறத்தன போரெழிற் றிண்டோள் - உறத்தழீஇத்
தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட
வாட்குரிசில் வானுலகி னான்.

இ - ள். அரணினுள்ளே வீழ்ந்தன, கட்டுங்கழலாற்பொலிந்த வலியகால்; மதிலின் புறம்பே வீழ்ந்தன, பூசலைச்செய்யும் அழகிய திண்ணிய தோள்; இறுகவணைத்துத் தோட்கு உரியரான இணைவளையினையுடைய தெய்வமகளிர் கொண்டாட வாளினையுடைய உபகாரி விண்ணிடத்தான். எ - று. (எ)

கூ௩.—அழிபடை தாங்கல்:—
இழிபுடன் றிகல்பெருக
அழிபடை யரண்காத்தன்று.

இ - ள். தம் படைத்தாழ்விற்குக் கோபித்து மாறுபாடு மிகக் கெட்ட சேனை எயிலைக் காத்தது. எ - று.

வ - று. பரிசை பலகடந்து பற்றா ரெதிர்ந்தார்
எரிசெ யிகலரணங் கொண்மார் - புரிசை
அகத்தடி யுய்யாமை யஞ்சுடர்வா ளோச்சி
மிகத்தடிந்தார் மேனின் றவர்.

இ - ள். கிடுகுபடை பலவற்றையும் வென்று பகையான உழிஞையார் எதிர்ந்தாராக, அழலினைப்பண்ணும் மாறுபாட்டுக்குறும்பினைக் கொள்வான் மதிலினுட் காலிடாதபடி அழகிய ஒளியையுடைய வாளை ஓச்சிப் பிணம்பெருகத் துணித்தார், மதின்மேல் நின்ற வீரர். எ - று.

கூச.—மகண்மறுத்து மொழிதல்.—
வெம்முரணான் மகள்வேண்ட
அம்மதிலோன் மறுத்துரைத்தன்று.

இ - ள். வெய்தான பகையையுடையவன் மகளைவேண்ட அழகிய குறும்பினுள்ளோன் மறுத்துச் சொல்லியது. எ - று.

வ - று. ஒள்வாண் மறவ ருருத்தெழுந் தும்பர்நாட்
கள்வார் நறுங்கோதை காரணமாக் - கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டிற் கால்.

இ - ள். நொச்சியில் ஒள்ளிய வாள் [1]வீரரைக் கோபித்தெழுந்து மேனுள் தேனொழுகும் நறுமாலையையுடையவள் பொருட்டாகக்கொண்டு

* தொல். புறத். சூ. 11, இளம். மேற்.
(பி - ம்) [1] 'வீரர்.'

கொள்வான் வேண்டி இடையின் அழகைக்கருதி வந்தவருடைய இளைய வாரணத்தின் கொம்பு, இந்தக் கறுத்த கண்ணிணையுடையாள் வெளுத்த கட்டிலின் கால். எ - று.

"ஆயிரு திணையு மரசர்க் குரிய" என்பதனால் மகட்பாற்காஞ்சி அரசர்க்குரித்து; இது மறவர்க்குரித்து. (௧)

நொச்சித்திணைப்பாட்டு ௧-ம் துறைப்பாட்டு அ-ம் முடிந்தன.

ஐந்தாவது நொச்சிப்படலம் முற்றிற்று.

ஆறாவது

# உழிஞைப்படலம்.

(சூ.—சூத்திரம்.)

உழிஞை யோங்கிய குடைநாட் கோளே
வாணாட் கோளே முரச வுழிஞை
கொற்ற வுழிஞையோ டரச வுழிஞை
கந்தழி யென்றா முற்றுழி ஞையே
காந்தள் புறத்திறை யாரெயி லுழிஞை
அருந்தோ லுழிஞை குற்றுழி ஞையொடு
கோட்புறத் துழிஞை பாசி நிலையே
ஏணி நிலையே யிலங்கெயிற் பாசி
முதுவுழி ஞையே முந்தகத் துழிஞை
முற்று முதிர்வே யானைகைக் கோளே
வேற்றுப்படை வரவே யுழுதுவித் திடுதல்
வாண்மண்ணு நிலையே [1] மண்ணுமங் கலமே
மகட்பா விகலே திறைகொண்டு [2] பெயர்தல்
அடிப்பட விருத்த றொகைநிலை யுளப்பட
இருமென் சீர்த்தி யிருபத் தொன்பதும்
உழிஞை யென்மனா ருணர்ந்திசி னோரே.

என்-னின், உழிஞைத் திணையும் துறையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். உழிஞை, குடைநாட்கோள், வாணாட்கோள், முரசவுழிஞை, கொற்றவுழிஞை, அரசவுழிஞை, கந்தழி, முற்றுழிஞை, காந்தள், புறத்திறை, ஆரெயிலுழிஞை, தோலுழிஞை, குற்றுழிஞை, புறத்துழிஞை, பாசிநிலை, ஏணி நிலை, எயிற்பாசி, முதுவுழிஞை, அகத்துழிஞை, முற்றுமுதிர்வு, யானைகைக்கோள், வேற்றுப்படைவரவு, உழுதுவித்திடுதல், வாண்மண்ணுநிலை, மண்ணுமங்கலம், மகட்பாவிகல், திறைகொண்டு பெயர்தல், அடிப்படவிருத்தல், தொகை நிலை எனச்சொல்லப்பட்ட இவ் விருபத்தொன்பதும் உழிஞைத்திணையும் துறையுமாம். எ - று.

---

(பி - ம்.) 1 'மணமங்கலமே.' 2 'பெய்தல்.'

கூ௫.—உழிஞை:—

முடிமிசை யுழிஞை சூடி யொன்னார்
கொடிநுடங் காரெயில் கொளக்கரு தின்று.

இ - ள். தம் முடிமேலே உழிஞைமாலையை அணிந்து பகைவர் கொடியசையும் நிறைந்த குறும்பினைக் கைப்பற்ற நினைந்தது. எ - று.

வ - று. உழிஞை முடிபுனைந் தொன்னுப்போர் மன்னர்
விழுமதில் வெல்களிறு பாயக் - கழி[1] மகிழ்
வெய்தாரு மெய்தி யிசைநுவலுஞ் சீர்த்தியனே
கொய்தார மார்பினெங் கோ.

இ - ள். உழிஞைமாலையை முடிமேலே சூடிப் பொருந்தாத போரினைச் செய்யும் [2] வேந்தர் சீரிய புரிசையை வெல்லும் யானைகுத்த மிக்க களிப்புமேவாத பெரியோரும் மகிழ்ச்சியைமேவிக் கீர்த்திகூறும் பெரும்புகழினையுடையவன், மட்டஞ்செய்த மாலையாற் சிறந்த மார்பினை யுடைய எம் வேந்து. எ - று.

அம்மென்றது, சாரியை. (க)

கூசா.—குடைநாட்கோள்:—

செற்றடையார் மதில்கருதிக்
கொற்றவேந்தன் குடைநாட்கொண்டன்று.

இ - ள். செறுத்துக் கூடாதாருடைய அரணைக்கொள்ள நினைந்து வெற்றி மன்னவன் குடையைப் புறவீடுவிட்டது. எ - று.

வ - று. *நெய்யணிக செவ்வே னெடுந்தேர் நிலைபுகுக
கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக - வையகத்து
முற்றக் கடியரண மெல்லா முரணவிந்த
கொற்றக் குடைநாட் கொள.

இ - ள். நெய்யிட்டு அலங்கரிப்பனவாக, பகைவர் குருதியாடிச் சிவந்த வேல்கள்; நெடிய தேர்களும் நிற்குங்கூடங்களிலே நிற்பனவாக; கொய்த தலையாட்டத்தினையுடைய குதிரையும் கொல்லும் யானையும் போர்க்குச் செய்த பண்ணினைக் களைக; ஞாலத்து அடையக் காவற் குறும்புகளெல்லாம் தத்தம் மாறுபாடு கெட்டன, வெற்றிக்குடையைப் புறவீடுவிட. எ - று. (உ)

கூஎ.—வாணாட்கோள்:—

கலந்தடையார் மதில்கருதி
வலந்தருவா ணாட்கொண்டன்று.

இ - ள். கூடிச் சேராதார்தம் அரணினைக் கோடலை நினைந்து வெற்றிகொள்ளும் வாளைப் புறவீடுவிட்டது. எ - று.

---

* தொல். புறத். சூ. 11, இளம். மேற்.
(பி - ம்.) 1 'மகிழ்பு.' 2 'வேந்தர்தஞ்சீரிய.'

வ - று. *வாளுட் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடும் பேமதிற் - பூணார்
அணிகொள் வனமுலையா ராடரங்க மேறிப்
பிணிகொள்பே யாடும் பெயர்த்து.

இ - ள். வாளினைப் புறவீடுவிட்டானாக, தாழ்வு சொல்லிவந்து சேராத பகைவருடைய மதியைத்தீண்டும் அச்சமுறுத்தும் மதிலிடத்து ஆபரணநிறைந்த அலங்காரங்கொண்ட அழகிய கொங்கையினையுடையார் நிருத்த மண்டபத்தேயேறிக் கைகோத்த பேயாடும், பல கூத்தினையும் மாறி. எ - று.

திணைதோறும் வாளுட்கோள் குடைநாட்கோள் வேறுபாடுடைய. (ங)

கூ௰.—முரச வுழிஞை :—

பொன்புனை யுழிஞை சூடி மறியருந்தும்
திண்பிணி முரச நிலையுரைத் தன்று.

இ - ள். பொன்னாலே செய்த உழிஞைமாலையை மலைந்து ஆடு வெட்டியிடும் பலியை நுகரும் திண்ணிதாக வாராற்கட்டின முரசின் நிலைமையைச் சொல்லியது. எ - று.

வ - று. கதிரோடை வெல்களிறு பாயக் கலங்கி
உதிரா மதிலு முளகொல் - அதிருமால்
பூக்கண் மலிதார்ப் புகழ்வெய்யோன் கோயிலுள்
மாக்கண் முரச மழை.

இ - ள். ஒளியாற் சிறந்த பட்டத்தினையுடைய வெல்லும்யானை குத்தக் குலைந்து வீழாத புரிசையும் சில உளபோலும்; முழங்குமால், மலர்கண்மிக்க மாலையினையுடைய இசையை விரும்பியோன் மாளிகையிடத்துப் பெரிய கண்ணினையுடைய வீரமுரசம் மழைபோல். எ - று.

மழைபோல் அதிருமாலென்க. (ச)

கூகூ.—†கொற்ற வுழிஞை :—

அடையாதா ரரண் [1]கொள்ளிய
படையோடு பரந்தெழுந் தன்று.

இ - ள். பகைவர்தங் காவற்பதியைக் கைக்கொள்வான்வேண்டிச் சேனையோடு கைவளர்ந்து சென்றது. எ - று.

வ - று. வெள்வாட் கருங்கழற்கால் வெஞ்சுடர்வேற் றண்ணளியான்
‡கொள்வான் கொடித்தானை கொண்டெழுந்தான்-நள்ளாதார்
அஞ்சுவரு வாயி லருமிளைக் குண்டகழி
மஞ்சிவரு ஞாயின் மதில்.

---

* தோல். புறத். சூ. 11, இளம். மேற். † "கொள்ளார்தேஎங் குறித்த கொற்றம்" என்பர்; தோல். புறத். சூ. 12. ‡ நன். சூ. 343, மயிலை. மேற்.

(பி - ம்.) 1 'கொளீஇய'

இ - ள். ஒளிபரந்த வாளினையும் வலிய வீரக்கழலாற்சிறந்த காலினையும் வெய்ய சோதியாற்பொலிந்த வேலினையும் தண்ணளியையுமுடையவன் கைப்பற்றிக் கொள்வானாகப் பதாகையினையுடைய சேனையை ஒன்றுபடக் கொண்டெழுந்தான்; பொருந்தாதார் வெருவரு வாயிலினையும் புகுதற்கரிய குறுங்காட்டினையும் ஆழ்ந்த கிடங்கினையும் மேகம்பரக்கும் ஏவறையினையுமுடைய அரணத்தை. எ - று. (௫)

க௦௦.—அரச வுழிஞை:—

தொழில்காவன் மலிந்தியலும்
பொழில்காவலன் புகழ்விளம்பின்று.

இ - ள். காவற்செய்தி மிக்குநடக்கும் பூமிகாவலன்றன் கீர்த்தியைச் சொல்லியது. எ - று.

வ - று. ஊக்க முரண்மிகுதி யொன்றிய நற்சூழ்ச்சி
ஆக்க மவன்க ணகலாவால் - வீக்கம்
நகப்படா வென்றி நலமிகு தாராற்
ககப்படா வில்லை யரண்.

இ - ள். மனவெழுச்சியும் மாறுபாட்டின் பெருமையும் பொருந்திய நல்ல விசாரமும் செல்வப்பெருக்கமும் அவனிடத்து நீங்காவால்; பெருமையினையும் பிறரால் இகழத்தகாத வெற்றியினையும் நன்மைமலியும் மாலையினையும் உடையவனுக்குக் கையகப்படாதன இல்லை, காவற்குறும்புகள் யாவையும். எ - று. (௬)

க௦க.—* கந்தழி:—

மாவுடைத்தார் மணிவண்ணன்
சோவுடைத்த மறநுவலின்று.

இ - ள். வண்டினையுடைய மாலையாற் சிறந்த நீலமணிபோன்ற மேனியையுடையான் வீரசோவென்னும் அரணத்தை அழித்தவீரத்தைச் சொல்லியது. எ - று.

வ - று. †அன்றெறிந் தானு மிவனு லரண்வலித்
தின்றிவன் மாறு வெதிர்வார்யார் - என்றும்
மடையார் மணிப்பூ ணடையாதார் மார்பிற்
சுடராழி நின்றெரியச் சோ.

இ - ள். அந்நாள் அழித்தவனும் இவன், அரண்வலிதென்றுதேறி; இந்நாள் இவன்பகையாக எதிர்ப்பார் யார் எக்காலத்தும்? மூட்டார்ந்த மணியணியையுடைய பொருந்தாதாருடைய அகலத்து ஒளிவிடுந் திகிரி நின்று அழலச் சோவென்னும் அரணத்தை. எ - று.

இஃது உவமையன்று; மிகுதி கூறியது. (௭)

* கந்தழி: தொல். புறத். சூ. 33. † ஷை ஷை 27, இளம். மேற்.

க௦உ.—முற்றுழிஞை:—

ஆடிய லவிர்சடையான்
சூடியபூச் சிறப்புரைத்தன்று.

இ - ள். அசையுந்தன்மையினை உடைத்தாய் விளங்கும் வேணியையுடையான் மலைந்த பூவினது நன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. மயங்காத தார்ப்பெருமை மற்றறிவார் யாரே
இயங்காணை மூன்று மெரித்தான் - தயங்கிணர்ப்
பூக்கொ ளிதழிப் புரிசெஞ் சடையானும்
மாக்கொ ளுழிஞை மலைந்து.

இ - ள். மருளாத உழிஞையின் மிகுதியை வேறுணர்வார் யாவர் தாம்! திரிபுரங்கள் மூன்றையும் சுட்டான்; விளங்கும் கொத்திற் பொலிவுகொண்ட கொன்றையையுடைய புரிந்த செஞ்சடையானும் பெருமைகொண்ட உழிஞையைச் சூடி. எ - று. (அ)

க௦௩.—*காந்தள்:—

கருங்கடலுண் மாத்தடிந்தான்
†செழுங்காந்தட் சிறப்புரைத்தன்று.

இ - ள். கறுத்த கடலிடத்துச் சூரபன்மாவைக் கொன்றவனுடைய காந்தட்பூவின் மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. ‡குருகு பெயரிய குன்றெறிந் தானும்
உருகெழு காந்தண் மலைந்தான் - பொருகழற்
§கார்கருதி வார்முரச மார்க்குங் கடற்றானைப்
போர்கருதி யார்மலையார் பூ.

இ - ள். குருகின் பெயர்பெற்ற மலையை எறிந்தவனும் அழகு மருவின கோடலைச் சூடினான்; வீரக்கழலினையுடைத்தாய் மேகத்தையொத்து வாராற் பிணித்த முரசுமுழங்குங் கடல்போன்ற சேனையிடத்துப் பூசலை நினைந்து யாவர் சூடார் பூவினை? எ - று.

குருகு பெயரிய குன்று - கிரவுஞ்சகிரி. (௯)

க௦௪.—புறத்திறை:—

மறத்துறை மலிந்து மண்டி மாற்றார்
விறற்கொடி மதிலின் புறத்திறுத் தன்று.

இ - ள். சினத்தின் வழிமிக்கு மேற்கொண்டு பகைவருடைய வெற்றிக்கொடியணிந்த அரணின் சுற்றிலே விட்டது. எ - று.

* தொல். புறத். சூ. 5; இத்துறையை அகப்புறமென்பர்; யா - வி.
† காந்தட்பூ: முருகு. 43 - 4. ‡ மணி. 5:13. § பு - வே. 127.

வ - று. புல்லார் புகலொடு போக்கொழியப் பொங்கினனாய்ப்
பல்லார் மருளப் படைபரப்பி - யொல்லார்
நிறத்திறுத்த வாட்டானை நேரார் மதிலின்
புறத்திறுத்தான் பூங்கழலி னான்.

இ - ள். பகைவர் புகுமிடமும் ஓடிப்போம் வழியும் இன்றியே யொழியப் பொங்கியெழுந்து பலமன்னரும் மயங்கத் தன் சேனையைக் கைவளரவிட்டுப் பகைவர் மருமத்திலே குளித்த வாட்சேனையினையுடைய பகைவர் அரணத்தின் பக்கத்திலே பாடிவீடு கொண்டான், பொலிந்த வீரக்கழலினையுடையவன். எ - று. (௧௦)

௧௦௫.—ஆரெயிலுழிஞை :—

வாஅண்மறவர் வணங்காதார்
நீஇண்மதிலி னிலையுரைத்தன்று.

இ - ள். வாளினையுடைய வீரர் தம்மைப் பணியாதாருடைய உயர்ந்த புரிசையின் திண்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. மயிற்கணத் தன்னார் மகிழ்தேற லூட்டக்
கயிற்கழலார் கண்கனல் பூப்ப - எயிற்கண்ணார்
வீயப்போர் செய்தாலும் வென்றி யரிதரோ
மாயப்போர் மன்னன் மதில்.

இ - ள். மயிலின்திரளனையார் களிக்கும் மதுத்தெளிவை உண்ணப்பண்ண மூட்டுவாயாற் சிறந்த கழலினையுடைய உழிஞையார்விழி நெருப்பைக் கால அரணிடத்தார் பலரும்படப் பூசல் செய்தாலும் வெற்றியரிது; வஞ்சச்செருவினைச் செய்யவல்ல வேந்தன் புரிசையை. எ-று.
மதிலை வென்றியரிதென்க. அரோ : அசை. (௧௧)

௧௦௬.—தோலுழிஞை :—

வென்றி யோடு புகழ்விளைக் குமெனத்
தொன்று வந்த தோன்மிகுத் தன்று.

இ - ள். வெற்றியுடன் இசையை உண்டாக்குமெனச் சொல்லிப் பழையதாகி வந்த கிடுகுபடையைச் சிறப்பித்தது. எ - று.

வ - று. *நின்ற புகழொழிய நில்லா வுயிரோம்பி
இன்றுநாம் வைக லிழிவாகும் - வென்றொளிரும்
பாண்டி னிரைதோல் பணியார் பகையரணம்
வேண்டி னெளிதென்றான் வேந்து.

இ - ள். நிலைநின்ற கீர்த்திபோக நிலைநில்லாத உயிரைக்காத்து இற்றைநாளிலே நாம் இவ்வெயிற்புறத்துத் தங்குமது நமக்குத் தாழ்வு;

---

* தொல். புறத். சூ. 10, இளம். மேற்; "நின்ற...வேந்து" ஷை ஷை 12, ந. மேற்; "நின்ற......உயிர்': குறள். 235; சூளா. சீய. 204.

வென்று விளங்கும் கண்ணுடி நிரைத்த கிடுகுபடை வணங்காதார் முனைச்குறும்பினைக் கொள்ளவேண்டிற் கொள்கை எளிதென்று சொன்னான் மன்னன். எ - று.

ஆதலால் இன்று நாம் வைகல் இழிவாகுமென்க. தோலென்பது ஆகுபெயர். (௧௨)

௧௦௭.—குற்றுழிஞை :—

*கருதாதார் மதிற்குமரிமேல்
ஒருதானுகி யிகன்மிகுத்தன்று.

இ - ள். பகைவர்அரணுகிய அழிவில்லாததன்மேல் தான் ஒருவனுமேயாகி மாறுபாட்டினைப் பெருக்கியது. எ - று.

வ - று. குளிறு முரசினன் கொண்டா னரணம்
களிறுங் கதவிறப் பாய்ந்த - ஒளிறும்
அயிற்றுப் படைந்த †வணியெழு வெல்லாம்
‡எயிற்றுப் படையா விடந்து.

இ - ள். அதிரும் வீரமுரசினையுடையான் வென்று கைப்பற்றினன் குறும்பினை; போர்யானைகளும் வாய்தலிற் கதவு ஒடியப் பாய்ந்தன; விளங்கும் வேல்வலிசிறந்த நிரைத்த கணைய முழுதும் மருப்பாயுதத்தாலே பெயர்த்து. எ - று. (௧௩)

௧௦௮.—இதுவுமது :—

வளைஞரல வயிரார்ப்ப
மிளைகடத்தலு மத்துறையாகும்.

இ - ள். சங்கம் முழங்கக் கொம்பு குறிப்பக் காவற்காட்டைக் கடந்து புகுமதுவும் முன்னஞ்சொன்ன துறையேயாம். எ - று.

வ - று. அந்தரந் தோயு மமையோங் கருமிளை
மைந்தர் மறிய மறங்கடந்து - பைந்தார்
விரைமார்பின் வின்னரல வெங்கணை தூவார்
வரைமார்பின் வைகின வாள்.

இ - ள். ஆகாயத்தைக் கிட்டும் மூங்கிலுயர்ந்த அரிய காவற்காட்டிற் பொரும் வீரர் முதுகிட மறத்தை வென்று, செவ்விமாலை மணத்தையுடைய அகலத்திலே வின்னுணெலிப்ப வெவ்விய அம்பைச் சிந்துவாருடைய மலைபோன்ற அகலங்களிலே தங்கின, உழிஞையாருடைய வாள்கள். எ - று.

தூவுவாரென்பது தூவாரென இடைக்குறைந்தது. (௧௪)

௧௦௯.—இதுவுமது :—

பாடருந்தோற் படைமறவர்
ஆடலொடடையினு மத்துறையாகும்.

---

* "வணங்காதார் மதிற்குமரி" பு - வெ. 122. † புறநா. 14:2.
‡ எயிற்றுப்படை : சீவக. 2164.

இ - ள். சொல்லுதற்கரிய பரிசையினையுடைய சேனைத்தலைவர் ஆடுதலுடனே நொச்சியாருடைய அரணினைக் குறுகினும் முன்பு சொன்ன துறையேயாம். எ - று.

வ - று. நிரைபொறி வாயி னெடுமதிற் சூழி
வரைபுகு புள்ளின மான - விரைபடைந்தார்
வேலேந்து தானை விறலோன் விறன்மறவர்
தோலேந்தி யாட றொடர்ந்து.

இ - ள். ஒழுங்குபட்ட இயந்திரங்களாலமைந்த 1 புதவினையுடைய உயர்ந்த புரிசைநெற்றியிலே மலையிடத்துச்சென்றுபுகும் புட்களையொப்பக் கடுகிக்கிட்டினார், வேலினையுயர்த்த சேனையால்நிறைந்த வெற்றியினையுடையோன் வென்றிவீரர்; கிடுகினையெடுத்துத் தாம் ஆடுதலைச் சூழ்ந்து. எ - று.

தொடர்ந்து விரைபு அடைந்தாரென்க. (கடு)

கக0.—புறத்துழிஞை:—

விண்டோயு மிளைகடந்து
குண்டகழிப் புறத்திறுத்தன்று.

இ - ள். ஆகாயத்தைக் கிட்டும் காவற்காட்டைக் கடந்து ஆழ்ந்த கிடங்கின் கரையிலே விட்டது. எ - று.

வ - று. கோள்வாய் முதலைய குண்டகழி நீராக
வாள்வாய் மறவேந்தன் வந்திறுத்தான் - நீள்வாயில்
ஓங்க லரணத் தொளிவளையார் வெய்துயிர்ப்ப
ஆங்கொ லரிய வமர்.

இ - ள். ஆளைப்பற்றுகை தப்பாத முதலையினையுடைய குழிந்த அகழே தண்ணீராக வாய்த்த வாளினையுடைய மறமன்னன் வந்துவிட்டான்; நீண்ட*வாய்தலாற் சிறந்த உயர்ச்சியினையுடைய மதிலிடத்து ஒள்ளியவளையினையுடையார் வெய்தாக உயிர்ப்ப வெல்லுதற்கரிய பூசல் ஆம்போலும். எ - று. (கசு)

ககக.—பாசிநிலை:—

அடங்காதார் மிடல்சாயக்
2 கிடங்கிடைப் போர்மலைந்தன்று.

இ - ள். பகைவருடைய வலி கெட அகழியிடத்துப் பூசலை மேற்கொண்டது. எ - று.

வ - று. †நாவாயுந் தோணியு மேல்கொண்டு நள்ளாதார்
ஓவார் விலங்கி யுடலவும் - பூவார்

* வாய்தல் - வாசல். † தொல். புறத். சூ. 11, இளம். மேற்.
(பி - ம்.) 1 'புகலினையுடைய.' 2 'கிடங்கினுள்.'

அகழி பரந்தொழுகு மங்குருதிச் சேற்றுப்
பகழிவாய் வீழ்ந்தார் பலர்.

இ - ள். ஓடமும் * ஒருமரத்தோணியும் மேல்கொண்டு பொருந் தாதார் ஒழியாராய் விலங்கி வெகுளவும் மலர்நிறையும் கிடங்கிலே மிக்கோடும் அழகிய சோரியளற்று அம்பின் வாயிலே பட்டார் அநேகர். எ - று. (௧௭)

௧௧௨.—ஏணிநிலை:—

தொடுகழன் மறவர் துன்னித் துன்னார்
இடுசூட் டிஞ்சியி னேணிசாத் தின்று.

இ - ள். இட்ட வீரக்கழலினையுடைய கொடுவினையாளர் செறிந்து செறியாதார் பண்ணின எவறைகளையுடைய மதிலிலே ஏணியைச் சாத்தியது. எ - று.

சூட்டு - மாலை யென்றுமாம்.

வ - று. †கற்பொறியும் பாம்புங் கனலுங் கடி-குரங்கும்
விற்பொறியும் வேலும் விலக்கவும் - பொற்புடைய
பாணி நடைப்புரவிப் பல்களிற்றார் சாத்தினார்
ஏணி பலவு மெயில்.

இ - ள். இடங்கணியும் அரவும் நெருப்பும் கடிகுரங்கும் வில் இயந்திரமும் அயிலும் இவையனைத்தும் பகைவர் உட்புகுதாதபடி விலக்கவும் பொலிவினையுடைய தாளத்திற்கொக்கச் சதிபாயும் குதிரையினையும் பல யானையினையுமுடைய உழிஞையார் இட்டார்; அரணிடத்து ஏணிபலவும். எ - று.

ஏணிபலவும் சாத்தினாரென்க. (௧௮)

௧௧௩.—எயிற்பாசி:—

உடல்சினத்தார் கடியரணம்
மிடல்சாய மேலிவர்ந்தன்று.

இ - ள். முனையும் செற்றத்தினையுடையார் காவற்குறும்பு வலி கெட ஏணிமேல் ஏறியது. எ - று.

வ - று. ‡சுடும ணெடுமதில் சுற்றிப் பிரியார்
கடுமுர ணெஃகங் கழிப - அடுமுரண்
ஆறினா ரன்றி யரவு முடும்பும்போல்
ஏறினா ரேணி பலர்.

இ - ள். செங்கலாற்செய்த நெடிய புரிசையைச்சூழ்ந்து நீங்காராய்க் கொடிய மாறுபாட்டினையுடைய வேல் மார்பிலேபட்டு உருவிப் போகக் கொல்லும் மாறுபாடு ஆறினாரொழியப் பாம்பும் உடும்புமொப்ப ஏணிமேல் ஏறினார் அநேகர். எ - று.

---

* பெரும்பாண். 433. † சீவக. 101-4; சிலப். 15 : 207 - 17; திருவிளை. நகர. 24-9. ‡ தொல். புறத். சூ. 11, இளம். மேற்: சுடுமண்: பெரும்பாண். 405; சிலப். 14 : 146; மணி. 3 : 127.

அடுமுரணறிஞர் - பட்டார்; 'முரணறிஞரன்றி' என்பதற்கு முரணுரு தென்றுமாம். (கக).

கக௪.—முதுவுழிஞை :—

வேய்பிணங்கிய மிளையரணம்
பாய்புள்ளிற் பரந்திழிந்தன்று.

இ - ள். மூங்கில் தலைமணந்த காவற்காட்டினையுடைய குறும்பிலே இரைகண்டு பாயும் பறவையொப்ப வீரர் கைவளர்ந்து குதித்தது. எ - று.

வ - று. * கோடுயர் வெற்பி னிலங்கண் டிரைகருதும்
தோடுகொள் புள்ளின் [1] றொகையொப்பக் - கூடார்
முரணகத்துப் பாற முழவுத்தோண் மள்ளர்
அரணகத்துப் பாய்ந்திழிந்தா ரார்த்து.

இ - ள். குவடோங்கின மலையினின்றும் இரையைப் பூமியிலே கண்டு கருதிப் பாயும் தொகுதிகொண்ட பறவையின் குழுவையொப்பப் பகைவர் மாறுபாடு தம் மனத்தே கெட முழவுபோலத் திரண்ட தோளையுடைய வீரர் அரணிடத்துப் பாய்ந்து இழிந்து ஆரவாரித்தார். எ - று. (உ0).

கக௫.—இ து வு ம து :—

செருமதிலோர் சிறப்புரைத்தலும்
அருமுரண னத்துறையாகும்.

இ - ள். போரைச்செய்யும் எயிலினுள்ளோருடைய மிகுதியைக் கூறலும் வெல்லுதற்கரிய மாறுபாட்டாலே முன்புசொன்ன துறையேயாம். எ - று.

வ - று. அறியார் வயவ ரகத்திழிந்த பின்னும்
நெறியார் நெடுமதிலு ணேரார் - மறியாம்
கிளியொடு நேராங் கிளவியார் வாட்கட்
களியுறு காமங் கலந்து.

இ - ள். உணரார் நொச்சிவீரர்; அரணினுள்ளே புகுந்தபின்னும், முடங்குதல் நிறைந்த நெடும்புரிசையுட் பகைவர், மான்மறியாம் கிளியையொத்த சொல்லினையுடையார் ஒளியினையுடைய கண்ணின் களிப்புற்ற வேட்கை விரவுதலான். எ - று.

நேரார்மதிலகத்து இழிந்தபின்னும் வயவரறியார் எனவும், மறியாம் வாட்கண் எனவும் கூட்டுக. (உக).

கக௬.—அகத்துழிஞை :—

முரணவியச் சினஞ்சிறந்தோர்
அரணகத்தோரை யமர்வென்றன்று.

* தொல். புறத். சூ. 11, இளம். மேற்.

(பி - ம்.) [1] 'றொகையேய்ப்ப.'

இ - ள். மாறுபாடு கெடக் கோபமிக்க உழிஞையார் எயிலினுள் நொச்சியாரைப் போரை வென்றது. எ - று.

வ - று. செங்கண் மறவர் சினஞ்சொரிவாள் சென்றியங்க
அங்கண் விசும்பி னணிதிகழும் - திங்கள்
முகத்தா ரலற முகிலுரிஞ்சுஞ் சூழி
அகத்தாரை வென்றா ரமர்.

இ - ள். சிவந்த கண்ணினையுடைய வீரர், செற்றத்தைப் பொழியும் வாள்போய் உலாவ அழகிய இடத்தையுடைய ஆகாயத்தின் அலங்காரமிகும் மதியையொத்த வதனத்தினையுடையார் கூப்பிட மேகந்தவழும் நெற்றியினையுடைய அரணினுள்ளோரைப் போர்வென்றார். எ - று. (உஉ)

கக௭.—முற்றுமுதிர்வு :—

அகத்தோன் காலை யதிர்முர சியம்பப்
புறத்தோன் வெஞ்சினப் பொலிவுரைத் தன்று.

இ - ள். மதிலின் உள்ளோனுடைய முழங்குமுரசு காலையில் ஒலிப்பப் புறத்திருந்த உழிஞையானது வெய்ய கோபத்தின் மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. *காலை முரச மதிலியம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோ னோக்குதலும் - மாலை
†அடுக மடிசிலென் றம்மதிலு ளிட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு.

இ - ள். நாட்காலையே முரசு அரணின்கண் ஒலிப்பக் கண்சிவந்து வேலை வெற்றியைவேண்டுவோன் பார்த்தளவில், மாலைப்பொழுது அடுவேம் சோறென்று சொல்லி அவ்வரணினுக்குள்ளே எறிந்தார் கட்டுங்கழலினையுடையார், மூழையினையும் துடுப்பினையும். எ - று.

அம்மதிலுள் இட்டார், இதனை அழித்து இன்றுபோய் உண்பேமென்று. (உ௩)

கக௮.—யானை கைக்கோள் :—

மாறுகொண்டார் மதிலழிய
‡ஏறுந்தோட்டியு மெறிந்துகொண்டன்று.

இ - ள். பகைகொண்டார் அரணங்கெட யானையையும் காவலையும் பகைவரையெறிந்து கைக்கொண்டது. எ - று.

வ - று. ஏவ விகழ்மறவர் வீய விகல்கடந்து
காவலும் யானையுங் கைக்கொண்டான் - மாவலான்
வம்புடை யொள்வாண் மறவர் தொழுதேத்த
அம்புடை ஞாயி லரண்.

---

* தோல். புறத். சூ. 11, இளம். மேற். காலைமுரசம் : சிலப். 14:
† புறநா. 304 : 7 - 8. ‡ பெருங். 1. 37 : 212. [14.

இ - ள். தன் ஏவலைச் செய்யாத வீரர் கெட மாறுபாட்டைக் கடந்து தோட்டியையும் களிற்றையும் கைப்பற்றினான் குதிரைத்தொழிலை வல்லவன் ; கச்சினையுடைய ஒள்ளிய வாள்வீரர் பணிந்துவாழ்த்த, பகழியினையுடைய முடக்கறையாற் சிறந்த எயிலிடத்து. எ - று.

ஏ வல் - ஏவை வல்லவென்றுமாம். (உ௪)

கககூ.—வேற்றுப்படை வரவு :—

மொய்திகழ் வேலோன் முற்றுவிட் டகலப்
பெய்தார் மார்பிற் பிறன்வர வுரைத்தன்று.

இ - ள். போர்மிகும் வேலோன் சூழ்தல்விட்டுப் போக இட்ட மாலைமார்பினையுடைய வேற்றுவேந்தன் வரவினைச் சொல்லியது. எ-று.

வ - று. உவனின் றுறுதுயர முய்யாமை நோக்கி
அவனென் றலகேத்து மாண்மை - இவனன்றி
மற்றியார் செய்வார் மழைதுஞ்சு நீளரணம்
முற்றியார் முற்று விட.

இ - ள். உவன் இற்றைநாளிலே பொருந்தும் விதனத்தினின்றும் ஒழியாமையைப் பார்த்து அப்படிக்கொத்தவனென்றுசொல்லி உயர்ந்தோர் புகழும் ஆண்மைத்தன்மையினையுடைய இவனல்லது மற்று யாவர் இது செய்யவல்லார்! மேகம் உறங்கும் நீண்ட மதிலைச் சூழப்போனார் வளைவு விட. எ - று. (உ௫)

க௨0.—உழுது வித்திடுதல்:—

எண்ணார் பல்லெயில் கழுதையே ருழுவித்
துண்ணா வரகொடு கொள்வித் தின்று.

இ - ள். பகைவருடைய பலஅரணும் கழுதையாகிய ஏரிட்டுழுது கவடியுடன் குடைவேலை விதைத்தது. எ - று.

வ - று. எழுதெழின் மாடத் திடனெலா நூறிக்
*கழுதையேர் கையொளிர்வேல் கோலா - உழுததற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற்
கள்விரவு தாரான் கதம்.

இ - ள். †சித்திரமெழுதிய அழகிய மாளிகைமுழுதும் இடித்துக் கழுதையே ஏராகவும் கையில்விளங்கும் வேலே கோலாகவும் உழுது அதற்குப் பின்பு கவடியும் குடைவேலும் வித்தினும் கெடாதால்; தேன் கலந்த மாலையினையுடையவன் கோபம். எ - று. (உ௬)

க௨க.—வாண்மண்ணுநிலை:—

புண்ணிய நீரிற் புரையோ ரேத்த
மண்ணிய வாளின் மறங்கிளந் தன்று.

---

*தொல். புறத். சூ. 13, ந ; புறநா. 15 : 2 - 3, 392 : 9 - 11 ; சிலப். 27 : 225 - 6 ; காஞ்சிப். நாடு. 28. † "மாடக்குச் சித்திரமும்" பழைய செய்யுள்.

இ - ள். உயர்ந்தோர் துதிப்பத் தீர்த்தநீராலே மஞ்சனமாட்டிய வாளினது வீரத்தைச் சொல்லியது. எ - று.

வ - று. *தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்
கூர்த்தவாண் மண்ணிக் கொடித்தேரான் - பேர்த்தும்
†இடியார் பணைதுவைப்ப விம்மதிலுள் வேட்டான்
புடையா ரறையப் புகழ்.

இ - ள். தீர்த்தநீரும் மலருஞ் சொரிந்து திக்குவிளங்கக் கூரிய வாளினை மஞ்சனமாட்டிப் பதாகையாற்சிறந்த தேரினையுடையான் இரண்டாவதும் உருமேற்றையொக்கும் வீரமுரசு ஆர்ப்ப இந்த அரணிடத்தே களவேள்வி வேட்டான், பக்கத்துள்ள மன்னரெல்லாம் தன் கீர்த்தியைச்சொல்ல. எ - று. (உஎ)

கஉஉ.—மண்ணுமங்கலம்:—

‡வணங்காதார் மதிற்குமரியொடு
மணங்கூடிய மலிபுரைத்தன்று.

இ - ள். பணியாதார் அரணுகிய கன்னியுடன் வதுவைபொருந்திய மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. *எங்கண் மலர வெயிற்குமரி கூடிய
மங்கல நாள்யா மகிழ்தூங்கக் - கொங்கலர்தார்ச்
செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே
மொய்சுடர்ப்பூண் மன்னர் முடி.

இ - ள். எம்முடைய கண் மலர அரணுகியகன்னியினை மணந்த மணநாளிலே யாம் மகிழ்ச்சியெய்த மதுவலரும் கோவைமாலையினையும் கையாற்செய்யப்பட்டு ஒளிசிறந்த ஆபரணத்தினையுமுடைய வேந்தன் தாள்நிழற்கீழே தங்கின; செறிந்த சோதியால் நிறைந்த அணிகலத்தை யுடைய அரசர்முடிகள். எ - று. (உஅ)

கஉ௩.—மகட்பாலிகல்:—

மயிற்சாயன் மகள்வேண்டிய
கயிற்கழலோ னிலையுரைத்தன்று.

இ - ள். மயில்போன்ற மென்மையினையுடைய மகளை வேண்டிய மூட்டுவாயாற் சிறந்த வீரக்கழலினையுடையான் முறைமையைச் சொல்லியது. எ - று.

வ - று. அந்தழை யல்குலு மாடமை மென்றோளும்
பைந்தளிர் மேனியும் பாராட்டித் - தந்தை
புறமதில் வைகும் புலம்பே தருமே
மறமதின் மன்னன் மகள்.

---

* தோல். புறத். சூ. 11, இளம். மேற். †முநகு. 121; குறுந். 270: 1-3; பரி. 4 : 19, 22 : 4; அகநா. 188: 1 - 3, 354: 2; புறநா. 350 : 4; சீவக. 2900. ‡ பு - வே. 107.

இ - ள். அழகிய *தழையாற் சிறந்த நிதம்பத்தினையும் அசையும் மூங்கில்போன்ற மெல்லியதோளினையும் பசுந்தளிர்போன்ற நிறத்தினையும் கொண்டாடித் தமப்பனுடைய மதிற்புறத்துத்தங்கும் தனிமையையே கொடா நிற்கும்; வீரமே தனக்குப் புரிசையாகவுடைய வேந்தனிடத்து மகள். எ - று. (உகூ)

கஉச.—திறைகோண்டு பெயர்தல்:—

அடுதிற லரணத் தரசு வழிமொழியப்
படுதிறை கொண்டு பதிப்பெயர்ந் தன்று.

இ - ள். கொல்லும் வலிமிகும் எயிலினிடத்து மன்னரெல்லாம் தாழ்வு சொல்ல முறைமையான திறையைக் கொண்டு இருந்த ஊரினின்றும் எடுத்துவிட்டது. எ - று.

வ - று. கோடும் வயிரு மிசைப்பக் குழூமினை
ஓடெரி வேய வுடன்றுலாய்ப் - பாடி
உயர்ந்தோங் கரணகத் தொன்னார் பணியப்
பெயர்ந்தான் பெருந்தகையி னான்.

இ - ள். சங்கும் கொம்பும் முழங்கச் செறிந்த குறுங்காட்டைப் பரந்த எரிமூடக் கோபித்துக் கிளர்ந்து பாடிவீட்டினின்று மிக உயர்ந்த எயிலிடத்துப் பகைவர்தாழ எடுத்து மீளவிட்டான், மிக்க அழகினையுடையான். எ - று. (௩0)

கஉரு.—அடிப்பட விருத்தல்:—

பேணதார் மறங்கால
ஆணைகொண் டடிப்படவிருந் தன்று.

இ - ள். பகைவர்தாம் சினத்தை உமிழத் தன்ஆணையை ஏற்றுக் கொண்டு நாடு வழிப்பட நெடுங்காலம் இருந்த இருப்பிலே இருந்தது. எ - று.

வ - று. ஒன்றி யவர்நா டொருவழித்தாய்க் கூக்கேட்ப
†வென்றி விளையா விழுமதிலோர் - என்றும்
பருந்தார் செருமலையப் பாடி பெயரா
திருந்தா னிகன்மறவ ரேறு.

இ - ள். பொருந்திய பகைவர்தேசம் ஒருவழிப்பட்டு ஏவல்கேட்பத் தங்கள் வெற்றியைத் தங்கள்பக்கல் உண்டாக்கமாட்டாத சீரிய அரணிடத்தோர் எந்நாளும் பருந்துநிறையும் பூசலைச் செய்யாநிற்பப் பாசறையைவிட்டு நீங்காது அவ்விருப்பிலேயிருந்தான், மாறுபாட்டாற் சிறந்த வீரருக்கு இடியேறனையான். எ - று. (௩க)

*தழை - செங்கழுநீர்ப்பூ முதலியவற்றால் தொடுத்து இளையமகளிரணியும் உடைவிசேடம்; முருகு: 201 - 4; ஐங்குறு. 72; புறநா. 61: 1, 116: 1 - 2, 248: 1 - 2, 340: 1, 341: 2.
†நன். சூ. 451, மயிலை. மேற்.

௧௨௬.—தோகைநிலை :—

*எம்மதிலி னிகல்வேந்தரும்*
*அம்மதிலி னடியடைந்தன்று.*

இ - ள். எல்லா அரணிடத்துமுள்ள மாறுபாட்டு மன்னர் பலரும் அந்த எயிலிடத்தே அவன் பாதத்தைச் சேர்ந்தது. எ - று.

வ - று. *நாவல் பெயரிய ஞாலத் தடியடைந்*
*தேவ லெதிரா திகல்புரிந்த - காவலர்*
*வின்னின்ற தானை விறல்வெய்யோற் கம்மதிலின்*
*முன்னின் றவிந்தார் முரண்.*

இ - ள். சம்புத்தீவினுள் அவன் தாள்நிழலையடைந்து சொன்ன சொல்லை ஏற்றுக்கொள்ளாது மாறுபாட்டை மேற்கொண்ட மன்னர் சிலைவலிநின்ற சேனையாற் சிறந்த வெற்றியை வேண்டுவோர்க்கு அவன் சூழ்ந்த அரணின்முன்னே நின்று கெட்டார், மாறுபாடு. எ - று.

நாவல் பெயரியஞாலம் - நாவலின் பெயர்பெற்றபூமி; சம்புத்தீவு. (௫௨)

உழிஞைத்திணைப்பாட்டு ௧-ம் துறைப்பாட்டு ௩௧-ம் முடிந்தன.

ஆறவது உழிஞைப்படலம் முற்றிற்று.

---

ஏழாவது

# தும்பைப்படலம்.

(௭.—சூத்திரம்.)

*துன்னருங் கடும்போர்த் தும்பை தும்பை யரவம்*
*தன்னிக ரில்லாத் தானை மறமே*
*யானை மறத்தொடு குதிரை மறமே*
*தார்நிலை தேர்மறம் பாணது பாட்டே*
*இருவருந் தபுநிலை யெருமை மறமே*
*ஏம வெருமை நூழி லென்று*
*நூழி லாட்டே மூன்றேர்க் குரவை*
*பின்றேர்க் குரவை பேய்க்குர வையே*
*களிற்றுட னிலையே யொள்வா ளமலை*
*தானை நிலையே வெருவரு நிலையே*
*சிருங்கார நிலையே யுவகைக் கலுழ்ச்சி*
*தன்னை வேட்ட றொகைநிலை யுளப்பட*
*நன்பொரு டெரிந்தோர் நாலிரு மூன்றும்*
*வண்பூந் தும்பை வகையென மொழிப.*

என்-னின், தும்பைத்திணையும் துறையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். தும்பை, தும்பையரவம், தானைமறம், யானைமறம், குதிரைமறம், தார்நிலை, தேர்மறம், பாண்பாட்டு, இருவருந்தபுநிலை, எருமைமறம், ஏமவெருமை, நூழில், நூழிலாட்டு, முன்றேர்க்குரவை, பின்றேர்க்குரவை, பேய்க்குரவை, களிற்றுடனிலை, ஒள்வாளமலை, தானைநிலை, வெருவருநிலை, சிருங்காரநிலை, உவகைக்கலுழ்ச்சி, தன்னைவேட்டல், தொகைநிலையென இருபத்துநான்கும் தும்பைத்திணையும் துறையுமாம். எ - று.

கஉஎ.—தும்பை:—

செங்களத்து மறங்கருதிப்
பைந்தும்பை தலைமலைந்தன்று.

இ - ள். குருதியாற் சிவந்த களத்து மாறுபாட்டை நினைந்து பசுந்தும்பையாகிய *போர்ப்பூவை முடியிடத்துச் சூடியது. எ - று.

வ - று. கார்கருதி நின்றதிருங் கௌவை விழுப்பணையான்
சோர்குருதி சூழா நிலநனைப்பப் - போர்கருதித்
துப்புடைத் தும்பை மலைந்தான் றுகளறுசீர்
வெப்புடைத் தானையெம் வேந்து.

இ - ள். மேகத்தை ஒப்புக்குறித்து ஒழியாதுநின்று முழங்கும் ஆரவாரத்தாற் சிறந்த சீரிய வீரமுரசினையுடையான், ஒழுகுங்குருதி சூழ்ந்து பொருகளத்தை நனைப்பப் பூசலை நினைந்து வலியையுடைய தும்பைமாலையைச் சூடினன்; குற்றந்தீர்ந்த புகழினையும் வெம்மைமிக்க சேனையினையும் உடைய எம் மன்னன். எ - று. (க)

கஉஅ.—தும்பை அரவம்:—

பொன்புனைந்த கழலடியோன்
தன்படையைத் தலையளித்தன்று.

இ - ள். அழகணிந்த வீரக்கழற்காலினையுடையான் தனது சேனையைத் தலையளி பண்ணியது. எ - று.

வ - று. †வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையும்
கொல்களிறு மாவுங் கொடுத்தளித்தான் - பல்புரவி
நன்மணித் திண்டேர் நயவார் தலைபனிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு.

இ - ள். போர்வெல்லும் அடையாளமும் ‡பற்றும் சிறந்ததனமும் மருதநிலமும் கொல்லும் யானையும் குதிரையும்வழங்கி அருள்செய்தான்;

*போர்ப்பூ : பு - வே. 241; மதுரை. 596, ந. †குறள். 762, பரி மேல். வி. ‡பற்று - பலவூர்களையுடைய சிறுநாடு.

பல பரியினையும் நல்ல மணியிடைந்த திண்ணிய தேரினையுமுடைய பகைஞர் அஞ்சித் தலைநடுங்க, நவமணிஅழுத்தின ஆபரணத்தினையுடையான், சேனைக்கு. எ - று. (உ)

கஉகூ.—தானைமறம் :—

தாம்படைத் தலைக்கொள்ளாமை
ஓம்படுத்த வுயர்புகூறின்று.

இ - ள். பொர எதிர்ந்த இருவகைச்சேனை தாம் பொருதுமடியாமை பரிகரித்த ஆற்றலினது உயர்ச்சியைச் சொல்லியது. எ - று.

வ - று. கழுதார் பறந்தலைக் கண்ணுற்றுத் தம்முள்
இழுதார்வேற் றானை யிகலிற் - பழுதாம்
செயிர்காவல் பூண்டொழுகுஞ் செங்கோலார் செல்வம்
உயிர்காவ லென்னு முரை.

இ - ள். பேய்மிக்க போர்க்களத்தைக் கிட்டித் தம்மில் தாம் நெய்யணிந்த வேற்படை மாறுபடிற் குற்றமாம்; குற்றத்தை உலகிற் புகுதாமற் காத்து நடக்கும் நீதியையுடைய மன்னர்தம் செல்வமாவது பல உயிரையும் காத்தலென்றறிந்து சொல்லும் சொல். எ - று.

உரை பழுதாம். இகலின் இருவரரசர்சேனையும் தோலாதுமடியும். இனி ஒருவன்சேனை தம்முள் மாறுபடுதலென்றுமாம். (ங)

கஙo.—இதுவுமது :—

பூம்பொழிற் புறங்காவலனை
ஓம்படுத்தற்கு முரித்தெனமொழிப.

இ - ள். பொலிவுபெற்ற பூமிகாவலற்கு உறுதிகூறுதற்கும்பெறும் அதுவென்று சொல்லுவர். எ - று.

வ - று. வயிர்மேல் வளைஞரல வைவேலும் வாளும்
செயிர்மேற் கனல்விழிப்பச் சீறி - உயிர்மேற்
பலகழியு மேனும் பரிமான்றேர் மன்னர்க்
குலகழியு மோர்த்துச் செயின்.

இ - ள். கொம்போசையின்மேற்படச் சங்கு முழங்கக் கூர்த்த வேலும் வாளும் போரிடத்து நெருப்புப்பரப்ப வெகுண்டு உயிரிடத்துக் கொலைக்குற்றம் பலகழியுமாயினும் செலவையயர்ந்த குதிரையாற் பூட்டப்பட்ட தேர்வேந்தர்க்கு விசாரித்துச்செய்யின் பூமியழியும். எ - று.

படைபடும், கெடுமென்று ஓராது பூசல் செய்யவேண்டும். (ச)

கஙக.—இதுவுமது:—

வேற்றானை மறங்கூறி மாற்றா தழிபிரங்கினும்
ஆற்றி னுணரி னத்துறை யாகும்.

இ - ள். வேற்படையினது தறுகண்மையைச்சொல்லிப் பகைவருடைய கேட்டிற்கு நோவினும் முறைமையாக விசாரித்துரைப்பின் அதுவேயாம். எ - று.

வ - று. மின்னார் சினஞ்சொரிவேன் மீளிக் கடற்றானை
ஒன்னார் நடுங்க வுலாய்நிமிரின் - என்னாங்கொல்
ஆழித்தேர் வெல்புரவி யண்ணன் மதயானைப்
பாழித்தோண் மன்னர் படை.

இ - ள். ஒளிநிறைந்த செற்றம்பொழியும் வேலினையும் தலைமையினையுமுடைய கடல்போன்ற சேனை பகைவர் தலைபனிப்ப நிலைபெயர்ந்து நடப்பின் என்படுமோ! வட்டக் காலாற் சிறந்ததேரினையும் வெல்லுங் குதிரையினையும் தலைமைபெற்ற மதகளிற்றினையும் வலிய தோளினையுமுடைய பகைவர் சேனை. எ - று. (௫)

௧௩௨.—யானைமறம்:—

எழுமரவக் கடற்றானையான்
மழகளிற்றின் மறங்கிளந்தன்று.

இ - ள். மிகும் ஆரவாரத்தால் நிறைந்த கடல்போன்ற சேனையினையுடையான் இளங்களிற்றினது மறத்தைக் கூறியது. எ - று.

வ - று. அடக்கருந் தானை யலங்குதார் மன்னர்
விடக்கு முயிரு [1] மிசையக் - கடற்படையுள்
பேயு மெருவையுங் கூற்றுந்தன் பின்படரக்
காயுங் கழலான் களிறு.

இ - ள். விலக்குதற்கரிய சேனையினையும் விளங்கும் கோவை மாலையினையுமுடைய அரசர் தசையினையும் உயிரினையும் உண்ண வேண்டிக் கடல்போன்ற சேனையுட் பேயும் கழுகும் கூற்றும் தனது பின்செல்ல வெகுளும், வீரக்கழல் வேந்தன் யானை. எ - று.

பேயும் எருவையும் விடக்குண்ணப் பின்படரவென்க. (௬)

௧௩௩.—குதிரைமறம்:—

எறிபடையா னிகலமருள்
செறிபடைமான் றிறங்கிளந்தன்று.

இ - ள். எறியும் வேற்படையுடையான்றன் மாறுபாட்டினைச் செய்யும் போருட் செறிந்த கலையினையுடைய குதிரையின் திறப்பாட்டைச் சொல்லியது. எ - று.

வ - று. குந்தங் கொடுவில் குருதிவேல் கூடாதார்
வந்த வகையறியா வாளமருள் - வெந்திறல்

---

(பி - ம்.) 1 'உணிய.'

ஆர்கழன் மன்ன னலங்குளைமா வெஞ்சிலை
வார்கணையின் முந்தி வரும்.

இ - ள். பகைவர்தம் சவளப்படையும் கொடியவிற்படையும் உதிரத்தை அளைந்தவேற்படையும் வந்தபடி அறியாதவகை தலைமயங்கிய வாட்போருள் வெய்யவலியினையும் நிறைந்த வீரக்கழலினையுமுடைய மன்னன் விளங்கும் தலையாட்டத்தினையுடைய குதிரை, கொடியவில்லில் தொடுத்துவிட்ட நீண்ட அம்புபோல முற்பட்டு வரும். எ - று. (எ)

௧௩௪.—தார்நிலை:—

முன்னெழுதரு படைதாங்குவனென
மன்னவர்க்கு மறங்கிளந்தன்று.

இ - ள். தூசிப்படையைத் தடுப்பனென அரசற்கு ஒரு வீரன் தனது தறுகண்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. உறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய் - எறிசுடர்வேற்
றேங்குலாம் பூந்தெரியற் றேர்வேந்தே நின்னோடு
பாங்கலா மன்னர் படை.

இ - ள். மிக்க ஒளியினையுடையவாளுடனே யான் ஒருகால் தடுப்பிற் சிறிய விளக்கின் முன்னர்ப் பெரிய இருள்போல இரிந்தோடுங் காண்; எறியும் கதிர்வேலினையும் மதுமலர்ந்த பூமாலையினையுமுடைய தேர்மன்னனே, நின்னோடு உறவல்லாத வேந்தர்சேனை. எ - று. (அ)

௧௩௫.—இதுவுமது:—

ஒருகுடை மன்னனைப் பலகுடை நெருங்கச்
செருவிடைத் தமியன் றாங்கற்கு உரித்தே.

இ - ள். ஒருகுடைவேந்தனைக் குடைவேந்தர் பலர் அடையப் போரிடத்துத் தனிவீரன் தானே தடுத்தற்குரித்து அத்துறை. எ-று.

வ - று. காலான் மயங்கிக் கதிர்மறைத்த கார்முகில்போல்
வேலான்கை [1] வேல்பட வீழ்ந்தனவே - தோலா
இலைபுனை தண்டா ரிறைவன்மேல் வந்த
மலைபுரை யானை மறிந்து.

இ - ள். காற்றால் நிலைகுலைந்து ஆதித்தனை மறைத்த கருமுகில் போல, வேல்வீரன் கையகத்து வேல்படுதலால் வீழ்ந்தன; தோலாத இலையாற்றொடுத்த குளிர்ந்த மாலையினையுடைய அரசன்மேற் சென்ற [2] மலையையொத்த ஆனை கீழ்மேலாய். எ - று.

வந்தவென்பது இடவழுவமைதி.

கார்முகில்போற்சென்ற யானையென்க. (௯)

(பி - ம்.) 1 'வேல்விட.' 2 'மலையையொத்த அயிராபதம்.'

கசுசு.—தேர்மறம்:—

முறிமலர்த்தார் வயவேந்தன்
செறிமணித்தேர்ச் சிறப்புரைத்தன்று.

இ - ள். தளிர் விரவின பூமாலையினையுடைய வலிய மன்னன் மிடைந்த மணித்தேரின் நன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. செருமலி வெங்களத்துச் செங்குருதி வெள்ளம்
அருமுரணுழி [1]தொடர - வருமரோ
கட்டார் கமழ்தெரியற் காவலன் காமர்தேர்
ஒட்டார் புறத்தின்மே லூர்ந்து.

இ - ள். போர்மிகும் வெய்ய பறந்தலையிடத்துச் சிவந்த உதிர வெள்ளம் கிட்டுதற்கரிய மாறுபாட்டினையுடைய தேர்க்காலைத்தொடர வாராநிற்கும்; சுற்றுதல் நிறைந்த நாறும்மாலையினையுடைய அரசன்றன் அழகிய தேர், பகைவர் பிணப்புறத்தின்மேல் நடந்து. எ - று.

அரோ : அசை. (கo)

கசுஎ.—பாண்பாட்டு:—

வெண்கோட்ட களிறெறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்
கைவல்யாழ்ப் பாணர் கடனிறுத் தன்று.

இ - ள். விளர்த்த கொம்பினையுடைய யானையை எறிந்து பறந்தலையிற் பட்டார்க்கு யாழ்வாசிக்கும் கைத்தொழிலில்வல்ல பாணர் உரிமைசெய்தது. எ - று.

வ - று. தளரிய லாய்புதல்வர் தாமுணரா மைக்
களரிக் கனன்முழங்க மூட்டி - *விளரிப்பண்
கண்ணினார் பாணர் களிறெறிந்து வீழ்ந்தார்க்கு
விண்ணினார் செய்தார் விருந்து.

இ - ள். தளர்ந்த இயல்பினையுடைய தம் மனைவி தாய் சிறுவர் இவர் தாம் போர்க்களத்துப் பட்டவாறு அறியாமையாற் பறந்தலையிலே நெருப்பை முழங்கமூட்டிச் சாப்பண்ணைப் பாடக்கருதினார் பாணர், யானையை எறிந்து பட்ட வீரர்க்கு; துறக்கத்துள்ளார் விருந்திடுதல் செய்தார். எ - று. (கக)

கசுஅ.—இருவருந் தபுநிலை:—

பொருபடை களத்தவிய
இருவேந்தரு மிகலவிந்தன்று.

இ - ள். போர்செய்யும் சேனையிரண்டும் களத்திற்பட இருவர் அரசரும் மாறுபாட்டாற் பட்டது. எ - று.

---

* இரங்கற்பண் ; " நுளையர் விளரி நொடிதரும் தீம்பாலை " சிலப். [7 : 48.

(பி - ம்.) [1] 'தடர.'

வ - று. *காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி
வேந்த ரிருவரும் விண்படர - ஏந்து
பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி
இருபடையு நீங்கா விகல்.

இ - ள். கனன்று கடியயானை கண்ணழலக் கண்ணுற்று அரசரிருவரும் விண்ணைச்சேர எடுக்கும் போர்செய்யும்படை ஒளிவிட வென்னிடாவாகி வெகுண்டு இரண்டுசேனையும் ஒழியாவாயின, மாறுபாட்டை. எ - று.

அரசும் படையும் மடிந்தவாம். (கஉ)

கஙக.—எருமை மறம் :—

†வெயர்பொடிப்பச் சினங்கடைஇப்
பெயர்படைக்குப் பின்னின்றன்று.

இ - ள். வேரரும்பச் சினத்தைக் கடாவி முதுகிட்ட தன் சேனைக்குப் பின்னே நின்றது. எ - று.

வ - று. கடுங்கண் மறவன் கனல்விழியாச் சீறி
நெடுங்கைப் பிணத்திடை நின்றான் - நடுங்கமருள்
ஆள்வெள்ளம் போகவும் போகான்கை வேலூன்றி
வாள்வெள்ளந் தன்மேல் வர.

இ - ள். தறுகண்வீரன் நெருப்புப்போல விழித்துக் கோபித்து நெடிய கையையுடைய யானைப்பிணத்தின் நடுவே நின்றான்; கண்டார் நடுங்கும் போரிடத்துக் காலாள்வெள்ளம் இரிந்தோடவும் போகானாகித் தன் கைவேலை ஊன்றி, பகைவர் வாட்படைவெள்ளம் தன்மேலே அடர்ந்துவர. எ - று. (கங)

கச 0.—ஏம வெருமை:—

குடைமயங்கிய வாள்மருட்
படைமயங்கப் பாழிகொண்டன்று.

இ - ள். மன்னர்குடைகள் தம்மில் தலைமயங்கிய வாட்போருள் தான் எறிந்தவேல் பொருகளிற்றின் மத்தகத்துக் குளிப்பத் தோள் வலியால் வென்றிகொண்டது. எ - று.

வ - று. மருப்புத்தோ ளாக மதர்விடையிற் சீறிச்
செருப்புகன்று செங்கண் மறவன் — நெருப்பிமையாக்
‡ கைக்கொண்ட வெஃகங் கடுங்களிற்றின் மேற்போக்கி
மெய்க்கொண்டான் பின்னரு மீட்டு.

இ - ள். தோளே கொம்பாக மதர்த்த எருமையேறுபோல வெகுண்டு போரைவிரும்பிச் சிவந்த கண்ணிணையுடைய மறவன், பொறி

* தொல். புறத். சூ. 14, இளம். மேற். † "மெய்யது வியதே" புறநா. 100 : 2. ‡ புறநா. 274 : 3 ; குறள், 774.

பிறப்ப விழித்துக் கையிலேந்திய வேலைக் கடிய யானைமேல்விட்டு முன்பு வென்றி கொண்டவாறுபோல நிராயுதனாகி நின்று மெய்வலியாற் பின்னரும் வென்றிகொண்டான்; மேல்வரும் படையை விலக்கி. எ-று.

* "[1] படையறுத்துப் பாழிகொள்ளு மேமம்" என்றாராசிரியர். (கச)

கசக.—நூழில்:—

கழல்வேந்தர் படைவிலங்கி
அழல்வேறிரித் தாட்டமர்ந்தன்று.

இ - ள். வீரக்கழன்மன்னர் சேனையைக்கொன்று அழலும்வேலைத் திரித்து ஆடுதலை விரும்பியது. எ - று.

வ - று. ஆட லமர்ந்தா னமர்வெய்யோன் வீழ்குடர்
சூடன் [2] மலைந்த சுழல்கட்பேய் - மீடல்
மறந்தவேன் ஞாட்பின் மலைந்தவர் †மார்பம்
திறந்தவேல் கையிற் றிரித்து.

இ - ள். ஆடுதலை மேற்கொண்டான் போரை விரும்பினேன்; வீழ்ந்த குடரைச் சூடுதலை மேற்கொண்டன சுழலும் விழியினையுடைய பேய், மீளுத லொழிந்த வேற்போருள் மாறுபட்டவர் மார்பத்தை உருவின வேலைக் கையிலே திரித்து. எ - று. (கரு)

கசஉ.—நூழிலாட்டு:—

களங்கழுமிய படையிரிய
[3] உளங்கிழித்தவேல் பறித்தோச்சின்று.

இ - ள். பொருகளத்தைப் பொருந்திய சேனைகெடத் தன் மார்பத்தைத் திறந்த வேலைப் பறித்து எறிந்தது. எ - று.

வ - று. மொய்யகத்து மன்னர் முரணினி யென்னாங்கொல்
கையகத்துக் கொண்டான் கழல்விடலை - வெய்ய
விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த
படுசுட ரெஃகம் பறித்து.

இ - ள். போரிடத்து வேந்தர் மாறுபாடு இனி என்னாமோ! கையிடத்துப்பற்றினான் கழல்வீரன்; வெய்தான மிகுங்கனலைச் சிதறி மணநாறு மார்பத்தைப் போழ்ந்த ஒளிதோன்றும் வேலைப் பறித்து. எ - று. (கசு)

கசங.—முன்றேர்க் குரவை:—

எழுவுறழ் திணிதோள் வேந்தன் வெஃகேற்
முழுவலி வயவர் முன்னா டின்று.

---

* தொல். புறத். சூ. 17. † குறள், 774.

(பி - ம்.) [1] 'படை மறுத்து.' [2] 'மலிந்த.' [3] 'உளங்கழிந்த.'

இ - ள். கணையத்தையொத்த திண்ணியதோளினையுடைய மன்னனுடைய வெல்லுந் தேர்முன் நிறைந்த வலியாற்சிறந்த வீரர் ஆடியது. எ - று.

வ - று. ஆனா வயவர்முன் னாட வமர்க்களத்து
வானார்மின் னாகி வழிநுடங்கும் - நோனாக்
கழுமணிப் பைம்பூட் [1] கழல்வேந்த னூரும்
குழூமணித் திண்டேர்க் கொடி.

இ - ள். அமையாதவீரர்முன்னேயாடப் போர்க்களத்து மேகத்து நிறைந்த மின்போன்று முறையேயாடும்; பகைபொறாத கழுவுமணியான் அமைந்த பசும்பூணினையுடைய கழல்வேந்தன் நடத்தும் திரண்ட மணியினையுடைய திண்ணிய தேர்மேற் கொடி. எ - று. (கஎ)

கசச.—பின்றேர்க் குரவை :—

கருங்கழன் மறவரொடு வெள்வளை விறலியர்
பெருந்தகை தேரின் பின்னா டின்று.

இ - ள். [2] வலிய கழல்வீரரொடு விளர்த்த வளையினையுடைய பாணிச்சியர், பெரிய மேம்பாட்டினையுடையான்றனது தேரின்பின் ஆடியது. எ - று.

வ - று. கிளையாய்ந்து பண்ணிய கேள்வியாழ்ப் பாணும்
வளையா வயவரும் பின்னாக் - கொளையாய்ந்
தசைவிளங்கும் பாடலொ டாட வருமே
திசைவிளங்குந் தானையான் றேர்.

இ - ள். கிளைநரம்பை ஆராய்ந்தமைத்த சுருதியான்மிக்க யாழைவல்ல பாணிளையும் தோலாவீரரும் பின்பாக இசையை ஆராய்ந்து தூக்குதல் விளங்கும் பாடுதலுடனே கூத்தாட வரும்; திக்கிலே விளங்கும் சேனையை யுடையான்றனது தேர். எ - று.

பாண் என்பது சாதிப்பெயர். (கஅ)

கசரு.—பேய்க் குரவை :—

மன்னா னூரு மறமிகு மணித்தேர்ப்
பின்னு முன்னும் பேயா டின்று.

இ - ள். அரசன் செலுத்தும் கொடுமைமிக்க மணியையுடைய தேரின் பின்பும் முன்பும் பேய் ஆடியது. எ - று.

வ - று. முன்னரும் பின்னரும் மூரிக் கடற்றானை
மன்ன னெடுந்தேர் மறனேத்தி - யொன்னார்
நிணங்கொள்பேழ் வாய *நிழல்போ னுடங்கிக்
கணங்கொள்பே யாடுங் களித்து.

---

* சீவக. 309.

(பி - ம்.) 1 'கழல்வெய்யோன்.' 2 'பெரிய.'

இ - ள். முன்னும் பின்னும், பெரிய கடல்போன்ற சேனையை யுடைய அரசன் நெடியதேரின் மாறுபாட்டை வாழ்த்திப் பகைவரது நிணத்தைக்கொண்ட பெரிய வாயினையுடைய திரண்ட பேய் சாயை போல அசைந்து மகிழ்ந்து நடமாடும். எ - று. (கக)

கசசு.—களிற்றுடனிலை:—

ஒளிற்றெஃகம் படவீழ்ந்த
களிற்றின்கீழ்க் கண்படுத்தன்று.

இ - ள். ஒளியையுடைய வேல்படுதலான் வீழ்ந்த யானையின்கீழ்ப் பட்டது. எ - று.

ஒளிற்றெஃகம் : விகாரம்.

வ - று. *இறுவரை வீழ வியக்கற் றவிந்த
தறுகட் டகையரிமாப் போன்றான் - சிறுகட்
பெருங்கைக் களிறெறிந்து பின்னதன்கீழ்ப் பட்ட
கருங்கழற் செவ்வே லவன்.

இ - ள். பெரியமலை முறிந்து வீழப் போக்கற்றுப் பட்ட கொடுமைத் தொழின் மேம்பாட்டினையுடைய சிங்கத்தை ஒத்தான்; சிறிய கண்ணினையும் பெரியகையினையுமுடைய ஆனையையெறிந்து பின்னர் அதன்கீழ்ப் பட்ட வலிய வீரக் கழலினையும் சிவந்த வேலினையும் உடையவன். எ - று. (உ0)

கசஎ.—ஒள்†வாளமலை :—

வலிகெழுதோள் வாள்வயவர்
ஒலிகழலா னுடனாடின்று.

இ - ள். உரம்பொருந்திய தோளினையுடைய வாள்வீரர் ஆர்க்கும் வீரக் கழலினையுடையானுடன் ஆடியது. எ - று.

வ - று. வாளை பிறழுங் கயங்கடுப்ப வந்தடையார்
ஆளமர் வென்றி யடுகளத்துத் - தோள்பெயராக்
காய்ந்தடு துப்பிற் கழன்மறவ ராடினார்
வேந்தொடு வெள்வாள் விதிர்த்து.

இ - ள். வாளைமீன் மிளிரும் மடுவினையொப்ப, வந்து பொருந்தாதார் வீரர் மேவும் வெற்றியினையுடைய கொலைக்களத்துத் தோளைப் பெயர்த்து வெகுண்டு கொல்லும் வலியினையுடைய கழல்வீரர் ஆடினார், அரசனுடனே விளர்த்த வாளினை அசைத்து. எ - று. (உக)

கசஅ.—தானைநிலை :—

இருபடையு மறம்பழிச்சப்
பொருகளத்துப் பொலிவெய்தின்று.

* கம்ப. கடறுவு. 5; 'இறுவரை': சீவக. 1833. † சீவக. 783.

இ - ள். இரண்டுசேனையும் மறத்தை ஏத்தப் போர்க்களத்துச் சிறப்பெய்தியது. எ - று.

வ - று. நேரார் படையி னிலைமை நெடுந்தகை
ஓரா னுறைகழியா னொள்வாளும் - தேரார்க்கும்
வெம்பரிமா வூர்ந்தார்க்கும் வெல்களிற்றின் மேலார்க்கும்
கம்பமா நின்றான் களத்து.

இ - ள். பகைவர்சேனையின் உரத்தைப் பெரிய மேம்பாட்டினை யுடையவன் விசாரியான், வாளும் உறையினின்றும் வாங்கான், தேர் வீரர்க்கும் வெய்யசெலவினையுடைய குதிரையைச் செலுத்தினார்க்கும் வெல்லும் யானையின் மேலார்க்கும் நிலைத்தூண்போலக் களத்தின்கண் நின்றான். எ - று.

கம்பம் - நடுக்கமுமாம். (உஉ)

கசகூ.—வெருவரு நிலை :—

விலங்கமருள் வியலகலம் வில்லுதைத்த கணைகிழிப்ப
நிலந்தீண்டா வகைப்பொலிந்த நெடுந்தகை நிலையுரைத்தன்று.

இ - ள். பகையைத்தடுக்கும் பூசலிடத்து அகன்ற மார்பகத்தை வில் உமிழ்ந்த அம்புபிளப்ப நிலத்தைத் தீண்டாதபடி சிறந்த பெரிய மேம்பாட்டினை உடையான்றனது நிலைமையைச் சொல்லியது. எ - று.

வ - று. வெங்கண் முரசதிரும் வேலமருள் வில்லுதைப்ப
எங்கு மருமத் [1] திடைக்குளிப்பச் - செங்கட்
புலவா னெடுந்தகை பூம்பொழி லாகம்
கலவாமற் காத்த கணை.

இ - ள். வெவ்விய கண்ணினையுடைய முரசு முழங்கும் வேற் போருள் விற்செலுத்த உயிர்நிலையான எவ்விடத்தும் தைப்பச் சிவந்த கண்ணினையும் புலால் நாறும் வாளினையு முடையனாகிப் பெரிய தகைமையாற் சிறந்தவன் பொலிவுபெற்ற பார்மடந்தை மார்பினைக் கூடாத படி, ஏற்றுக்கொண்டன அம்பு. எ - று.

வில்லுதைப்பத் தைத்துருவின அம்பு காத்தவென்க. (உ௩)

கரு௦.—சிருங்கார நிலை :—

பகைபுகழக் கிடந்தானை
முகைமுறுவலார் முயக்கமர்ந்தன்று.

இ - ள். பகைவர் சீர்த்திபண்ணக் கிடந்தானை [2] முல்லைமொட் டுப்போன்ற பல்லினார் தழுவுதலை மேவியது. எ - று.

வ - று. எங்கணவ னெங்கணவ னென்பா ரிகல்வாடத்
தங்கணவன் றார்தம் முலைமுகப்ப - வெங்கணைசேர்

(பி - ம்.) [1] 'இடைகுளிப்ப.' [2] 'முல்லையரும்பன்ன.'

புண்ணுடை மார்பம் பொருகளத்துப் புல்லினர்
நுண்ணிடைப் பேரல்கு லார்.

இ - ள். எம்முடைய கணவன் எம்முடைய கணவனென்று சொல்லும் பரத்தையர் மாறுபாடுகெடத் தமது கொழுநன்மாலை தம்முலை முகந்துகொள்ள வெய்ய அம்புபட்ட புண்ணினையுடைய மார்பத்தைப் போர்க்களத்துத் தழுவினர் ; நுண்ணிய இடையினையும் பெரிய அல்குலினையுமுடைய குலமகளிர். எ - று.

எங்கணவ னெங்கணவ னென்பார் தெய்வமகளிரென்றுமாம். (உச)

கடுக.—உவகைக் கலுழ்ச்சி :—

வாள்வாய்த்த வடுவாழ்யாக்கைக்
கேள்கண்டு கலுழ்ந்துவந்தன்று.

இ - ள். வாளால் வாய்ப்புப்பெற்ற விழுப்புண்மிக்க உடம்புடைய கணவனைக்கண்டு மனைவி மகிழ்ந்து கண்ணீர் வீழ்த்தது. எ - று.

வ - று. வெந்தொழிற் கூற்றமு நாணின்று வெங்களத்து
வந்த மறவர்கை வாடுமிப்பப் - பைந்தொடி
ஆடரிமா வன்னன் கிடப்ப வகத்துவகை
ஓடரிக்க [1] ணீர்பா யுக.

இ - ள். வெய்ய செய்தியினையுடைய கூற்றமும் நம்மிடத்தும் இவ்வாறு மறமில்லையென்று மாணித்தது ; வெவ்விய போர்க்களத்துப் போர்செய்யவந்த தறுகண்ணர் கையிடத்து வாள் துணிசெய்யப் பச்சை வளையினையுடைய மனைவி தன் வென்றிச்சிங்கத்தையனைய கொழுநன் கிடப்ப அவன் வெற்றிக் கிடக்கைகண்ட உள்ளத்து மகிழ்ச்சியாற் செவ்வரி கருவரிபரந்த கண்ணகலமெல்லாம் நீர்பரந்து வீழ. எ - று.

உகக் கூற்றமு நாணின்றென்க. (உரு)

கடுஉ.—*தன்னை வேட்டல் :—

தம்மிறைவன் விசும்படைந்தென
வெம்முரணு னுயிர்வேட்டன்று.

இ - ள். தம் வேந்தன் விசும்பைச் சேர்ந்தானாக, வெய்ய மாறுபாட்டை யுடையானொருவீரன் உயிரை ஆகுதிபண்ணியது. எ - று.

வ - று. †வான மிறைவன் படர்ந்தென வாடுடுப்பா
மானமே நெய்யா மறம்விறகாத் - தேனிமிரும்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமர்
ஒள்ளழலுள் வேட்டா னுயிர்.

* இத்துறை தன்னுறுதொழிலின் பாற்படும். † தொல். புறத். சூ. 14, இளம். மேற்.

(பி - ம்.) [1] 'நீராயுக.'

இ - ள். விண்ணிடத்து வேந்தன் சென்றானாக, வாளே சுருவமாக அபிமானம் ஓமநெய்யாக மறமே சமிதையாக வண்டுபரக்கும் மது மலர்ந்த மாலையினையும் வீரக்கழலினையுமுடைய வெவ்வியோன் வாட் போராகிய ஒள்ளிய தீயுள் உயிரை ஆகுதிபண்ணினான். எ - று. (உசு)

கருரு.—இதுவுமது :—

காய்கதிர் நெடுவேற் கணவனைக் காணிய
ஆயிழை சேறலு மத்துறை யாகும்.

இ - ள். பகையைச் சீக்கும் ஒளிநெடுவேலினையுடைய கொழு நனைக்காணவேண்டி அவன்பட்ட போர்க்களத்துள் அழகிய ஆபரணத் தையுடைய மனையாள் போயினதும் அத்துறையேயாம். எ - று.

வ - று. கற்பின் விழுமிய தில்லைக் [1] கடையிறந்
திற்பிறப்பு நாணு மிடையொழிய - நற்போர்
அணங்கிய வெங்களத் தாருயிரைக் காண்பான்
வணங்கிடை தானே வரும்.

இ - ள். கற்புடைமையிற் சீரியதொன்றில்லை ; வாயிற்கடைநீங்கிக் குடிப்பிறப்பும் நாணமும் தன்னிடத்தைவிட்டு நீங்க நல்ல பூசலிற்பட்ட சேனைப்பரப்பிற்கிடந்த தன்னுயிரனையவனைக் காணவேண்டி நுடங்கும் இடையாள் தமியளாய் வரும். எ - று.

ஒழியத் தானே வருமென்க. (உஎ)

கருசு.—தொகைநிலை :—

அழிவின்று புகழ்நிறீஇ
ஒழிவின்று களத்தொழிந்தன்று.

இ - ள். கேடின்றியே நிறையக் கீர்த்தியை நிறுத்தி எல்லாரும் போர்க்களத்திலே மடிந்தது. எ - று.

வ - று. மண்டமர்த் திண்டோள் மறங்கடைஇ மண்புலம்பக்
கண்டிரள்வேன் மன்னர் களம்பட்டார் - பெண்டிர்
கடிதெழு செந்தீக் கழுமினா ரின்னும்
கொடிதேகா ணார்ந்தின்று கூற்று.

இ - ள். உறுபோரிடத்துத் திண்ணியதோளால் மாறுபாட்டைக் கடாவிப் பூமி தனிமைப்பட்டுப்புலம்பக் காம்பு கண்திரண்ட வேலினை யுடைய வேந்தரிருவரும் போர்க்களத்துப் பட்டார் ; அவர்தேவிய ரெல்லாம் கடிதாயெழும் செந்நெருப்பிற் கழுமினார் ; இன்னமும் கொடுமையுடைத்தேகாண், வயிறுநிறைந்தின்று கூற்றம். எ - று. (உஅ)

திணைப்பாட்டு க-ம் துறைப்பாட்டு உஎ-ம் முடிந்தன.

ஏழாவது தும்பைப் படலம் முற்றிற்று.

---

(பி - ம்.) [1] 'கடைதுறந்து.'

எட்டாவது

# வாகைப்படலம்.

(அ.—சூத்திரம்.)

சீர்சால் வாகை வாகை யரவம்
அரச வாகை முரச வாகை
மறக்கள வழியொடு களவேள் வியே
முன்றேர்க் குரவை பின்றேர்க் குரவை
பார்ப்பன வாகை வாணிக வாகை
வேளாண் வாகை பொருந வாகை
அறிவன் வாகை தாபத வாகை
கூதிர்ப் பாசறை வாடைப் பாசறை
அரச முல்லை பார்ப்பன முல்லை
அவைய முல்லை கணிவன் முல்லை
மூதின் முல்லை யேறாண் முல்லை
வல்லாண் முல்லை காவன் முல்லை
பேராண் முல்லை மறமுல் லையே
குடைமுல் லையொடு கண்படை நிலையே
அவிப்பலி யென்றா சால்பு முல்லை
கிணைநிலை யேனைப் பொருளொடு புகறல்
அருளொடு நீங்க லுளப்படத் தொகைஇ
மூன்று [1] தலையிட்ட மூவீ ரைந்தும்
வான்றோய் வாகைத் திணையது வகையே.

என்-னின், வாகைத்திணையும் துறையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். வாகை, வாகையரவம், அரசவாகை, முரசவாகை, மறக்களவழி, களவேள்வி, முன்றேர்க்குரவை, பின்றேர்க்குரவை, பார்ப்பனவாகை, வாணிகவாகை, வேளாண்வாகை, பொருநவாகை, அறிவன்வாகை, தாபதவாகை, கூதிர்ப்பாசறை, வாடைப்பாசறை, அரசமுல்லை, பார்ப்பனமுல்லை, அவையமுல்லை, கணிவன்முல்லை, மூதின்முல்லை, எறாண்முல்லை, வல்லாண்முல்லை, காவன்முல்லை, பேராண்முல்லை, மறமுல்லை, குடைமுல்லை, கண்படைநிலை, அவிப்பலி, சால்புமுல்லை, கிணைநிலை, பொருளொடு புகறல், அருளொடு நீங்கல் என்று சொல்லப்பட்ட முப்பத்துமூன்றும் வாகைத்திணையும் துறையுமாம். எ - று.

### கருரு.—வாகை:—

இலைபுனை வாகை சூடி யிகன்மலைந்
தலைகடற் றானை யரசட் டார்த்தன்று.

(பி - ம்.) 1 'தலைப்பட்ட.'

இ - ள். பச்சிலை விரவித் தொடுத்த வாகைப்பூவைப் புனைந்து மாறுபாட்டை மேற்கொண்டு அலையுங் கடல்போன்ற சேனையினையுடைய வேந்தைக் கொன்று ஆரவாரித்தது. எ - று.

வ - று. சூடினான் வாகைச் சுடர்த்தெரியல் சூடுதலும்
பாடினார் வெல்புகழைப் பல்புலவர் - கூடார்
உடல்வே லழுவத் தொளிதிகழும் பைம்பூண்
அடல்வேந்த னட்டார்த் தரசு.

இ - ள். ஒளியாற் சிறந்த வாகைமாலையை மலைந்தான்; மலைந்தானைத் துதித்தார், பகைவெல்லும் கீர்த்தியை அறிவினையுடையோர் பலரும்; சத்துருக்களது மாறுபாட்டினையுடைய அயிற்படைநடுவே ஒளிதிகழும் பசும்பொன்னாற் செய்யப்பட்ட ஆபரணத்தினையும் மாறுபாட்டினையுமுடைய வேந்தன் அரசுகொன்று ஆரவாரித்து. எ - று.

ஆர்த்துச் சூடினானென்க. (க)

கருசு.—வாகை அரவம் :—

வெண்கண்ணியுங் கருங்கழலும்
செங்கச்சுந் தகைபுனைந்தன்று.

இ - ள். வெள்ளைமாலையினையும் வலிய வீரக்கழலினையும் சிவந்த கச்சினையும் அழகிதாக அணிந்தது. எ - று.

வெண்கண்ணி - கொத்தான்வாகை.

வ - று. அனைய வமரு ளயில்போழ் *விழுப்புண்
இனைய வினிக்கவலை யில்லை - புனைக
அழலோ டிமைக்கு மணங்குடைவாண் மைந்தர்
கழலோடு [1] பூங்கண்ணி கச்சு.

இ - ள். அத்தன்மையவாகிய பூசலிலே வேல்பிளந்த சீரிய புண் இத்தன்மையவாயின; மேல் ஓர் துயரம் இல்லை; அணிக, நெருப்போடிலங்கும் பகைவர்க்கு வருத்தஞ்செய்தலையுடைய வாண்மள்ளர், வீரக்கழலினையும் பொலிந்த மாலையினையும் கச்சினையும். எ - று. (உ)

கருஎ.—அரச வாகை :—

பகலன்ன வாய்மொழி
இகல்வேந்த னியல்புரைத்தன்று.

இ - ள். † நுகத்திற் பகலாணிபோன்ற நடுநிலைச்சொல்லினையுடைய மாறுபாட்டாற் சிறந்த மன்னனது தன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. காவ லமைந்தான் கடலுலகங் காவலால்
ஓவ லறியா துயிர்க்குவகை - மேவருஞ்சீர்

---

* குறள், 776. † பட். 206; பழ. 95; தஞ்சை. 48.

(பி - ம்.) 1 'பூங்கண்ணிக்கச்சு.'

ஐந்தொழி லான்மறை முத்தீ யிருபிறப்பு
வெந்திறற் றண்ணளியெம் வேந்து.

இ - ள். காவற்றொழிற்குச் சமைந்தான்; கடல்சூழ்ந்த பூமியினை இவன் காத்தலாலே ஒழிதலறியாது பல்லுயிர்க்கும் மகிழ்ச்சி; பொருந்துதல் வரும் நன்மையினையுடைய ஐந்து தொழிலினையும் நான்கு வேதத்தினையும் மூன்று தீயினையும் [1] பூணூலிடுவதற்கு முன்னும் பின்னுமாகிய இருபிறப்பினையும் [2] பகையிடத்து வெவ்விய வினையினையும் குளிர்ந்த அருளினையுமுடைய எம்முடைய வேந்தன். எ - று.

ஐந்துதொழில் - ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல். (கூ)

கருஎ.—முரச வாகை :—

ஒலிகழலா னகனகருட்
பலிபெறுமுரசின் பண்புரைத்தன்று.

இ - ள். ஆரவாரிக்கும் வீரக்கழலினை யுடையானது பரந்த மாளிகையிடத்துப் பலியைப்பெறும் முரசினுடைய தன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. மதியோ் நெடுங்குடை மன்னர் பணிந்து
*புதிய புகழ்மாலை வேய - நிதியம்
வழங்குந் தடக்கையான் வான்றோய் நகருள்
முழங்கு மதிரு முரசு.

இ - ள். நிறைந்தமதியையொக்கும் உயர்ந்த கொற்றக்குடையினையுடைய அரசர் தாழ்ந்து புதிதான கீர்த்தித் தெரியலைச் சூட்டப் பொருளைப் பலர்க்குங் கொடுக்கும் பெரிய [3] கையினையுடைய அரசனது விண்ணைக் கிட்ட உயர்ந்த மாளிகையிடத்து இப்பொழுது ஆர்ப்பரவம் பண்ணுகின்றது, முன்பு பகையுள்ள காலத்து இடிக்கும் முரசு. எ-று. (ய)

கருஅ.—மறக்களவழி :—

முழவுறழ் திணிதோளானை
உழவனாக வுரைமலிந்தன்று.

இ - ள். முழவுபோலத் திரண்ட திண்ணிய புயத்தினையுடையானை உழும் வேளாளனாக மிகுத்துச் சொல்லியது. எ - று.

வ - று. †அஞ்சுவரு தானை யமரென்னு நீள்வயலுள்
வெஞ்சினம் வித்திப் புகழ்விளைக்கும் - செஞ்சுடர்வேற்
பைங்கட் பணைத்தாட் பகட்டுழவ னல்கலான்
எங்கட் கடையா விடர்.

இ - ள். கண்டார்வெருவும் சேனையாகிய வரம்பையுடைய போர்க்களமென்னும் நீண்ட செறுவினுள் வெய்ய செற்றமென்னும் வித்தை

* ''மூவாவிழுப்புகழ்'' பு - வெ. 222. †இந்த வெண்பா ஏகதேச உருவகத்திற்கு மேற்கோள்; மாறன். ப. 178.

(பி . ம்.) 1 'பூணநூல்.' 2 'பகைவரிடத்து.' 3 'கையினையுடையானது.'

விதைத்துக் கீர்த்தியை விளக்கும் சிவந்த ஒளிவேலாகிய கோலினை யுடையபச்சென்ற கண்ணினானும் பெருத்த தாளினானுஞ் சிறந்த யானை யாகிய ஏருழவன் அளித்தலால் எம்போல்வார்க்கு வறுமையடையா. எ - று.

இது 1 மாட்டேறில்லா உருவகம். பைங்கண்: பண்பு. (ரு)

கசுo.—களவேள்வி :—

அடுதிற லணங்கார
விடுதிறலான் களம்வேட்டன்று.

இ - ள். கொல்லும் வலியினையுடைய பேய் வயிறார உண்ணப் பரந்தவலியினையுடையான் களவேள்வி வேட்டது. எ - று.

வ - று. பிடித்தாடி யன்ன பிறழ்பற்பே யாரக்
கொடித்தானை மன்னன் கொடுத்தான் - *முடித்தலைத்
தோளொடு வீழ்ந்த †தொடிக்கை துடுப்பாக
மூளையஞ் சோற்றை முகந்து.

இ - ள். பலுவையொத்த பிறழ்ந்த எயிற்றினையுடைய பேயுண்ணக் கொடியினையுடைய சேனைமன்னவன் வழங்கினான்; மகுடத்தலை யாகிய மிடாவில் தோளுடனே வெட்டுண்டு வீழ்ந்த தோள்வளையாற் சிறந்த கையே துடுப்பாக மூளையாகிய அழகிய சோற்றை முகந்து. எ - று. (சு)

கசுக.—முன்றேர்க் குரவை :—

வென்றேந்திய விறற்படையோன்
முன்றோர்க்க ணணங்காடின்று.

இ - ள். வென்றெடுத்த வெற்றியான் மிக்க ஆயுதத்தையுடையான் தேரின்முன் பேயாடியது. எ - று.

வ - று. உலவா வளஞ்செய்தா னூழிவாழ் கென்று
புலவாய புன்றலைப்பே யாடும் - கலவா
அரசதிர நூறி யடுகளம் வேட்டான்
முரசதிர வென்றதேர் முன்.

இ - ள். கெடாத நன்மையினைச் செய்தவன் நெடுங்காலம் வாழ்வானாகவெனச் சொல்லிப் புலால்நாறும் வாயினையும் புற்கென்ற தலையினையுமுடையபேய் கூத்தாடும்; பொருந்தாதமன்னர் நடுங்கவெட்டிக் களவேள்வி வேட்டான் முரசுமுழங்க வென்ற தேரின்முன்பு. எ - று. முன் பேயாடும். (எ)

கசுஉ.—பின்றேர்க் குரவை :—

பெய்கழலான் றேரின்பின்
மொய்வளைவிறலியர் வயவரொடாடின்று.

---

* சிலப். 26 : 242 - 3. † புறநா. 26 : 10 ; மதுரை. 34 - 5.
(பி - ம்.) 1 'மாட்டேற்றில்லா', 'மாட்டேறேலா.'

இ - ள். இட்ட வீரக்கழலினையுடையான் தேரின்பின் செறிந்த தொடியினையுடைய பாணிச்சியர் வீரரோடு கூத்தாடியது. எ - று.

வ - று. * [1]வஞ்சமில் கோலானை வாழ்த்தி வயவரும்
அஞ்சொல் விறலியரு மாடுபவே - [2]வெஞ்சமரில்
குன்றோர் மழகளிறுங் கூந்தற் பிடியும்போற்
பின்றேர்க் குரவை பிணைந்து.

இ - ள். பொய்யாத செங்கோலினையுடைய அரசனைத் துதித்து வெற்றியினையுடைய வீரரும் அழகிய மொழியினையுடைய பாணிச்சியரும் கூத்தாடா நின்றார் வெவ்விய பூசலிடத்து ; மலையையொக்கும் இளைய யானையினையும் கூந்தற்பிடியினையும் ஒப்பத் தேரின்பின் கைகோத்தாடும் கோப்பைக்கொண்டு. எ - று.

தும்பையின் முன்றேர்க்குரவை பின்றேர்க்குரவை [3]போர்க்குச் செல்லும் தேரின்மேல் ; இவை வென்றுநின்ற தேரின்மேல். (அ)

கசாரு.—†பார்ப்பன வாகை :—

‡ கேள்வியாற் சிறப்பெய்தியானை
வேள்வியான் விறன்மிகுத்தன்று.

இ - ள். கேட்கக்கடவன கேட்டுத் தலைமைபெற்றவனை யாகத்தான் வெற்றியைப் பெருக்கியது. எ - று.

வ - று. ஓதங் கரைதவழ்நீர் வேலி யுலகினுள்
§வேதங் கரைகண்டான் வீற்றிருக்கும் - ஏதம்
சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த
விடுசுடர் வேள்வி யகத்து.

இ - ள். திரை கரைமீதே தத்தும் கடலே வேலியாகவுடைய நிலத்திடத்து நான்குவேதத்தினையுங்கற்றவன் தாபதர்க்கரசாய்ச் செம்மாந்திருக்கும் ; குற்றத்தைச்சுடும் நெருப்புத் தானாகி எல்லாரும் போற்ற விரும்பின பரந்த அனலையுடைய யாகத்திடத்து. எ - று.

வேள்வியகத்து வீற்றிருக்குமென்க. (க)

கசாச.—வாணிக வாகை :—

செறுதொழிலிற் சேணீங்கியான்
அறுதொழிலு மெடுத்துரைத்தன்று.

இ - ள். பொல்லாத வினையினின்றும் நீளக் கழிந்தவனுடைய ஆறு செய்தியும் உயர்த்திச் சொல்லியது. எ - று.

---

* தோல். புறத். சூ. 17, இளம். மேற். † சிலப். 23 : 72. ‡ புறநா. 166, உரை, மேற். § திரி. 70 ; பெருங். 3. 3 : 79 - 80.

(பி - ம்.) 1 'வஞ்சமிலா.' 2 'வெஞ்சமத்து.' 3 'பொரச்செல்லும்.'

வ - று. *உழுது பயன்கொண் டொலிநிரை யோம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து - முழுதுணர
ஓதி [1] யழல்வழிபட் டோம்பாத வீகையான்
ஆதி வணிகர்க் கரசு.

இ - ள். உழுது அதன் பலத்தைக் கைப்பற்றி ஆரவாரிக்கும் ஆனிரையைப் பாதுகாத்துக் குற்றமில்லாத கூலங்களையும்விற்று நான் மறை முதலாயின பலவும் அறியக் கற்று முத்தீயை ஆராதித்துப் பொருளைச் சீர்தூக்காது கொடுக்கும் கொடையினையுடையான் முதல் வணிகர் எல்லார்க்கும் வேந்து. எ - று. (௧0)

௧௬ரு.—வேளாண் வாகை :—

மேன்மூவரு மனம்புகல
வாய்மையான் [2] வழியொழுகின்று.

இ - ள். முற்பட்ட அந்தணர் அரசர் வணிகரென்னும் மூவரும் நெஞ்சு விரும்ப மெய்ம்மையால் அவரவர் ஏவல்வழியே சென்றது. எ - று.

வ - று. மூவரு நெஞ்சமர முற்றி யவரவர்
ஏவ லெதிர்கொண்டு மீண்டுரையான் - ஏவல்
வழுவான் வழிநின்று வண்டார் வயலுள்
உழுவா [3]னுலகுக் குயிர்.

இ - ள். முன்சொன்ன மூவரும் மனமேவ முதிர்ந்து அவர் தாந் தாம் ஏவின காரியத்தை ஏற்றுக்கொண்டு மீண்டும் மறுத்துச்சொல் லான் தனக்கு நீதிநூல் ஏவினசொல் வழுவானாய் முறையேநின்று சுரும்புநிறையும் கழனியுள் உழுமவன், பூமியிலுள்ளார்க்கெல்லாம் உயிரையனையவன். எ - று. (௧௧)

௧௬௬.—பொருந வாகை :—

புகழொடு பெருமை நோக்கி யாரையும்
இகழ்த லோம்பென வெடுத்துரைத் தன்று.

இ - ள். நின் கீர்த்தியோடு மிகுதியைப் பார்த்து யாவரையும் எள்ளுதலைப் பரிகரியென்று உயர்த்திச் சொல்லியது. எ - று.

வ - று. வெள்ளம்போற் றானை வியந்து விரைவாரை
எள்ளி யுணர்த லியல்பன்று - தெள்ளியார்
ஆறுமே லாறியபி னன்றித்தங் கைக்கொள்ளார்
நீறுமேற் பூத்த நெருப்பு.

இ - ள். கடல் போன்ற சேனையினையுடையேம் யாமென்று மதித்துப் பகைவரை இகழ்ந்து அறியுமது தன்மையன்று; தெண்மை யுடையார், வெம்மையாறுமாயின் ஆறியபின் அல்லது தங்கள் கையில் ஏந்தார், பொடிமூடிய தழலை. எ - று. (௧௨)

* தொல். புறத். சூ. 16, இளம். மேற்; நன். சூ. 341, மயிலை. மேற்.

(பி - ம்.) [1] 'அழல்வழிவேட்டு.' [2] 'வழிமொழிந்தன்று.' [3] 'உல கிற்கு.'

கசுஎ.—அறிவன் வாகை:—

புகழ்நுவல முக்காலமும்
நிகழ்பறிபவ னியல்புரைத்தன்று.

இ - ள். தன் கீர்த்தியைச் சொல்ல மூன்றுகாலநிகழ்ச்சியையும் அறியுமவன் தன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. *இம்மூ வுலகி னிருள்கடியு மாய்கதிர்போல்
அம்மூன்று முற்ற வறிதலாற் - றம்மின்
உறழா மயங்கி யுறழினு மென்றும்
†பிறழா பெரியோர்வாய்ச் சொல்.

இ - ள். நாகலோகம் பூலோகம் சுவர்க்கலோகமென்னும் மூன்று லோகத்திலுமுள்ள அந்தகாரத்தைப் போக்கும் அழகிய ஆதித்தனை யொப்ப இறப்பு நிகழ்வு எதிர்வென்னும் மூன்று காலத்தையும் முடிய அறிதலால் தம்மில் தாம் மாறுபடாதன மாறுபட்டுப் ‡ பால்புளித்துப் பகலிருண்டு மாறுபடினும் எக்காலத்தினுந் தப்பா, சான்றோர் மெய்ம் மொழி. எ - று.

§ ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும் வரும் ஆதலால், 'அறி பவன்' என்றார். (கங)

கசுஅ.—தாபத வாகை:—

தாபத முனிவர் தவத்தொடு முயங்கி
ஓவுத லறியா வொழுக்குரைத் தன்று.

இ - ள். தபோதனவேடத்தர் புண்ணியத்தோடு தழுவி ஒழித லுணராத நடையைச் சொல்லியது. எ - று.

வ - று. ‖நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் [1]தோலுடைஇச்
சோர்சடை தாழச் சுடரோம்பி - யூரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி.

இ - ள். நீரிலே [2]பலகால்முழுகி வெறுநிலத்துச்சாய்ந்து மான் றோலைப் புடைவையாகவுடுத்து நெகிழ்ந்த சடைவீழத் தீயைப் பரி கரித்துப் பதியிடத்து அணையாராய்க் காட்டிலுள்ள சாகமூலபலங் களைக் கைப்பற்றித் தெய்வத்தினையும் விருந்தினையும் போற்றுமது, சுவர்க்கத்துத் தம்மைச் செலுத்தும் நெறி. எ - று. (கச)

கசுகூ.—கூதிர்ப் பாசறை:—

கூற்றனையான் வியன்கட்டூர்க் கூதிர்வான் [3]றுளிவழங்க
ஆற்றுமை நனிபெருகவு மயில்வேலோ னளிதுறந்தன்று.

இ - ள். கூற்றையொத்தவனுடைய அகன்ற பாசறையிடத்துக் கூதிர்க்காலத்து மேகம் உறையைக்கொடுப்பப் பிரிவாற்றுமை மேன் மேன் மிகவும் கூரிய எஃகினையுடையான் கருணையை ஒழிந்தது. எ - று.

---

* பெருங். 4. 5 : 122 - 4. † நற். 289 : 2 - 3; பதிற். 63 : 6 - 7. ‡ புறநா. 2 : 17-8. § தொல். பொருளியல், சூ. 28. ‖ தொல். புறத். சூ. 16, இளம். மேற்; குறள். 26, பரிமேல். வி.

(பி - ம்.) 1 'தோலுடையா.' 2 'பலகாலும்.' 3 'தளி.'

வ - று. *கவலை மறுகிற் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூரை யொடுங்கத் - துவலைசெய்
கூதிர் நலியவு முள்ளான் கொடித்தேரான்
மூதின் மடவாண் முயக்கு.

இ - ள். கவர்த்த தெருவிடத்துத் தறுகண் வீரர் தழையாற் பண்ணின கூரையிடத்திலேயடங்கச் சிறுதுளியைப்பண்ணும் கூதிர்க் காலம் வருத்தவும் நினையான், பதாகையாற் பொலிந்த தேரினை யுடையான், பழைய மனையில் மனைக்கிழத்தி புணர்தலை. எ - று. (கடு)

களo.—வாடைப் பாசறை :—

வெந்திறலான் வியன்பாசறை வேல்வயவர் விதிர்ப்பெய்த
வந்துலாய்த் துயர்செய்யும் வாடையது [1]மலிபுரைத்தன்று.

இ - ள். வெய்ய வலியினையுடையானது பரந்த வீடாரத்து வேல் வீரர் நடுக்கமுற வந்தியங்கி வருத்தம் பண்ணும் வாடைக்காற்றின் மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. வாடை நலிய வடிக்கண்ணு [2] டோணசை
ஓடை மழகளிற்று னுள்ளான்கொல் - கோடல்
முகையோ டலம்வர முற்றெரிபோற் பொங்கிப்
பகையோடு பாசறையு ளான்.

இ - ள். வாடைக்காற்று வருத்த மாவடுப்போன்ற கண்ணு ளுடைய தோளை நச்சுதல் பட்டத்தையுடைய இளவாரணத்தான் நினையான் போலும்; காந்தண்முதல் மொட்டுடனே சுழல முதிர்ந்த நெருப்புப்போற் கோபித்துச் சத்துருக்கள் கெட்டோடும் பாடிவீட்டி லிருந்தான். எ - று.

பாசறையுளான் உள்ளான்கொலென்க. (கசு)

களக.—† அரச முல்லை :—

செருமுனை யுடற்றுஞ் செஞ்சுடர் நெடுவேல்
இருநிலங் காவல னியல்புரைத் தன்று.

இ - ள். பொரும் பகையை வருத்தும் சிவந்த சோதியாற் பொலிந்த நெடிய வேலினையுடைய பெரிய புவியைக்காக்கும் அரசன் தன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. செயிர்க்க ணிகழாது செங்கோ லுயரி
மயிர்க்கண் முரச முழங்க - உயிர்க்கெல்லாம்
நாவ லகலிடத்து ஞாயி றனையனுய்க்
காவலன் சேறல் கடன்.

---

* தோல். புறத். சூ. 17, இளம். மேற். † சீவக. 547, ந. வி.

(பி - ம்.) 1 'மலிவு.' 2 'தோணிலை.'

இ - ள். குற்றத்திடத்துச்செல்லாதே மனுநீதியை உயர்த்தி மயிரால் மிக்க கண்ணினையுடைய வீரமுரசொலிப்ப எல்லாவுயிர்க்கும் நாவலந் தீவின்கண் ஆதித்தனையொத்து வேந்தன் நடத்தல் முறைமை. எ - று.

முல்லை - இயல்புமிகுதி. (கஎ)

களஉ.—பார்ப்பன முல்லை :—

கான்மலியு நறுந்தெரியற் கழல்வேந்த ரிகலவிக்கும்
*நான்மறையோ னலம்பெருகு நடுவுநிலை யுரைத்தன்று.

இ - ள். செவ்விமிக்க நறுநாற்றஞ் செறிந்த மாலையினையுடைய வீரக்கழலாற் பொலிந்த மன்னர் மாறுபாட்டைக்கெடுக்கும் நான்கு வேதத்தினையுடையோன் நன்மைமிக்க செப்பமுறைமையைச் சொல்லியது. எ - று.

வ - று. ஒல்லெனீர் ஞாலத் துணர்வோ விழுமிதே
நல்லிசை முச்செந்தீ நான்மறையோன் - [1]செல்லலும்
வென்றன்றி மீளா விறல்வேந்தர் வெம்பகை
என்றன்றி மீண்ட திலர்.

இ - ள். அநுகரண ஓசையையுடைய கடல்சூழ்ந்த வையகத்து அறிவு சாலச் சீரிதாகவிருந்தது ; அழகிய புகழினையும் மூன்று செந்தீயினையும் நான்கு வேதத்தினையுமுடையோன் சந்துவேண்டிச் சென்றுழுகப் பகைமேல் எடுத்துச் சென்றால் வென்றல்லது மீளாத வெற்றி மன்னர் வெய்யமுரணென்றல்லது பொருந்தி மீண்டதிலர். எ - று. (கஅ)

களங.—அவைய முல்லை :—

நவைநீங்க நடுவுகூறும்
அவைமாந்த ரியல்புரைத்தன்று.

இ - ள். குற்றங் கெட நடுவுசொல்லும் அவைக்களத்துச் சான்றோர் தன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. †தொடைவிடை யூழாத் தொடைவிடை துன்னித்
தொடைவிடை யூழிவை தோலாத் - தொடைவேட்
டழிபட [2]லாற்ற லறிமுறையேன் ‡றெட்டின்
வழிபடர்தல் வல்ல தவை.

இ - ள். [3] அனுயோகமும் உத்தரமும் முறைமையாக [3]அனுயோகத்தையும் உத்தரத்தையும் புத்திபண்ணித் தொடையும் விடையும் முறைமையும் என்றிவை தப்பாத சயபத்திரத்தைவிரும்பித் தோல்வியும் வெற்றியும் நெறியாலே நிச்சயிக்கும் முறைமையை மேற்கொண்டு எட்டின் நெறியே செல்லல்வல்லது அவைக்களம். எ - று.

---

* புறநா. 305: 2. † குறள், 118, பரிமேல். வி. ‡ பு - வெ. 178: 4 ; தொல். புறத். சூ 21.

(பி - ம்.) 1 'செல்லவும்.' 2 'ஆற்றால்.' 3 'அபியோகம்.'

எட்டாவன: "குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை, நடுச் சொல்லு நல்லணி யாக்கம் - கெடுக்கும், அழுக்கா றவாவின்மை யவ் விரண்டோ டெட்டும், இழுக்கா வவையின்க ணெட்டு" என்பதனானறிக. (கக)

களச.—கணிவன் முல்லை :—

துணிபுணருந் தொல்கேள்விக்
கணிவனது புகழ்கிளந்தன்று.

இ- ள். நிச்சயித்துப் பலவுமறியும் பழைய கேள்விஞானத்தினை யுடைய சோதிடநூல்வல்லவனது கீர்த்தியைச் சொல்லியது. எ-று.

வ - று.*புரிவின்றி † [1]யாக்கைபோற் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறியத் - திரிவின்றி
விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம்
கண்ணி யுரைப்பான் கணி.

இ - ள். தப்பாதபடி தன் உடம்புபோலே பரிகரிக்கக்கடவ நூல் களைப் பலகாலுங் கற்று அடிப்படுத்தித் துன்பமின்றி உண்மையுணரத் தப்பின்றிச் சுவர்க்கம் இப்புவி உண்டாக்கும் நிகழ்ச்சியெல்லாம் கருதிச் சொல்லுமவன் சோதிடவன். எ - று. (உ0)

களரு.—‡மூதின் முல்லை :—

அடல்வே லாடவர்க் கன்றியு மவ்வில்
மடவரன் மகளிர்க்கு மறமிகுத் தன்று.

இ - ள். கொல்லும் வேலினையுடைய வீரர்க்கல்லது அந்த மறக்குடி யில் மடப்பத்தினையுடைய அரிவைமார்க்கும் சினத்தைச் சிறப்பித்தது. எ - று.

வ - று. வந்த படைநோனாள் வாயின் மூலைபறித்து
வெந்திற லெஃகி மிறைக்கொளீஇ - முந்தை
முதல்வர்கற் றான்காட்டி §மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு.

இ - ள். தங்கள்மேல் எடுத்துவந்த சேனையைப் பொறாளாய்ப் பிள்ளைவாயின் மூலையை வாங்கி வெவ்விய வெற்றியினையுடைய வேலை முன்பு பகைவரைக் குத்திவளைந்த வளைவுதவிர்த்து முன்பு தன் வழியி னுள்ளோர் நடுகல்லைத் தான் அவனுக்குக்காட்டிப் பழையமறக்குடியிற் பேதையானவள் பூசலுக்குப் பிள்ளையைப் போவாயாகவென்று சொன் னாள். எ - று.

இறைக்கொளீஇ - கையிலே கொடுத்தென்றுமாம். (உக)

களசு.—ஏறாண் முல்லை :—

மாறின்றி [2]மறங்கனலும்
ஏறாண்குடி யெடுத்துரைத்தன்று.

---

* தொல். புறத். சூ. 16, இளம். மேற். † ஆசார. 96. ‡ தொல். புறத். சூ. 4, இளம். வி. § புறநா. 19: 15, 279: 2.

(பி - ம்.) 1 'தன்யாக்கைபோற்றுவ.' 2 'மனங்.'

இ - ள். எதிரின்றியே ஒழியச் சினமிகும் மேன்மேலுநின்ற ஆண்மைத் தன்மையினையுடைய குடியொழுக்கத்தினை உயர்த்துச் சொல்லியது. எ - று.

வ - று. *கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர் — பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
†எய்போற் கிடந்தானென் னேறு.

இ - ள். கல்லிலே பொருந்திநின்றான் என் தகப்பன்; என் கணவன் போர்க்களரியிலே பட்டான்; பகைவர்முன்னே நின்று எதிர்த்துப் பூசலிலே விழுந்தார் என் தமையன்மார்; தன் சேனை கெடவும் கெடாதே பின்னேநின்று தன் கைசென்று அம்பைச் செலுத்தப் பகையரசன்மேலே சென்று எய்ப்பன்றிபோலே பட்டுக்கிடந்தான் என்னுடைய புதல்வன். எ - று. (உஉ)

களஎ.—வல்லாண் முல்லை:—

‡இல்லும் பதியு மியல்புங் கூறி
[1]நல்லாண் மையை நலமிகுத் தன்று.

இ - ள். இல்லையும் ஊரையும் இயல்பினையும் சொல்லி அழகிய ஆண்மைத் தன்மையை நன்மைபெருகச் சொல்லியது. எ - று.

வ - று. வின்முன் கணைதெரியும் வேட்டைச் சிறுசிறார்
முன்முன் முயலுகளு முன்றிற்றே - மன்முன்
வரைமார்பின் வேன்மூழ்க வாளமூவர் தாங்கி
உரைமாலை சூடினு னூர்.

இ - ள். வில்லின்முன்னே அம்பையாராயும் வேட்டையாடும் சிறுபிள்ளைகள் முன்னே முன்னே முயல் பாயும் இல்முன்னையுடைத்து; அரசனுடையமுன் மலைபோன்ற அகலத்துள் எஃகம் அழுந்த வாட்போரைத் தடுத்துக் கீர்த்தித் தெரியலைப் புனைந்தவன் பதி. எ - று.

பதி முன்முன் முயலுகளும் முன்றிற்றென்க. (உ௩)

களஅ.—காவன் முல்லை:—

தவழ்திரை முழங்குந் தண்கடல் வேலிக்
கமழ்தார் மன்னவன் காவன்மிகுத் தன்று.

இ - ள். ஊருந்திரை ஆரவாரிக்கும் குளிர்ந்த கடலை வேலியாகவுடைய ஞாலத்து மணநாறுமாலையினையுடைய வேந்தன் பாதுகாத்தலைச் சிறப்பித்தது.

வ - று. பெரும்பூட் சிறுதகைப் பெய்ம்மலர்ப் பைந்தார்க்
கருங்கழல் வெண்குடையான் காவல் - விரும்பான்

* குறள், 764, பரிமேல். மேற். 'கன்னின்றான்': சீவக. 2302. † புறநா. 283 : 8, 290 : 5,297 : 9 - 10 ; கலிங்க. 475. ‡ புறநா. 170, உரை, மேற்.

(பி - ம்.) 1 'நல்லாண்மைநலம்.'

ஒருநாண் மடியி னுலகின்மே னில்லா
திருநால் வகையா ரியல்பு.

இ - ள். பெரிய ஆபரணத்தினையும் நல்லோரிடத்துத் தலைவணக்கத்தினையும் மலரிட்டுத் தொடுத்த பசியமாலையினையும் வலிய வீரக்கழலினையும் தவளசத்திரத்தினையுமுடையவன் நாடு காத்தற்றொழில் வேண்டானாகி ஒரு வைகல் உள்ளமடியிற் பூமிமேற்றங்காது, குடிப்பிறப்புமுதலாகிய எண்வகையியல்புடைய சான்றோர் தன்மை. எ - று. இயல்பு நில்லாதென்க. (௨௪)

௧௭௯.—இதுவுமது:—

தக்காங்குப் பிறர்கூறினும்
அத்துறைக் குரித்தாகும்.

இ - ள். பொருந்தினபடி அந்நியர் சொல்லினும் முற்பட்ட துறைக்கு உரிமையுடைத்து. எ - று.

வ - று. ஊறின் றுவகையுள் வைக வுயிரோம்பி
*ஆறிலொன் றானா தளித்துண்டு - மாறின்றி
வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலும்
தான்காவல் †கொண்ட றரும்.

இ - ள். குற்றமின்றிப் பிரியத்திலே அவதரிப்ப எல்லாவுயிரையும் பாதுகாத்துக் கொள்ளுங்கடனாகிய ஆறிலொன்றினை அமையாது பிறர்க்குங்கொடுத்து உண்டு எதிரின்றிச் சுவர்க்கலோகத்தைக் காவல் கொண்ட தன் பிதாவின் நெறியே நிலைநின்று நாடோறும் மன்னன்றன் காவற்றொழிலை மேற்கொள்வது பொருந்தும். எ - று. (௨௫)

௧௮௦.—பேராண் முல்லை:—

உளம்புகல மறவேந்தன்
களங்கொண்ட சிறப்புரைத்தன்று.

இ - ள். மனம் விரும்பச் சினமன்னன் போர்க்களத்தைக் கொண்ட மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. ‡ஏந்துவாட் டானை யிரிய வுறைகழித்துப்
போந்துவாண் மின்னும் பொருசமத்து - வேந்தர்
இருங்களி யானை யினமிரிந் தோடக்
கருங்கழலான் §கொண்டான் களம்.

இ - ள். [1]உயர்த்த வாட்சேனை உடையும்படி கூட்டை நீக்கப் பட்டுப்போந்து வாள் இலங்கும் பொராநின்றபூசலிடத்துப் பகைமன்னருடைய பெரிய மதத்தவாரணத்திரள் கெட்டோட வலிய வீரக்கழலினையுடையான் கைக்கொண்டான், போர்க்களத்தை. எ - று. (௨௬)

---

* குறள், 43; இராமா. உத்தர. அரக்கர். 48; திருவிளை. நாட்டு. 28. † கொண்டல் : பெருங். 4. 7 : 133. ‡ தொல். புறத். சூ. 16, இளம். மேற். § பு - வெ. 225; புறநா. 4 : 3, 53 : 5, 62 : 12; சீவக. 279, ந. வி.; சிலப். 28 : 104. (பி - ம்.) 1 'உயர்ந்த.'

க௱௬க.—மறமுல்லை :—

*வெள்வாள் வேந்தன் வேண்டிய தீயவும்
கொள்ளா மறவன் கொதிப்புரைத் தன்று.

இ - ள். தெளிந்தவாளினையுடைய மன்னன் விரும்பியது கொடுப்பவும் அதனைக்கொள்ளாத வீரனது கனற்சியைச் சொல்லியது. எ - று.

வ - று. வின்னவி றோளானும் வேண்டிய கொள்கென்னும்
கன்னவி றிண்டோட் கழலானும் - மன்னன்முன்
ஒன்றா னழல்விழியா வொள்வாள் வலனேந்தி
நின்றா னெடிய மொழிந்து.

இ - ள். சிலைகெழுமிய புயத்தினையுடைய அரசனும் விரும்பினவற்றை நீ கொள்கவென்று சொல்லாநிற்கும்; மலைபொருந்தின திண்ணிய புயத்தினையுடைய கழல்வீரனும் அரசன்முன் பொருந்தானாகி அழலாக நோக்கா ஒள்ளிய நாந்தகத்தை மிசையேயெடுத்து வாளாது நின்றான், உயர்ந்தவார்த்தை பலவுஞ் சொல்லி. எ - று. (உஎ)

க௱௬உ.—குடைமுல்லை :—

மொய்தாங்கிய முழுவலித்தோட்
கொய்தாரான் குடைபுகழ்ந்தன்று.

இ - ள். பூசலைத்தடுத்த மிக்க உரத்தாலுயர்ந்த தோளினையுடைய மட்டஞ்செய்த மாலையான் குடையைப் புகழ்ந்தது. எ - று.

வ - று. வேயுள் விசும்பு விளங்கு கதிர்வட்டம்
தாய புகழான் றனிக்குடைக்குத் - தோயம்
எதிர்வழங்கு கொண்மூ விடைபோழ்ந்த சுற்றுக்
கதிர்வழங்கு மாமலை காம்பு.

இ - ள். போர்வை ஆகாயம்; இலங்கும் பருதி மேல்வட்டம்; பரந்தகீர்த்தியையுடையான்றன் ஒப்பிலாத குடைக்கு, நீர்த்தாரையை எதிரே சொரியும்மேகம் இடைவிட்ட சுற்றுத்தாமம்; சந்திராதித்தவர் வழங்கு மாமேரு காம்பு. எ - று.

'இடைபோழ்ந்து சுற்றிக் கதிர்வழங்கு மாமலைகாம்பு' என்று பாடமோதி, [1] மாகத்தைப் பிளந்து சுற்றிக் கதிர்வழங்குமாமலை காம்பென்பாருமுளர். (உஅ)

க௱௬௩.—கண்படை நிலை:—

மண்கொண்ட மறவேந்தன்
கண்படைநிலை மலிந்தன்று.

இ - ள். வென்று பூமியைக் கைக்கொண்ட சினமன்னன் உறக்கத்தை மிகுத்தது. எ - று.

---

* பு - வெ. 184, 195. (பி - ம்) 1 'மேகத்தைப்.'

வ - று. கொங்கலர்தார் மன்னருங் கூட்டளப்பக் கூற்றணங்கும்
வெங்கதிர்வேற் றண்டெரியல் வேந்தற்குப் - பொங்கும்
புனலாடை யாளும் புனைகுடைக்கீழ் வைகக்
கனலா துயிலேற்ற கண்.

இ - ள். திறைகொடாத மதுமலர்ந்த மாலைவேந்தரும் திறைகொடுப்ப இயமனைவருத்தும் வெய்ய ஒளிவேலினையும் குளிர்ந்தமாலையினையுமுடைய அரசனுக்கு மீதெழும் கடலாகிய புடைவையையுடைய நிலமகளும் கைசெய்த குடைக்கீழ்த் தங்குதலான் அழலாவாய் உறக்கத்தையெதிர்ந்தன, விழிகள். எ-று. (உகூ)

கஎச.—*அவிப்பலி :—

வெள்வா ளமருட் †செஞ்சோ றல்ல
துள்ளா மைந்த ருயிர்ப்பலி கொடுத்தன்று.

இ - ள். தெளிந்த வாட்பூசலிடத்துச் செஞ்சோற்றுக்கடனன்றி நினையாத மறவர் உயிரைப் பலியாகக் கொடுத்தது. எ - று.

ஆவியென்பது அவியெனக் குறுகிநின்றது.

வ - று. ‡சிறந்த திருவென்னச் செஞ்சோறு வாய்ப்ப
மறந்தரு வாளம ரென்னும் - பிறங்கழலுள்
ஆருயி ரென்னு மவிவேட்டா ராங்கஃதால்
வீரியரெய் தற்பால வீடு.

இ - ள். தலைமைமிக்கது இதுவெனச்சொல்லிச் செஞ்சோற்றுக்கடன் தப்பாதபடி சினங்கொண்டவாட்பூசலென்னும் பெருத்தநெருப்பினுட் பெறுதற்கரிய பிராணனென்னும் அவியைக் கொடுத்தார்; அவ்விடத்ததுவால்,வீரத்தை யுடையார் கிட்டுதற்பகுதியையுடைய சுவர்க்கம். எ - று. (௩௦)

கஎரு.—சால்பு முல்லை:—

வான்றோயு மலையன்ன
சான்றோர்தஞ் சால்புரைத்தன்று.

இ - ள். ஆகாசத்தைக் கிட்டும் வரையையொத்த சான்றோர் தம்முடைய அமைதியைச் சொல்லியது. எ - று.

வ - று. உறையார் விசும்பி னுவாமதி போல
§ நிறையா நிலவுத லன்றிக் - குறையாத
வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேறாமோ
சங்கம்போல் [1] வான்மையார் சால்பு.

இ - ள். மழைநிறைந்த ஆகாயத்திடத்து [2] உவாநாள் மதியையொப்ப நிறைந்து மன்னுதலல்லது குறையாத மரக்கலம் பிளக்கும் கடலிடத்துப் பல பொருளினையும்பெறினும் வேறுபடுமோ, சங்கம்போலத் தூய்மையையுடையாரமைதி ! எ - று. (௩க)

---

* சிலப். 5: 76 - 88, அடியார். வி. † சீவக. 2240; கம்ப. கும்ப. 156; கலிங்க. 477; வி. பா. 17 - ஆம் போர். 20. ‡ தொல். புறத். சூ. 17, இளம். மேற். § மதுரை. 202 - 4; புறநா. 182.

(பி - ம்.) 1 'வாய்மையார்.' 2 'உவாநாளை மதியை.'

கஅசு.—கிணைநிலை :—

*தண்பணை வயலுழவனைத்
தெண்கிணைவன் றிருந்துபுகழ்கிளந்தன்று.

இ - ள். மருதநிலத்திற் கழனியிடத்து வேளாளனைத் தெளிந்த கிணைகொட்டுமவன் நல்ல கீர்த்தியைச் சொல்லியது. எ - று.

வ - று. பகடுவாழ் கென்று பனிவயலு †ளாமை
அகடுபோ லங்கட் டடாரித் - துகடுடைத்துக்
குன்றுபோற் போர்விற் குருசில் வளம்பாட
இன்றுபோ மெங்கட் கிடர்.

இ - ள். ஏர்வாழ்கவென்று சொல்லிக் குளிர்ந்த கழனியுள் ஆமையினது வயிறுபோன்ற அழகிய கண்ணிணையுடைய கிணையை மாசைத் துடைத்துக் குன்றையொக்கும் 1 நெற்போர்வினையுடைய உபகாரிதன் செல்வத்தை வாழ்த்த இன்று நீங்கும், எங்கட்கு மிடி. எ - று. (கூஉ).

கஅஎ.—பொருளொடு புகறல் :—

வையகத்து விழைவறுத்து
மெய்யாய பொருணயந்தன்று.

இ - ள். பூமியிடத்துப் பற்றாய விருப்பத்தினை ஒழித்து மெய்ம்மையான பொருளை விரும்பியது. எ - று.

வ - று. ஆமினி மூப்பு மகன்ற திளமையும்
‡ தாமினி நோயுந் தலைவரும் - யாமினி
மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த
ஐயைந்து மாய்வ தறிவு.

இ - ள். இனி மூப்பும் ஆம் ; கழிந்தது இளமையும் ; நோய்தாமும் இனிமேல் வரும் ; யாம் இப்பொழுது சரீரத்திற் பஞ்சேந்திரியங்கள் அடரத் தங்காது தலைவந்த பஞ்சவிருத்தியைத் தெரியுமது நல்லறிவு. எ - று.

ஐயைந்தாவன : மெய்ம்முதலான ஞானேந்திரியங்கள் ஐந்தும், பூமி முதலான மகாபூதங்கள் ஐந்தும், சுவைமுதலான தன்மாத்திரைகள் ஐந்தும், வாக்குமுதலான கன்மேந்திரியங்கள் ஐந்தும், மனமுதலான அந்தக்கரணம் நான்கும் சீவனுமாகிய ஐந்துமாம். (கூகூ).

கஅஅ.—அருளொடு நீங்கல் :—

§ஒலிகடல் வையகத்து
நலிவுகண்டு நயப்பவிந்தன்று.

இ - ள். முழங்கும் கடலுலகத்துத் துயரத்தைப்பார்த்துப் பற்றை ஒழிந்தது. எ - று.

---

* சிலப். 10 : 138 - 9, அடியார். மேற். † பு - வே. 206 ; அகநா. 356 : 2 - 4 ; புறநா. 70 : 2 - 3, 249 :4. ‡ சீவக. 247, ந. மேற். § மாறன். ப. 42, மேற்.

(பி - ம்.) 1 ‘ நெற்போர் விளக்கத்தை. ’

வ - று. கயக்கிய நோயவாய்க் கையிகந்து நம்மை
இயக்கிய யாக்கை யிறுமுன் - மயக்கிய
பட்படா வைகும் பயன்ஞால நீள்வலை
யுட்படாம் போத லுறும்.

இ - ள். கலக்கிய நோவுகளையுடையவாய்க் கைகடந்து நம்மை நடத்திய சரீரம் ஒடிவதற்கு முன்னே மருளப் பண்ணின குணம் அடுத்துத் தங்கும் பயத்தையுடைய உலகமாகிய நீண்ட கண்ணியுள்ளே அகப்படாமாகி நன்னெறிக்கட் சேர்தல் உறுதியுடைத்து. எ - று.

பண்பு : பட்பென விகாரமாயிற்று. (௩௪)

வாகைத்திணைப்பாட்டு ௧-ம், துறைப்பாட்டு ௩௩-ம் முடிந்தன.

எட்டாவது வாகைப்படலம் முற்றிற்று.

---

ஒன்பதாவது

# பாடாண் படலம்.

(௯.—சூத்திரம்.)

பாடாண் பாட்டே வாயி னிலையே
கடவுள் வாழ்த்தொடு பூவை நிலையே
பரிசிற் றுறையே யியன்மொழி வாழ்த்தே
கண்படை நிலையே துயிலெடை நிலையே
மங்கல நிலையொடு விளக்கு நிலையே
கபிலை கண்ணிய புண்ணிய நிலையே
வேள்வி நிலையொடு வெள்ளி நிலையே
நாடு வாழ்த்தொடு கிணையது நிலையே
களவழி வாழ்த்தே
வீற்றினி திருந்த பெருமங் கலமே
குடுமி களைந்த புகழ்சாற்று நிலையே
மணமங் கலமே பொலிவுமங் கலமே
நாண்மங் கலமே பரிசி னிலையே
பரிசில் விடையே யாள்வினை வேள்வி
பாணாற்றுப் படையே கூத்தராற்றுப் படையே
[1]பொருநாற்றுப் படையொடு விறலியாற்றுப் படையே
வாயுறை வாழ்த்தே செவியறி வுறூஉக்
குடைமங் கலமொடு வாண்மங் கலமே
மண்ணுமங் கலமே யோம்படை யேனைப்
புறநிலை வாழ்த்து முளப்படத் தொகைஇ

---

(பி - ம்.) 1 'பொருநராற்றுப்படை.'

அமரர்கண் முடியு மறுவகை யாகிய
கொடிநிலை கந்தழி வள்ளி குணஞ்சால்
புலவரை யவர்வயிற் புகழ்ந்தாற் றுப் படுத்தல்
புகழ்ந்தனர் பரவல் பழிச்சினர்ப் [1] பணிதல்
நிகழ்ந்த காமப் பகுதியுட் டோன்றிய
கைக்கிளை வகையும் பெருந்திணை வகையும்
நற்றுனி நவின்ற பாடாண் பாட்டும்
கடவுட் பக்கத்து மேனோர் பக்கத்தும்
மடவரன் மகளிர் மகிழ்ந்த பக்கமும்
மாதர் மகிழ்ந்த குழவியு மூரின்
கணனே தோன்றிய காமப் பகுதியொ
டாங்க வாறெண் பகுதிப் பொருளும்
பாங்குற விரைப்பது பாடாண் பாட்டே.

என் - னின், பாடாண்பகுதியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். பாடாண்பாட்டு முதலாகக் காமப்பகுதி யீறுகச் சொல்லப்பட்ட நாற்பத்தெட்டும் பாடாண்டிணையும் துறைகளுமாம் எ - று.

அவற்றுள் :—

## ௧அ௯. பாடாண்பாட்டு

*ஒளியு மாற்றலு மோம்பா வீகையும்
அளியு மென்றிவை யாய்ந்துரைத் தன்று.

இ - ள். இசையும் வலியும் சீர்தூக்காக் கொடையும் தண்ணளியும் என்று சொல்லுமிவற்றைத் தெரிந்து சொல்லியது எ - று.

வ-று. †மன்னர் மடங்கன் மறையவர் சொன்மாலை
அன்ன நடையினார்க் காரமுதம் - துன்னும்
பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப் பைந்தார்
எரிசினவேற் றானையெங் கோ.

இ - ள். அரசர்பலர்க்கும் சிங்கம், அந்தணர்க்குப் புகழ்மாலை, அன்னம்போன்ற செலவினையுடையமகளிர்க்கு நிறைந்த அமிர்தம், செறியும் இரவலர்க்கு மழை, குளிர்ந்த பூவாற்செய்த செவ்விமாலையினையும் அழலும் சினவேற் சேனையினையுமுடைய எம்முடைய அரசன் எ-று. (1)

## ௧௯௦. வாயினிலை

புரவல னெடுங்கடை குறுகிய வென்னிலை
கரவின் றுரையெனக் காவலற் குரைத்தன்று.

இ - ள். அரசனுடைய நெடிய வாயிலைக் கிட்டிய என்வரவினை மறைவின்றிச் சொல்லென வாயில்காவலனுக்குச் சொல்லியது எ - று.

---

* ஒளி : குறள், 390, 556, 698; புறநா. 51, 309; சீவக. 248; மணி. 19 : 128. † நன். சூ. 409. மயிலை. மேற்.; மாறன். ப. 192, மேற். (பி - ம்.) [1] 'பரவல்'

வ-று. நாட்டிய வாய்மொழி நாப்புலவர் நல்லிசை
ஈட்டிய சொல்லா னிவனென்று - காட்டிய
காயலோங் கெஃகிமைக்குங் கண்ணார் கொடிமதில்
வாயிலோய் வாயி லிசை.

இ - ள். பூமியின்கண் நிறுத்திய மெய்ம்மொழியினையுடைய நாவாற் சிறந்த அறிவினையுடையோர் புகழ்ந்த நல்ல புகழைப்பாடிய சொல்லினையுடையவனிவனென்று சொல்லி என்னைக் காட்டுவான் வேண்டி, சத்துருக்களைச் செறுதற்கெழுந்துயர்ந்த வேலிலங்கும் கண்ணுக்குநிறைந்த பதாகையாற் பொலிந்த புரிசையின் வாயிலிடத்துக் காவலாளனே, நான் வந்த வரலாற்றைச் சொல்லுவாயாக எ - று. (2)

## ககக. கடவுள் வாழ்த்து

காவல் கண்ணிய கழலோன் கைதொழும்
மூவரி லொருவனை யெடுத்துரைத் தன்று.

இ - ள். பூமியைக்காத்தல்கருதிய வீரக்கழல்வேந்தன் கைகூப்பும் அரி அயன் அரனென்னும் மூவருள் ஒருவனை உயர்த்துச் சொல்லியது எ - று.

வ-று. *வைய மகளை யடிப்படுத்தாய் வையகத்தார்
உய்ய வுருவம் வெளிப்படுத்தாய் - வெய்ய
அடுந்திற லாழி யரவணையா யென்றும்
நெடுந்தகை நின்னையே யாம்.

இ - ள். நிலமகளைச் சீபாதத்திலே அடக்கியருளினை, ஞாலத்துள்ளார் பலரும் பிழைப்பத் திருமேனியைத் தோற்றுவித்தருளினை, வெவ்விதான கொல்லும்வலியாற் சிறந்த சக்கரத்தினையும் பாம்பணையினையுமுடையாயென்று சொல்லுவம்; ஒருவராலும் அளத்தற்கரிய தன்மையினையுடையாய், நின்னை யாங்கள் எ - று. (3)

## ககஉ. பூவைநிலை

கறவை காவல னிறநெடு பொரீஇப்
புறவலர் பூவைப் பூப்புகழ்ந் தன்று.

இ - ள். ஆனிரையைக் காத்த மாயவன் திருவுருவோடு உவமித்துக் காட்டிடத்தலரும் காயாம்பூவைப் புகழ்ந்தது எ - று.

வ-று. † பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோய்
யாவை விழுமிய யாமுணரேம் - மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான்.

இ - ள். காயா மலரும் செவ்விப்பூப்போல, பொலிந்த வீரக்கழலினையுடையோய், எப்பொருள் சீரியவை? யாங்கள் அறியேம்; பகைவர் சினத்துடனே வஞ்ச மல்லரது மாறுபாட்டை வென்ற இளமைப் பருவத்து மாயவனது திருமேனியோடு உவமைகொள்கையால் எ - று.

* தொல். புறத். சூ. 22, இளம். மேற். † தொல். புறத். சூ. 5, இளம். மேற்; இ. வி. புறத். சூ. 19, மேற்.

ஒன்றினை முடித்தல் தன்னினை முடித்தலென்பதனால், ஒருவனை அவனோடு உவமைகூறினும் பிறகடவுளரோடு உவமைகூறினும் அதுவேயாம். இனிக் காவற்கடவுளாகக் காவலனைக் கூறின் என்னையோவெனின், கற்பகம்போல்வானைக் கற்பகமென்பது போலாம் எ - று. (4)

## ௧௧௩. பரிசிற்றுறை

மண்ணகங் காவன் மன்னன் முன்னர்
எண்ணிய பரிசி லிதுவென வுரைத்தன்று.

இ - ள். பூமியிடத்தைக் காக்கும் தொழிலையுடைய அரசன் முன்னே கருதிய பேறு இதுவெனச் சொல்லியது எ - று.

வ-று. வரிசை கருதாது வான்போற் றடக்கைக்
குரிசினீ நல்கயாங் கொள்ளும் - பரிசில்
அடுகளை மார்ப வமரோட்டித் தந்த
படுகளி நால்வாய்ப் பகடு.

இ - ள். எங்கள் தரத்தினை நினையாதே, மழையை யொக்க வழங்கும் பெரிய கையினையுடைய உபகாரி, நீ வழங்க யாங்கள்பெறும் பேறு கொல்லும் களரியிலே ஆரவாரிப்பப் போரிடத்தே பகைவரைக் கெடுத்துக் கைக்கொண்ட உண்டான மதத்தினையும் நான்ற வாயினையுமுடைய யானை எ - று.

யானை யாம் கொள்ளும் பரிசிலென்க. (5)

## ௧௧௪. இயன்மொழி வாழ்த்து

இன்னோ ரின்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல வவையெமக் கீகென
என்னோரு மறிய வெடுத்துரைத் தன்று.

இ - ள். இத்தன்மையோர் இத்தன்மை வழங்கினார், நீயும் அத்தன்மையார்போல் அப்படியான பொருள்களை எமக்குத் தருவாயாகவென்று சொல்லி எத்தன்மையோரும் உணர உயர்த்துச் சொல்லியது எ - று.

வ-று. * முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத் - தொல்லை
இரவாம லீந்த †விறைவர்போ னீயும்
கரவாம லீகை கடன்.

இ - ள் முல்லைக்குப் பொற்றேரும் மயிலுக்கு மணிப்படாமும் எல்லை கடலாகவுடைய வையகத்துக் கீர்த்திவிளங்க முற்காலத்து வேண்டாமே கொடுத்த உபகாரிகளை யொப்ப நீயும் ஒளியாது வழங்கல் கடன் எ - று (6)

---

* பழ. 361. † இறைவர் : பாரி, பேகனென்பர்; சிறுபாண். 84-91; புறநா. 200, 201, 141, 145.

கூகூ௫. இதுவுமது

மயலறு சீர்த்தி மான்றேர் மன்னவன்
இயல்பே மொழியினு மத்துறை யாகும்.

இ - ள். மயக்கமற்ற மிக்க புகழினையும் குதிரையாற் பூட்டப்பட்ட தேரினையுமுடைய அரசன் தன்மையினைச் சொல்லினும் முன்புசொன்ன துறையேயாம் எ - று.

வ-று. ஒள்வா ளமரு ளுயிரோம்பான் றுனியக்
கொள்வார் நடுவட் கொடையோம்பான் - வெள்வாள்
கழியாமே மன்னர் கதங்காற்றும் வேலான்
ஒழியாமே யோம்பு முலகு.

இ - ள். ஒள்ளிய வாட்பூசலிடத்து உயிரைப் பாதுகாவான், தான் கொடுப்ப ஏற்பாரிடை வழங்குதலைப் பரிகரியான், தெளிந்தவாளை உறையினின்றும் வாங்காமே அரசர்கோபத்தைக் கால்விக்கும் வேலினையுடையான் தப்பாமே காக்கும், உலகத்தை எ - று. (7)

கூகூ௬. கண்படைநிலை

நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்கும்
கடுந்தேர் மன்னவன் கண்படை மலிந்தன்று.

இ - ள். உயரிய தேரான் மிக்க பகைவர்சேனை பொடிபடச் செல்லும் கடுந்தேரினையுடைய வேந்தனது துயிலை மிகுத்தது எ - று.

வ-று. * மேலா ரிறையமருண் மின்னார் சினஞ்சொரியும்
வேலான் விறன்முனை வென்றடக்கிக் - கோலாற்
கொடிய வுலகிற் குறுகாமை யெங்கோன்
கடியத் துயிலேற்ற கண்.

இ - ள். வீரர் தங்கிய போரிடத்து ஒளிநிறைந்து செற்றம்பொழியாநிற்கும் வேலாலே வலியபூசலைச் சயித்து ஒடுக்கிச் செங்கோனீதியாற் கொடியவை பூமியிடத்துக் கிட்டாமை எம்முடைய அரசன் நீக்குதலான் உறக்கத்தை மேவின, விழிகள் எ - று. (8)

கூகூ௭. துயிலெடைநிலை

அடுதிறன் மன்னரை யருளிய வெழுகெனத்
தொடுகழன் மன்னனைத் துயிலெடுப் பின்று.

இ - ள். கொல்லும் வலியினையுடைய வேந்தர்க்கு அருள எழுந்திருப்பாயாகவெனக் கட்டுங்கழல்வேந்தனைத் துயினீக்கியது எ - று.

வ-று. † அளந்த திறையா ரகலிடத்து மன்னர்
வளந்தரும் வேலோய் வணங்கக் - களந்தயங்கப்

---

* தொல். புறத். சூ. 29, இளம். மேற். † தொல். புறத். சூ. 30, இளம். மேற்.

பூமலர்மேற் புள்ளொலிக்கும் பொய்கைசூழ் தாமரைத்
தூமலர்க்க* [1]ணேற்க துயில்.

இ - ள். இட்ட திறையினையுடையார் அகன்ற பூமியிடத்து வேந்தர், வென்றிதரும் வேலினையுடையாய், நின்னைப் பணிய, இடம்விளங்கப் பொலிந்த மலர்மீதே பறவைகள் ஆரவாரிக்கும் பொய்கையிற் சூழ்ந்த தாமரையில் தூயமலரையொத்த கண்கள் துயிலாவாக எ - று.

எழுக துயிலென்றுமாம். (9)

## ௧௧௮. மங்கலநிலை

கங்குற் கனைதுயி லெழுந்தோன் முன்னர்
மங்கலங் கூறிய மலிவுரைத் தன்று.

இ - ள். கங்குலிடத்து மிக்க உறக்கத்தை நீங்கினோன்முன்னே மங்கலத்தைச் சொன்ன மிகுதியைச் சொல்லியது எ - று.

வ - று. விண்வேண்டின் வேறுதன் மங்கலம் வேந்தர்க்கு
மண்வேண்டிற் கைகூப்பன் மங்கலம்-பெண்வேண்டின்
துன்னன் மடவார்க்கு மங்கலந் தோலாப்போர்
மன்னன் வரைபுரையு மார்பு.

இ - ள். சுவர்க்கத்தை விரும்பின் வேறுபடுதல் ஆக்கம்; மண்ணுளவேண்டின் கைகுவித்தல் ஆக்கம் அரசர்க்கு; பெண்மைத் தன்மையை விரும்பின் அணையுமது பேதையர்க்கு ஆக்கம், தோல்வியறியாத பூசலையுடைய வேந்தன்றன் வரைபோன்ற அகலத்தை எ - று. (10)

## ௧௧௯. இதுவுமது

மன்னிய சிறப்பின் மங்கல மரபிற்
றுன்னின னென்றலு மத்துறை யாகும்.

இ - ள். நின்று நிலைத்த முறைமையினையுடைய மங்கலத்தை முறைமையாலே மேவினனென்று சொல்லுதலும் முன்புசொன்ன துறையேயாம் எ - று.

வ - று. தீண்டியுங் கண்டும் பயிற்றியுந் தன்செவியால்
வேண்டியுங் கங்குல் விடியலும் - ஈண்டிய
மங்கல மாய நுகர்ந்தான் மறமன்னர்
வெங்களத்து † வேலுயர்த்த வேந்து.

இ - ள். தீண்டக்கட்வன தீண்டியும் காணக்கடவன கண்டும் சொல்லக்கடவன சொல்லியும் தன்னுடைய செவியாற் கேட்கக்கடவன கேட்டும் இரவுப்பொழுது புலர்ந்ததாகத் திரண்ட மங்கலமானவற்றை அனுபவித்தான், மாற்சரியத்தையுடைய வேந்தர்தம் வெவ்விய போர்க்களத்து வென்று வேலேந்தின அரசன் எ - று. (11)

---

* புறநா. 383; 1; பெருங். 4. 7: 91 - 2. † புறநா. 58: 29; 309 : 7. (பி - ம்.) [1] 'ணோர்க'

## ௨௦௦. விளக்கு நிலை

அளப்பருங் கடற்றானையான்
விளக்குநிலை விரித்துரைத்தன்று.

இ - ள். அளத்தற்கரிய கடல்போன்ற சேனையினையுடையான்றனது விளக்கினது நிலையைப் பரப்பிச் சொல்லியது எ - று.

வ - று. *வளிதுரந்த கண்ணும் வலந்திரியாப் பொங்கி
ஒளிசிறந் தோங்கி வரலால் - அளிசிறந்து
நன்னெறியே காட்டு நலந்தெரி கோலாற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு.

இ - ள். காற்றெறிந்தவிடத்தும் வலமாகச் சுழன்றெழுந்து சோதிவிட்டு உயர்ந்துவருவதால், தண்ணளியைமிகுத்து அழகிய வழியைக் காட்டவல்ல நன்றியை ஆராயும் செங்கோலினையுடைய வேந்தற்கு வென்று முறைமையையே காட்டாநிற்கும் விளக்கு எ - று. (12)

## ௨௦௧. இதுவுமது

அடரவிர் பைம்பூண் வேந்தன் றன்னைச்
சுடரொடு பொருவினு மத்துறை யாகும்.

இ - ள். பொற்றகட்டாற் சிறந்து விளங்கும் பூணினையுடைய மன்னன்றன்னை ஆதித்தனோடு உவமிப்பினும் முன்புசொன்ன துறையேயாம் எ - று.

வ - று. வெய்யோன் கதிர்விரிய விண்மே லொளியெல்லாம்
மையாந் தொடுங்கி மறைந்தாங்கு - வையகத்துக்
கூத்தவை யேத்துங் கொடித்தேரான் கூடியபின்
வேத்தவையுண் மையாக்கும் வேந்து.

இ - ள். ஆதித்தனுடைய சோதிபரக்க ஆகாயத்திடத்து ஒளியையுடையனவெல்லாம் புற்கென்று அடங்கி ஒளித்தாற்போல, ஞாலத்துக் கூத்தர் திரளெல்லாம் புகழும் கொடித்தேரினை யுடையான் வந்தணைந்த பின்பு அரசவையிடத்துப் புற்கென்னும், வேந்தர்திரள் எ - று. (13)

## ௨௦௨. கபிலைகண்ணிய புண்ணியநிலை

அண்ண றன்மறை யந்தண ளர்க்குக்
கண்ணிய கபிலை நிலையுரைத் தன்று.

இ - ள். தலைமையாற்சிறந்த நான்கு வேதத்தினையுமுடைய அந்தணர்க்குக் கொடுக்கக் கருதிய பசுவினது முறைமையைச் சொல்லியது. எ - று.

வ - று. *பருக்காழுஞ் செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்
குருக்கட் †கபிலை கொடுத்தான் - செருக்கோ

---

* தொல். புறத். சூ. 29, இளம். மேற். † பெருங். 1. 39 : 64 - 9.

டிடிமுரசத் தானை யிகலிரிய வெங்கோன்
கடிமுரசங் [1] காலை செய.

இ - ள். பருத்தமணியும் சிவந்தபொன்னும் அந்தணர் முகந்துகொள்ள நிறைத்த கண்ணினையுடைய பசுக்களைத் தானம்பண்ணினான் களிப்போடு, இடிபோன் முழங்கும் முரசினையுடைய மாற்றார்சேனை மாறுபாடுகெட எம்முடைய நாயகன், காவன்முரசம் நாட்காலையிலே முழங்க எ - று. (14)

## ௨௦௩. வேள்விநிலை

அந்தமில் பு[illegible]னமரரு மகிழச்
செந்தீ வேட்ட சிறப்புரைத் தன்று.

இ - ள். முடிவில்லாத கீர்த்தியையுடையான் தேவர்களும் மனமகிழ யாகம்பண்ணின தலைமையைச் சொல்லியது எ - று.

வ-று. கேள்வி மறையோர் கிளைமகிழ்த லென்வியப்பாம்
வேள்வி விறல்வேந்தன் றான்வேட்ப - நீள்விசும்பின்
ஈர்ந்தா ரிமையோரு மெய்தி யழல்வாயால்
ஆர்ந்தார் முறையா லவி.

இ - ள். கேள்வியினையுடைய வேதியர்சுற்றம் உவத்தல் என்ன அதிசயமாம்? யாகத்தை வென்றிமன்னன் தான்விரும்ப உயர்ந்த சுவர்க்கத்தின் ஈரத்தாற் சிறந்த மாலையினையுடைய தேவர்களும் கிட்டி அழலாகிய வாயாலே அருந்தினார், முறையாலே அவியை எ - று.

எவனென்பது என்னெனக் குறைந்துநின்றது. (15)

## ௨௦௪. வெள்ளிநிலை

துயர்தீரப் புயறருமென
உயர்வெள்ளி நிலையுரைத்தன்று.

இ - ள். இடரொழிய மழையைத் தருமெனச் சொல்லி உயர்ந்த வெள்ளியினது நிலைமையைச் சொல்லியது எ - று.

வ-று. சூழ்கதிர் வான்விளக்கும் வெள்ளி சுடர்விரியத்
தாழ்புயல் வெள்ளந் தருமரோ - சூழ்புரவித்
தேர்விற்றார் தாங்கித் திகழ்ந்திலங்கு வேலோய்நின்
* மார்விற்றார் கோலி மழை.

இ - ள். சந்திராதித்தர் வலமாக இயங்கும் ஆகாயத்தினை விளங்கப் பண்ணாநிற்கும் வெள்ளியானகோள் ஒளி பரக்க, அதனாற் கால்வீழ்ந்த மேகம் மழைவெள்ளத்தைத் தரும்; தெரிந்த குதிரையாற் பூட்டப்பட்ட தேரின்மேல் வில்லையுடைய படையைத்தடுத்து மிக்கு விளங்கும் வேலினையுடையோய், நின்னுடைய அகலத்தின் மாலைபோல நீர்த்தாரை கோலி எ - று. (16)

---

* "மார்விற்றிருவிற் பொலிமாலையினான்" : கம்ப. சரபங்க. 9.
(பி - ம்.) [1] 'காலைச்செய'

௨௦௫. நாடு வாழ்த்து

தாட்டாழ் தடக்கையான்
நாட்டது வளமுரைத்தன்று.

இ - ள். காலிலே உறத் தாழ்ந்த பெரிய கரத்தினையுடையான் தேசத்தினது நன்மையைச் சொல்லியது எ - று.

வ-று. எண்ணி னிடரெட்டு மின்றி வயற்செந்நெற்
கண்ணின் மலரக் கருநீலம் - விண்ணின்
வகைத்தாய் வளனொடு வைகின்று வென்வேல்
நகைத்தாரான் றன்விரும்பு நாடு.

இ - ள். எண்ணுமிடத்து, எட்டிடரும் ஒழிந்து பழனத்திற் செந்நெலிற் கண்போலப் பூப்ப நீலோற்பலம், தெய்வலோகத்தின் படித்தாய்ச் செல்வத்துடனே அவதரித்தது; வென்றிவேலினையும் மலர்ந்த மாலையினையுமுடையான் பிரியப்படும் தேசம் எ - று.

இடரெட்டாவன: * "விட்டில் கிளிநால்வாய் வேற்றரசு தன்னரசு, நட்டம் பெரும்பெயல்காற் றெட்டு." (17)

௨௦௬. கிணைநிலை

திருக்கிளரு மகன்கோயில்
அரிக்கிணைவன் வளமுரைத்தன்று.

இ - ள். செல்வம்பெருகும் பரந்தமாளிகையிடத்து அழகிய கிணை கொட்டுமவனது நன்மையைச் சொல்லியது எ - று.

வ-று. † வெள்ளி முளைத்த விடியல் வயல்‡யாமை
அள்ளகட் டன்ன வரிக்கிணை - வள்ளியோன்
முன்கடை தட்டிப் பகடுவாழ் கென்னுமுன்
என்கடை நீங்கிற் றிடர்.

இ - ள். வெள்ளியெழுந்த வைகறையாமத்துச் செறுவின் யாமையினது செறிந்த வயிற்றினையொத்த அழகியகிணையை உபகாரியுடைய வாசற் கடைமுன்னே கொட்டி யானைவாழ்வதாகவென்று சொல்லுவதன் முன்னே என்னிடத்து நின்றும் ஒழிந்தது, துயர் எ - று.

இஃது அரசர்மேற்று. (18)

௨௦௭. களவழி வாழ்த்து

செங்களத்துச் செழுஞ்செல்வம்
வெணடுறையாழ்ப் பாணர்விளம்பின்று.

இ - ள். சிவந்த போர்க்களரியிடத்து வளவியசெல்வத்தை [1] ஆடற் பாட்டினை வல்ல யாழ்ப்பாணர் சொல்லியது எ - று.

---

* சீவக. 64, ந. மேற். † பொருந. 72. ‡ பு.வெ. 186, அடிக்.

(பி - ம்.) [1] 'யாழ்ப்பாட்டு'

வ - று. ஈண்டி யெருவை யிறகுளரும் வெங்களத்து
வேண்டியாங் கொண்ட விறல்வேழம் - வேண்டாள்
வளைகள் வயிரியம்பும் வாட்டானை வேந்தே
விளைகட் பகர்வாள் விலை.

இ - ள். திரண்டு பருந்து சிறகடிக்கொள்ளும் வெவ்விய பூசற்களரியிலே விரும்பி யாங்கள் கைக்கொண்ட வெற்றிவாரணத்தை விரும்பாள், சங்குகளும் கொம்பும் முழங்கும் வாளையுடைய சேனையினையுடைய மன்னனே, முதிர்ந்த நறவைவிற்பாள் அதன்விலைக்கு. எ - று. (௧௯)

௨0௪.—வீற்றினிதிருந்த பெருமங்கலம்:—

கூற்றிருந்த கொலைவேலான்
வீற்றிருந்த விறன்மிகுத்தன்று.

இ - ள். காலன்குடியிருந்த கொலைத்தொழிலையுடையவேலோன் செம்மாந்திருந்த வெற்றியைச் சிறப்பித்தது. எ - று.

வ - று. அழலவிர் பைங்க ணரிமா னமளி
நிழலவிர்பூண் மன்னர்நின் றேத்தக் - கழல்புனைந்து
வீமலிதார் மன்னவனும் வீற்றிருந்தான் வீங்கொலிநீர்ப்
பூமலி நாவற் பொழிற்கு.

இ - ள். தழலொளிரும் பசுங்கண்ணினுற்சிறந்த சிங்கஞ் சுமந்த அணைமேலே நிழலிலங்கும் ஆபரணத்தினையுடைய மன்னர் நின்றுவாழ்த்த வீரக்கழலினைக்கட்டி மலர்மிக்க மாலைவேந்தனுகிச் செம்மாந்திருந்தான், மிகும் ஒலிக்கடலையுடைத்தாய்ப் பொலிவுநிறைந்த நாவலந்தீவிற்கு. எ - று. (௨0)

௨0௯.—குடுமிகளைந்த புகழ்சாற்றுநிலை:—

நெடுமதி லெறிந்து நிரைதார் மன்னன்
குடுமி களைந்த மலிவுரைத் தன்று.

இ - ள். நீண்ட அரணினையழித்து நிரைத்தமாலையினையுடைய வேந்தன் குடுமி களைந்த மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. *பூந்தா மரையிற் பொடித்துப் புகல்விசும்பின்
வேந்தனை வென்றான் விறன்முருகன் - ஏந்தும்
நெடுமதில் கொண்டு நிலமிசையோ ரேத்தக்
†குடுமி களைந்தானெங் கோ.

இ - ள். பொலிவினையுடைய சரவணப்பொய்கையில் தாமரைப் பூவிலே தோன்றி வெற்றியாலுயர்ந்த விண்ணுலகத்தில் இந்திரனை வென்றான், வெற்றியினையுடைய குமரவேள்; அழகேந்தும் உயரிய அரணைக்கைக்கொண்டு பூமியிலுள்ளோர் வாழ்த்தத் தன்மயிர்ச்சிகையைக் கூட்டிமுடித்தான், எம்மன்னன். எ - று.

மதிலரசர் மணிமுடிகடந்தானென்றுமாம். (௨௧)

---

* பரி. 5: 49 - 56. † புறநா. 77: 2; கூர்ம. சுவேதவராக. 5.

உகo.—மணமங்கலம் :—

இகலடுதோ ளெறிவேன் மன்னன்
மகளிரொடு மணந்த மங்கலங் கூறின்று.

இ - ள். பகையைக்கொல்லும் புயத்தினையும் எறியும் வேலினையுமுடைய வேந்தன் அரிவையரோடுபுணர்ந்த நன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. அணக்கருந் தானையா னல்லியந்தார் தோய்ந்தோள்
மணக்கோல மங்கலம்யாம் பாட - வணக்கருஞ்சீர்
ஆரெயின் மன்னன் மடமக ளம்பணைத்தோட்
கூரெயிற்றுச் செவ்வாய்க் கொடி.

இ - ள். பகைவரான்வருத்துதற்கரிய சேனையினையுடையான்றன் அல்லிமாலையைமணந்தாள்; அதுவையணிப்பொலிவை யாங்கள்புகழ; தாழப்பண்ணுதற்கரிய மதிப்பினையும் நிறைந்த அரணினையுமுடையவேந்தன்றன் பேதையாகிய அழகிய மூங்கில்போன்ற தோளினையும் கூரிய பல்லினையும் சிவந்தவாயினையுமுடைய காமவல்லியனையாள். எ - று.
(உஉ)

உகக.—போலிவுமங்கலம் :—

வேல்வேந்த னுண்மகிழப்
பாலன் பிறப்பப் பலர்புகழ்ந் தன்று.

இ - ள். வேலினையுடையமன்னன் மனமுவப்பப் புதல்வன்பிறத்தலாற் பலரும் கொண்டாடியது. எ - று.

வ - று. கருங்கழல் வெண்குடைக் காவலற்குச் செவ்வாய்ப்
பெருங்கட் புதல்வன் பிறப்பப் - பெரும்பெயர்
விண்ணோர் மகிழ்ந்தார் வியலிடத்தா ரேத்தினார்
எண்ணா ரவிந்தா ரிகல்.

இ - ள். வலியவீரக்கழலினையும் தவளசத்திரத்தையுமுடைய வேந்தற்குச் சிவந்தவாயினையும் பெரியகண்ணினையுமுடைய மைந்தன் பிறத்தலாற் பெரிய நாமத்தினையுடைய தேவர்கள் மகிழ்ந்தார் : அகன்ற பூமியிலுள்ளார் வாழ்த்தினார் : பகைவர் மாறுபாடொழிந்தார். எ - று.
(உ௩)

உகஉ.—நாண்மங்கலம் :—

அறந்தரு செங்கோ லருள்வெய்யோன்
பிறந்தநாட் சிறப்புரைத் தன்று.

இ - ள். தருமத்தினையுண்டாக்கும் செங்கோலினையும் அருளினையும்விரும்பியோன் பிறந்தநாளின் 1 நன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. கரும்பகடுஞ் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்
விரும்பி மகிழ்தல் வியப்போ - சுரும்பிமிர்தார்

(பி - ம்.) 1 'தன்மையை.'

வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து
தம்மதி ருந்திறப்பர் தாள்.

இ - ள். வலியயானையும் சிவந்தபொன்னும் பிறந்தநாளிற் பெற்றவர் விருப்பமுற்று இன்புறுதல் அற்புதமோ; வண்டினம் இசைக்கும் மாலையினையும் வெவ்விய மாறுபாட்டினையுமுடைய அரசரும் சங்கவளையுடையார் தோளைவிரும்பித் தம்முடைய அரணங்களிற் கதவைத் தாம் தாளினைநீக்குவர், இந்நாளிற் படையேவாரென்று. எ - று. (உச)

உகரு—பரிசினிலை:—

புரவலன் மகிழ்தூங்க
இரவலன் கடைக்கூடின்று.

இ - ள். உபகாரி இன்பத்திலேஅசைய, இரப்பாளன் போவானாக ஒருப்பட்டது. எ - று.

வ - று. வெல்புரவி பூண்ட விளங்கு மணித்திண்டேர்
நல்கிய பின்னு நனிநீடப் - பல்போர்
விலங்குங் கடற்றானை வேற்றார் முனைபோற்
கலங்கு மளித்தென் கடும்பு.

இ - ள். பகையைவெல்லும் குதிரைபூண்ட விளங்குமணியினையுடைய திண்ணிய பொற்றேரைக்கொடுத்தபின்னும் விடைதாழ்ப்ப, பல் பூசலினையும் விலக்கும் கடல்போன்றசேனையினையுடைய பகைவர்தேசம் போலத் துளங்கா நின்றது; அளிக்கத்தக்கது என்னுடைய சுற்றம். எ - று. (உரு)

உகசு.—பரிசில்விடை:—

வேந்தனுண் மகிழ வெல்புக ழுரைத்தோர்க்
கீந்து பரிசி லின்புற விடுத்தன்று.

இ - ள். அரசனுடைய மனங்களிப்ப வெல்லும்புகழைச் சொன்னோர்க்குப் பெறும்பேற்றை வழங்கி இனிமைமிக விடைகொடுத்தது. எ - று.

வ - று. படைநவின்ற பல்களிறும் பண்ணமைந்த தேரும்
நடைநவின்ற பாய்மாவு நல்கிக் - கடையிறந்து
முன்வந்த மன்னர் *முடிவணங்குஞ் சேவடியாற்
†பின்வந்தான் பேரருளி னான்.

இ - ள். பல்லணங்கெழுமிய பல யானையையும் பூட்டமைந்த தேரினையும் தாளத்திற்கொத்த நடைபொருந்திய குதிரையையும் வழங்கிக் கடைகழிந்து முற்படவந்தவேந்தர் முடிபணியும் சிவந்தபாதத்தாலே நடந்து என்பின்னே வந்தான், மிக்க அருளினையுடையனானவேந்தன். எ - று.

பின்வந்தமன்னர்க்கு இடம் கிடையாதாம். (உசு)

* "மன்னர்தம், முடியொடு முடிபொரு வாயின் முன்னினோர்" (கம்ப. எழுச்சி. 1.) † பின்வருதல்: பொருந. 166.

உகரு.—ஆள்வினைவேள்வி: —

வினைமுற்றிய கனைகழலோன்
மனைவேள்வி மலிவுரைத்தன்று.

இ - ள். கைத்தொழில் முடிவுபெற்ற செறிந்த கழலினையுடையோன் இல்லறத்தினுடைய நிறைவைச் சொல்லியது. எ - று.

வ - று. நின்ற புகழொடு நீடுவாழ் கிவ்வுலகில்
ஒன்ற வுயிர்களிப்ப வோம்பலால் - வென்றமருள்
வாள்வினை நீக்கி வருக விருந்தென்னும்
ஆள்வினை வேள்வி யவன்.

இ - ள். நிலைநின்ற கீர்த்தியோடு நெடுங்காலம்வாழ்க இந்த உலகிடத்து, ஒன்றுபட உயிர்க்கு மகிழ்ச்சிபெறக் காத்தலால்; பகைவரை வென்று பூசலுள் வாட்போரை முடித்து வருகவிருந்தினரென்று சொல்லும், முயற்சியாற் செய்யும் புண்ணியத்தையுடைய வேந்தன். எ - று. (உஎ)

உகசு.—பாணாற்றுப்படை :—

சேணோங்கிய வரையதரிற்
பாணனை யாற்றுப்படுத்தன்று.

இ - ள். மிகவுமுயர்ந்த மலைவழியிடத்துப் பாணனை வழியிலே செலுத்தியது. எ - று.

வ - று. இன்றொடை நல்லிசை யாழ்ப்பாண வெம்மைப்போற்
கன்றுடை வேழத்த கான்கடந்து - சென்றடையிற்
காமரு சாயலாள் கேள்வன் கயமலராத்
தாமரை சென்னி தரும்.

இ - ள். இனியகோவையினையுடைய நல்லிசையான் மலிந்த யாழினைவல்ல பாணனே, எங்களையொப்பக் களபத்தினையுடைய யானையியங்கப்பட்ட காட்டைக்கழிந்து சென்றுபொருந்தின், அழகுமருவின மென்மையினையுடையாள்கணவன் வாவியிற்பூவாத பொற்றாமரைப் பூவைத் தலையிலேசூட்டும். எ - று.

சென்றடையின், தருமெனக. (உஅ)

உகஎ.—கூத்தராற்றுப்படை :—

ஏத்திச்சென்ற விரவலன்
கூத்தரை யாற்றுப்படுத்தன்று.

இ - ள். தலைவனைக்கண்டு துதித்துமீண்ட இரப்பாளன் கூத்தாடுமவரை வழியிலே செலுத்தியது. எ - று.

வ - று. கொலைவிற் புருவத்துக் கொம்பன்னார் கூத்தின்
தலைவ தவிராது சேறி - சிலைகுலாங்

காரினை வென்ற கவிகையான் கைவளம்
வாரினை கொண்டு வரற்கு.

இ - ள். கொல்லுஞ்சிலைபோன்ற புருவத்தினையுடைய வஞ்சிக் கொம்பன்ன விறலியர்தம் நிருத்தத்திற்குத் தலைவனே, ஒழியாது போவாயாக ; இந்திரதனுவனையும் மழையைவென்ற தியாகத்தினையுடையான் கைவழங்குஞ் செல்வத்தைத் தொகுத்துக்கொண்டுவரற்கு. எ - று. (உக)

உகஅ.—பொருநாற்றுப்படை :—

பெருநல்லா னுழையீராகெனப்
பொருநனை யாற்றுப்படுத்தன்று.

இ - ள். மிக்க நன்மையினையுடையவன் பக்கத்தீராகவெனக் கிணைகொட்டுமவனை வழிப்படுத்தது. எ - று.

வ - று. தெருவி லலமருந் தெண்கட் *டடாரிப்
பொருவில் பொருநநீ செல்லிற் - செருவில்
அடுந்தடக்கை நோன்றா ளமர்வெய்யோ னீயும்
நெடுந்தடக்கை யானை நிரை.

இ - ள். தெருவிலே சுழன்று திரியும் தெளிந்த கண்ணால்மலிந்த கிணையினையுடைய ஒப்பில்லாத பொருநனே, நீ போவாயாகிற் பூசலிடத்துக் கொல்லும் பெரியகையினையும் வலியதாளினையுமுடைய போரைவிரும்புவோன் வழங்குவன், உயர்ந்த பெரிய கையினையுடைய களிற்றின் நிரையை. எ - று. (௩0)

உகக.—விறலியாற்றுப்படை :—

திறல்வேந்தன் புகழ்பாடும்
விறலியை யாற்றுப்படுத்தன்று.

இ - ள். வெற்றிமன்னன் கீர்த்தியைச்சொல்லும் பாணிச்சியை வழிப்படுத்தது. எ - று.

வ - று. †சில்வளைக்கைச் செவ்வாய் விறலி செருப்படையான்
பல்புகழ் பாடிப் படர்தியேல் - நல்லவையோர்
ஏத்த விழையணிந் தின்னே வருதியாற்
‡பூத்த கொடிபோற் பொலிந்து.

இ - ள். சிலவளைகளாற் சிறந்த கையினையும் சிவந்தவாயினையுமுடைய பாணிச்சி, பூசலிற்சிறந்த சேனையினையுடையான்றன் பல கீர்த்தியையும் வாழ்த்திப் போவாயாயின், நல்ல அவையிடத்துள்ளோர் புகழ ஆபரணத்தைப் பூண்டு இப்பொழுதே மீள்வையால், மலர்ந்த வல்லியையொப்பப் பொலிவுபெற்று. எ - று. (௩க)

உஉ0.—வாயுறைவாழ்த்து :—

பிற்பயக்கு மெஞ்சொல்லென
முற்படர்ந்த மொழிமிகுத்தன்று.

* மதுரை. 99 - 102. ந. † பதிற். 57 : 6, உரை. ‡ சீவக. 419 : 1 ; பெருங். 4. 11 : 47 - 8.

இ - ள். பின்னேபலிக்கும் எங்கள் வார்த்தையென்றுசொல்லி மேம்பட்ட சொல்லைச் சிறப்பித்தது. எ - று.

வ - று. எஞ்சொ லெதிர்கொண் டிகழான் வழிநிற்பிற்
குஞ்சர வெல்படையான் கொள்ளானே — எஞ்சும்
இகலிட னின்றி யெறிமுந்நீர் சூழ்ந்த
அகலிட மங்கை யகத்து.

இ - ள். எம்முடையவார்த்தையை ஏற்றுக்கொண்டு எள்ளானாகி முறைமையே நிற்பின் யானையால் நிறைந்த வெல்லுஞ் சேனைமன்னன் கைக்கொள்வன்; ஒழியும் இகல் இடமின்றியேபோக அலையுங்கடல் வளைந்த பரந்த பூமியை அங்கையிடத்திலே. எ - று.

அங்கையிடத்திலே கொள்ளானோவென்க. (௩௨)

௨௨௧.—செவியறிவுறூஉ :—

மறந்திரி வில்லா மன்பெருஞ் சூழ்ச்சி
அறந்தெரி கோலாற் கறிய வுரைத்தன்று.

இ - ள். மாற்சரியம் கெடுதலில்லாத நின்று நிலைத்த பெரிய எண்ணத்தைத் தருமத்தை ஆராயும் செங்கோலினையுடையாற்கு உணர மொழிந்தது. எ - று.

வ - று.*அந்தணர் சான்றோ ரருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதா யென்றிவர்க்குத் தார்வேந்தே - முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டன் முறை.

இ - ள். வேதியர் அமைந்தோர் அரியதவத்தினையுடையோர் தம்முடைய தமையன்மார் தமப்பன் மாதா இப்படியொத்த இவர்க்கு மாலைமன்னனே, முன்னோர்செய்த நெறியேநின்று பின்பு கடலை எல்லையாகவுடைய ஞாலத்து வார்த்தையை நின்றுகேட்குமது வழக்கு. எ - று. (௩௩)

௨௨௨.—குடைமங்கலம் :—

நாற்றிசையும் புகழ்பெருக
வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று.

இ - ள். நான்குதிக்கும் கீர்த்திமிக வீற்றிருந்த அரசன் குடையைப் புகழ்ந்தது. எ - று.

வ - று. தன்னிழலோ ரெல்லோர்க்குந் தண்கதிராந் தற்சேரா
வெந்நிழலோரெல்லோர்க்கும்வெங்கதிராம்-இன்னிழல்வேல்
†மூவா விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன்
கோவா யுயர்த்த குடை.

* தொல். புறத். சூ. 29, இளம். மேற்; குறள். 432, பரிமேல். வி. † பு - வே. 158.

இ - ள். தன்னுடைய நிழலில்வாழ்வார்பலர்க்கும் குளிர்ந்த நிறை மதியாம்; தன்னைச்சேராத வெய்யநிழலாராகிய பகையிடத்துள்ளார் பலர்க்கும் வெவ்விய இரவியாம்; இனியநிழல்விடும் வேலினையும் என்றும் புதிதாய்வரும் சீரிய கீர்த்தியையும் வெற்றிமாலையினையுமுடைய சோழன் அரசுதொழிற்கமைந்து உயர்த்த கொற்றக்குடை. எ - று. (கூச)

உஉஙூ.—வாண்மங்கலம் :—

கயக்கருங் கடற்றானை
வயக்களிற்றான் வாள்புகழ்ந்தன்று.

இ - ள். பகைவராற் கலக்குதற்கரிய கடல்போலும் சேனையினையும் வலிய யானையினையுமுடையான்வாளைப் புகழ்ந்தது. எ - று.

வ - று. கொங்கவிழ் ஐம்பான் மடவார் வியன்கோயில்
மங்கலங் கூற மறங்கனலும் - செங்கோல்
நிலந்தரிய செல்லு நிரைதண்டார்ச் சேரன்
வலந்தரிய வேந்திய வாள்.

இ - ள். தேன்மலரும் சுருள் குரல் அளகம் துஞ்சுகுழல் கொண்டையென்னும் ஐந்துபகுதியானமைந்த கூந்தலையுடைய பேதையர் அகன்ற மாளிகையிடத்து நன்மையைச்சொல்லச் சினமழலும்: நீதி நிலத்தைத்தருவான் வேண்டி நடக்கும் நிரைத்த குளிர்ந்த மாலையினையுடைய வானவன் வெற்றி வேண்டி உயர்த்த வாள். எ - று.

வியன்கோயிற் கொங்கவிழைம்பால் மடவார் நிலந்தரிய செல்லும் செங்கோலினது மங்கலத்தைக்கூற நிரைதண்டார்ச்சேரன் வலந்தரிய ஏந்தியவாள் மறங்கனலுமெனக்கூட்டுக.

செல்லும் - செலுத்துமென்றுரைப்பாருமுளர். (கூரு)

உஉச.—மண்ணுமங்கலம் :—

எண்ணருஞ் சீர்த்தி யிறைவ னெய்தி
மண்ணு மங்கல மலிவுரைத் தன்று.

இ - ள். எண்ணுதற்கரிய மிக்க புகழினையுடையஅரசன் பொருந்தி மஞ்சனம்பண்ணும் மங்கலத்தினது மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. * கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாள்
மங்கலங் கூற [1] மலிபெய்திக் - கங்கையாள்
பூம்புன லாகங் கெழீஇயினான் போரடுதோள்
வேம்பார் தெரியலெம் வேந்து.

இ - ள். தாதுவிரியும் மாலையாற்பொலிந்த கன்னியாகிய பேதைமையினையுடையநல்லவள் மங்கலத்தைச்சொல்லச் சிறந்துமணந்துகங்கை

* நன். சூ. 409, மயிலை. விரு. மேற். (பி - ம்.) 1 'மலிவெய்தி.'

யென்னும் பெயரினையுடையவள்பொலிந்த நீராகியமார்பை அணைந்தான் போரைவெல்லும் புயத்தினையும் வேம்புநிறைந்த மாலையினையுமுடைய எங்கள்மன்னன். எ - று. (நகூ)

உஉரு.—ஓம்படை:—

இன்னது செய்த லியல்பென விறைவன்
முன்னின் றறிவன் மொழிதொடர்ந் தன்று.

இ - ள். இன்னகாரியத்தைச் செய்யுமது தன்மையெனச்சொல்லி வேந்தன் முன்னேநின்று புலமைமிக்கவன் அடுத்துச்சொல்லியது. எ - று.

வ - று. *ஒன்றி லிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று †களங்கொண்ட வேல்வேந்தே - சென்றுலாம்
ஆழ்கடல்சூழ் வையகத்து ளைந்துவென் [1] றாறகற்றி
ஏழ்கடிந் தின்புற் றிரு.

இ - ள். ஞானத்தாலே [2] காரியாகாரியங்களைத்தெரிந்து நட்புப் பகை உதாசீனமென்னும் மூன்றினையும் உட்கொண்டு யானை தேர் குதிரை காலாளாலே பூசலைவென்று போர்க்களத்தைக் கைக்கொண்ட வேன்மன்னனே, பெயர்ந்து கரையைப்பொரும் ஆழ்ந்த கடல்சூழ்ந்த குவலயத்து இந்திரியங்களைந்தையும்வென்று ஆறினையும்பெருக்கி ஏழினையுங்கடிந்து இனிமையுற்று நெடுங்காலமிருப்பாயாக. எ - று.

ஆறு ஏழாவன: "நாடிய நட்புப் பகைசெலவு நல்லிருக்கை, கூடினரைப்பிரித்தல் கூட்டலா-றீடிலா, ‡வேட்டங் கடுஞ்சொல் மிகுதண்டஞ் சூதுபொரு, ளீட்டங்கள் காமமிவை [3] யேழு."

ஒன்று - ஆன்மா; இரண்டு - புண்ணிய பாவம்; மூன்று - காமம் வெகுளி மயக்கம், உச்சாகசத்தி பிரபுசத்தி மந்திரசத்தி; நான்கு - சாம தான பேத தண்டம்; ஐந்து - சத்தப் பரிச ரூப ரத கந்தம்; ஆறு - படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்றுமாம். (நஎ)

உஉகூ.—புறநிலைவாழ்த்து:—

வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப
வழிவழி சிறக்கென வாய்மொழிந் தன்று.

இ - ள். நீ வணங்குந் தெய்வம் நின்னைப் பரிகரிப்ப நின் வழிவழி மிகுவதாகவெனச் சொல்லி உண்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. கொடிபடு முத்தலைவேற் கூற்றக் கணிச்சிக்
கடிபடு கொன்றையான் காப்ப - நெடிதுலகிற்
பூமலி நாவற் பொழிலகத்துப் போய்நின்ற
மாமலைபோன் மன்னுக நீ.

---

* நன். சூ. 268, மயிலை. விரு. மேற். † பு - வெ. 180 : 4, அடிக்குறிப்பைப் பார்க்க. ‡ குறள். 566, பரிமேல். வி. மேற்.

(பி - ம்.) 1 'ஆறடக்கி.' 2 'காரணகாரியங்களை.' 3 'ஏழ்.'

இ - ள். ஒழுங்குவிடும் மூன்றுஇலைத்தொழிலாற் பொலிந்த சூலத்தினையும் கூற்றம்போன்ற குந்தாலியினையும் நறுநாற்றமிகும் இதழியினையுமுடைய இறைவன் காப்ப நெடுங்காலம் நிலவலயத்துப் பொலிவு மிக்க நாவலந்தீவிடத்து அண்டமுருவிப்போய்நின்ற மாமேருவென்னும் பெரிய மலைபோல நின்று நிலைப்பாயாக. எ - று.

நாவலந் தீவிடத்து மன்னுவாயாக வெனக்கூட்டுக.

பூமியில் ஒருகூறு நாவலந்தீவு. (ருஅ)

உஉஎ.—கோடிநிலை :—

மூவர்கொடி யுள்ளு மொன்றொடு பொரீஇ
மேவரு மன்னவன் கொடிபுகழ்ந் தன்று.

இ - ள். அரி அயன் அரனென்னும் மூவர்கொடியுள்ளும் ஒன்றோடு உவமித்துப் பலரும் பொருந்துதல்வரும் வேந்தனுடைய கொடியைப் புகழ்ந்தது. எ - று.

வ - று. *பூங்க ணெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
†பாம்புண் பறவைக் கொடிபோல - வோங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி.

இ - ள். பொலிந்த கண்ணினையும் நெடியதிருமுடியினையும் காயாவின் மலர்போன்ற திருமேனியினையுமுடைய மாயவன் பாம்பையருந்தும் கருடக்கொடியையொப்ப உயர்க; பலவாரணத்தையுடைய வேந்தர் வணங்கக் குளிர்ந்த பூவாற்செய்த மாலையினையும் கொல்லுங்களிற்றினையுமுடைய வேந்தன்றன் வீரக்கொடி. எ - று.

வீரக்கொடி ஓங்குகவென்க. (ருக)

உஉஅ.—கந்தழி:—

சூழுநேமியான் சோவெறிந்த
வீழாச்சீர் விறன்மிகுத்தன்று.

இ - ள். வளைந்த திகிரியையுடையவன் சோவென்னும் அரணத்தினை அழித்த கெடாததன்மையினையுடைய வெற்றியைச் சிறப்பித்தது. எ - று.

வ - று. ‡மாயவன் மாய மதுவான் மணிநிரையுள்
ஆயனா வெண்ண லவனருளான் - காயக்
கழலவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்
சுழலழலுள் வைகின்று சோ.

இ - ள். கரியவன்வஞ்சம் அவ்வகையால்; மணியையுடைய ஆனிரையிடத்துக் கோவலனாக எண்ணாதேகொள்; அவன் அளியானாகிக் கோபிக்க அசுரர் கட்டின வீரக்கழல்நெகிழ விழியழலக் கையில்தொடியுடைய மகளிர்கள் மயக்கச் சுற்றுநெருப்புள்ளே தங்கினது, §சோவென்னும் அரண். எ - று. (சo)

* தொல். புறத். சூ. 27, இளம். மேற். † முருகு. 150 - 51; பரி. 4 : 41 - 2. ‡ தொல். புறத். சூ. 22, இளம். மேற். § பு - வெ. 101; நான்மணி. கடவுள்; சிலப். 17 : "மூவுலகும்"; கூர்ம. சுவேதவராக.

உஉகூ.—வள்ளி :—

பூண்முலையார் மனமுருக
வேன்முருகற்கு வெறியாடின்று.

இ - ள். ஆபரணத்திறற்சிறந்த முலையினையுடையார் நெஞ்சு நெகிழ வேலினையுடைய குமரனுக்கு வெறியென்னுங் கூத்தை ஆடியது. எ - று.

வ - று. *வேண்டுதியா னீயும் விழைவோ விழுமிதே
ஈண்டியம் விம்ம வினவளையார் - பூண்டயங்கச்
சூலமொ டாடுஞ் சுடர்ச்சடையோன் காதலற்கு
வேலனொ டாடும் வெறி.

இ - ள். விரும்புதியால் நீயும்; இவ்விருப்பம் சாலச் சீரிது; திரண்ட வாச்சியங்கள் ஒலிப்பத் தம்மிற்றுமொத்த தொடியினையுடையார் ஆபரணமிலங்கச் சூலத்துடனே கூத்தாடும் சோதியான்மிகும் வேணியினையுடையான் புதல்வனுக்கு வெறியாட்டாளனுடனாடும் வள்ளிக் கூத்தை. எ - று.

வெறி வேண்டுதியால் நீயுமென்க. (சக)

உநடு.—புலவராற்றுப்படை :—

இருங்கண்வானத் திமையோருழைப்
பெரும்புலவனை யாற்றுப்படுத்தன்று.

இ - ள். பெரிய இடத்தினையுடைய வானத்துத் தேவர்களிடை மிக்க அறிவாளனை நெறியிலே செலுத்தியது. எ - று.

வ - று. *வெறிகொ ளறைபருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும் - பொறிகட்
கிருளீயு ஞாலத் திடரெல்லா நீங்க
அருளீயு மாழி யவன்.

இ - ள். நறுநாற்றத்தினை யுடைத்தாய் ஒலிக்கும் அருவியாற் பொலிந்த திருவேங்கடத்திடத்துப் போவையாயின், முறைமைகொண்ட வேடத்தையுடையோய், நீயும், இந்திரியங்கட்கு மயக்கங்கொடுக்கும் காசினியில் துயரெல்லாமொழிய அருளைவழங்கும், சக்கரத்தினையுடையவன். எ - று.

நீயும்செல்லின் அருளீயுமெனவே, எனக்கு நல்கினனென்பதாம்; † “ உலவா ஆக்கமா டுன்னியது முடிக்கும், புலவ ராற்றுப்படை புத்தேட்கு முரித்தே ” என்பதனானறிக. (சஉ)

உநடக.—புகழ்ந்தனர் பரவல் :—

இன்னதொன் றெய்துது மிருநிலத்தியாமெனத்
துன்னருங் கடவுட் டொடுகழ றொழுதன்று.

* தொல். புறத். சூ. 22, இளம்.மேற். † பன்னிருபாட்டியல், 320.

இ - ள். இன்னதொருபதத்தைக் கிட்டுவோமாகப் பெரியபூமி யிடத்து யாங்களெனச்சொல்லிக் கிட்டுதற்கரிய தெய்வத்தின் கட்டும் வீரக்கழலையுடைய பாதங்களைப் பணிந்தது. எ - று.

வ - று. சூடிய வான்பிறையோய் *சூழ்சுடலை நீற்றரங்கத்
தாடி யசையா வடியிரண்டும் - பாடி
உரவுநீர் ஞாலத் துயப்போக வென்று
பரவுதும் பல்காற் பணிந்து.

இ - ள். சடையிலே சூடிய வாலிதான இளமதியையுடையோய் சுற்றிய சுடுகாடான சாம்பலரங்கத்திலே நிருத்தமாடி வருந்தாத சீர்பாத மிரண்டையும் துதித்து, உலாவும் கடல்சூழ்ந்த பூமியினின்றும் பிழைத்து நன்னெறிக்கண்ணே போவோமென்றுசொல்லிப் பழிச்சுதும், பலகாலும் வணங்கி. எ - று. (௩௩)

௨௩௨.—பழிச்சினர்பணிதல் :—

வயங்கியபுகழ் வானவனைப்
பயன்கருதிப் [1]பழிச்சினர்ப் பணிந்தன்று.

இ - ள். விளங்கிய கீர்த்தியையுடைய இறைவனைப் பெறும் பேற்றை நினைந்து வாழ்த்தினராய் வணங்கியது. எ - று.

வ - று. ஆட லமர்ந்தா னடியடைந்தா ரென்பெறார்
ஓடரி யுண்க ணுமையொருபாற் - கூடிய
சீர்சா லகலத்தைச் செங்க ணழலுகம்
தாராய்த் தழுவப் பெறும்.

இ - ள். திருக்கூத்தாடுதலை மேவினவன் சீர்பாதங்களைச்சேர்ந் தார் என்பெறார்? செவ்வரி கருவரிபரந்த மையுண்கண்ணினையுடைய உமாதேவி ஒரு பக்கத்தே பொருந்திய விழுப்பமமைந்த திருமார்பத் தைச் சிவந்தகண்ணினையுடைத்தாய் அழலும்பாம்பு மாலையாய்ப்பொருந் தப்பெறும். எ - று.

ஆதலால், ஆடலமர்ந்தான் அடியடைந்தார் என்பெறாரென்க. (௩௪)

௨௩௩.—கைக்கிளை :—

தண்டாக் காதற் றளரிய றலைவன்
வண்டார் விரும்பிய வகையுரைத் தன்று.

இ - ள். கெடாத அன்பினையும் நுடங்குந்தன்மையினையுமுடைய வள், தலைவனுடைய வளவிய மாலையை ஆசைப்பட்ட கூறுபாட்டைச் சொல்லியது. எ - று.

வ - று. மங்குன் மனங்கவர மான்மாலை நின்றேற்குப்
பொங்கு மருவிப் புனலுடன் - கங்குல்

---

* கலி. கடவுள்வாழ்த்து.

(பி - ம்.) [1]'பழிச்சினர்பணிந்தன்று.'

வருவான்கொல் வந்தென் வனமுலைமேல் வைகித்
தருவான்கொன் மார்பணிந்த தார்.

இ - ள். சிறுதுவலைதூவற்றும் கார் என்னெஞ்சைக்கொள்ள மயக்கத்தைச்செய்யும் மாலைப்பொழுதிலே தனியேநின்றேற்கு மிகும் ஒழுக்கத்தினையுடைய நீராற்சிறந்த நாடனாகியசோழன் இரவுப்பொழுதிடத்து வருவான் கொல்? வந்து என்னுடைய அழகியகொங்கைமேலேதங்கித் தருவான்கொல், மார்பினணிந்த மாலையை? எ - று. (சரு)

உ௱ச.—பெருந்திணை :—

பெய்கழற் பெருந்தகை பேணு முயக்கிவர்ந்து
மல்கிருட் செல்வோள் வகையுரைத் தன்று.

இ - ள். இட்ட வீரக்கழலினையும் மிக்க தலைமையினையுமுடையவன் விரும்பாத புல்லுதலைவேட்டு மிக்க இருட்காலத்துப் போமவளது தன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. வயங்குளைமான் றென்னன் வரையகலந் தோய
இயங்கா விருளிடைச் செல்வேன் - மயங்காமை
ஓடரிக் கண்ணு யுறைகழிவாண் மின்னிற்றுல்
*மாட மறுகின் மழை.

இ - ள். விளங்கும் தலையாட்டத்தால்அழகுபெற்ற குதிரையினையுடைய பாண்டியனது வரைபோன்றமார்பைத் தழுவ ஒருவரும் நடக்கத்தகாத செறிந்த இருளிடத்துப் போவேன் மருளாதபடி, செவ்வரி கருவரிபரந்த கண்ணினையுடையாய், உறைநீக்கினவாள்போல மின்னிற்று, மாளிகையான் மிக்க தெருவிலே மேகம். எ - று.
ஆல், அசை. (சசு)

உ௱௫.—புலவிபொருளாகத்தோன்றியபாடாண்பாட்டு :—

வில்லேர் நுதலி விறலோன் மார்பம்
புல்லேம் யாமெனப் புலந்துரைத் தன்று.

இ - ள். விற்போன்ற நெற்றியினையுடையாள் வீரன்றன் அகலத்திடத்தைத் தழுவேம்யாமென்று ஊடிச்சொல்லியது. எ - று.

வ - று. †மலைபடு சாந்த மலர்மார்ப யாநின்
பலர்படி செல்வம் படியேம் - புலர்விடியல்
வண்டினங்கூட் டுண்ணும் வயல்சூழ் திருநகரிற்
கண்டனங் காண்டற் கினிது.

இ - ள். மலையகத்துண்டான சந்தனத்தையுடைய அகன்ற மார்பனே, யாங்கள் நின்னுடைய பரத்தையர்பலருந்தோயும் சம்பத்தைத் தோயேம்;

* முருகு. 71; பரி. 20: 25. † தொல். புறத். சூ. 22, இளம். மேற்.

பொழுதுபுலரும் விடியற்காலத்தே சுரும்பினங்கள் புணர்ந்துநுகரும் பழனஞ் சூழ்ந்த செல்வப்பதியிலேகண்டேம்; நோக்குதற்கு இனிதாயிருந்தது. எ - று.

மலர்மார்பனே, பரத்தையர் பலர்படியும் நின்செல்வத்தை வயல் சூழ் திருநகரிற்கண்டேம்; இனி யாங்கள் தோயேமெனக்கூட்டுக.

பாடாண்டிணையிற் கைக்கிளைவகையும் பெருந்திணைவகையும் புலவி பொருளாகத்தோன்றிய பாடாண்பாட்டும், பாட்டுடைத்தலைமகனையே கிளவித் தலைமகனாகக் கூறினாராதலின், * [1]"உருவி யாகிய வொருபெருங் கிழவனை, [2]அருவி கூறுத லானந் தம்மே" என்னும்விதி தகாது. (௪௭)

௨௩௯.—கடவுண்மாட்டுக் கடவுட்பெண்டிர் நயந்தபக்கம்:—

இமையா நாட்டத் திலங்கிழை மகளிர்
அமையாக் காத லமரரை மகிழ்ந்தன்று.

இ - ள். இமையாத கண்ணினையும் ஒளிவிடும் ஆபரணத்தினையு முடைய தெய்வமகளிர் ஆராத அன்புடையகடவுளரைவிரும்பியது. எ-று.

வ - று. †நல்கெனி னாமிசையா ளோமென்னுஞ் சேவடிமேல்
ஒல்கெனி னுச்சியா ளோமென்னும் - மல்கிருள்
ஆட லமர்ந்தாற் கரிதா லுமையாளை
ஊட லுணர்த்துவதோ ராறு.

இ - ள். அருள்செய்கெனச்சொல்லின், நம்முடைய நாவின்மே லிருக்கும் சொன்மகள் நோவுபடுமென்றுசொல்லும்; சிவந்தபாதத்திலே வணங்குவேனென்று சொல்லின், நம்முடைய திருமுடிமேலிருக்கும் கங்காதேவி நோவுபடுமென்றுசொல்லும். மிக்க இருளிடத்துத் திருக் கூத்தைமேவின இறைவனுக்கு அருமையுடைத்தாயிருந்தது, உமா தேவியை வழக்காட்டினைத் தீர்ப்பதொருநெறி. எ று. (௪௮)

௨௩௭.—கடவுண்மாட்டுமானிடப்பெண்டிர்நயந்தபக்கம்:—

முக்கணான் முயக்கம்வேட்ட
மக்கட்பெண்டிர் மலிவுரைத்தன்று.

இ - ள். மூன்று திருநயனத்தையுடையானது புல்லுதலை விரும் பின மானிடமகளிர் கூறுபாட்டைச் சொல்லியது. எ - று.

வ - று. †அரிகொண்ட கண்சிவப்ப வல்லினென் னாகம்
புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி - வரிவண்டு
பண்ணலங்கூட் டுண்ணும் பனிமலர்ப் பாரூரன்
உண்ணலங் கூட்டுண்டா னூர்.

இ - ள். செவ்வரி கருவரி பரந்த விழிசிவப்பக் [3]கனவில் என்னு டைய மார்பினை முறுக்குதலுடைத்தான பூணூற்றழும்புபடப் புல்லி, வரி

* யா - வி. சூ. 95, மேற். † தொல். புறத். சூ. 23, இளம். மேற்.

(பி - ம்) [1]'உருபி.' [2]'அருபி.' [3]'இராப்பொழுதில்.'

யினையுடைய சுரும்பினம் பண்ணின் நலத்தைப்பாடித் திரண்டு அனுப விக்கும் குளிர்ந்த பூவினையுடைய திருப்பாசூர், என்னுடைய மனத்தின் அழகைச் சிறிதும் ஒழியாமல் நுகர்ந்தவனுடைய பதி. எ - று. (௬௯.)

௨௬௨.—*குழவிக்கட்டோன்றிய காமப்பகுதி :—

இளமைந்தர் நலம்வேட்ட
வளமங்கையர் வகையுரைத்தன்று.

இ - ள். குழவிப்பதத்தராகிய மைந்தரது நலத்தைவிரும்பின காமப்பகுதிநிறைந்த மங்கையரது தன்மையைச் சொல்லியது. எ - று.

வ - று. †வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா
அரிக்கண்ணி யஞ்சி யலற - எரிக்கதிர்வேற்
செங்கோல னுங்கோச் சினக்களிற்றின் மேல்வரினும்
எங்கோலந் தீண்ட லினி.

இ - ள். அழகிய கந்துகத்தைக் கைப்பற்றிக் கரந்தாய், வாள்வேந் தன் மைந்தனே, செவ்வரிகருவரிபரந்த கண்ணினையுடையாள் பயப் பட்டுஅழ ; நெருப்புப்போன்ற ஒளிவேலினையும் செவ்விய கோலினையு முடைய நம்முடைய சாமி கோபத்தினையுடைய யானையின்மேலே தந்து தோன்றினும்,எம்முடைய அணியினைத் தீண்டாதேகொள்,இப்பொழுது. எ - று. (௭௦)

௨௬௩.—ஊரின்கட்டோன்றிய காமப்பகுதி :—

நீங்காக் காதன் மைந்தரு மகளிரும்
பாங்குறக் கூடும் பதியுரைத் தன்று.

இ - ள். ஒழியாத அன்பினையுடைய ஆடவரும் மகளிரும் அழகு பொருந்தக் கூடும் பதியைச் சொல்லியது. எ - று.

வ - று. ‡ஊடிய வூட லகல வுளநெகிழ்ந்து
வாடிய மென்றோள் வளையொலிப்பக் - கூடியபின்
யாமநீ டாகென்ன யாழ்மொழியார் கைதொழூஉம்
ஏமநீர்க் கச்சியெம் மூர்.

இ - ள். வழக்காடிய வழக்காட்டுப்போக மனநெகிழ்ந்து வாட்ட முற்ற மெல்லியதோளில் தொடி ஆர்ப்பப் புணர்ந்தபின்பு இரவுப் பொழுது நீட்டிப்பதாக வெனச்சொல்லி யாழிசைபோலும் சொல்லினை யுடையார் கைகூப்பும் காவலுடைத்தாய்ப் புனலாற்சிறந்தகாஞ்சி,எங்கள் பதி. எ - று.

ஆகவென்பது, ஆகெனக் குறைந்துநின்றது. (௭௧)

பாடாண்திணைப்பாட்டு ௯-ம், துறைப்பாட்டு ௭௦-ம் முடிந்தன.

ஒன்பதாவது பாடாண்படலம் முற்றிற்று.

---

* பரி. 10: 107; கலி. 51; திருவாய். 6. 2: "மின்னிடை"; திரு வேங்கடத். 97. † தொல். புறத். சூ. 24, இளம். மேற்; வரிப்பந்து: குறுந். 68: நற். 305: 1; கலி. 51: 3. ‡ பு - வெ. 317.

பத்தாவது

# பொதுவியற்படலம்.

(கo.—சூத்திரம்.)

சீர்சால் போந்தை வேம்பொ டாரே
உன்ன நிலையே யேழக நிலையே
கழனிலை யேனைக் *கற்காண் டல்லே
கற்கோ ணிலையே கன்னீர்ப் படுத்தல்
ரு கன்னடு தல்லே கன்முறை பழிச்சல்
இற்கொண்டு புகுத லென்றபன் னிரண்டும்
பொதுவியற் பால வென்மனார் புலவர்.

என் - னின், பொதுவியற்பால வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். போந்தைமுதல் இற்கொண்டு புகுதல் இறுதியாகிய பன்னிரண்டும் பொதுவியற்பாலவாம். எ - று.

அவற்றுள்:—

உசo.—போந்தை:—

கலவா மன்னர் கண்ணுறு ஞாட்பிற்
புலவேல் வானவன் பூப்புகழ்ந் தன்று.

இ - ள். பொருந்தாவேந்தர் கிட்டின பூசலிடத்துப் புலால்நாறும் வேலினையுடைய சேரன் சூடும்பூவைப் புகழ்ந்தது. எ - று.

வ - று. †குடையலர் காந்தட்டன் கொல்லிச் சுனைவாய்த்
[1]தொடையவிழ் தண்குவளை சூடான் - புடைதிகழும்
தேரதிரப் பொங்குந் திருந்துவேல் வானவன்
போரெதிரிற் போந்தையாம் பூ.

இ - ள். குடைபோன்மலரும் கோடலையுடைய தன்கொல்லிமலைச் சுனையிடத்துக் கட்டலரும் குளிர்ந்த செங்கழுநீர்ப்பூவை மலையான்; பக்கம் விளங்கும் பகைவர்தேர்த்தானைநடுங்கக் கோபிக்கும் திருந்திய வேலையுடைய சேரன், பூசல் தோற்றிற் பனந்தோடாம், அவன் சூடும் பூ. எ - று. (க)

உசக.—வேம்பு:—

விரும்பா ரமரிடை வெல்போர் வழுதி
சுரும்பார் முடிமிசைப் பூப்புகழ்ந் தன்று.

இ - ள். பகைவர்பூசலிடத்து வெல்லும்போரையுடைய பாண்டியன் வண்டுநிறைந்த மகுடத்தின்மீதே புனையும் மலரினைப் புகழ்ந்தது. எ - று.

வ - று. †தொடியணிதோ ளாடவர் தும்பை புனையக்
கொடியணிதேர் கூட்டணங்கும் போழ்தின் - முடியணியும்

---

* தொல். புறத். சூ. 5: 19 - 20; சிலப். பதிகம், 84 - 5. † தொல். புறத். சூ. 5, இளம். மேற்.

(பி - ம்) [1]'தொடையளி.'

காத்தல்சால் செங்கோற் கடுமா னெடுவழுதி
ஏத்தல்சால் வேம்பி னிணர்.

இ - ள். கடகம்பொலிவுறு புயத்தினையுடைய வீரர் போர்ப்பூவைச் சூடப் பதாகையாற்சிறந்த தேர் பகைத்திரளை வருத்துங் காலமாகிய போரில் மகுடத்திலே சூடும்; காத்தலமைந்தசெங்கோலினையும் கடிய குதிரையினையுமுடைய அளவிடுதற்கரிய பாண்டியன் புகழ்தலமைந்த வேம்பின்பூக்கொத்தினை. எ - று.

இணர் முடியணியுமென்க. (௨)

௨சா௨.—ஆர்:—

விறற்படை மறவர் வெஞ்சமங் காணின்
மறப்போர்ச் செம்பியன் மலைபூ வுரைத்தன்று.

இ - ள். வெற்றியினையுடைய சேனைவீரர்தம் வெய்ய பூசலைக் காணிற் கொடுவினைப்பூசலைச் செய்யவல்ல சோழன்பூனையும் மலரினைச் சொல்லியது. எ - று.

வ - று. *கொல்களி றூர்வர் கொலைமலி வாண்மறவர்
வெல்கழல் வீக்குவர் வேலிளையர் - மல்கும்
கலங்க லொலிபுனற் காவிரி நாடன்
அலங்க லமரழுவத் தார்.

இ - ள். கொல்லும்யானையைச்செலுத்துவர் கொலைத்தொழிலின் மிக்க வாள்வீரர்; வெல்லும் வீரக்கழலினைக் கட்டுவர் வேலினையுடைய இளையவர்; மிகும் செங்கலங்கலையுடைத்தாய் முழங்கும் புனலினையுடைய பொன்னிநாடன்மாலை, பூசல்நடுவு ஆத்தி. எ - று. (௩)

௨சா௩.—உன்னநிலை:—

துன்னருஞ் சிறப்பிற் றொடுகழன் மன்னனை
உன்னஞ் சேர்த்தி யுறுபுகழ் மலிந்தன்று.

இ - ள். கிட்டுதற்கரிய நன்மையினையும் கட்டுங்கழலினையுமுடைய வேந்தனை நிமித்தம்பார்க்கும் மரத்தொடு கூட்டி மிகுபுகழைச் சொல்லியது. எ - று.

வ - று. *துன்னருந் தானைத் தொடுகழலான் றுப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் மூரண்முருங்க - மன்னரும்
ஈடெலாந் தாங்கி யிகலவிந்தார் நீயுநின்
கோடெலா முன்னங் குழை.

இ - ள். கிட்டுதற்கரிய சேனையினையும் கட்டும் வீரக்கழலினையுமுடைய நம் வேந்தன்றன் வலியோடு மாறுபட்டு முன்னேவந்து பணியாதார் மாறுபாடு இனிக்கெட, எதிர்ந்த வேந்தரும் இவன்வலியெலாம் தடுத்து மாறுபாடொழிந்தார்; நீயும், நின்னுடையபணையெல்லாம் † உன்னமரமே, தளிர்ப்பாயாக. எ - று.

---

* தொல். புறத். சூ. 5, இளம். மேற். † தொல். புறத். சூ. 5; பதிற். 40: 17-8, 61: 6; புறநா. 3: 23.

உ௪௪.—ஏழகநிலை :—

ஏழக மூரினு மின்ன னென்றவன்
தாழ்வி லூக்கமொடு தகைபுகழ்ந் தன்று.

இ - ள். ஏழகத்தகரினை மேற்கொண்டு செலுத்தினும் இத்தன்மையனென்று அவனுடைய குற்றமில்லாத மனவெழுச்சியோடு மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. எம்மனை யாமகிழ *[1] வேழக மேற்கொளினும்
தம்மதி [2]ரூழ்வீழ்த் திருக்குமே - தெம்முனையுள்
மாவொடு தோன்றி மறலுங்கா லேழகத்
தாவொடு நேரா மரசு.

இ - ள். எம்முடைய இல்லிடத்து யாங்கள் பிரியப்பட ஏழகத்தை யேறினும், தம்முடைய அரணிடத்துத் தாழ்கோத்திருக்கும்; பகைப்புலத்துக் குதிரைமிசையே தோற்றிப் போரைச் செய்யுங்காலத்துக் கிடாயின்மேல் அமைந்தாவொடு செலவாம், அரசு. எ - று. (ரு)

உ௪ரு.—இதுவுமது:—

ஏந்துபுக ழுலகி னிளமை நோக்கான்
வேந்து நிற்றலு மேழக நிலையே.

இ - ள். உயருங் கீர்த்தியையுடைய ஞாலத்தின் இளமையைப் பாராதே அரசன் பூமிகாவல் பூண்டுநிற்பினும் ஏழகநிலையேயாம். எ - று.

வ - று. வேண்டார் பெரியர் விறல்வேலோன் றானிளையன்
பூண்டான் பொழில்காவ லென்றுரையாம் - ஈண்டு
மருளன்மின் †கோள்கருது மால்வரை யாளிக்
குருளையுங் கொல்களிற்றின் கோடு.

இ - ள். பகைவர் பெரியர், வென்றிவேலினையுடையோன்றான் இளமைப்பருவத்தோன், பூமிகாவலை மேற்கொண்டானென்று சொல்லாம்; இவ்விடத்து மயங்காதே கொண்மின்; கொள்கையைநினையும், பெரியமலையிடத்து யாளியின் குட்டியும் கொல்லும் யானையின் கொம்பை. எ - று. (சா)

உ௪சா.—கழனிலை :—

அடுமுர ணகற்று மாளுகு ஞாட்பிற்
கடுமுரண் வயவன் கழல்புனைந் தன்று.

இ - ள். கொல்லும் மாறுபாட்டைப்பெருக்கும் வீரர்படும் பூசலிற் கடிய முரணையுடையவீரன் கழலைப் புனைந்தது. எ - று.

வ - று. ‡ வாளமரின் முன்விலக்கி வான்படர்வார் யார்கொலோ
கேளலார் நீக்கிய கிண்கிணிக்காற் - காளை

* "விரைசெலல் வெம்பரி மேழக மேற்றி" சீவக. 521. † பொருந. 139 - 42; அகநா. 381 : 1 - 3; சீவக. 2554. ‡ தொல். புறத். சூ. 5, இளம். மேற்.

(பி - ம்.) 1 'மேழகம்.' 2 'தாள்.'

கலங்கழல் வாயிற் கடுத்தீற்றி யற்றால்
பொலங்கழல் கான்மேற் புனைவு.

இ - ள். வாட்பூசலில் எதிர்நின்று விலக்கிச் சுவர்க்கத்திடத்துச் செல்வார் யாவர்கொல்லோ? உறவல்லாதாரைப் போக்கிய சதங்கை அமைந்த தாளினையுடைய இளமைப்பருவத்து வேந்தன், மிக்கநெருப்பின் வாயிலே நஞ்சைத்தீற்றிய தன்மைத்து, பொன்னாற்செய்த வீரக்கழலைச் சேவடியின்மீது அணியுமது. எ - று. (எ)

உசஎ.—கற்காண்டல் :—

ஆறு வென்றி யமரில்வீழ்ந் தோற்குக்
கான நீளிடைக் கற்கண் டன்று.

இ - ள். அமையாத வெற்றியையுடைய பூசலிற் பட்டோர்க்குக் காட்டில் நீண்டவிடத்துக் கல்லைக்கண்டது. எ - று.

வ - று. *மிகையணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்
புகையணங்கப் பூமாரி சிந்திப் - பகையணங்கும்
வீளைக் கடுங்கணையால் வேறாகி விண்படர்ந்த
காளைக்குக் கண்டமைத்தார் கல்.

இ - ள். மிக்க தெய்வத்தை உடம்பிலே நிறுத்தித் தலைமையினையுடைய வீரர் தூமமணி ஆர்ப்ப மலர்மழையைச் சிதறிச் சத்துருக்களை வருத்தும் சத்தத்தினையுடைய கொடியஅம்பாலே வேறுபட்டு விண்ணிடத்துச்சென்ற இளமைப்பருவத்து வீரனுக்குப் பார்த்து நிச்சயித்தார், கல்லினை. எ - று. (அ)

உசஅ.—கற்கோணிலை :—

மண்மருளத் துடிகறங்க
விண்மேயாற்குக் கற்கொண்டன்று.

இ - ள். பூமிமயங்கப் பறையொலிப்பச் சுவர்க்கத்திலே பொருந்தினவனுக்குக் கல்லினைக்கொண்டது. எ - று.

வ - று. *பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து
நாவுடை நன்மணி நன்கியம்ப - மேவார்
அழன்மறங் காற்றி யவிந்தாற்கென் றேத்திக்
கழன்மறவர் கைக்கொண்டார் கல்.

இ - ள். மலருடனே புனலைச் சிந்தி எழும்படியாக நறுநாற்றமுடையனவற்றைப் புகையப்பண்ணி நாவினாற்பொலிந்த அழகியமணி நன்றாக இசைப்ப, பொருந்தாதார் எரியுஞ்சினத்தைக் காலுவித்துப் பட்டவனுக்குத் தக்கது இதுவென்று துதித்துக் கழல்வீரர் கைக்கொண்டார் கல்லினை. எ - று. (கூ)

உசகூ.—கன்னீர்ப் படுத்தல் :—

வண்டுசூழ் தாமம் புடையே யலம்வரக்
கண்டு கொண்ட கன்னீர்ப் படுத்தன்று.

* தொல். புறத். சூ. 5, இளம். மேற்.

இ - ள். சுரும்புசூழுமாலை பக்கத்திலே அசைந்துவரப் பார்த்துக் கைக்கொண்ட கல்லினைப் புனலிலேயிட்டது. எ - று.

வ - று. *காடு கனலக் கனலோன் சினஞ்சொரியக்
கூடிய வெம்மை குளிர்கொள்ளப் - பாடி
நயத்தக மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்
கயத்தகத் துய்த்திட்டார் கல்.

இ - ள். கானம் அழல ஆதித்தன் கோபத்தைப்பொழிதலாலே பொருந்தின வெப்பம் தண்ணென எத்தி நன்மையுண்டாகச் சுத்திபண்ணிப் பின் நறு நாற்றமுடையனவற்றைக்கொண்டு மஞ்சனமாட்டி வாவியிடத்திலே செலுத்தி அழுத்தினர் கல்லினை. எ - று. (ச0)

உரு0.—இதுவுமது :—

ஓங்கியகல் லுய்த்தொழுக்கல்
ஆங்கெண்ணினு மத்துறையாகும்.

இ - ள். உயர்ந்த கல்லினைச் செலுத்தி நிரைத்தலை அவ்விடத்துக் கருதினும் முன்புசொன்ன துறையேயாம். எ - று.

வ - று. கணஞரந் துவப்பக் கடுங்கண் மறவர்
பிணஞர்ந்து பேய்வழங்கு ஞாட்பின் - நிணஞர்
விழுக்கிஞல் வேய்ந்த விறல்வேலோர் கல்லை
ஒழுக்கிஞ ரொன்றொருவர் முன்.

இ - ள். தமது திரள் நிறைந்து மனமகிழத் தறுகண்வீரர் பிணத்தைத் தின்று கழுதுலாம்பூசலிடத்து நிணம்நிறையும் நெஞ்சில்தசையால் மூடின வென்றிவேலோர்செய்த செய்தொழில்தெரித்த கற்களை நிரைத்தார், ஒருவர்முன் ஒன்றாக. எ - று.

ஒருவரென்பது வினைதோறுங் கல் நடுவிக்கும் தலைவரை; ஒன்றொருவர் முன் - ஒருவரொருவர்முன்ஞக என்றுகொள்ளின், †"ஒன்றொருவரின் முன்னந்தழைவிழைதக்கன கொய்தும்" என்றதுபோலும். (கக)

உருக.—கன்னடுதல்:—

அவன்பெயர்கன் மிசைப்பொறித்துக்
கவின்பெறக் கன்ஞட்டின்று.

இ - ள். வீரன்நாமத்தைக் கல்லிலே எழுதி அழகுபெறக் கல்லை நட்டது. எ - று.

வ - று. *மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்
பீலி யணிந்து பெயர்பொறித்து - வேலமருள்
ஆண்டக நின்ற வமர்வெய்யோற் காகென்று
காண்டக நாட்டிஞர் கல்.

---

* தொல். புறத். சூ. 5, இளம். மேற். † இறை. சூ. 2, உரை, பி - ம்.

இ - ள். மாலையசையத் தூமமணியைக் கறங்கப்பண்ணி மதுவைத் தெளித்துப் பீலியைச் சூட்டி அவன்பெயரையெழுதி வேற்பூசலிடத்து ஆண்மைத்தன்மை மிகுதிபெறநின்ற போரைவிரும்பினவனுக்கு இஃது உருவமாகவென்று சொல்லிக் காட்சிபொருந்த நட்டார் கல்லினை. எ - று. (கஉ)

உருஉ.—கன்முறை பழிச்சல்:—

நிழலவி ழெழுழின்மணிப்பூட்
கழல்வெய்யோன் கல்வாழ்த் தின்று.

இ - ள். நிழல்விடும் அழகிய மணிப்பூணினையும் வீரக்கழலையு முடைய போர்விருப்பத்தோனுடைய கல்லினை ஏத்தியது. எ - று.

வ - று. *அடும்புகழ் பாடி யழுதழுது நோனு
திடும்பையுள் [1] வைகி யிருந்த - கடும்பொடு
கைவண் குருசில் †கற் கைதொழூஉச் செல்பாண
தெய்வமாய் நின்றான் றிசைக்கு.

இ - ள். பகைவரைக்கொல்லும் கீர்த்தியைச் சொல்லிக் கலுழ்ந்து கலுழ்ந்து பொறாதே துன்பத்துள்ளே தங்கியிருந்த சுற்றத்தாரோடு கைவளப்பத்தினையுடைய உபகாரிதன்கல்லினைக் கைதொழுது போவாயாக,பாணனே, கடவுளாய்நின்றான் திக்குஎட்டிற்கும். எ - று. (கங)

உருங.—இற்கொண்டு புகுதல்:—

வேத்தமருள் விளிந்தோன்கல்லென
ஏத்தினர் துவன்றி யிற்கொண்டு புக்கன்று.

இ - ள். வேந்தர்போரிடத்துப் பட்டவனுடைய கல்லென்று சொல்லி வழுத்தினராய்ச் செறிந்து கோயிலெடுத்துப் புக்கது. எ - று.

வ - று. *[2] வாட்புகா வூட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி யன்ன குருசில்கல் - ஆட்கடிந்து
விற்கொண்ட வென்றி விறன்மறவ ரெல்லோரும்
இற்கொண்டு புக்கா ரியைந்து.

இ - ள். வாளுக்கு உணவுகொடுத்துத் தெளிந்தமணி நின்று இரட்ட, கோட்பாட்டையுடைய புலியையொத்த உபகாரி கல்லை, போராளைத் துரந்து சிலையாற்பெற்றவெற்றியினையுடைய திறல்வீரர் பலரும் கோயிலெடுத்துப் புக்கார், கூடி. எ - று. (கச)

[சிறப்பிற் பொதுவியற்பால.]

(கக.—சூத்திரம்.)

முதுபாலையே சுரநடையேனைத்
தபுதார நிலையே தாபத நிலையே
தலைப்பெயனிலையே பூசன் மயக்கே

*தொல். புறத். சூ. 5, இளம். மேற். † புறநா. 306: 4.
(பி - ம்.) 1 'வைகிற்றிருந்த.' 2 'வாட்பலியூட்டி.'

மாலை நிலையே மூதா னந்தம்
ஆனந் தம்மே யானந்தப் பையுள்
கையறு நிலையுளப் படப்பதி ஞென்றும்
மையறு சிறப்பிற் பொதுவியற் பால.

என் - னின், இதுவும் பொதுவியற்பாலவா மாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். முதுபாலை முதலாகக் கையறுநிலையீறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் பொதுவியற்பாலவாம். எ - று.

அவற்றுள்,

உருச.—முதுபாலை :—

*காம்புயர் கடத்திடைக் கணவனை யிழந்த
பூங்கொடி மடந்தை புலம்புரைத் தன்று.

இ - ள். மூங்கில் ஓங்கின கானகத்துத் தன் கொழுநனையிழந்து பொலிந்த கொடிபோன்ற மடந்தையது தனிமையைச் சொல்லியது. எ - று.

வ - று. நீர்மலி கண்ணொடு நின்றே னிலையிரங்காய்
தார்மலி மார்பன் றகையகலம் - சூர்மகளே
வெள்ளில் விளைவுதிரும் வேயோங்கும் வெஞ்சுரத்துக்
கொள்ளனீ கோடல் கொடிது.

இ - ள். நீர்மிகுங் கண்ணோடே நின்றேனுடைய நிலைக்கு வருந்தாயாய் மாலைமிக்க அகலத்தையுடையவன் அழகியமார்பை, சூர்மகளே, விளாவினது பழமுதிரும் மூங்கில்உயர்ந்தகாட்டிடத்துக் கொள்ளுதல் ஒழிவாயாக நீ; கொள்ளுமது மிகவும் கொடுமையுடையது. எ - று. (க)

உருரு.—சுரநடை :—

மூதரி னிவந்த முதுகழை யாரிடைக்
காதலி யிழந்த கணவனிலை யுரைத்தன்று.

இ - ள். முதிர்ந்த பிணக்கமோங்கிய முற்றின மூங்கிலையுடைத்தாய் நிறைந்த இடத்திலே தலைவியை இழந்த தலைவன்முறைமையைச் சொல்லியது. எ - று.

வ - று. உரவெரி வேய்ந்த வுருப்பவிர் கானுள்
வரவெதிரின் வைவேல்வாய் வீழ்வாய் - கரவினால்
பேதையைப் பெண்ணியலைப் பெய்வளையை யென்மார்பிற்
கோதையைக் கொண்டொளித்த கூற்று.

இ - ள். உலாவும் நெருப்புமூடின வெப்புமிகுங் காட்டிடத்து என் முன்னே நீ வருதலை எற்பாயாயின், என்னுடைய கூரியவேலின்வாயிலே வீழ்வாய்; களவாலே, மடவாளைப் பெண்மைத்தன்மையையுடையாளை இட்டவளையினையுடையாளை என்னுடைய மார்பின்மாலையை மறைத்துக் கொண்ட கூற்றமே. எ - று. (உ)

* புறநா. 253, உரை, மேற்.

உருகூ.—தபுதாரநிலை :—

புனையிழை யிழந்தபிற் புலம்பொடு வைகி
மனையகத் துறையு மைந்தனிலை யுரைத்தன்று.

இ - ள். அணிந்த ஆபரணத்தினையுடையாளை இழந்தபின் தனிமையுடனே தங்கி இல்லிடத்து அவதரிக்கும் ஆண்மகன்முறைமையைச் சொல்லியது. எ - று.

வ - று. பைந்தொடி மேனுலக மெய்தப் படருழந்த
மைந்தன் குருசின் மழைவள்ளல் - மந்தை
1தவுதாரத் தாழ்ந்த தனிநிலைமை கேளாச்
செவிடா யொழிகென் செவி.

இ - ள். பச்சென்ற வளையினையுடையாள் சுவர்க்கத்தைப்பொருந்த வருத்தமுற்ற ஆண்மகன், தலைவன், மழைபோலக்கொடுக்கும்உபகாரி, என்னுடைய சாமி மனையாளை இழந்தழுந்தின தனியான நிலைமையைக் கேளாத செவிடாய்ப் போக, என் செவி. எ - று. (௩)

உருஎ.—தாபதநிலை :—

*குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மைகூ றின்று.

இ - ள். குருந்தப்பூமலரும் மாலையினையுடைய கணவன் இறந்தானாகக் கரிய பெரிய கண்ணினையுடையாள் வைதவியமெய்தியவாற்றைச் சொல்லியது. எ - று.

வ - று. கலந்தவனைக் கூற்றங் கரப்பக் கழியா
தலந்தினையு மவ்வளைத் தோளி - உலந்தவன்
தாரொடு பொங்கி நிலனசைஇத் தான்மிசையும்
காரடகின் மேல்வைத்தாள் கை.

இ - ள். தன்னுடனே கூடின கொழுநனைக் கூற்றுவனொளிப்பத் தான் இறந்துபடாது நொந்துவருந்தும் அழகிய வளைத்தோளினையுடையாள், தன்னைவிட்டு இறந்தவன்மாலையோடுகோபித்து வெறுநிலத்திலே வதிந்து தான் அருந்தும் கரிய அடகின்மேலே கையை வைத்தாள். எ - று. (௪)

உருஅ.—தலைப்பெயனிலை :—

இன்கதிர் முறுவற் பாலக னென்னும்
தன்கட னிறுத்ததாய் தபுநிலை யுரைத்தன்று.

இ - ள். இனிய ஒளிநகையினையுடைய பிள்ளையென்னும் தான் கொடுக்கக் கடவதனைக்கொடுத்த மாதர் இறந்தமுறைமையைச் சொல்லியது. எ - று.

---

* புறநா. 248, உரை, மேற்.

(பி - ம்.) 1 'தபுதாரத்.'

வ - று. *இடம்படு ஞாலத் தியல்போ கொடிதே
தடம்பெருங்கட் பாலக னென்னும் - கடன்கழித்து
முள்ளெயிற்றுப் பேதையாள் புக்காள் முரணவியா
வள்ளெயிற்றுக் கூற்றத்தின் வாய்.

இ - ள். அகன்ற பூமியினது தன்மையோ கொடியதொன்றே! மிகப்பெரிய கண்ணினையுடைய பிள்ளையென்று சொல்லும் கொடுக்கக் கடவதனைக் கொடுத்து முட்போலக் கூரிய பல்லினையுடையாள் தலைப் பட்டாள், மாறுபாடு கெடாத வளப்பம் மிக்க எயிற்றினையுடைய கூற்று வன் வாயிலே. எ - று. (ரு)

உருகூ.—பூசன்மயக்கு :—

பல்லிதழ் மழைக்கட் பாலகன் மாய்ந்தெனப்
புல்லிய பெருங்கிளைப் பூசல்கூ றின்று.

இ - ள். பூவையொத்து மழைபோலக் குளிர்ந்த கண்ணினையுடைய பிள்ளை இறந்தானாகப் பொருந்திய பெரிய சுற்றத்தினது ஆரவாரத்தி னைச் சொல்லியது. எ - று.

பல்லிதழென்றார் பல இதழினையுடைய பூவை, ஆகுபெயரான்.

வ - று. அலர்முலை யஞ்சொ [1] லவளொழிய வவ்விற்
குலமுதலைக் கொண்டொளித்த லன்றி - நிலமுறப்
புல்லிய பல்கிளைப் பூசல் பரியுமோ
கொல்லிய வந்தொழியாக் கூற்று.

இ - ள். பணைத்த முலையினையும் அழகிய சொல்லினையுமுடைய தலைவி அவ்விடத்தே ஒழிய அம்மனையிற் குலத்திற்கு மூலமாகிய பிள்ளை யைக் கைப்பற்றி மறைத்தலல்லது நிலத்திலே மிகப் பொருந்திய சுற் றத்தின் ஆரவாரத்திற்கு இரங்குமோ? கொல்வான்வேண்டி வந்து தவி ராத கூற்றம். எ - று.

கூற்று, பூசல் பரியுமோவென்க. (சு)

உசூ0.—இதுவுமது:—

வேந்தன் மாய்ந்தென வியலிடம் புலம்பினும்
ஆய்ந்த புலவ ரதுவென மொழிப.

இ - ள். அரசன் இறந்தானாக அகன்ற பூமியினுள்ளார் இரங்கி னும் ஆராய்ந்த அறிவினையுடையோர் முன்பிற்றுறையென்று சொல்லு வர். எ - று.

வ - று. எண்ணி னிகல்புரிந்தோ ரெய்தாத தில்போலும்
கண்ணினொளிர் வேலான் கரந்தபின் - அண்ணல்
புகழொடு பூசன் மயங்கிற்றாற் பொங்கும்
அகழ்கடல் வேலி யகத்து.

இ - ள். விசாரிப்பிற் போரினை விரும்பியவீரர் பெறுவது ஒன்று மில்லை போலும்; கண்ணிற்கு எறிக்கும் வேலினையுடையான் இறந்த

---

* தொல். புறத். சூ. 19, இளம். மேற்.

(பி - ம்.) 1 'அவளொழிய.'

பின்பு தலைவனுடைய கீர்த்தியுடன் ஆரவாரம் தலைமணந்ததால்; மிகாநின்ற அகழ்ந்த கடலை வேலியாகவுடைய பூமியிடத்து. எ - று.

பூமியிடத்துப் புகழொடு பூசல் மயங்கிற்றுவென்க. (எ)

உகூக.—மாலைநிலை :—

கதிர்வேற் கணவனொடு கனையெரி மூழ்க
மதியோர் நுதலி மாலைநின் றன்று.

இ - ள். ஒளியால்மிக்க வேலினையுடைய கொழுநனொடு செறிந்த நெருப்பிலே புகுவான் வேண்டிப் பிறையையொத்த நெற்றியினையுடையாள் மாலைக்காலத்திலே நின்றது. எ - று.

வ - று. சோலை மயிலன்னா டன்கணவன் சொல்லியசொல்
மாலை நினையா மனங்கடைஇக் - காலைப்
புகையழல் வேலோன் புணர்ப்பாகி நின்றாள்
அகையழ லீமத் தகத்து.

இ - ள். பொழின்மயிலை அனையாள், தனது கணவன் பகர்ந்த வார்த்தையை மாலைக்காலத்திலே நினைத்து மனத்தை முடுக்கிக் காலைப் பொழுதிலே மூளும் தழல்போன்ற வேலினையுடையான்தன் துணையாகி நின்றாள், கொழுந்துவிட்டெரியும் நெருப்புப் பொருந்திய சுடுகாட்டகத்து. எ - று.

ஈமத்தகத்துப் புணர்ப்பாகி நின்றாளென்க. (அ)

உகூஉ.—மூதானந்தம் :—

கயலேர் கண்ணி கணவனொடு முடிய
வியனெறிச் செல்வோர் வியந்துரைத் தன்று.

இ - ள். கயலையொத்த விழியினையுடையாள் தன் கொழுநனோடு இறந்துபட அகன்றவழியிடத்துப் போவார் கண்டு அதிசயித்துச் சொல்லியது. எ - று.

வ - று. *ஒருயி ராக வுணர்க வுடன்கலந்தார்க்
கிருயி ரென்ப ரிடைதெரியார் - போரில்
விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கும்
உடனே யுலந்த துயிர்.

இ - ள். ஒருபிராணனாக அறிக, ஒக்கமணந்தவர்க்கு; இரண்டு பிராணனென்று சொல்லுவர் நடுவாராயாதார்; பூசலிடத்து நஞ்சைத் தாங்கும் வேலினையுடையாற்கும் விளர்த்தவளையினையுடையாட்கும் ஒக்க விட்டது பிராணன், ஆதலால். எ - று. (கூ)

உகூ௩.—இ து வு ம து:—

கொடியான் கூர்ங்கணை குளிப்பத் தன்றொழில்
முடியா னவிதலு மூதா னந்தம்.

---

* தொல். புறத். சூ. 19, இளம்; ஷை ஷை ஷை 24, ந. மேற்; திருச்சிற். 71; சீவக. 2344; சிலப். 25: 78 - 86.

இ - ள். கடுவினையாளன் தன்மேற் பகைவருடைய கூரிய அம்பு அழுந்தத் தான் நினைந்த வினையை முடிவுசெய்யானாகி இறத்தலும் மூதானந்தம். எ - று.

வ - று. முந்தத்தான் மாவொடு புக்கு முனையமருட்
சிந்தத்தான் வந்தார் செருவிலக்கிக் - குந்தத்தாற்
செல்கணை மாற்றிக் குருசில் சிறைநின்றான்
கொல்கணைவாய் வீழ்தல் கொடிது.

இ - ள். பலரினும் முந்தத் தான் குதிரையுடனே களம் புக்கு, முற்பட்ட பூசலில் எதிர்த்துவந்தார் சிதறப் போரை விலக்கிக் கைச்சவளத்தால் தன்மேல் வரும் அம்பைநீக்கி உபகாரி, கரைபோலச் சேனை தாங்கி நின்றான்; கொல்லும் கோல்வாயிலே படுமது கொடிதாயிருந்தது. எ - று. (கo)

உகூச.—ஆனந்தம்:—

ஆடமைத் தோளி விரிச்சியுஞ் * [1]சொகினமும்
வேறுபட வஞ்சி விதுப்புற் றன்று.

இ - ள். அசையும் மூங்கில்போன்ற தோளினையுடையாள் நற்சொல்லும் நிமித்தமும் விகற்பிப்பப் பயப்பட்டு நடுக்கமுற்றது. எ - று.

வ - று. வேந்தார்ப்ப வெஞ்சமத்து வேலழுவந் தாங்கினான்
சாந்தா ரகலத்துத் தாழ்வடுப்புண் - தாந்தணியா
மன்னு சொகின மயங்கின வாய்ப்புளும்
என்னுங்கொல் பேதை யினி.

இ - ள். அரசர் ஆரவாரிப்ப வெய்ய பூசலிடத்து அயிற்காட்டைத் தடுத்தவனுடைய சந்தனம் நிறைந்த மார்பிடத்து ஆழ்ந்த வாயினையுடைய புண்கள்தாம் தீரா; பொருந்தா, நிமித்தமும்; கலங்கியிருந்தன, விரிச்சியும்; என்னுமோ, மடவாள் இப்பொழுது! எ - று. (கக)

உகூரு.—இதுவுமது:—

தவப்பெரிய வெஞ்சமங்குறுகும்
அவற்கிரங்கினு மத்துறையாகும்.

இ - ள். மிகப்பெரிய வெய்ய பூசலிற் பொருந்திய வீரனுக்கு வருந்தினும் முன்பிற்றுறையேயாம். எ - று.

வ - று. இன்னா சொகின மிசையா விரிச்சியும்
அன்னா வலம்வருமென் னாருயிரும் - என்னுங்கொல்
தொக்கார் மறமன்னர் தோலாத் துடிகறங்கப்
புக்கான் விடலையும் போர்க்கு.

* பு - வெ. 265 : 1, 310, கொளு, உரை.
(பி - ம்.) 1 'சோகியும்.'

இ - ள். இனியவல்ல, நிமித்தமும்; பொருந்துவனவல்ல, நற்சொல்லும்; அன்னே, சுழன்றுவாராநின்றது, என்னுடைய அரியபிராணனும்; என்னாகவற்றோ! திரண்டுநிறைந்த சினவேந்தருடைய வெல்லும் துடி கறங்கத் தலைவனும் பூசலிடத்திற்குத் தலைப்பட்டான். எ - று. (கஉ)

உசுசு.—ஆனந்தப்பையுள் :—

*விழுமங் கூர வேய்த்தோ ளரிவை
கொழுநன் வீயக் குழைந்துயங் கின்று.

இ - ள். இடும்பை மிக மூங்கில் போன்ற தோளினையுடையாள் கணவனிறப்ப மெலிந்து வருந்தியது. எ - று.

வ - று. புகழொழிய வையகத்துப் பூங்கழற் காளை
திகழொளிய மாவிசும்பு சேர - இகழ்வார்முன்
கண்டே கழிகாத லில்லையாற் கைசோர்ந்தும்
உண்டே யளித்தெ னுயிர்.

இ - ள். கீர்த்தி பாரிலேநிறப் பொலிந்த வீரக்கழலினையுடைய தலைவன் இலங்கும் ஒளியினையுடைய சுவர்க்கத்தைப் பொருந்த எள்ளுவாரை முன்னே கண்டுவைத்து இறந்துபடும் அன்பின்றால், செயலற்றும் உண்டாயிருந்தது, அளியினையுடைத்து, என்னுயிர். எ - று. (கங)

உசுஎ.—கையறுநிலை :—

செய்கழன் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர்
கையற வுரைத்துக் கைசோர்ந் தன்று.

இ - ள். தொழில் அழகுபெற்ற வீரக்கழலினையுடைய வேந்தன் துஞ்சினனாக அணைந்தோர் இறந்தமையைச் சொல்லி ஒழுக்கம் தளர்ந்தது. எ - று.

வ - று. தாயன்னன் றார்விலங்கி வீழத் தளர்வொடு
நீயென்னாய் நின்றாயென் னெஞ்சளியை - ஈயென்றார்க்
கில்லென்ற றேற்றா விகல்வெய்யோன் விண்படரப்
புல்லென்ற நாப்புலவர் போன்று.

இ - ள். எல்லாவுயிர்க்கும் தாயன்னவன் மாற்றார் கொடிப்படையைத் தடுத்துப்பட மெலிவுடனே சேதனமாய் நின்றாயோ? அசேதனமாய் நின்றாயோ? உகாது நீ என்னாகின்றாய்? என்னுடைய மனமே, நீ அளியினையுடையை; எனக்கு இது தருகவென்று வேண்டினோர்க்கு இல்லையென்னும் வார்த்தையயறியாத போர்விரும்புவோன் விண்ணிலே செல்லப் புற்கென்ற செந்நாப்புலவரை ஒத்து. எ - று.
இது சுற்றத்தார்மேற்று. (கச)

உசுஅ.—இ து வு ம து :—

கழிந்தோன் றன்புகழ் காதலித் துரைப்பினும்
மொழிந்தனர் புலவ ரத்துறை †யென்ப.

---

* புறநா. 228, 246, உரை, மேற். † என்ப : அசை.

இ - ள். இறந்தோன்றன்னுடைய நாமத்தை அன்புற்றுச்சொல்லி னும் முன்புசொன்ன துறையென்று சொல்லுவர் அறிவுடையோர். எ - று.

வ - று. நின்று நிலமிசையோ ரேத்த நெடுவிசும்பில்
சென்று கழிந்தான் செருவெய்யோன் - என்றும்
அழலுங் கதிர்வே லவன்புகழ் பாடி
உழலு முலகத் துயிர்.

இ - ள். 1 தற்பராய்நின்று பூமியினுள்ளோர் துதிப்ப நீடும் பெரிய வானிலே போயினன், பூசல்விரும்புவோன்; எந்நாளும், எரியும் ஒளி வேலினையுடையவனது கீர்த்தியைச் சொல்லிச் சுழலும், எல்லாவுலகத் துயிரும். எ - று. (கரு)

---

## [காஞ்சிப் பொதுவியற்பால.]

(கஉ.—சூத்திரம்.)

மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி
பெருங்காஞ் சிய்யே பொருண்மொழிக் காஞ்சி
புலவ ரேத்தும் புத்தே ணாட்டொடு
முதுகாஞ் சிய்யொடு காடுவாழ்த் துளப்பட
ரு மையறு சீர்த்தி வருமிரு மூன்றும்
பொய்தீர் காஞ்சிப் பொதுவியற் பால.

என் - னின், இதுவும் பொதுவியற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். முதுமொழிக்காஞ்சி முதலாகக் காடுவாழ்த்து ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும் பொதுவியற்பாலவாம். எ - று.

அவற்றுள்,

உசுக.—முதுமொழிக் காஞ்சி:—

பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்
உலகியல் பொருண்முடி புணரக் கூறின்று.

இ - ள். எல்லாரும் கொண்டாடும் அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம்பொருளின்பத்தை அறியச் சொல்லியது. எ - று.

வ - று. ஆற்றி னுணரி னருளறமா மாற்றார்க்குப்
போற்றார் வழங்கிற் பொருள்பொருளாம் - மாற்றிப்
புகலா தொழுகும் புரிவளையார் மென்றோள்
அகலா தளித்தொழுக லன்பு.

இ - ள். நெறியான் அறியின், அருள் தன்மமாகும்; வறியவர்க்குப் பரிகாரியாராய்க் கொடுப்பிற் பொருள் பொருளாம்; மாறி விரும்பாது ஒருநெறிப்பட நடக்கும் முறுக்குவளையினையுடையோர்தம் மெல்லிய தோளை நீங்காதே அளித்துநடக்குமது காதலாம். எ - று. (க)

---

(பி - ம்.) 1 'தற்பரராய்.'

உஎ०—பெருங்காஞ்சி :—

மலையோங்கிய மாநிலத்து
நிலையாமை நெறியுரைத்தன்று.

இ - ள். வரையுயர்ந்த பெரிய குவலயத்து நிலைநில்லா நெறியைச் சொல்லியது. எ - று.

வ - று. ஆயா தறிவயர்ந் தல்லாந் தகலிடத்து
மாயா நிதிய மனைச்செறீஇ - ஈயா
*திறுகப் பொதியன்மி னின்றொடு நாளைக்
குறுக வருமரோ கூற்று.

இ - ள். ஆராயாதே உணர்ச்சி மறந்து அலம்வந்து பூமியிடத்துக் கெடாத பெரும்பொருளை இல்லிலேசேர்த்திப் பிறர்க்கு வழங்காதே சிக்கெனக் கட்டிவையாதொழிமின்; இன்றுதல் நாளையாதல் நும்மை அணுக வரும், கூற்றம். எ - று.

அதனால், ஈயாது இறுகப் பொதியன்மினென்க.
ஒடுவும் அரோவும் அசைகள். (உ)

உஎக.—பொருண்மொழிக் காஞ்சி :—

எரிந்திலங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருண்மொழிந் தன்று.

இ - ள். அவிர்ந்து விளங்கும் சடாமகுடத்தினையுடைய முனிவர் விரும்பித் தெளிந்த பொருளைச் சொல்லியது. எ - று.

வ - று. †ஆய பெருமை யவிர்சடையோ ராய்ந்துணர்ந்த
பாய நெறிமேற் படர்ந்தொடுங்கித் — தீய
இருளொடு வைகா திடம்படு ஞாலத்
தருளொடு வைகி யகல்.

இ - ள். உண்டாய பெருமையினையும் விளக்கும் வேணியினையும் உடையோராகிய முனிவர் தெரிந்தறிந்த பரந்தவழிமேலே நினைந்து அடங்கித் தீதான மனமயக்கத்துடனே தங்காது அகன்றபூமியிடத்தில் அருளுடனேதங்கி நீங்கு, நெஞ்சே. எ - று. (௩)

உஎஉ.—புலவரேத்தும் புத்தேளுநடு :—

நுழைபுலம் படர்ந்த நோயறு காட்சி
விழைபுலங் கடந்தோர் வீடுரைத் தன்று.

இ - ள். நுண்ணிதான அறிவு சென்ற குற்றமற்ற தரிசனத்தை யுடையராய் இந்திரியசயம்பண்ணினோர் விரும்பும் மேலுலகத்தைச் சொல்லியது. எ - று.

வ - று. பொய்யில் புலவர் புரிந்துறையு மேலுலகம்
ஐயமொன் றின்றி யறிந்துரைப்பின் - வெய்ய
பகலின் றிரவின்று பற்றின்று துற்றின்
றிகலின் றிளிவரவு மின்று.

* நாலடி. 4, 36. † ஏலாதி, 67.

இ - ள். மெய்ஞ்ஞானிகள் விரும்பி யுறையும் விண்ணுலகத்தை ஐயப்பாடு ஒன்றுமின்றியே உணர்ந்துசொல்லின், வெவ்விதான பகற் பொழுதுமில்லை; இரவுப் பொழுதுமில்லை; பாசமுமில்லை; உணவு மில்லை; மாறுபாடுமில்லை; தாழ்வுமில்லை. எ - று. (ச)

உஎந.—முதுகாஞ்சி :—

தலைவரும் பொருளைத் தக்காங் குணர்த்தி
நிலைநிலை யாமை நெறிப்பட வுரைத்தன்று.

இ - ள். மேலாய் வரும்பொருளைத் தக்கபடி அறிவித்து நிலைநில் லாமையை முறைப்படச் சொல்லியது. எ - று.

வ - று.* இளமை நிலைதளர [1]மூப்பொ டிறைஞ்சி
உளமை யுணரா தொடுங்கி - வளமை
வியப்போவ வில்லா வியலிடத்து வெஃகா
துயப்போக லெண்ணி னுறும்.

இ - ள். இளமைப்பருவம் நிலையினின்று மெலிய முதுமையுடனே தாழ்ந்து உண்மையை யறியாதேயடங்கிச் செல்வத்தினது ஆச்சரியம் ஒழிதலில்லாத அகன்ற பூமியிடத்து ஒன்றும் விரும்பாது பிழைத்துப் போகையை விசாரிப்பின் உறுதியுடைத்து. எ - று. (ரு)

உஎச.—காடு வாழ்த்து :—

பல்லவர்க் கிரங்கும் பாடிமிழ் †நெய்தல்
கல்லென வொலிக்குங் காடுவாழ்த் தின்று.

இ - ள். பலர்க்கும் இசைக்கும் பெரிதாக ஒலிக்கும் சாப் பறை அனுகரண சத்தமுடைத்தாகக் கறங்கும் சுடுகாட்டை வாழ்த் தியது. எ - று.

வ - று. ‡முன்புறந் தான்காணு மிவ்வுலகை யிவ்வுலகில்
தன்புறங் கண்டறிவார் தாமில்லை - அன்பின்
அழுதார்க ணீர்விடுத்த வாறுடிக் கூகை
கழுதார்ந் திரவழங்குங் காடு.

இ - ள். முன்னே தான்முதுகுகாணும், இவ்வுலகத்தினை; இவ் வுலகிடத்துத் தன்முதுகைக் கண்டு வென்றறிவார்தாம் ஒருவருமில்லை; காதலாலே அழுதவர் கண்ணீருகுத்த ஆற்றிலே புக்கு ஆடிக் கோட் டானும் பேயும் நிறைந்து இராப்பொழுதின்கண் உலாவும் சுடுகாடு. எ - று.

"குறியத னிறுதிச் சினைகெட வுகரம், அறிய வருதல் செய்யுளு ளுரித்தே" (தொல். உயிர்மயங்கு. சூ. ௬உ.) என்பதனால் உகரம் கெட்டது. (சு)

## [முல்லைப் பொதுவியற்பால.]

(க௩.—சூத்திரம்.)

சீர்சான் முல்லையொடு கார்முல்லை யென்று
தேர்முல் லையொடு நாண்முல்லை யென்று

* நன். சூ. 451, மயிலை. மேற். † புறநா. 194: 1; மணி. 6: 71.
‡ புறநா. 356. (பி. ம்.) [1] 'மூப்புவந்தெய்தி.'

இல்லான் முல்லையொடு பகட்டுமுல்லை யென்றா
பான்முல் லையொடு கற்புமுல்லை யென்றாங்
கு இருநான் முல்லையும் பொதுவியற் பால.

என்-னின், இதுவும் பொதுவியற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். முல்லை முதலாகக் கற்புமுல்லை ஈறாகச் சொல்லப்பட்ட எட்டும் பொதுவியற்பாலவாம். எ - று. அவற்றுள்,

உஎரு.—முல்லை :—

தடவரை மார்பன் றன்னமர் காதல்
மடவரற் புணர்ந்த மகிழ்ச்சிநிலை யுரைத்தன்று.

இ - ள். பெரிய மலைபோன்ற மார்பன் தன்னை மேவின அன்பினையுடைய மடப்பத்தினையுடையாளைக் கூடிய மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. ஊதை யுளர வொசிந்து மணங்கமழுங்
கோதைபோன் முல்லைக் கொடிமருங்குற் - பேதை
குவைஇ யிணைந்த குவிமுலை யாகங்
கவைஇக் கவலை யிலம்.

இ - ள். காற்றுஅசைப்ப வணங்கி மணநாறும் மாலைபோன்ற முல்லைக் கொடியை ஒக்கும் இடையினையுடையமடவாள் திரண்டு தம்மில் இணையொத்த குவிந்த முலையினையுடைய மார்பைத் தழுவிக்கொண்டு துயரமிலேமாயினேம். எ - று.

முல்லைக்கொடிமருங்குற் பேதையாகமெனக் கூட்டுக. (க)

உஎசா.—கார்முல்லை :—

அருந்திறற் கட்டூ ரவர்வா ராமுன்
கருங்கடன் முகந்து கார்வந் தன்று.

இ - ள். பெறற்கரிய வலியினையுடைய பாசறையினின்றும் தலைவர் வருவதற்குமுன்னே கரிய கடலைமுகந்துகொண்டுமேகம்வந்தது. எ - று.

வ - று. *புனையும் †பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்
துனையுந் துனைபடைத் துன்னார் - முனையுள்
அடன்முகந்த தானை யவர்வாரா முன்னம்
‡கடன்முகந்து வந்தன்று கார்.

இ - ள். பூணும் பொற்படையாகிய மேலீட்டையும் எழுந்தசைந்த தலையாட்டத்தையுமுடைய குதிரை பூண்ட திண்ணிய தேர் விரையும் கடுகுஞ் சேனையினையுடைய பகைவரது போரிடத்துக் கொலைத் தொழிலை ஏற்றுக்கொண்டசேனையினையுடைய தலைவர் வருவதற்குமுன்னே கடனீரை முகந்துகொண்டு வந்தது மேகம். எ - று. (உ)

உஎஎ.—தேர்முல்லை :—

உருத்தெழு மன்ன ரொன்னார் தந்நிலை
திருத்திய காதலர் தேர்வர வுரைத்தன்று.

---

* முல்லைப்பாட்டின் இறுதிச் செய்யுள். † 'பொலம்படை': மலைபடு. 574; புறநா. 116: 19, 359: 14. ‡ பெருங். 3. 24: 76.

இ - ள். கோபித்தெழும் அரசராகிய பகைவர்தம்முடைய நிலைமையை உறவாக்கி மீண்ட அன்பர் தம் தேர்வந்தபடியைச் சொல்லியது. எ - று.

வ - று. தீர்ந்து வணங்கித் திறையளப்பத் தெம்முனையுள்
ஊர்ந்துநங் கேள்வ ருழைவந்தார் - சார்ந்து
பரிகோட்ட மின்றிப் பதவார்ந் துகளும்
திரிகோட்ட மாவிரியத் தேர்.

இ - ள். ஒன்னார் தம் பகையையொழிந்து பணிந்து திறைகொடுப்பப் பகைமுனையுட் செலுத்தி நம்முடைய கொழுநர் பக்கத்தே வந்தார்; ஒன்றோடொன்று கூடிச் செலவு வளைவின்றிச் செங்கோலறுகை அருந்திப் பாயும் வளைந்த கொம்பினையுடைய கலை கெட்டோடத் தேரினை. எ - று.

தேர் ஊர்ந்து நங்கேள்வர் உழைவந்தாரென்க. (ஙு)

உஎஅ.—நாண்முல்லை:—

செறுநர் நாணச் சேயிழை யரிவை
வறுமனை வைகித் தற்காத் தன்று.

இ - ள். பகைவர் நாணச்சிவந்த ஆபரணத்தினையுடைய மடந்தை, கணவன் பிரிந்த இல்லிலே தங்கித் தன்னைப் பரிகரித்தது. எ - று.

வ - று. கொய்தார மார்பிற் கொழுநன் றணந்தபின்
பெய்வளை யாட்குப் பிறிதில்லை - வெய்ய
வளிமறையு மின்றி வழக்கொழியா வாயில்
நளிமனைக்கு நற்றுணை நாண்.

இ - ள். மட்டஞ்செய்த மாலையாற் சிறந்த மார்பினையுடைய கணவன் பிரிந்தபின்பு இட்ட தொடியினையுடையாட்கு வேறொரு காவலுமில்லை; இடக் கதவுமின்றியே யாவரும் இயங்குதலொழியாத வாயிலையுடைய பெரிய மனைக்கு நல்ல துணைமை நாணே. எ - று.

கொய்தாரமார்பென்றவழி, அகரம் சாரியை. (ச)

உஎகூ.—இல்லாண் முல்லை:—

கழுமிய காதற் கணவனைப் பழிச்சி
இழுமென் சீர்த்தி யின்மலி புரைத்தன்று.

இ - ள். பொருந்திய காதற்கணவனை வாழ்த்திப் பலரும்இசைக்கும் அனுகரணத்தினையுடைய கீர்த்தியாற்சிறந்த இல்லின்மிகுதியைச் சொல்லியது. எ - று.

வ - று. கல்லெனீர் வேலிக் கணவன் கழல்வாழ்த்தி
ஒல்லும் வகையால் விருந்தோம்பிச் - செல்லுந்தம்
இற்செல்வ மன்றி யிரந்தவர்க் கீகல்லாப்
புற்செல்வம் பூவா புகழ்.

இ - ள். அனுகரண சத்தத்தான் மிக்க கடலை வேலியாகவுடைய ஞாலத்திடத்துக் கொழுநன் பாதத்தையேத்திச் செயற்படும் வகையால் விருந்தினரைப் பாதுகாத்து நடக்கும் தம்முடைய இல்லிடத்துச் செல்வ மல்லது வேண்டினோர்க்குக் கொடுக்கமாட்டாப் புல்லியசம்பத்து, இசை பூக்கமாட்டா. எ - று. (ஸ)

உஅ௦.—பகட்டு முல்லை :—

வயன்மிகு சிறப்பின் வருத்தமு நோன்மையும்
வியன்மனைக் கிழவனைப் பகட்டொடு பொரீஇயன்று.

இ - ள். பழனத்தின் மிக்க நன்மையாகிய முயற்சியான்வந்த இளைப்பாலும் பாரம்பொறுத்தலாலும் அகன்றமனைக்கு உரிமையாளனை ஏருடன் உவமித்தது. எ - று.

வ - று. உய்த்தல் பொறுத்த லொழிவின் றொலிவயலுள்
எய்த்த லறியா *திடையின்றி - வைத்த
படுநுகம் பூண்ட பகட்டொடு மானும்
நெடுமொழி யெங்கணவ னோர்.

இ - ள். செலுத்தல் பாரம்பொறுத்தல் நீங்குதலின்றி நீரொலிக் கும் விளைபுலத்திடத்து இளைத்தலறியாது இடையீடின்றிக் கழுத்தின் மேல் வைத்த மிக்க நுகத்தைப் பூண்ட ஏரொடு நேரொக்கும், உயர்ந்த புகழினையுடைய எம்கொழுநன். எ - று. (கு)

உஅக.—பான்முல்லை :—

அரிபா யுண்கணா ளாயிழைப் புணர்ந்தோன்
பரிவக லுள்ளமொடு பால்வாழ்த் தின்று.

இ - ள். செவ்வரிகருவரிபரந்த மையுண்ட விழியினையும் தெரிந்த ஆபரணத்தினையும் உடையாளை மணந்தவன் வருத்தம் நீங்கின மனத் துடனே விதியை எத்தியது. எ - று.

வ - று. திங்கள் விளங்குந் திகழ்ந்திலங்கு பேரொளி
அங்கண் விசும்பி னகத்துறைக - செங்கட்
குயிலனைய தேமொழிக் கூரெயிற்றுச் செவ்வாய்ப்
பயில்வளையை நல்கிய பால்.

இ - ள். மதியிலங்கும், மிக்குவிளங்கும் பெரியசோதியினையுடைய அழகிய இடத்தினையுடைய சுவர்க்கத்திலே உறைவதாக; சிவந்த கண் ணினையுடைய குயிலின் இசைபோன்ற இனிய சொல்லினையும் கூரிய எயிற்றினையும் செய்ய வாயினையும் செறிந்த தொடியினையுமுடையாளை எனக்குத் தந்த விதி. எ - று. (எ)

உஅஉ.—கற்பு முல்லை: —

பொன்றிகழ் சுணங்கிற் பூங்க ணரிவை
நன்றறி கொழுநனை நலமிகுத் தன்று.

---

* மணி. 14 : 27.

இ - ள். பொன்போல் இலங்கும் சுணங்கினையும் பொலிந்த கண்ணினையுமுடைய மடந்தை நன்மையறியும் கொழுநனுடைய நன்மையைப் பெருகச் சொல்லியது. எ - று.

வ - று. நெய்கொ ணிணந்தூ நிறைய வமைத்திட்ட
குய்கொ ளடிசில் பிறர் நுகர்க - வைகலும்
அங்குழைக் கீரை யடகு மிசையினும்
எங்கணவ னல்க வினிது.

இ - ள். நெய்யைத் தன்னிடத்துக் கொண்ட நிணமும் தசையும் மிகக்கூட்டி ஆக்கின பொரிக்கறியுடைத்தான சோற்றைப் பிறர் அருந்துக, நாடோறும்; அழகிய தளிரையுடைய கீரையாகிய இலைக்கறியை நுகரினும் எமது கொழுநன் அருளுமது, இனிதாயிருக்கும் எமக்கு. எ - று. குய் - நறையென்றுமாம். (அ)

௨௩௩.—இதுவுமது:—

மேவருங் கணவன் றணப்பத் தன்வயின்
காவல் கூறினு மத்துறை யாகும்.

இ - ள். பொருந்துதல்வந்த கொழுநன் நீங்கத் தன்னிடத்துக் காவலைச் சொல்லினும் முற்பட்ட துறையேயாம். எ - று.

வ - று. மௌவல் விரியு மணங்கமழ் மான்மாலைத்
[1]தௌவன் முதுகுரம்பைத் தான்றமியள் - செவ்வன்
இறைகாக்கு மிவ்வுலகி னிற்பிறந்த நல்லாள்
நிறைகாப்ப வைகு நிறை.

இ - ள். மௌவல் மலரும் மணநாறும் மயக்கத்தினையுடைய மாலைக் காலத்து அழிந்த பழங்கூரையிடத்துத் தான் தனியொருத்தி, செவ்விதாக இறைவன் காவல் போற்றும் இந்நிலத்திடத்துக் குடிப்பிறந்த நல்லவளுடைய காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கமாகிய நிறை, பரிகரிப்பத் தங்கும் நிறையானது. எ - று. (௯)

௨௩௪.—இதுவுமது:—

திருவளர் நன்னக ரடைந்த கொழுநன்
பெருவள மேத்தினு மத்துறை யாகும்.

இ - ள். செல்வம் பெருகும் அழகிய மாளிகையிலே சேர்ந்த கணவன்றன் பெரிய செல்வத்தை வாழ்த்தினும் முற்பட்ட துறையேயாம். எ - று.

வ - று. ஊழிதோ றூழி தொழப்பட் டுலைவின்றி
ஆழிசூழ் வையத் தகமலிய - வாழி
கருவரை மார்பினெங் காதல னல்க
வருவிருந் தோம்பும் வளம்.

இ - ள். நெடுங்காலந்தோறும் நெடுங்காலந்தோறும் வணங்கப்பட்டுக் கேடின்றிக் கடல்சூழ்ந்த பாரகம் பெருக வாழ்வதாக! வலிய மலைபோன்ற அகலத்தினையுடைய எம் கணவன் அருள யான் வருகிற விருந்தைப் போற்றுஞ் செல்வம். எ - று.

(பி - ம்.) [1] 'தையன்.'

வளம் வாழி.

பெயரோடடுத்துக் கூறியவழிப் புறப்புறமாம்; நெடுநல்வாடை போலப் பெயரோடுஅடாது கூறியவழிப் பெருந்திணையாம்; இவை பிறர் மதமென்றலுமொன்று. (௪0)

பொதுவியற் சூத்திரம் நான்கிற்குப்பாட்டு நாற்பத்தைந்தும் முடிந்தன.

பத்தாவது பொதுவியற்படலம் முற்றிற்று.

---

பதினொன்றவது

## கைக்கிளைப்படலம்.

[ஆண்பாற் கூற்று.]

(கச.—சூத்திரம்.)

காட்சி யையந் துணிவே யுட்கோள்
பயந்தோர்ப் பழிச்ச னலம்பா ராட்டல்
நயப்புற் றிரங்கல் புணரா விரக்கம்
வெளிப்பட விரத்த லெனவிவ் வொன்பதும்
ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்.

என் - னின், ஆண்பாற் கூற்றுக்கைக்கிளை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று,

இ - ள். காட்சிமுதலாக வெளிப்படவிரத்தல் ஈறுகச் சொல்லப் பட்ட ஒன்பதும் ஆண்பாற்கூற்றுக் கைக்கிளையாம். எ - று.

அவற்றுள்,

உ௫௫.—காட்சி:—

சுரும்பிவர் பூம்பொழிற் சுடர்வேற் காளை
கருந்தடங் கண்ணியைக் கண்டுநயந் தன்று.

இ - ள். வண்டு பரக்கும் பூவினையுடைய சோலையிடத்து ஒளிவேற் காளை, கறுத்த பெருத்த கண்ணினையுடையாளைக் கண்டு விரும்பியது. எ - று.

(மருட்பா)

வ - று. *கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா
அரும்பிவர் மென்முலை தொத்தாப் - பெரும்பணைத்தோட்
பெண்டகைப் பொலிந்த பூங்கொடி
கண்டேங் காண்டலுங் களித்தவெங் கண்ணே.

இ - ள். கருமையும் பெருமையுமுடையவிழி சுரும்பாகச் சிவந்த வாய் தளிராக அரும்புபோன்ற மெல்லியமுலை தொத்தாகப் பெரிய மூங்கில்போன்ற தோளாலும் பெண்மைத்தன்மையாலும் அழகுபெற்ற தோர் மலர்வல்லியனையாளை நோக்கினேம்; நோக்கினேமாக, மகிழ்ந் தன எமது விழிகள். எ - று. (௧)

---

* தோல். களவு. சூ. 2, ந. மேற்; நாற்கவி. சூ. 119, உரை, மேற்.

உ௩கூ.—ஐயம் :—

கன்னவி றோளான் கண்டபி னவளை
இன்னளென் றுணரா னையுறற் றன்று.

இ - ள். உலக்கல் சீவிக்கப்பட்ட தோளினையுடையான் தரிசித்த பின் அவளை இன்னதன்மையளென்றுஅறியான் ஐயப்பட்டது. எ - று.

வ - று. * தாமரைமேல் வைகிய தையல்கொ றாழ்தளிரிற்
காமருவும் வானோர்கள் காதலிகொல் - தேமொழி
மையமருண்கண் மடந்தைதன்
ஐய மொழியா தாழுமென் னெஞ்சே.

இ - ள். தாமரைப்பூவின்மேலே தங்கின திருமகள்கொல்லோ? தாழும் தளிரினையுடைய சோலைமருவும் வானிடத்தோர்தம் காதன்மிக்க தெய்வமகள் கொல்லோ? இனியமொழியினையும் அஞ்சனமேவின விழியினையுமுடைய மடவாளிடத்து ஐயப்பாடு ஒழியாது துயரத்திலே அழுந்தாநின்றது, என்னுடைய நெஞ்சு. எ - று. (உ)

உ௩எ.—துணிவு :—

மாநிலத் தியலு மாத ராமெனத்
[1] தூமலர்க் கோதையைத் துணிந்துரைத் தன்று.

இ - ள். பெரிய பூமியிடத்து நடக்கும் காதலினையுடையார் இவளெனச் சொல்லித் தூய்தான பூமாலையினையுடையாளைத் தெளிந்து சொல்லியது. எ - று.

வ - று. † திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும் - அரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே.

இ - ள். அழகிய நுதலும் வேர்முகிழ்க்கும்; தேனையுடைய மாலையும் வாடும்; பெரியநிலத்தினைச் சிவந்தஅடியும் பொருந்தும்; செவ்வரி கருவரிபரந்த நீண்ட இமையினையுடைய மையுண்டவிழியும் இமைக்கும்; இவள் அகன்ற பூமியிடத்து மானிடமகளாகிய தெய்வமாகும். எ - று.
மற்று : வினைமாற்று. இவள் ஆகுமென்க. (ங)

உ௩௩.—உட்கோள் :—

இணரார் கோதையென் னெஞ்சத் திருந்தும்
உணரா ளென்னையென வுட்கொண் டன்று.

இ - ள். கொத்துநிறைந்த மாலையினையுடையாள் என்மனத்திலே இருந்தும் என்னை அறியாளென உள்ளத்திலே தலைவன் கைக்கொண்டது. எ - று.

வ - று. கவ்வை பெருகக் கரந்தென் மனத்திருந்தும்
செவ்வாய்ப் பெருந்தோட் டிருநுதலாள்-அவ்வாயில்

* நாற்கவி. சூ. 120, உரை, மேற். † ஷை ஷை 121, உரை, மேற்; பெருங். 4. 17: 32 - 3.

(பி - ம்.) 1 'தூய்தாங்கோதை.'

அஞ்சொன் மாரிபெய் தவியாள்
நெஞ்சம் பொத்தி நிறைசுடு நெருப்பே.

இ - ள். ஆரவாரம் மிக மறைந்து என்னெஞ்சிலேயிருந்தும், சிவந்த வாயினையும் பெரியதோளினையும் அழகியநுதலினையும் உடையவள் அழகியவாயிடத்து அழகிய வார்த்தையாகிய மழையைச் சொரிந்து ஆற்றுள்; என் மனத்திலேகலந்து என்னுடைய நிறையுடைமையைச் சுடாநின்றது காமத் தீ. எ - று.

காமத்தீயை அஞ்சொல்மாரி பெய்து அவியாளென்க.

உட்கோளாவது, உறலாமென்தனை உட்கொள்கை. (௯)

உஅக:—பயந்தோர்ப் பழிச்சல் :—

இவட்பயந் தெடுத்தோர் வாழியர் நெடிதென
அவட்பயந் தோரை யானுது புகழ்ந்தன்று.

இ - ள். இவளைப் பெற்றெடுத்தோர் பெரிதும் வாழ்வாராக வெனச் சொல்லி அவளைப்பெற்றோரை அமையாது புகழ்ந்தது. எ - று.

வ - று. கல்லருவி யாடிக் கருங்களிறு காரதிரும்
மல்லலஞ் சாரன் மயிலன்ன - சில்வளைப்
பலவொலி கூந்தலைப் பயந்தோர்
நிலவரை மலிய நீடுவா ழியரே.

இ - ள். மலையருவியாடி வலிய யானை மேகம்போல முழங்கும் வளப்பத்தினையுடைய அழகிய மலைப்பக்கத்து மயிற்பேடையையொத்த சிலதொடியினையும் பலபகுதியாய்த் தழைந்த மயிரினையுமுடையாளைப் பெற்றோர், பூமியெல்லையிலே மிக நெடுங்காலம் வாழ்வாராக. எ - று. (௰)

உகூ௦.—நலம் பாராட்டல் :—

அழிபட ரெவ்வங் கூர வாயிழை
பழிதீர் நன்னலம் பாராட் டின்று.

இ - ள். மிக்குநடக்கும் விதனஞ் சிறக்க, தெரிந்த ஆபரணத்தினையுடையாள் தன் குற்றந் தீர்ந்த அழகிய நலத்தைக் கொண்டாடியது. எ - று.

வ - று. அம்மென் கிளவி கிளிபயில வாயிழை
கொம்மை வரிமுலை கோங்கரும்ப - இம்மலை
நறும்பூஞ் சார லாங்கண்
குறுஞ்சுனை மலர்ந்தன தடம்பெருங் கண்ணே.

இ - ள். அழகிய மெல்லிதான வார்த்தையைக் கிளி பழகத் தெரிந்த ஆபரணத்தினையுடையாள் தன் குவிந்து அழகியவான கொங்கையைக் கோங்கு முகிழ்ப்ப இந்தவரையிடத்து நாறுமலரினையுடைய மலைப் பக்கத்துச் சிறுசுனைக் குவளைகள் பூத்தன, மிகப் பெரிய விழியினை. எ - று.

நற்காமத்து நலம்பாராட்டல் புணர்ச்சிதோன்ற வரும்; இஃது அன்னதன்று. (௧௧)

உகூக.—நயப்புற்றிரங்கல் :—

கொய்தழை யல்குல் கூட்டம் வேண்டி
எய்துத லருமையி னிறப்பப் புகழ்ந்தன்று.

இ - ள். கொய்தழையான் அணிந்த அல்குலையுடையாள்தன் புணர்ச்சியை விரும்பிப் பொருந்துதற்கு அருமையான் மிகவும் புகழ்ந்தது. எ - று.

வ - று. பெருமட நோக்கிற் சிறுநுதற் செவ்வாய்க்
கருமழைக்கண் வெண்முறுவற் பேதை - திருமுலை
புல்லும் பொறியி லேனுழை
நில்லா தோடுமென் னிறையி னெஞ்சே.

இ - ள். மிக்க மடப்பத்தாற் சிறந்த பார்வையினையும் சிறிய நுதலினையும் சிவந்த வாயினையும் கரியமழைபோலக் குளிர்ந்த கண்ணினையும் விளர்த்த எயிற்றினையுமுடைய மடவாள்தன் அழகிய முலையைத் தழுவும் விதியிலாதேனிடத்துத் தரியாதே ஓடாநின்றது, என்னுடைய நிறையில்லாத மனம். எ - று. (எ)

உகூஉ.—புணரா இரக்கம் :—

உணரா வெவ்வம் பெருக வொளியிழைப்
புணரா விரக்கமொடு புலம்புதர வைகின்று.

இ - ள். பிறரறியாத துக்கம் மிகச் சுடர்விடும் ஆபரணத்தையுடையாளை மணவாத விதனத்தோடே தனிமையுறத் தங்கியது. எ - று.

வ - று. இணரார் நறுங்கோதை யெல்வளையாள் கூட்டம்
புணராமற் பூசு றரவும் - உணராது
தண்டா விழுப்படர் நலியவும்
உண்டா லென்னுயி ரோம்புதற் கரிதே.

இ - ள். தொத்து நிறைந்த நறிய மாலையினையும் இலங்குந்தொடியினையுமுடையாள் தன் புணர்ச்சி கூடாமையாலே பிறரிகழும் ஆரவாரம் உண்டாகவும், அறியாது கெடாத சீர்மையினையுடைய நினைவு வருத்தவும் சிறிது உளதால், என்னுடைய உயிர் ; இனிப் பாதுகாத்தற்கு அரிது. எ - று. (அ)

உகூ௩.—வெளிப்பட இரத்தல் :—

அந்தழை யல்கு லணிநலம் புணரா
வெந்துயர் பெருக வெளிப்பட விரந்தன்று.

இ - ள். அழகிய தழையணிந்த அல்குலினையுடையாள்தன் நல்ல நலத்தைக் கூடாத வெய்ய வருத்தம் மிகத் தோன்ற இரந்தது. எ - று.

வ - று. உரவொலி முந்நீ ருலாய்நிமிர்ந் தன்ன
கரவருங் காமங் கனற்ற - இரவெதிர
முள்ளெயி றிலங்கு முகிழ்நகை
வெள்வளை நல்காள் விடுமென் னுயிரே.

இ - ள். வலிய ஆரவாரத்தினையுடைய கடல் கடந்தேறிப் பரந்தா லொத்த ஒளித்தற்கரிய ஆசை அழற்ற இரத்தவெதிர முட்போன்ற பல்லு விளங்கும் மூரன்முறுவலையும் வெள்வளையினையும் உடையாள் அருளாள் ; விடும் என்னுடையஉயிர். எ - று. (௯)

ஆண்பாற்கூற்றுக் கைக்கிளை முற்றிற்று.

[பெண்பாற்கூற்று.]

(௧௫.—சூத்திரம்.)

காண்ட னயத்த லுட்கோண் மெலிதல்
மெலிவொடு வைகல் காண்டல் வலித்தல்
பகன்முனி வுரைத்த லிரவுநீடு பருவரல்
கனவி னரற்ற னெஞ்சொடு மெலிதல்
பெண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்.

என் - னின், பெண்பாற்கூற்றுக் கைக்கிளையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். காண்டல் முதலாக நெஞ்சொடு மெலிதல்ஈறாகச் சொல்லப்பட்ட பத்தும் பெண்பாற்கூற்றுக் கைக்கிளையாம். எ - று.

அவற்றுள்,

௨௬௪.—காண்டல் :—

தேம்பாய் தெரியல் விடலையைத் திருநுதற்
காம்பேர் தோளி கண்டுசோர்ந் தன்று.

இ - ள். மதுப்பொழியும் மாலையினையுடைய தலைவனை அழகிய நுதலினையும் மூங்கில் போன்ற தோளினையும் உடையாள் நோக்கி மெலிந்தது. எ - று.

வ - று. கடைநின்று காம நலியக் கலங்கி
இடைநின்ற வூரலர் தூற்றப் - புடைநின்ற
*எற்கண் டிலனந் நெடுந்தகை
தற்கண் டனென்யான் கண்ட வாறே.

இ - ள். என்னிடத்திலே ஆசையானது நின்று நெருக்க மயங்கி நடுவுநின்ற ஊர் அலரெடுப்பப் பக்கத்திலேநின்ற என்னைக்கண்டிலன், அந்தப் பெரிய மேம்பாட்டினையுடையவன் ; தன்னைக்கண்டேன் யான், கண்டபடியே ! எ - று. (௧)

௨௬௫.—நயத்தல் :—

கன்னவி றிணிதோட் காளையைக் கண்ட
நன்னுத லரிவை நயப்புரைத் தன்று.

இ - ள். உலக்கல் பழகிய திண்ணிய தோளையுடைய தலைவனைக் கண்ட நல்ல நுதலினையுடைய மடந்தையினது ஆசைப்பாட்டைச் சொல்லியது. எ - று.

* பு - வே. 307 : 3 - 4.

வ - று. கன்னவி ரோளானைக் காண்டலுங் கார்க்குவளை
அன்னவென் கண்ணுக் கமுதமாம் - என்னை
மலைமலிந் தன்ன மார்பம்
முலைமலிந் தாழும் முயங்குங் காலே.

இ - ள். மலையையொத்த தோளானைக் கண்டேனாகக் கருங் குவளையனைய என் கண்ணிற்கு அமிழ்தமாகாநின்றது; எங்ஙனே இருக் குமோ! வரைபரந்தாலொத்த அகலத்தை முலை விம்மி முறைமுறை யாகத் தழுவுமிடத்து. எ - று. (உ)

உகசு.—உட்கோள் :—

வண்டமர் குஞ்சி மைந்தனை நயந்த
ஒண்டொடி யரிவை யுட்கொண் டன்று.

இ - ள். சுரும்பு மேவும் மயிரினையுடைய தலைவனை விரும்பிய ஒள்ளிய வளையினையுடைய தலைவி உட்கொண்டது. எ - று.

வ - று. உள்ள முருக வொளிவளையுங் கைநில்லா
கள்ளவிழ் தாரானுங் கைக்கணையான் - எள்ளிச்
சிறுபுன் மாலை தலைவரின்
உறுதுய ரவலத் துயலோ வரிதே.

இ - ள். நெஞ்சு வருந்த ஒள்ளிய தொடிகளும் கரத்தைப் பொருந் தாவாயின; தேனொழுகப்பட்ட மாலையினையுடையானும் என்னுடைய கரங்களுக்கு எய்தானாயினன்; இகழ்ந்து சிறியதாய்ப் புற்கென்றமாலைக் காலம் கைகூடின், மிகும் வருத்தத்தைச்செய்யும் இழுக்கினின்றும் பிழைத்தல் சால அருமையுடைத்து. எ - று. (ங)

உகஎ.—மெலிதல் :—

ஒன்றார் கூறு முறுபழி நாணி
மென்றோ ளரிவை மெலிவொடு வைகின்று.

இ - ள். பொருந்தாதார் சொல்லும் மிக்க அலருக்கு நாணி மெத்தென்ற தோளினையுடையதலைவி வாட்டத்துடனே தங்கியது. எ-று.

வ - று. குரும்பை வரிமுலைமேற் கோல நெடுங்கண்
அரும்பிய வெண்முத் துகுப்பக் -கரும்புடைத்தோட்
காதல்செய் காமங் கனற்ற
ஏதி லாளற் கிழந்தனெ னெழிலே.

இ - ள். குரும்பைபோன்ற நல்லமுலைமேலே அழகிய நெடியவிழி தோற்றிய வெண்முத்தான கண்ணீரைச் சிந்தச் சந்தனகுங்குமங்களாற் காமனது கரும்பெழுதிய தோளினைத் தழுவவேண்டுமென்னும் ஆசை யைப் பண்ணும்விழைவு கனற்ற நமக்கு அருளாத அயலானுக்குப் போக் கினேனே என் அழகினை! எ - று. (ச)

௨௯௮.—மெலிவொடு வைகல் :—

மணிவளை நெகிழ மாநலந் தொலைய
அணியிழை மெலிவி னாற்றல்கூ றின்று.

இ - ள். மாணிக்கத்தொடி கழலப் பெரிய அழகு கெட அழகிய ஆபரணத்தினையுடையாளது தளர்ச்சியின் வலிமையைச் சொல்லியது. எ - று.

வ - று. பிறைபுரை வாணுதல் பீரரும்ப மென்றோள்
இறைபுனை யெல்வளை யேக — நிறைபுணையா
யாம நெடுங்கட னீந்துவேன்
காம வொள்ளெரி கனன்றகஞ் சுடுமே.

இ - ள். இளமதியையொத்த ஒளிநுதல் பீர்போலப் பசப்புத் தோற்ற மெத்தென்றதோளின் முன்கையில் அணிந்த இலங்குதொடி ஓட நிறையே தெப்பமாக யாமமாகிய பெரியகடலை நீந்தாநிற்பேனாயினும், ஆசையென்னும் ஒள்ளிய நெருப்பு அழன்று நெஞ்சை எரிக்கும். எ - று. (௫)

௨௯௯.—காண்டல் வலித்தல் :—

மைவரை நாடனை மடந்தை பின்னரும்
கைவளை சோரக் காண்டல் வலித்தன்று.

இ - ள். மேகத்தைப் பொருந்தின மலைநாடனை மடவாள் இரண்டாவதும் கையில் வளைசோர்கையாலே காணவேண்டுமென்றலை நிச்சயித்தது. எ - று.

வ - று. வேட்டவை யெய்தி விழைவொழிதல் பொய்போலும்
மீட்டு மிடைமணிப் பூணனைக் - காட்டென்று
மாமை பொன்னிறம் பசப்பத்
தூமலர் நெடுங்கண் டுயிறுறந் தனவே.

இ - ள். விரும்பினவற்றைப் பெற்று ஆசைப்பாடு நீங்குமது பொய்யே போலும்; இரண்டாவதும் செறிந்தமணியாற் சிறந்த ஆபரணத்தினையுடையானைக் காட்டுகவென்று சொல்லி மேனி பொன்னிறம் போலப் பசப்பத் தூமலர்போன்ற நெடியவிழிகள் உறக்கத்தை ஒழிந்தன. எ - று.

கண், காட்டென்று துயில் துறந்தனவென்க. (௬)

௩00.—பகன்முனிவுரைத்தல் :—

புரிவளை நெகிழப் புலம்பொடு நின்றோள்
பருவர லுள்ளமொடு பகன்முனி வுரைத்தன்று.

இ - ள். முறுக்குவளை சோரத் தனிமையுடனேநின்ற தலைவி துயரமிக்க உள்ளத்தோடே பகற்பொழுதை வெறுத்தபடியைச் சொல்லியது. எ - று.

வ - று. தன்க ணளியவாய் நின்றேற்குத் தார்விடலை
வன்கண்ண னல்கா னெனவாடும் - என்கண்
இடரினும் பெரிதா லெவ்வம்
படரினும் பெரிதாற் பாவியிப் பகலே.

இ - ள். தன்னிடத்து அருளை ஆசைப்பட்டுநின்ற எனக்கு மாலையினையுடைய தலைவன் தறுகண்ணன் அருளானெனச்சொல்ல மெலியும் என்னிடத்து வருத்தத்திலும் பெரியதொன்றால், மானம்; என்னுடைய நினைவிலும் பெரிதால், பாவியான இப்பகற்பொழுது. எ - று. (எ)

௬0க.—இரவுநீடு பருவரல் :—

புலம்பொடு வைகும் பூங்குழை கங்குற்
கலங்கினேன் பெரிதெனக் கசிந்துரைத் தன்று.

இ - ள். தனிமையுடனே தங்கும் பொலிந்த குழையினையுடையாள் இரவின்கண் மனமயங்கினேன் பெரிதெனச் சொல்லி நெகிழ்ந்து சொல்லியது. எ - று.

வ - று. பெண்மே னலிவு பிழையென்னுப் பேதுறீஇ
விண்மே லியங்கு மதிவிலக்கி - மண்மேல்
நினக்கே செய்பகை யெவன்கொல்
எனக்கே நெடியை வாழிய விரவே.

இ - ள். பெண்பாலிடத்து நெருக்கும் நெருக்குத் தப்பென்று பாராய், அறிவின்மையுற்று ஆகாசத்திடத்தே உலாவுமதியைப் போகாதபடி விலக்கி; பூமியிடத்து நினக்கு யான்செய்த மாறுபாடு எவன்கொலோ? எனக்கே நீ நெடியையாயிருந்தாய்; வாழ்வாயாக, இரவுப்பொழுதே. எ - று. (அ)

௬0௨.—கனவின் அரற்றல் :—

ஒண்டொடி மடந்தை யுருகெழு கங்குலிற்
கண்டவன் கரப்பக் கனவி னரற்றின்று.

இ - ள். ஒள்ளிய வளையினையுடைய தலைவி அஞ்சுதல்பொருந்திய இரவுப்பொழுதிடத்துக்கண்ட தலைவன் ஒளிப்பக் கனவின்கண் வாய்விட்டுப் புலம்பியது. எ - று.

வ - று. அயர்வொடு நின்றே னரும்படர்நோய் தீர
நயம்வரும் பள்ளிமே னல்கிக் - கயவா
நனவிடைத் தமியேன் வைகக்
கனவிடைத் தோன்றிக் கரத்தனீ கொடிதே.

இ- ள். மயக்கத்தோடு நின்றேனுடைய அரிய நினைவினால் வந்த நோய் நீங்க நன்மையுண்டாம் சயனத்தின்மேல் எனக்கருளி, கீழ்மகனே, நனவின்கண்ணே தனியேனாகி யான் தங்கக் கனவினிடத்தே தோற்றி நீ மறைந்துபோவது கொடிதாயிருந்தது. எ - று. (௯)

௩0௩.—இதுவுமது:—

பெய்வளை யவனொடு பேணிய கங்குல்
உய்குவன் வரினென வுரைப்பினு மதுவே.

இ - ள். இட்ட வளையினையுடையாள் தலைவனோடு விரும்பிய இரவுப்பொழுது வரின் பிழைப்பேனெனச் சொல்லினும் அத்துறையாகும். எ - று.

வ - று. தோடவிழ்தார் யானுந் தொடர வவனுமென்
பாடகச் சீறடியின் மேற்பணிய - நாடகமா
வைகிய கங்கு றலைவரின்
உய்குவெ னுலகத் தளியேன் யானே.

இ - ள். இதழ்விரிந்த மாலை செவ்வியழிந்தமை யானும் வினவத் தலைவனும் என்னுடைய பாடகத்தினையுடைய சிற்றடிமேலே வணங்கக் கூத்தாகத் தங்கிய இரவுப்பொழுது இன்னம் கைகூடிற் பிழைப்பேன்; பூமியிடத்து அளியேன் யான். எ - று. (௧0)

௩0௪.—நெஞ்சொடு மெலிதல்:—

அஞ்சொல் வஞ்சி யல்லிருட் செலீஇய
நெஞ்சொடு புகன்ற நிலையுரைத் தன்று.

இ - ள். அழகிய சொல்லினையுடைய வஞ்சிக்கொம்பை ஒப்பாள் இரவுப்பொழுது இருளின்கட் செல்வான்வேண்டி மனத்தோடு விரும்பிய நிலையைச் சொல்லியது. எ - று.

வ - று. மல்லாடு தோளா னளியவாய் மாலிருட்கண்
செல்லா மொழிக செலவென்பாய் - நில்லாய்
புனையிழை யிழந்த பூசல்
நினையினு நினைதியோ வாழியென் னெஞ்சே.

இ - ள். 'மல்லின் செய்தியுலாவும் புயத்தினையுடையான்றன் அளியை ஆசைப்பட்டு மயக்கமுடைய இருளிடத்துச் செல்லக்கடவேமல்லேம்; நீ தவிர்வாயாக போக்கை' என்று சொல்லுவாய்; நீநில்லாய்; அணிந்த ஆபரணஞ் சோர்ந்த ஆரவாரத்தை உள்ளுவையோ? உள்ளாயோ? வாழ்வாயாக, எனது நெஞ்சே. எ - று. (௧௧)

௩0௫.—இதுவுமது:—

வரிவளை நெகிழ்த்தோன் முன்செல வலித்தேன்
அரிவைய ரறிகென வுரைப்பினு மதுவே.

இ - ள். அழகிய வளையை நெகிழப்பண்ணினோன் முன்னே போவேனாகத் துணிந்தேன்; அரிவையரெல்லாம் இதனை அறிகவெனச் சொல்லினும் முன்பு சொன்ன துறையேயாம். எ - று.

வ - று. நல்வளை யேக நலந்தொலைவு காட்டிய
செல்லல் வலித்தேனச் செம்மன்முன் - பில்லாத

வம்ப வுரையொடு மயங்கிய
அம்பற் பெண்டிரு மறைகவெம் மலரே.

இ-ள். அழகிய தொடி கழல என் அழகழிவு காட்டுவான் வேண்டிப் போதல் உடன்பட்டேன், அத்தலைவன் முன்பு; இல்லாத புதுவார்த்தையொடு கலங்கிய புறங்கூறும் பெண்டிரும் சொல்லுக, எம்முடைய அலரை. எ-று.

யான் சொல்லவலித்தேனெனச் சொல்லிற் பெருந்திணையாம்.(கஉ)

ஆண்பாற் கூற்றுப் பெண்பாற் கூற்றுக் கைக்கிளைப் பாட்டு இருபத்தொன்றும் முடிந்தன.

பதினொன்றவது கைக்கிளைப்படலம் முற்றிற்று.

---

பன்னிரண்டாவது

# பெருந்திணைப் படலம்.

## [பெண்பாற் கூற்று.]

(கசு.—சூத்திரம்.)

வேட்கைமுந் துறுத்தல் பின்னிலை முயறல்
பிரிவிடை யாற்றல் வரவெதிர்ந் திருத்தல்
வாராமைக் கழிதக விரவுத்தலைச் சேறல்
இல்லவை நகுதல் புலவியுட் புலம்பல்
பொழுதுகண் டிரங்கல் பரத்தையை யேசல்
கண்டுகண் சிவத்தல் காதலிற் களித்தல்
கொண்டகம் புகுதல் கூட்டத்துக் குழைதல்
ஊடலு ணெகிழ்த லுரைகேட்டு நயத்தல்
பாடகச் சீறடி பணிந்தபி னிரங்கல்
பள்ளிமிசைத் தொடர்தல் செல்கென விடுத்தலென
ஒன்பதிற் றிரட்டியோ டொன்று முளப்படப்
பெண்பாற் கூற்றுப் பெருந்திணைப் பால.

என்-னின், பெருந்திணைக்குரிய பெண்பாற்கிளவி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். வேட்கை முந்துறுத்தல் முதலாகச் செல்கென விடுத்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பத்தொன்பதும் பெருந்திணைக்குரிய பெண்பாற்கிளவியாம். எ-று.

அவற்றுள்,

நஉசு:—வேட்கை முந்துறுத்தல்:—

கையொளிர் வேலவன் கடவக் காமம்
மொய்வளைத் தோளி முந்துற மொழிந்தன்று.

இ - ள். கையிடத்தே விளங்கும் வேலினையுடையவன் செலுத்த வேட்கையைச் செறிந்த தொடியாற் சிறந்த தோளினையுடையாள் தலைவன்முன்னே சொல்லியது. எ - று.

வ - று. எழுதெழின் மார்ப மெனக்குரித் தாகென்
றழுதழுது வைகலு மாற்றேன் - றொழுதிரப்பல்
வல்லிய மன்ன வயவேலோய் வாழ்கென
அல்லியந்தார் நல்க லறம்.

இ - ள். சந்தன குங்குமச் சேற்றால் வரிக்கும் அழகினையுடைய அகலம் எனக்கே சேமமாக வேண்டுமென்று சொல்லி அழுதழுது நாடோறும் பொறேனாகிப் பணிந்து வேண்டிக்கொள்வேன்; புலியை யொத்த வலிய வெற்றிவேலினையுடையோய், உயிர்வாழ்வாயாகவென எனக்கு நின் அல்லியினையுடைய மாலையைத் தருதல்காண் அறமாவது. எ - று. (க)

ஙூ0எ.—பின்னிலை முயறல் :—

முன்னிழந்த நலனசைஇப்
பின்னிலை [1]மலைந்தன்று.

இ - ள். தலைவி முன்பு தோற்ற தன் அழகைநச்சி இரந்து பின்னிற்றலை மேற்கொண்டது. எ - று.

வ - று. மற்கொண்ட திண்டோண் மறவே னெடுந்தகை
தற்கண்டு மாமைத் தகையிழந்த - எற்காணப்
பெய்களி யானைப் பிணரெருத்திற் *கண்டியான்
கைதொழுதேன் றான்கண் டிலன்.

இ - ள். மற்றொழிலை மேற்கொண்ட திண்ணிய புயத்தினையும் சினவேலினையுமுடைய பெரியமேம்பாட்டாளன் தன்னைக் கண்டு நிறத்தின் அழகையிழந்த என்னைக்காணச் சொரியும் மதத்தினையுடைய களிற்றினது சருச்சரையாற் பொலிந்த கழுத்தகத்தே கண்டு யான் கையைக் குவித்தேன்; தான் என்னைக் கண்டிலன். எ - று. (உ)

ஙூ0அ.—பிரிவிடை யாற்றல் :—

இறைவளை நெகிழ வின்னா திரங்கிப்
பிறைநுதன் மடந்தை பிரிவிடை யாற்றின்று.

இ - ள். முன்கையில் தொடி சோர வெறுத்து வருந்தி இளமதி போன்ற நுதலினையுடைய மடவாள் தலைமகன் பிரிந்தவிடத்து ஆற்றியது. எ - று.

வ - று. ஓடுக கோல்வளையு மூரு மலரறைக
தோடவிழ் தாழை துறைகமழக் - கோடுடையும்
பூங்கானற் சேர்ப்பன் புலம்புகொண் மான்மாலை
நீங்கானென் னெஞ்சகத்து னின்று.

---

* பு - வெ. 294 : 3 - 4. (பி - ம்.) 1 ‘ மலிந்தன்று.’

இ - ள். கையைவிட்டுப் போவனவாக, திரண்ட தொடியும்; ஊரி லுள்ளாரும் பழிதூற்றுக; இதழ்விரியுந் தாழை நீர்த்துறையெல்லாம் மணம்நாறச் சங்குபோல் மலரும் பொலிந்த கடற்கானலையுடைய சேர்ப்பன் தனிமைகொண்ட மயக்கமுடைத்தான மாலைக்காலத்துப் போகான்; என் நெஞ்சத்திடத்து நிலைபெற்று. எ - று. (ரு).

ரு0கூ.—வரவெதிர்ந்திருத்தல் :—

முகைபுரை முறுவன் முள்ளெயிற் றரிவை
வகைபுனை வளமனை வரவெதிர்ந் தன்று.

இ - ள். முல்லையரும்பன்ன நகையாற்சிறந்த கூரிய பல்லினை யுடைய மடவாள் பல கூறுபடக் கைசெய்த செல்வமனையிடத்தே தலைவன் வருதலை ஏற்றிருந்தது. எ - று.

வ - று. காம நெடுங்கட னீந்துங்காற் கைபுனைந்த
பூமலி சேக்கைப் புணைவேண்டி - நீமலிந்து
செல்லாய் சிலம்பன் வருதற்குச் சிந்தியாய்
எல்லாக நெஞ்ச மெதிர்.

இ - ள். ஆசையாகிய பெரிய கடலை நீந்துமிடத்துக் கைசெய்யப் பட்ட மலர்மிக்க சயனத்திடத்துக் கூட்டமாகிய தெப்பத்தைவேண்டி நீ விரைந்து போகாய்; தலைவன் இவ்விடத்து வருதற்கு நினையாய்; நீ மயக்கம் நீங்கி விளக்கமுற என்நெஞ்சே, எதிரே. எ - று.

எதிர் செல்லாயென்க. (சு)

ரு௧0.—வாராமைக்கு அழிதல் :—

நெடுவேய்த் தோளி நிமித்தம் வேறுபட
வடிவே லண்ணல் வாராமைக் கழிந்தன்று.

இ - ள். உயர்ந்த மூங்கிலன்ன தோளினுள், சொகுனவிகற்பத் தாலே வடித்த வேலினையுடைய தலைவன் வாராதொழிய அதற்கு அழிந் தது. எ - று.

வ - று. நுடங்கருவி யார்த்திழியு நோக்கருஞ் சாரல்
*இடங்கழி மான்மாலை யெல்லைத் - தடம்பெருங்கண்
தாரார மார்பன் றமியே னுயிர்தளர
வாரான்கொ லாடும் வலம்.

இ - ள். அசையும் மலையருவி ஆரவாரித்து விழும் பார்த்தற்கரிய மலைப்பக்கத்து இராகவேகத்தையுண்டாக்கும் மயக்கமுடைய மாலை யளவிலே மிகப்பெரிய கண்ணானது, மாலையாற் சிறந்த ஆரமார்பன் தனியேனுடைய உயிர் மெலிய வாரான் போலும், வலம் துடியாநின்றது எ - று.

தடம்பெருங்கண் வலமாடுமென்க. (எ)

* சிலப். 10 : 219 - 20, அடியார். மணி. 10 : 22, 18 : 119.

ரூகக.—இரவுத்தலைச் சேறல் :—

காண்டல் வேட்கையொடு கனையிருணடுநாள்
மாண்ட சாயன் மனையிறந் தன்று.

இ - ள். தலைவனைக் காணவேண்டுமென்னும் ஆசையோடு செறிந்த இருளையுடைய ஒத்த யாமத்து மாட்சிமைப்பட்ட மென்மையாள் தன் இல்லினின்றும் இறந்தது. எ - று.

வ - று. *பணையா வரைமுழங்கும் பாயருவி நாடன்
பிணையார மார்பம் பிணையத் - துணையாய்க்
கழிகாம முய்ப்பக் கனையிருட்கட் செல்கேன்
வழிகாண மின்னுக வான்.

இ - ள். வீரமுரசென்னக் கற்பாறையிடத்து ஒலிக்கும் பரந்த அருவியாற்பொலிந்த நாடன் மூட்டுவாயினையுடைய ஆரமார்பத்தைத் தழுவ எனக்குத் துணையாய் மிக்க ஆசை செலுத்தச் செறிந்த இருளிடத்துப் போவேன், நெறியைக் காண மின்னுவதாக, மேகம். எ - று. (சு)

ரூகஉ.—இல்லவை நகுதல் :—

இல்லவை சொல்லி யிலங்கெயிற் றரிவை
நல்வய லூரனை நகைமிகுத் தன்று.

இ - ள். உள்ளனவல்லாதவற்றை உரைத்து விளங்கும் பல்லினையுடைய மடவாள் அழகிய பழனஞ்சூழ்ந்த ஊரனை நகையைப் பெருக்கியது. எ - று.

வ - று. முற்றா முலையார் முயங்க விதழ்குழைந்த
நற்றா ரகல நகைதரலின் - நற்றார்
கலவே மெனநேர்ந்துங் காஞ்சிநல் லூர
புலவேம் பொறுத்த லரிது.

இ - ள். இளமுலையினையுடையார் தழுவப் பூந்தோடு வாடின அழகிய மாலையினையுடைய மார்பம் சிரிப்பைத் தருதலின், அழகிய மாலையினை மணவேமென நிச்சயித்தும் காஞ்சிமரத்தினையுடைய அழகிய ஊரனே, ஊடேம்; நின்னுடன் ஊடின் ஆற்றுதல் அரிது. எ - று.
அரிது ஆதலிற் புலவேம். (எ)

ரூகங.—புலவியுட் புலம்பல் :—

நலவளை மடந்தை நற்றார் பரிந்து
புலவி யாற்றாள் புலம்புற் றன்று.

இ - ள். அழகிய தொடியினையுடைய மடவாள் தலைவன் மார்பின் மாலையை அறுத்து ஊடலாற்றாளாய்த் தனிமையுற்றது. எ - று.

* தொல். அகத். சூ. 54, இளம். மேற்.

வ - று. ஓங்கிய வேலான் பணியவு மொள்ளிழை
தாங்காள் வரைமார்பிற் றார்பரிந் - தாங்கே
அடும்படர் மூழ்கி யமைமென்றோள் வாட
நெடும்பெருங்க ணீந்தின நீர்.

இ - ள். உயர்ந்த வேலினையுடையான் வணங்கவும் ஒள்ளிய ஆபரணத்தினையுடையாள் கோபத்தைத் தடாளாய் மலையன்ன அகலத்தின் மாலையை அறுத்து அவ்விடத்திலே வருத்துந் துயரத்திலே அழுந்தி மூங்கில் போன்ற மெல்லியதோள்கள் மெலிய, நெடியவாய்ப் பெரியவாகிய கண்கள் நீரிலே மிதந்தன. எ - று. (அ)

ருகச.—பொழுதுகண்டு இரங்கல் :—

நிற்ற லாற்றா ணெடிதுயிர்த் தலமரும்
பொற்றொடி யரிவை பொழுதுகண் டிரங்கின்று.

இ - ள். உயிர்நிற்றலைப் பொறாளாய் நெட்டுயிர்ப்புக்கொண்டு சுழலும் பொன்னாற்செய்த வளையினையுடைய தலைவி மாலைப்பொழுதைக் கண்டு வருந்தியது. எ - று.

வ - று. இறையே யிறந்தன வெல்வளை யுண்கண்
உறையே பொழிதலு மோவா - நிறையைப்
பருகாப் பகல்கரந்த பையுள்கூர் மாலை
உருகா வுயங்கு முயிர்.

இ - ள். கையிறையைக் கடந்தன, விளக்கத்தினையுடைய தொடிகள்; மையுண்ட விழிகள் துளியைச் சொரிதலும் ஒழியா; என் நிறையை உண்டு ஆதித்தன் ஒளித்த நோய்மிகும் மாலைக்காலத்துக் கரைந்து வருந்தாநிற்கும், பிராணன். எ - று. (க)

ருகரு.—பரத்தையை ஏசல் :—

அணிவய லூரனொ டப்புவிழ வமரும்
பணிமொழி யரிவை பரத்தையை யேசின்று.

இ - ள். அழகிய பழனத்தையுடைய ஊரனுடனே நீர்விளையாட்டு விரும்பும் மெல்லிய சொல்லினையுடைய தலைமகள் பரத்தையைப் புல்லற் கூறியது. எ - று.

வ - று. யாமுயங்கு மென்முலையால் யாணர் வயலூரன்
தேமுயங்கு பைந்தார் திரைமுயங்க - யாமுயங்க
எவ்வையர் சேரி யிரவு மிமைபொருந்தாக்
கவ்வை கருதிற் கடை.

இ - ள். யாம் பொறையாற்றாது வருந்தும் மெல்லிய கொங்கையாலே புதுவளப்பத்தினையுடைய கழனியால் நிறைந்த ஊரனது தேன்

தழுவும் செவ்விமாலையைப் புனற்றுறை தழுவா நிற்ப யாம் தழுவா நிற்ப, இதற்கு எம் தங்கையராகிய பரத்தையர்சேரி பலரும் உறங்கும் இரவும் கண்ணிமை கூடாத ஆரவாரத்தை நினைப்பிற் சாலப் புல்லியது. எ - று. (கo)

ҧ கக.—கண்கேண் சிவத்தல் :—

உறுவரை மார்ப னொள்ளிணர் நறுந்தார்
கறுவொடு மயங்கிக் கண்சிவந் தன்று.

இ - ள். பெரிய மலைபோன்ற அகலத்தினையுடையவனது ஒள்ளிய தொத்தினையுடைய கமழுமாலையை முனிவுடனே கலங்கித் தலைவி கோபித்தது. எ - று.

வ - று. கூடிய கொண்கன் குறுகக் கொடிமார்பின்
ஆடிய சாந்தி னணிதொடர்ந்து — வாடிய
தார்க்குவளை கண்டு தரியா விவண்முகத்த
கார்க்குவளை காலுங் கனல்.

இ - ள். மணந்த கொழுநன் அணுகக் கொடியனையாள் மார்பிடத்துத் தோய்ந்த சந்தனத்தின் அழகுமேவிச் செவ்வியழிந்த செங்கழுநீர் மாலையைக் கண்டு பொறுவாய் இவளுடைய முகத்திற் செவ்விக்குவளையாகிய கண்கள் அழலைச் சொரியும். எ - று. (கக)

ҧ கள.—காதலிற் களித்தல் :—

மைவரை நாடன் மார்பகம் பொருந்திக்
கைவிட லறியாக் காதலிற் களித்தன்று.

இ - ள். மேகம்பொருந்தின மலைநாடனுடைய மார்பிடத்தேமேவி நீங்குதலறியாத அன்பினால் மகிழ்ந்தது. எ - று.

வ - று. காதல் பெருகிக் களிசெய்ய வக்களியாற்
கோதையுந் தாரு மிடைகுழைய - மாதர்
கலந்தாள் கலந்து கடைக்கண்ணாற் கங்குல்
புலந்தாள் புலரியம் போது.

இ - ள். அன்புமிக்குக் களிப்புச்செய்ய அம்மகிழ்ச்சியால் மாலையும் கோதையும் நடுவே வாடக் காதலினையுடையாள் கூடினாள்; கூடிக் கடைக்கண்ணாலே நோக்கி இரவுப்பொழுதை முனிந்தாள், விடியற் காலத்து. எ - று.

கங்குல் கழிந்ததென்று புலந்தாள். (கஉ)

ҧ கஅ.—கொண்டகம் புகுதல் :—

காதல் பெருகக் கணவனைக் கண்ணுற்றுக்
கோதையாற் பிணித்துக் கொண்டகம் புக்கன்று.

இ - ள். அன்புமிகக் கொழுநனைக் கண்டு மாலையாற் கட்டி அகத்திலே கொண்டுபுக்கது. எ - று.

வ - று. கண்டு களித்துக் கயலுண்க ணீர்மல்கக்
கொண்டகம் புக்காள் கொடியன்னாள் - வண்டினம்
காலையாழ் செய்யுங் கருவரை நாடனை
* மாலையான் மார்பம் பிணித்து.

இ - ள். தலைவனைக் கண்டு மகிழ்ந்து கயல்போன்ற மையுண்ட கண் நீர்மிக அகத்திலே கொண்டுபுக்காள், வல்லியனையாள்; சுரும்பினங்கள் காலைப்பொழுதிலே யாழ்போல இசைக்கும் கரிய மலைநாடனைத் தாராலே அகலத்தைக் கட்டிக்கொண்டு. எ - று.
பிணித்துக் கொண்டு அகம்புக்காள் கொடியன்னாளென்க. (கங)

ரு கக.—கூட்டத்துக்குழைதல் :—

பெய்தா ரகலம் பிரித லாற்றாக்
கொய்தழை யல்குல் கூட்டத்துக் குழைந்தன்று.

இ - ள். இட்ட மாலையினையுடைய அகலத்தை நீங்குதல் பொறாத பறித்த தழையாற்சிறந்த அல்குலினையுடையாள் புணர்ச்சியிடத்து நெகிழ்ந்தது. எ - று.

வ - று. மயங்கி மகிழ்பெருக மால்வரை மார்பின்
தயங்கு புனலூரன் றண்டார் - முயங்கியும்
பேதை புலம்பப் பிரிதியோ நீயென்னும்
கோதைசூழ் கொம்பிற் குழைந்து.

இ - ள். மனங்கலங்கிக் களிப்பு மிகப் பெரிய வரைபோன்ற மார்பினையுடைய அசையும் புனலூரன்றன் குளிர்ந்த மாலையைத் தழுவியும் மடவாள் யான் தனிமைப்பட நீ பிரிகின்றாயோவென்று சொல்லும், மாலைசுற்றின பூங்கொம்புபோலத் தளர்ந்து. எ - று.
தளர்ந்து நீ பிரிதியோவென்னும். (கச)

ரு உ0.—ஊடலுணெகிழ்தல் :—

நள்ளிருண் மாலை நடுங்கஞர் நலிய
ஒள்வளைத் தோளி யூடலு ணெகிழ்ந்தன்று.

இ - ள். செறிந்த இருளையுடைய மாலைக்காலத்துத் துளங்காநின்ற துயரம்நெருக்க ஒள்ளிய தொடியாற் சிறந்த தோளினையுடையாள் வழக்காட்டிடத்துக் குழைந்தது. எ - று.

வ - று. தெரிவின்றி யூடத் தெரிந்துநங் கேள்வர்
பிரிவின்றி நல்கினும் பேணாய் - திரிவின்றித்
துஞ்சே மெனமொழிதி தூங்கிருண் மான்மாலை
நெஞ்சே யுடைய நிறை.

---

* சீவக. 1988.

இ - ள். குற்றமொன்றும் ஆராயாது நாம் ஊட, விசாரித்து நம் கொழுநர் நீங்குதலின்றியே தலையளிபண்ணினும் விரும்பாயாய் வேறுபாடின்றி உறங்கேமெனச் சொல்லாநின்றாய்; தங்கும் இருளையுடைய மயக்கத்தைச் செய்யும் மாலைக்காலத்து மனமே, நிறையுடைமை நீ. எ - று. (கரு)

ரு உக.—உரைகேட்டு நயத்தல் :—

துயரொடு வைகிய சூழ்வளைத் தோளி
உயர்வரை நாட னுரைகேட்டு நயந்தன்று.

இ - ள். துன்பத்தோடு தங்கிய சூழ்ந்த தொடியினையுடைய தோளி உயர்ந்த மலைநாடன்றன் வார்த்தையைக் கேட்டு விரும்பியது. எ - று.

வ - று. ஆழ விடுமோ வலரொடு வைகினும்
தாழ்குர லேனற் றலைக்கொண்ட - நூழில்
விரையாற் கமழும் விறன்மலை நாடன்
உரையாற் றளிர்க்கு முயிர்.

இ - ள். துயரக்கடலுள்ளே அழுந்தவிடுமோ; பிறர் தூற்றும் பழியோடு தங்கினும் குனிந்த கதிரையுடைய தினையிலே தலைமணந்த நூழிலென்னும் வல்லியினுடைய மணங்கமழும் வெற்றியான் அமைந்த வரைநாடன் வார்த்தையாலே தளிர்க்கும் என்னுயிர். எ - று.

உயிர் ஆழவிடுமோ. ஆல் : அசை. (கசு)

ரு உஉ.—பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கல் :—

கோடுயர் வெற்பன் கூப்பிய கையொடு
பாடகச் சீறடி பணிந்தபி னிரங்கின்று.

இ - ள். குவடு நீண்ட மலையினையுடையவன் குவித்த கையுடனே பாடகம் அணிந்த சிற்றடியிலே வணங்கியபின்பு நெஞ்சு நெகிழ்ந்தது. எ - று.

வ - று. அணிவரு பூஞ்சிலம் பார்க்கு மடிமேல்
மணிவரை மார்பன் மயங்கிப் - பணியவும்
வற்கென்ற நெஞ்சம் வணங்காய் சிறுவரை
நிற்கென்றி வாழியர் நீ.

இ - ள். அழகுமிகும் பொலிந்தசிலம்பு ஆரவாரிக்கும் அடிமேலே அழகிய வரைபோன்ற அகலத்தையுடையவன் கலங்கி வணங்கவும் வலிமையுற்ற மனமே, வணங்காயாய்ச் சிறியகாலை ஊடல்தீராதே நிற்பனென்று சொல்லாநின்றாய்; வாழ்வாயாக நீ. எ - று.

வாழியரென்பது, நகை. (கஎ)

ரு உரு.—பள்ளிமிசைத் தொடர்தல் :—

மாயிருங் கங்குன் மாமலை நாடனைப்
பாய னீவிப் பள்ளிமிசைத் தொடர்ந்தன்று.

இ - ள். மிகவும் பெரிய கங்குலிடத்துப் பெரிய வரைநாடனை உறக்கத்தை ஒழிந்து சயனத்திலே பற்றியது. எ - று.

வ - று. யானை தொடருங் கொடிபோல யானுன்னைத்
தானை தொடரவும் போதியோ - மானை
மயக்கரிய வுண்கண் மடந்தைதோ ளுள்ளி
இயக்கருஞ் சோலை யிரா.

இ - ள். யானையைப் பற்றும் வல்லிபோல நின்னை யான் புடைவையைப் பற்றவும் போகின்றாயோ ; மானைமயக்கும் செவ்வரி கருவரி பரந்த மையுண்டகண்ணையுடைய மடவாள்தன் தோளைக்கருதி உலாவுதற்கரிய சோலையிடத்து இரவுப்பொழுதிலே. எ - று.
தானை தொடரவும் போதியோ. (கஅ)

௩உச.—செல்கென விடுத்தல் :—

பாயிருட் கணவனைப் படர்ச்சி நோக்கிச்
சேயிழை யரிவை செல்கென விடுத்தன்று.

இ - ள். பரந்த இருட்காலத்துக் கொழுநனைச் செலவைப் பார்த்துச் சிவந்த ஆபரணத்தினையுடைய தலைவி போவாயாகவென்று சொல்லியது. எ - று.

வ - று. விலங்குந ரீங்கில்லை வென்வேலோய் சென்றீ
இலங்கிழை யெவ்வ நலியக் - கலங்கிக்
குறியுள் வருந்தாமைக் குன்றுசூழ் சோலை
நெறியுள் விரிக நிலா.

இ - ள். நின்னைப் போகாமலே விலக்குவார் இவ்விடத்து ஒருவரும் இல்லை ; வென்றிவேலினையுடையோய், செல்வாயாக ; விட்டுவிளங்கும் ஆபரணத்தையுடையாள் துன்பம் நெருக்க மயங்கிக் குறியிடத்து நின்னைக் காணாது வருத்தமுறாதபடி மலைசுற்றின சோலையிடத்து வழியுள்ளே விரிவதாக, நிலா. எ - று.
விரிக நிலா ; வென்வேலோய் சென்றீ. (கக)

பெருந்திணைப் படலத்துட் பெண்பாற்கூற்று முற்றிற்று.

---

## [இருபாற்பெருந்திணை.]

### (கஎ.—சூத்திரம்.)

சீர்செல வழுங்கல் செழுமட லூர்தல்
தூதிடை யாட லுயரவற் குரைத்தல்
கண்டுகை சோர்தல் பருவ மயங்கல்
ஆண்பாற் கிளவி பெண்பாற் கிளவி
௫ தேங்கமழ் கூந்தற் றெரிவை வெறியாட்
டரிவைக் கவடுணை பாண்வர வுரைத்தல்

பரிபுரச் சீறடிப் பரத்தை கூறல்
விறலி கேட்பத் தோழி கூறல்
வெள்வளை விறலி தோழிக்கு விளம்பல்
பரத்தை வாயில் பாங்கிகண் டுரைத்தல்
பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல்
குற்றிசை யேனைக் குறுங்கலி யுளப்பட
ஒத்த பண்பி னொன்றுதலை யிட்ட
ஈரெண் கிளவியும் பெருந்திணைப் பாலை.

என்-னின், இதுவும் பெருந்திணைப் பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். செலவழுங்கன் முதலாகக் குறுங்கலியீறுகச் சொல்லப்பட்ட பதினேழும் பெருந்திணைப்பாலவாம். எ - று.

அவற்றுள்,

ருஉரு.—செலவழுங்கல் :—

நிலவுவே னெடுந்தகை நீள்கழை யாற்றிடைச்
செலவுமுன் வலித்துச் செலவழுங் கின்று.

இ - ள். நிலவுபோல ஒளிவிடும் வேலினையும் பெரிய மேம்பாட்டினையுமுடையவன் உயர்ந்த மூங்கில் இயைந்த வழியிடைப் போவானுக முன்னே நிச்சயித்துப் போக்கு ஒழிந்தது. எ - று.

வ - று. *நடுங்கி நறுநுதலா ணன்னலம்பீர் பூப்ப
ஒடுங்கி யுயங்க லொழியக் - கடுங்கணை
வில்லே ருழவர் விடரோங்கு மாமலைச்
செல்லே மொழிக செலவு.

இ - ள். நடுக்கமுற்று, மணங்கமழும் நுதலினையுடையாள் மிக்க அழகு பீர்க்கம்பூப்போலப் பசப்ப மெலிந்து வருந்துதல் தவிரக் கொடிய அம்பினையுடைய வில்லை ஏருழவாகவுடைய வேடர்தம் முழையையுடைய உயர்ந்த பெரிய மலையிடத்துப் போகாம்; நெஞ்சே, தவிர்வாயாக போக்கை. எ - று. (க)

ருஉசு.—மடலூர்தல் :—

ஒன்றல்ல பலபாடி
மன்றிடை மடலூர்ந்தன்று.

இ - ள். ஒன்றன்றியே பலவற்றையும் சொல்லி மன்றின்நடுவே மடன்மாவைச் செலுத்தியது. எ - று.

வ - று. இன்றிப் படரோ டியானுழப்ப வைங்கணையான்
வென்றிப் பதாகை யெடுத்தானும் - மன்றில்
தனிமடமா னோக்கி தகைநலம்பா ராட்டிக்
குனிமடன்மாப் பண்ணிமேல் கொண்டு.

---

* தோல். அகத். சூ. 54, இளம். மேற்.

இ - ள். இற்றைநாள் இந்த நினைவுடனே யான் பழக ஐந்தம்பினையுடைய காமன் வெற்றிக்கொடியை உயர்த்தானும்; அம்பலத்திலே ஒப்பில்லாத மடப்பத்தினையுடைய மானன்ன பார்வையாள்தன் மிக்க அழகைக் கொண்டாடி வளைந்த பனைமடலாலாகிய குதிரையைப்பண்ணி அதன்மேல் ஏறி. எ - று.

ஏறி இன்று இப்படரோடு யானுழப்ப ஐங்கணையான் வென்றிப் பதாகை எடுத்தானும். (உ)

ரூஉஎ.—தூதிடை யாடல் :—

ஊழி மாலை யுறுதுயர் நோக்கித்
தோழி நீங்கா தூதிடை [1]யாடின்று.

இ - ள். உகம்போன்ற மாலைக்காலத்துத் தலைவியுற்ற துன்பத்தைப் பார்த்துத் தோழி விட்டு நீங்காளாய்த் தலைவனிடத்தே தூதாகி நடந்தது. எ - று.

வ - று. வள்வாய்ந்து பண்ணுக திண்டேர் வடிக்கண்ணாள்
ஒள்வாள்போன் மாலை யுயல்வேண்டும் - கள்வாய
தாதொடு வண்டிமிருந் தாம வரைமார்ப
தூதொடு வந்தேன் றொழு.

இ - ள். வாரை ஆராய்ந்து பண்ணுறுத்து, திண்ணியதேரினை; வடுப் பிளவன்ன விழியினையுடையாள் ஒள்ளியவாள்போலும் கொடிய மாலைக்காலத்துப் பிழைத்தல்வேண்டும்; தேனை இடத்திலேயுடைய பூவுடனே சுரும்பு ஆர்க்கும் மாலையினையுடைய மலைபோலுமார்பனே, நின்னை வணங்கத் தூதாகிவந்தேன். எ - று. (ரு)

ரூஉஅ.—துயரவற் குரைத்தல் :—

மான்ற மாலை மயிலியல் வருத்தல்
தோன்றக் கூறித் துயரவற் குரைத்தன்று.

இ - ள். மயங்கிய மாலைக்காலம் மயில்போன்ற இயலினையுடைய தலைவியை வருத்தலை அறியச் சொல்லி அவள் துன்பத்தைத் தோழி தலைவற்குச் சொல்லியது. எ - று.

வ - று. உள்ளத் தவலம் பெருக வொளிவேலோய்
எள்ளத் துணிந்த விருண்மாலை - வெள்ளத்துள்
தண்டா ரகலந் தழூஉப்புணையா நீநல்கின்
உண்டாமென் றோழிக் குயிர்.

இ - ள். நெஞ்சில் துயரமிகச் சோதிவேலோய் இகழ்தற்கு நிச்சயித்த இருளினையுடைய மாலைவெள்ளத்திலே குளிர்ந்த மாலைமார்பத்தைத் தழுவுதற்குத் தெப்பமாக நீ அளிப்பாயாகில் எனது தோழிக்கு உயிர்உண்டாம். எ - று. (ச)

(பி - ம்.) 1 ' யாகின்று. '

௩உ௯.—கண்டுகை சோர்தல் :—

போதார் கூந்தற் பொலங்கொடி யரிவை
காதல் கைம்மிகக் கண்டுகை சோர்ந்தன்று.

இ - ள். மலர்நிறைந்த குழலினையும் பொற்கொடியினையும் உடைய தலைவி தன் அன்பு கைகடப்பத் தோழிகண்டு தன்னுடைய ஒழுக்கம் தளர்ந்தது. எ - று.

வ - று. ஆம்ப லுடங்கு மணிவளையு மேகின
கூம்பன் மறந்த கொழுங்கயற்கண் - காம்பின்
எழில்வாய்ந்த தோளி யெவனுங்கொல் கானற்
பொழிலெல்லா மீயும் புலம்பு.

இ - ள். ஆம்பற்றண்டை வளைத்திட்ட அழகிய வளையும் வீழ்ந்தன; துயில்இழந்தன, வளவிய கயல்போலும் விழிகள்; மூங்கிலினும் அழகுமருவின தோளினையுடையாள் என்னுங்கொல்லோ! கடற்கரைச் சோலைமுழுதுந் தரும், தனிமையை. எ - று.

ஆம்பற்றண்டுபோலும் திரண்டவளையென்பாரும், இதழ்போலும் வெள்வளையென்பாருமுளர். (௫)

௩௩௦.—பருவமயங்கல் :—

உருவ வால்வளை யுயங்கத் தோழி
பருவ மயங்கிப் படருழந் தன்று.

இ - ள். அழகிய வெள்வளையினையுடையாள் வருந்தப் பாங்கி காலத்தை அன்றுமென மருண்டு வருத்தமுற்றது. எ - று.

வ - று. பெரும்பணை மென்றோள் பிரிந்தாரெம் முள்ளி
வரும்பருவ மன்றுகொ லாங்கொல் - சுரும்பிமிரும்
பூமலி கொன்றை புறவெல்லாம் பொன்மலரும்
மாமயிலு மாலு மலை.

இ - ள். பெரிய மூங்கில்போன்ற மெல்லிய தோளினை நீங்கிய தலைவர் எம்மை நினைந்து வருங்காலம் அல்ல கொல்லோ? ஆங் கொல்லோ? வண்டொலிக்கும் பூ மிக்க கொன்றை குறுங்காடெல்லாம் பொன்னைப் பூக்கும்; அழகிய மஞ்ஞையும் மலையிடத்தே ஆலியாநிற்கும். எ - று.

இது தோழி ஆற்றுவிக்கும்வகைஅன்றுதலிற் பெருந்திணையாயிற்று. (௬)

௩௩௧.—இதுவுமது :—

ஆங்கவர் கூறிய பருவ மன்றெனத்
தேங்கமழ் கோதை தெளிதலு மதுவே.

இ - ள். அவ்விடத்துத் தலைவர் சொன்ன காலம் இஃது அன்றெனா மணம்பொருந்தின மாலையினையுடைய தலைவி தேறுதலும் அத்துறையேயாம். எ - று.

வ - று. பொறிமயி லாலின பொங்க ரெழிலி
சிறுதுவலை சிந்தின சிந்த - நறிய
பவர்முல்லை தோன்றி பரியாம லீன்ற
அவர்வருங் காலமீ தன்று.

இ - ள். புள்ளிகளையுடைய மஞ்ஞை ஆலித்தன; சோலையாகிய மேகம் பொறையாற்றாமையான் மதுச்சிறுதுளியைச் சிதறின; சிதற, நறிய கொடிநெருக்கத்தான்மலிந்த முல்லையும் மெல் தோன்றியும் காலம் அறியாமல் முகிழ்த்தன; நம்முடைய தலைவர் வருங்காலம் இஃதன்று. எ - று. (எ)

ருருஉ.—ஆண்பாற் கிளவி:—

காமுறு காமந் தலைபரிந் தேங்கி
ஏமுற் றிருந்த விறைவ னுரைத்தன்று.

இ - ள். வேட்கைமிகும் ஆசை எல்லைகடப்ப ஏக்கமுற்று மயங்கியிருந்த தலைவன் சொல்லியது. எ - று.
பரிந்தென்பதனைப் பரியவென்க.

வ - று. கயற்கூடு வாண்முகத்தாட் கண்ணிய நெஞ்சம்
முயற்கூடு முன்னதாக் காணின் - உயற்கூடும்
காணு மரபிற் கடும்பகலுங் கங்குலும்
நாணுளு மேயா நகை.

இ - ள். கண்ணாகிய இணைக்கயல்பொருந்திய ஒளியாற்சிறந்த முகத்தினையுடையாளைக் கூடக்கருதிய மனம் முயலிற்கு உறைவிடமாகிய மதியை முன்னே காணிற் பிழைத்தல்கூடும்; காணாத முறைமையிற் கொடிய பகலும் இரவும் நாடோறும் நாடோறும், இயையா, மகிழ்ச்சி. எ - று.

நகை - பலநாளும் மகிழும் கூட்டங்கள். (அ)

ருருரு.—பெண்பாற் கிளவி:—

வெள்வளை நெகிழவு மெம்முள் ளாத
கள்வனைக் காணுதிவ் வூரெனக் கிளந்தன்று.

இ - ள். சங்கவளை சோரவும் எம்மை நினையாது வெள்வளையினைக் கொண்ட கள்வனைக் காணாது இப்பதியென்று சொல்லியது. எ - று.

வ - று. வானத் தியலு மதியகத்து வைகலும்
கானத் தியலு முயல்காணும் - தானத்தின்
ஒள்வளை யோடவு முள்ளான் மறைந்துறையும்
கள்வனைக் காணாதிவ் வூர்.

இ - ள். விண்ணில்நடக்கும் நிறைமதியிடத்து நாடோறும் காட்டிலே திரியும் முயலைக் காணநிற்கும்; கையிடத்து ஒள்ளிய வளைகழலவும் உணராளாகி ஒளித்துவாழுங் கள்வனைக் காணாது, இந்தப்பதி. எ - று.

இவையிரண்டும் கைகடந்த காமத்த; இக்கூற்று இவர்க்கே உரிய; அல்லன யாவர்க்கும் உரிய. (கூ)

## ௩௩௪.—வெறியாட்டு :—

தேங்கமழ் கோதை செம்ம லளிநினைந்
தாங்கந் நிலைமை யாயறி யாமை
வேங்கையஞ் சிலம்பற்கு வெறியா டின்று.

இ - ள். மணநாறுமாலையுடையாள், தலைவனது அருளைக் கருதி அவ்விடத்து அந்நிலைமையைத் தாயறியாதபடி வேங்கைமரத்தாற் பொலிந்த மலையையுடைய முருகற்கு வெறிக்கூத்து ஆடியது. எ - று.

வ - று. *வெய்ய நெடிதுயிரா வெற்ப னளிநினையா
ஐய நனிநீங்க வாடினாள் - மையல்
அயன்மனைப் பெண்டிரொ டன்னைசொ லஞ்சி
வியன்மனையு ளாடும் வெறி.

இ - ள். வெவ்விதாகத் நீர்க்கச்சுவாதம் விட்டுத் தலைவனது அருளைக் கருதித் தலைவன் வருவனோ வாரானோவென்னும் ஐயப்பாடு மிகவும்நீங்க ஆடினாள், மயக்கத்தினையுடைய அயன்மனைமகளிருடனே அன்னைசொல்லையும் அஞ்சி, அகன்றமனையிடத்தே ஆடும் வெறிக்கூத்தை. எ - று.

ஆடினாள் யார்? தலைவி. (௧௦)

## ௩௩௫.—பாண்வரவுரைத்தல் :—

மாணிழைக்கு வயலூரன்
பாண்வரவு பாங்கிமொழிந்தன்று.

இ - ள். மாண்ட ஆபரணத்தினை உடையாளுக்கு வயலூரன்றன் பாணன் வரவைத் தோழி சொல்லியது. எ - று.

வ - று. †அஞ்சொற் பெரும்பணைத்தோ ளாயிழையாய் தாநொடியும்
வஞ்சந் தெரியா மருண்மாலை - எஞ்சேரிப்
பண்ணியல் யாழொடு பாணனார் வந்தாரால்
எண்ணிய தென்கொலோ வீங்கு.

இ - ள். அழகிய சொல்லையும் பெரிய வேயன்ன தோளினையும் தெரிந்த ஆபரணத்தினையுமுடையாய், தாஞ்சொல்லும் பொய்ம்மையை ஆராயமாட்டாத மயக்கஞ்செய்யும் மாலைப்பொழுதின்கண் எமதுசேரியிடத்து இசைக்கு ஒத்த யாழுடனே பாணனார் வந்தார்; இவர் கருதிய காரியம் என்னையோ? இவ்விடத்து. எ - று. (௧௧)

---

* தொல். புறத். சூ. 5, இளம். மேற். † நன். சூ. 457, மயிலை. மேற்.

நநசு.—பரத்தை கூறல் :—

தேங்கமழ் சிலம்பன் றெமக் கெளிதெனப்
பாங்கவர் கேட்பப் பரத்தை மொழிந்தன்று.

இ - ள். மணங்கமழும் மாலையையுடைய தலைவன்மாலை எமக்குப் பெறுதற்கு எளிதென்று சொல்லிப் பாங்காயினோர் கேட்பப் பரத்தை மொழிந்தது. எ - று.

வ - று. பலவுரைத்துக் கூத்தாடிப் பல்வய லூரன்
நிலவுரைக்கும் பூணவர் சேரிச் - செலவுரைத்து
வெங்கட் களியால் விறலி விழாக்கொள்ளல்
எங்கட் கவன்று ரெளிது.

இ - ள். பலபொய்யும் சொல்லி நடித்துப் பலசெய்யினையுடைய ஊரன் நிலவைக்காட்டும் முத்தணியினையுடைய பரத்தையர் சேரியிடத்துப் போக்கைச் சொல்லி வெவ்விய மதுவையுண்ட மகிழ்ச்சியாற் பாணிச்சி, விழாவினைக் கொண்டாடாதேகொள் ; எமக்கு அவனுடைய மாலை எளிது. எ - று.

ஆதலால், விழாக்கொள்ளல். (கஉ)

நநஎ.—விறலிகேட்பத் தோழிகூறல் :—

பேணிய பிறர்முயக் காரமு தவற்கெனப்
பாணன் விறலிக்குப் பாங்கி மொழிந்தன்று.

இ - ள். விரும்பிய பரத்தையருடைய புல்லுதலைப் பெறுதல் அரிய அமிழ்தத்தோடொக்கும் தலைவற்கெனச் சொல்லிப் பாணனுடைய பாணிச்சிக்குத் தோழி சொல்லியது. எ - று.

வ - று. *அரும்பிற்கு முண்டோ வலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல் - சுரும்போ
டதிரும் புனலூரற் காரமிர்த மன்றே
முதிரு முலையார் முயக்கு.

இ - ள். அரும்பிற்கும் உண்டோ பூவினது வாசம் ? பெரிய தோளினையுடைய பாணிச்சி, பிணங்காதேகொள் ; வண்டுடனே ஆர்க்கும் புனலையுடைய ஊரற்கு நிறைந்த அமிர்தமல்லவோ ? முதிருமுலையினையுடையார் தழுவுதல். எ - று. (கந)

நநஅ.—விறலி தோழிக்கு விளம்பல் :—

ஆங்கவன் மூப்பவர்க் கருங்களி தருமெனப்
பாங்கி கேட்ப விறலி பகர்ந்தன்று.

இ - ள். அவ்விடத்துத் தலைவன் மூப்புப் பரத்தையர்க்குப் பெறுதற்கரிய மகிழ்ச்சியைத் தருமெனச் சொல்லி இற்பரத்தைதோழி கேட்பப் பாணிச்சி சொல்லியது. எ - று.

---

* தொல். அகத். சூ. 54, இளம். ஷை ஷை ஷை 51, ந. மேற்.

வ - று. *உளைத்தவர் கூறு முரைமெயல்லா நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம் - விளைத்த
பழங்க ளனைத்தாய்ப் படுகளி செய்யும்
முழங்கும் புனலூரன் மூப்பு.

இ - ள். வெறுத்தவர் கூறும் வார்த்தையெல்லாம் அங்ஙனே நிற்க, தோன்றின எயிற்றினையுடைய பரத்தையர் பலர்க்கும் ஆக்கின பழந் தேறலையொத்து மிக்க களிப்பினைப்பண்ணும், ஒலிக்கும் நீரினையுடைய ஊரனது முதுமை. எ - று. (௧௪)

௩௩௯.—பரத்தைவாயில் பாங்கிகண்டுரைத்தல் :—

உம்மி லரிவை யுரைமொழி யொழிய
எம்மில் வலவனுந் தேரும் வருமெனப்
பரத்தை வாயிற்குப் பாங்கி பகர்ந்தன்று.

இ - ள். உங்கள் வீட்டிடத்து மடவாள் சொன்ன வார்த்தை நீங்க, எங்கள் அகத்திடத்துப் பாகனும் தேரும் வருமெனச் சொல்லி இற்பரத்தைதோழிக்குச் சேரிப்பரத்தைதோழி சொல்லியது. எ - று.

வ - று. மாணலங் கொள்ளு மகிழ்நன் றணக்குமேற்
பேணலம் பெண்மை யொழிகென்பார் - காணக்
கலவ மயிலன்ன காரிகையார் சேரி
வலவ னெடுந்தேர் வரும்.

இ - ள். 'மாட்சிமைப்பட்ட எமது அழகினைக் கைக்கொள்ளுந் தலைவன் எம்மைவிட்டு நீங்குவானாயின், விரும்பேம்; பெண்மைத் தன்மை எம்மிடத்து நீங்குக' என்றுசொல்லும் இற்பரத்தையர் காணத் தோகைமயிலினையொத்த பரத்தையர்தம் சேரிக்கண் பாகனையுடைய உயரிய தேர் வாராநிற்கும். எ - று.

பேணலம் பெண்மையொழிகென்பார் காண வரும். (௧௫)

௩௪0.—பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல் :—

மற்றவர் சேரியின் மைந்த னுறைந்தமை
இற்றென விறலி யெடுத்துரைத் தன்று.

இ - ள். பரத்தையர்சேரியிடத்துத் தலைவன் தங்கினபடி இத் தன்மைத்தெனப் பாணிச்சி எடுத்துச்சொல்லியது. எ - று.

வ - று. தண்டா ரணியவாந் தையலார் சேரியுள்
வண்டார் வயலூரன் வைகினமை - உண்டால்
அறியே னடியுறை யாயிழையாற் பெற்றேன்
சிறியேன் பெரிய சிறப்பு.

இ - ள். குளிர்ந்த மாலையினையுடைய அழகை ஆசைப்படும் பரத்தையர் சேரியிடத்திலே சுரும்பு நிறைந்த கழனியையுடைய ஊரன் தங்கினமை நீ அருளினபடியால் உண்டு; யான் அறியேன்; அடிபொருந் தும் ஆபரணத்தினையுடையாளாலே பெற்றேன், சிறிய யான் பெரிய நன்மையை. எ - று. (௧௬)

---

* தொல். அகத். சூ. 54, இளம்; ௸ ௸ ௸ 51, ந. மேற்.

௲சக.—குற்றிசை :—

பொற்று ரகலம் புல்லிய மகளிர்க்
கற்றுங் கொழுகா தறங்கண் மா றின் று.

இ - ள். அழகிய மாலை மார்பைப் பொருந்திய அரிவையர்க்கு அற்றறுதிப்பட்டு நடவாது அறத்தைக் கண்மறுத்தது. எ - று.

வ - று. *கரிய பெருந்தடங்கண் வெள்வளைக்கை யாளை
மரிய கழிகேண்மை மைந்த - தெரியின்
விளிந்தாங் கொழியினும் விட்டகலார் தம்மைத்
தெளிந்தாரிற் றீர்வது தீது.

இ - ள். கரியவாய் மிகவும் பெரியவிழியினையும் விளர்த்த தொடியணிந்த கரத்தினையுமுடையாளைப் பொருந்திய மிக்க தொடர்ச்சியினையுடைய தலைவனே, ஆராயின், இறந்துபடினும் விட்டு நீங்காராய்த் தம்மைத் துணையென்று தேறினாரிடத்துநின்றும் கழிவது பொல்லாது. எ - று. (கள)

௲சஉ.—குறுங்கலி :—

நாறிருங் கூந்தன் மகளிரை நயப்ப
வேறுபடு வேட்கை வீயக் கூறின் று.

இ - ள். நறுநாற்றங்கமழும் பெரியகுழலினையுடைய மடவாரை விரும்ப விகற்பித்த காதலைக் கெடச்சொல்லியது. எ - று.

வ - று. பண்ணவாந் தீஞ்சொற் பவளத் துவர்ச்செவ்வாய்ப்
பெண்ணவாம் பேரல்குற் பெய்வளை - கண்ணவாம்
நன்னலம் பீர்பூப்ப நல்கார் விடுவதோ
தொன்னல முண்டார் தொடர்பு.

இ - ள். பண் ஆசைப்பட்ட தித்தித்தசொல்லினையும் பவளம்போல மிகச்சிவந்த வாயினையும் பெண்மைத்தன்மை அவாவும் பெரிய அல்குலினையும் இட்டவளையினையுமுடையவள் தன் கண்களாசைப்படும் நல்லஅழகு பீர்க்கம்பூப்போலப் பசப்ப அருளாராய்க் கைவிடுவதோ, பழையதாகிய நலத்தை அனுபவித்தவர் உறவு. எ - று. (கஅ)

இருபாற்பெருந்திணை முற்றிற்று.

பெருந்திணைப்பாட்டு முப்பத்தேழும் முடிந்தன.

பன்னிரண்டாவது பெருந்திணைப்படலம் முற்றிற்று.

## [1] ஒ ழி பு.

(கௌ.—சூத் தி ரம்.)

பாடாண் பகுதியுட் [2]டொல்காப் பியமுதற்
கோடா மரபிற் குணனொடு நிலைஇக்

* தொல். அகத். சூ. 54, இளம். மேற்.

(பி - ம்.) 1. 'பாடாண்பாட்டிலும் வாகையிலுமுள்ள புறத்தியல்', 'வென்றிப்பெருந்திணை.' 2. 'டொல்காப்பியன் முதற்.'

கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
விடுத்த லறியா விறல்புரி வாகையுள்
வாணிக வென்றியு [1] மல்ல வென்றியும்
நீணெறி [2] யுழவ னிலனுழு வென்றியும்
இகல்புரி யேறெருடு கோழியு மெதிர்வன்
தகருடன் யானை தணப்பில்வெம் பூமொடு
சிவல்கிளி பூவை செழும்பரி தேர்யாழ்
இவர்தரு சூதிடை யாடல் பாடல்
பிடியென் கின்ற பெரும்பெயர் வென்றியொ
டுடையன பிறவு முளப்படத் தொகைஇ
மெய்யி னூர்தமிழ் வெண்பா மாலையுள்
ஐய னரித னமர்ந்துரைத் தனவே.

என் - னின், பாடாண்பகுதியிலும் வாகையிலுமுள்ள புறத்திணை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். பாடாண்பகுதியுட் கொடுப்போரேத்திக் கொடாஅர்ப் பழித்தலும், வாகைத்திணையுள் வாணிகவென்றி மல்வென்றி உழவன் வென்றி ஏறுகொள்வென்றி கோழிவென்றி தகர்வென்றி யானை வென்றி பூழ்வென்றி சிவல்வென்றி கிளிவென்றி பூவைவென்றி குதிரை வென்றி தேர்வென்றி யாழ்வென்றி சூதுவென்றி ஆடல்வென்றி பாடல் வென்றி பிடிவென்றி என இவை பதினெட்டுமாம். எ - று.

அவற்றுள்,

ஙசரு.—கோடுப்போரேத்திக் கோடாஅர்ப்பழித்தல் :—

வ - று. சீர்மிகு நல்லிசை பாடிச் செலவயர்தும்
கார்முகி லன்னார் கடைநோக்கிப் - போர்மிகு
மண்கொண்ட வேன்மற மன்னரே யாயினும்
வெண்கொண்ட லன்னாரை விட்டு.

இ - ள். சீர்மிக்க நல்லபுகழைப்பாடிச் செல்லவிரும்புவேம், கால மழை யன்னார் வாய்தலைக் கருதி; பூசன்மிக்க பூமியெல்லாங் கைக் கொண்ட வேலினையுடைய மறவேந்தரேயாயினும் பெய்யாமுகிலனை யாரை விட்டு. எ - று.

விட்டு, கார்முகிலன்னார் கடைநோக்கிச் செலவயர்தும். (க)

ஙசசு.—வாணிக வென்றி :—

வ - று. காடுங் கடுந்திரை நீர்ச்சுழியுங் கண்ணஞ்சான்
சாடுங் கலனும் பலவியக்கி - நீடும்
பவிசையாற் பண்டம் பகர்வான் பரியான்
கவிகையா னீக்கல் கடன்.

இ - ள். காட்டையும் கடியதிரையினையுடைய நீர்ச்சுழியையும் கண்ணஞ்சானாய்ச் சகடம்பலவும் மரக்கலம்பலவும் இடந்தோறும்

பி - ம். [1] 'மல்லின் வென்றியும்.' [2] 'யுழவர் கிலனுழு.'

செலுத்தி நீடும் இலாபங் காரணமாகப் பலபண்டமும் விற்கும் வாணிகன் பொருளிற்பற்றிலனுய்ப் பிறர்மிடியைத் தன் கையாலே நீக்குமது, செய்தி. எ - று. (உ)

ங்சரு.—மல்வென்றி :—

வ - று. கண்டான் மலைந்தான் கதிர்வானங் காட்டியே
கொண்டான் பதாகை மறமல்லன் - வண்டார்க்கும்
மாலை துயலு மருவிய மாமலை
போலுந் திரடோள் புடைத்து.

இ - ள். எதிரிமல்லனைக் கண்டான், மாறுபட்டான், ஒளியான் மிக்க ஆகாயத்திடத்தே அவனை எழ வீசிக் குறித்த தாயத்தைக் கொண்டான், வெற்றிக்கொடியினையுடைய மறமல்லன் ; வண்டொலிக்கும் மாலைஅசையும் அருவியினையுடைய பெரிய மலையையொக்கும் திரண்ட தோளினைத் தட்டி. எ - று.

புடைத்துக் கொண்டான்.

தட்டுகை - உடக்கரிக்கை. (ங)

ங்சசு.—உழவன் வென்றி :—

வ - று. மண்பத நோக்கி மலிவயலும் புன்செய்யும்
கண்பட வேர்பூட்டிக் காலத்தால் - எண்பதனும்
தத்துநீ ரார்க்குங் கடல்வேலித் தாயர்போல்
வித்தித் தருவான் விளைவு.

இ - ள். நிலத்தின் செவ்வியைப் பார்த்து மிக்க வயலிடத்தும் கொல்லையிடத்தும் பரக்க ஏரைப்பூட்டி உழுது தற்காலத்தால் நெல்லு வரகு முதலாயின எட்டிணவினையும் தவழுந் திரையொலிக்கும் கடலை வேலியாகவுடைய பூமியிடத்துத் தாயரைப்போல வித்திவிளைப்பான், பல்லுயிர்க்கும் ஆக்கம். எ - று.

எண்பதனுவன :—நெல் வரகு சாமை தினை இறுங்கு கேழ்வரகு கொள் உழுந்து என்பன ; "நெல்வரகு சாமை தினையிறுங்கு கேழ் வரகு - கொள்ளுழுந்தோ டெண்விளைவா கும்." (ச)

ங்சஎ.—ஏறுகோள் வென்றி :—

வ - று. குடைவரை யேந்தியநங் கோவலனே கொண்டான்
அடையவிழ் பூங்கோதை யஞ்சல் - விடையரவம்
மன்றங் கறங்க மயங்கப் பறைபடுத்
தின்று நமர்விட்ட வேறு.

இ - ள். மலையாகிய குடையையேந்திய நம் ஆயனே கொண்டான். இலை மலரும் பூமாலையினையுடையாய், அஞ்சாதேகொள் ; மிக்க ஆரவாரம் மன்றிடத்தே ஒலிப்பக் கண்டார் மயங்கப் பறையறைந்து இன்று நம் உறவுமுறையார் விட்ட ஏற்றை. எ - று. (ரு)

ஙசஅ.—கோழி வென்றி :—

வ - று. பாய்ந்து மெறிந்தும் படிந்தும் பலகாலுங்
காய்ந்தும்வாய்க் கொண்டுங் [1]கடுஞ்சேவல் - ஆய்ந்து
[2]நிறங்கண்டு வித்தகர் நேர்விட்ட கோழிப்
புறங்கண்டுந் தான்வருமே போர்க்கு.

இ - ள். எழப்பாய்ந்தும் காலின்முள்ளையிட்டடித்தும் தாழ்ந்தும் பலகாலுங் கோவித்தும் [3] கூவியும், கடியசேவற்கோழி, ஆராய்ந்து கோழிகளின் நிறமறிந்து கோழிநூல்வல்லவர் சொல்லுக்குச்சொல் ஒப்பாகவிட்ட கோழியைப் புறங்கண்டும் தான் பின்பும் போர்க்கு வாரா நின்றது. எ - று.

புறங்கண்டும் போர்க்கு வரும்.

சொல்லுக்குச் சொல் வெல்லும், ஆமைக்கு ஆமை வெல்லும், தெங்குக்குத் தெங்குவெல்லும் எனக் கோழிகளின் [4] நிலமறிந்துவிடுதல். வித்தகர் - கோழிநூல்வல்லவர். (சு)

ஙசகூ.—தகர்வென்றி :—

வ - று. அருகோடி நீங்கா தணைதலு மின்றித்
திரிகோட்ட மாவிரியச் சீறிப் - பொருகளம்
புக்கு மயங்கப் பொருது புறவாயை
நக்குமா னல்ல தகர்.

இ - ள். சேர ஓடிமீளாதே மிகக்கிட்டுதலும் இன்றிப் புரிந்த கொம்பினையுடைய எதிர்த்த தகர்கெடக் கோபித்துப் போர்க்களத்தே புக்குக் கலங்கப் பொருது புறவாயினை நக்கும், நல்ல தகர். எ - று. (எ)

ஙடுO.—யானை வென்றி :—

வ - று. கஞ்சுகம் வாய்த்த கவளந்தன் கைக்கொண்ட
குஞ்சரம் வென்ற கொலைவேழம் - துஞ்சா
துழலையும் பாய்ந்திறுத் தோடாது தான்றன்
நிழலையுந் தான்சுளிக்கு நின்று.

இ - ள். அட்டிமதுரமிட்டுத் திரட்டின கவளத்தைத் தன்கையிலே கொண்ட யானையை வென்ற கொலைத்தொழிலையுடைய வேழம், உறங்காதே கணையத்தையும் பாய்ந்து முறித்து ஓடாதே தான் தன்னுடைய நிழலையும் வெகுண்டுநின்று துகைக்கும். எ - று.

உம்மை: சிறப்பு. (அ)

ஙடுக.—பூழ்வென்றி :—

வ - று. சொல்லுஞ் சுவட்டவர் சொல்லுக சொல்லுங்காற்
சொல்லும் பலவுள சொன்னபின் - வெல்லும்

(பி - ம்.) [1] 'கடுஞ்சொல்லாராய்ந்து.' [2] 'நிறங்கொண்டு.' [3] 'கூடியுங்கடிய சொற்கோழி.' [4] 'திறமறிந்து.'

நலம்வர நாடி நடுங்காது நூற்கட்
புலவரா லாய்ந்தமைந்த பூழ்.

இ - ள். நூற்பழக்கமின்றியே சொல்லுங் குறும்பூழாடிகள் வேண்டிற்றுச்சொல்லுக, சொல்லுமிடத்துச் சொல்லக்கடவ பலமந்திர முள, அவற்றைச் சொன்னபின் வென்றிபெறும்; நன்மையுண்டாக ஆராய்ந்து கலங்காது நூலிடத்து அறிவுடையாரால் இலக்கணம் ஆராய்ந்து மதித்தபூழ். எ - று.

சொல்லக்கடவமந்திரம் பலவாவன: தீற்றும் அரிசி ஓதுமந்திரமும், பச்சிலை பிசைந்து தடவும்போது சொல்லுமந்திரமும், செவியுள் ளூறுத்து மந்திரமும். (௯)

## ௩௫௨.—*சிவல்வென்றி :—

வ - று. ஓட்டியா ரெல்லா முணரார் புடைத்தபின்
விட்டோட வேண்டுமோ தண்ணுமை - விட்ட
சுவடேற்கு மாயிற் சுடரிழாய் சோர்ந்து
கவடேற்க வோடுங் களத்து.

இ - ள். சபதங் கூறும் சிவலினையுடையாரெல்லாம் அறியார்; எதிர்ச்சிவலைத் தாக்கியபின்பு தண்ணுமையைக் கைவிட்டோட வேண்டுமோ, இந்தச் சிவல் வந்தபொழுதே இதனுக்கு அஞ்சி ஓடவமையும்; இவர் பொரவிட்டவற்றுள் ஒன்றொன்று எதிர்க்குமாயின், விட்டுவிளங்கும் ஆபரணத்தினையுடையாய், வருந்தி இதன் கவட்டினுட் புகுந்து கண்டோர் நகைக்க ஓடுங் களத்திடத்து. எ - று.

ஆதலால் விட்டோடவேண்டுமோ தண்ணுமை. (௧0)

## ௩௫௩.—கிளிவென்றி :—

வ - று. இலநா முரைப்பதன்க ணொல்வளை நாணப்
பலநாள் பணிபதமுங் கூறிச் - சிலநாளுள்
பொங்கரி யுண்கணாள் பூவைக்கு மாறாகப்
பைங்கிளியைக் கற்பித்தாள் பாட்டு.

இ - ள். நாம் அதனிடத்து இகழ்ந்துசொல்லுஞ் சொல் இல; விளங்கும் வளையினையுடையாய், நீ நாணப் பலநாளும் தாழ்ந்த சொற்களையுங் கூறிச் சில நாளுள்ளே மிக்க செவ்வரியினையுடைய மையுண்ட கண்ணாள் நம்பூவைக்கு மாறுபடத் தன் பசுங்கிளியைப் பாட்டைக் கற்பித்தாள். எ - று.

நாமுரைப்பு இல. (௧௧)

## ௩௫௪.—பூவை வென்றி :—

வ - று. புரிவொடு நாவினுற் பூவை புணர்த்துப்
பெரிய வரியவை பேசும் - தெரிவளை
வெள்ளெயிற்றுச் செவ்வாய் வரியுண்க ணாள்வளர்த்த
கிள்ளை கிளந்தவைகீண் டிட்டு.

* பட். 77, ந.

இ-ள். பிரியத்தோடு நாவினாலே பூவையானது வருத்தும் பெரியவான சொல்லுதற்கரிய வார்த்தைகளைச் சொல்லும்; தெரிந்த வளையினையும் விளர்த்த எயிற்றினையும் சிவந்த வாயினையும் செவ்வரிகருவரியாற்சிறந்த மையுண்ட கண்ணினையுமுடையாள் தான் வளர்த்த கிளி சொன்ன வார்த்தைகளைக் கிழித்துக் கீழ்ப்படுத்தி. எ-று.

கீண்டிட்டுப் பேசும். (கஉ)

## ௩டுடு.—குதிரை வென்றி:—

வ-று. ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையும்
கந்து மறமுங் கறங்குளைமா — முந்துற
மேல்கொண் டவைசெலீஇ வென்வேலான் மேம்பட் [டான்
வேல்கொண்ட கண்ணாளை மீட்டு.

இ-ள். விக்கிதம் வற்கிதம் உபகண்டம் ஜவம் மாஜவும் என்னும் இப் பஞ்சதாரையையும் பதினெட்டு வகைப்பட்ட சுற்று வரவினையும் கழியப் பாய்தலையும் கறுவுதலையும் ஒலிக்குந் தலையாட்டத்தினையுமுடைய குதிரையை முந்துற மேல்கொண்டு முன்பு சொன்னவற்றைச் செலுத்தி வெற்றிவேலைக்கொண்டு மேம்பட்டான், பிறரை வென்று வெற்றி மகளைத் தன்னிடத்து மீட்டுக்கொண்டு. எ-று. (கங)

## ௩டுசு.—தேர்வென்றி:—

வ-று. ஒலிமணித் திண்டே ருடையாரை வெல்லும்
கலிமணித் திண்டேராற் காளை - கலிமாப்
பலவுடன் பூட்டிப் படர்சிறந் தைந்து
செலவொடு மண்டிலஞ் சென்று.

இ-ள். ஒலிக்கும் மணியையுடைய திண்ணிய தேரினையுடைய பகைவரை வெல்லும், ஆரவாரிக்கும் மணிகளையுடைய திண்ணிய தேராலே காளையானவன்; மனவெழுச்சியையுடைய குதிரைபலவும் ஒக்கப் பூட்டிச் செல்லுதல் மிக்க பஞ்சதாரையுடனே பதினெட்டுச்சுற்று வரவும் அமர்ந்து. எ-று.

சென்று வெல்லும். (கச)

## ௩டுஎ.—யாழ்வென்றி:—

வ-று. பாலை படுமலை பண்ணி யதன்கூட்டம்
கோலஞ்செய் சீறியாழ் கொண்டபின் — வேலைச்
சுவையெலாந் தோன்ற வெழீஇயினாள் சூழ்ந்த
அவையெலா மாக்கி யணங்கு.

இ-ள். படுமலைப்பாலையையும் அல்லாத பாலைகளையும் ஆக்கி அழகு செய்த சிறியயாழைத் தன்கையிலேகொண்டபின்பு முன்பு சொன்ன திரிபாலைத்திறமெல்லாம் அமுதச்சுவைதோன்ற வாசித்தாள், சுற்றிய அவையினுள்ளாரையெல்லாம் தன்வசத்தாராக்கி, அணங்கு. எ-று.

அணங்கு எழீஇயினாள். (கரு)

### ௩௫௮.—சூது வென்றி :—

வ - று. * கழகத் தியலுங் கவற்றி னிலையும்
அழகத் திருநுதலா ளாய்ந்து - புழகத்துப்
பாய வகையாற் பணிதம் பலவென்றாள்
ஆய வகையு மறிந்து.

இ - ள். சூதின் இயல்பையும் கவற்றினுடைய நிலையையும் பணிச்சையையுடைய திருநுதலினையுடையாள் ஆராய்ந்து புகழினையுடைய மனையிடத்து உபாயவகையால் சூதுபொர ஒட்டின பலவும் வென்றாள், ஆதாயத்தின் கூறுபாட்டையுமறிந்து. எ - று.

அறிந்து பல வென்றாள்.

புகழென்பதன்கட் ககரம் விகாரத்தாற்றொக்கது. (௧௬)

### ௩௫௯.—ஆடல் வென்றி :—

வ - று. * கைகால் புருவங்கண் பாணி நடைதூக்குக்
கொய்பூங்கொம் பன்னாள் குறிக்கொண்டு - பெய்பூப்
படுகளிவண் டார்ப்பப் பயில்வளைநின் றாடும்
தொடுகழன் மன்னன் றுடி.

இ - ள். கையாலும், காலாலும், புருவத்தாலும், கண்ணாலும் தாளத்தையும் செலவையும் இசையையும் கொய்யப்பட்ட பூங்கொம்பன்னாள் கருதிக்கொண்டு சூடியபூவில் மிக்க களிப்பினையுடைய வண்டு ஆரவாரிப்பச் செறிந்த வளையினையுடையாள் நின்று ஆடும், கட்டுங்கழல் வேந்தனுக்குத் துடிக்கூத்தை. எ - று. (௧௭)

### ௩௬0.—பாடல் வென்றி :—

வ - று. * வண்டுறையுங் கூந்தல் வடிக்கண்ணாள் பாடினாள்
வெண்டுறையுஞ் செந்துறையும் வேற்றுமையாக்-கண்டறியக்
கின்னரம் போலக் கிளையமைந்த தீந்தொடையாழ்
அந்நரம்பு மச்சுவையு மாய்ந்து.

இ - ள். வண்டு தங்கும் கூந்தலினையும் மாவடுவகிர்போன்ற கண்ணினையுமுடையாள் பாடினாள்; வெண்டுறைப்பாட்டும் செந்துறைப்பாட்டும் வேறுபாடு தோன்ற, அறிவர் மனத்தாற் கண்டறியக் கின்னரத்தின் ஓசைபோல, இணை கிளை பகை நட்பு இனமென்னும் வகையின் ஐந்தாவதாகிய கிளைத்தொடர்ச்சியமைந்த தித்தித்த கோவையினையுடைய யாழிற் செய்யப்பட்ட அழகிய 1 நரம்பும் மந்தர மத்திம தாரமும் ஆராய்ந்து. எ - று.

ஆய்ந்து பாடினாள்.

செந்துறையென்பது ஓசைகுறித் * * * * (௧௮)

---

* தொல். புறத். சூ. 16, இளம். ; ஷை ஷை ஷை 20, ந. மேற்.

(பி - ம்.) 1 'நரம்பு மந்தரசமு மத்திமதாரகமு மாராய்ந்து.'

ஙசுக.—பிடி வென்றி:—

வ - று. குவளை நெடுந்தடங்கட் கூரெயிற்றுச் செவ்வா
யவளொடு மாமையொப் பான - இவளொடு
பாணியுந் தூக்கு நடையும் பெயராமைப்
பேணிப் பெயர்ந்தாள் பிடி.

இ - ள். செங்கழுநீர்மலரை யொத்த நெடிய பெரிய கண்ணிணையும் கூரிய எயிற்றிணையும் சிவந்த வாயிணையுமுடைய சீதேவியுடன் நிறமொத்த இவளோடு தாளமும் இசையும் செலவும் தப்பாதபடி பரிகரித்துப் பிடிபோல அசைந்து பெயர்ந்து ஆடுங்கூத்தை ஆடினாள். எ - று.

இனிப் பெயர்த்தாளென்று பாடமோதிப் பிடியை நடத்தினாளென்பாருமுளர். (கக.)

ஒழிபு முற்றும்.

ஆகப்பாட்டு ஙசுக.

---

(கக.—சூத்திரம்.)

வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குடை யுழிஞை நொச்சி தும்பையென்
றித்திற மேழும் புறமென மொழிப
வாகை பாடாண் பொதுவியற் றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புற மாகும்.

ஐயனாரிதனார்பாடிய புறப்பொருள் வெண்பாமாலை
மூலமும் உரையும் முற்றுப்பெற்றன. *

---

* பரிசோதனைக்குக்கிடைத்த ஏட்டுப்பிரதிகளுள் ஒன்றில், "சீயர் திருவடிகளே சரணம்; வைத்தியநாத குருவேநம: பெரிய திருவடி குருவே நம: ௧௭௭-ம்ஸு மார்கழிமீ சதுர்த்தசியும் புதன்கிழமையும் உரோகிணியும் பெற்ற சுபதினத்திலே இரத்தினகவிராசர் வெண்பாமாலையுரை எழுதி முற்றும்" என்பது வரையப்பெற்றிருந்தது.

# சூத்திர அகராதி.

[எண் - பக்கஎண்.]


உழிஞையோங்கிய ... 46
கதமலிகரந்தை ... 12
காஞ்சிகாஞ்சி ... 30
காட்சியையம் ... 130
காண்டனயத்தல் ... 134
சீர்சால்போந்தை ... 111
சீர்சால்வாகை ... 73
சீர்சான்முல்லையொடு ... 125
சீர்செலவழுங்கல் ... 147
துன்னருங்கடும்போர் ... 60
நுவலருங்காப்பின் ... 42
பாடாண்பகுதியுள் ... 155
பாடாண்பாட்டே ... 88
மன்னியசிறப்பின் ... 1
முதுபாலையே ... 116
மூதுரைபொருந்திய ... 123
வாடாவஞ்சி ... 19
வெட்சிகரந்தை ... 162
வெட்சிவெட்சியரவம் ... 2
வேட்கைமுந்துறுத்தல் ... 139


# துறையகராதி.

[இதில் திணைப்பெயர்களும் சிலவுண்டு.]


அகத்துழிஞை ... 55
அடிப்படவிருத்தல் ... 59
அதரிடைச்செலவு ... 14
அரசமுல்லை ... 80
அரசவாகை ... 74
அரசவுழிஞை ... 49
அருளொடுநீங்கல் ... 87
அவிப்பலி ... 86
அவையமுல்லை ... 81
அழிபடை தாங்கல் ... 45
அறிவன்வாகை ... 79
ஆகோள் ... 7
ஆஞ்சிக்காஞ்சி ... 40
ஆடல்வென்றி ... 161
ஆண்பாற்கிளவி ... 151
ஆர் ... 112
ஆரெயிலுழிஞை ... 51
ஆள்வினைவேள்வி ... 100
ஆனெறிபிள்ளை ... 15
ஆனந்தப்பையுள் ... 122
ஆனந்தம் ... 121
இயன்மொழிவாழ்த்து ...91,92
இரவுத்தலைச்சேறல் ... 142
இரவுநீடுபெருவரல் ... 137
இருவருந்தபுநிலை ... 65
இல்லவைநகுதல் ... 142
இல்லாண்முல்லை ... 127
இற்கொண்டுபுகுதல் ... 116
உட்கோள் (கைக்கிளை - ஆண்பாற்கூற்று) ... 131
ஷை (கைக்கிளை - பெண்பாற்கூற்று) ... 135
உண்டாட்டு ... 9
உரைகேட்டுநயத்தல் ... 146
உவகைக்கலுழ்ச்சி ... 71
உழபுலவஞ்சி ... 25
உழவன்வென்றி ... 157
உழிஞை ... 47
உழுதுவித்திடுதல் ... 57
உன்னநிலை ... 112
ஊடலுணெகிழ்தல் ... 145
ஊர்கொலை ... 6
ஊர்ச்செரு ... 43
ஊரின்கட்டோன்றியகாமப்பகுதி ... 110
எயிற்பாசி ... 54
எயிற்போர் ... 44
எயிறனையழித்தல் ... 44

எருமைமறம் ... 66
ஏணிநிலை ... 54
ஏமவெருமை ... 66
ஏழகநிலை ... 113
ஏருண்முல்லை ... 82
ஏறுகொள்வென்றி ... 157
ஐயம் ... 130
ஒருதனிநிலை ... 27
ஒள்வாளமலை ... 69
ஓம்படை ... 104
கட்காஞ்சி ... 40
கடவுண்மாட்டுக்கடவுட்பெண்டிர் நயந்தபக்கம் ... 109
கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர்நயந்தபக்கம் ... 109
கடவுள்வாழ்த்து ... 90
கண்டுகண் சிவத்தல் ... 144
கண்டுகைசோர்தல் ... 150
கண்படைநிலை (பாடாண்) ... 92
ஷை (வாகை) ... 85
கணிவன்முல்லை ... 82
கந்தழி (உழிஞை) ... 49
ஷை (பாடாண்) ... 105
கபிலைகண்ணியபுண்ணியநிலை 94
கரந்தை ... 13
கரந்தையரவம் ... 13
கழனிலை ... 113
களவழிவாழ்த்து ... 96
களவேள்வி ... 76
களிற்றுடனிலை ... 69
கற்காண்டல் ... 114
கற்கோணிலை ... 114
கற்புமுல்லை 128,129
கன்முறை பழிச்சல் ... 116
கன்னடுதல் ... 115
கன்னீர்ப்படுத்தல் 114,115
கனவினரற்றல் 137,138
காஞ்சி ... 31
காஞ்சியதிர்வு ... 31
காட்சி ... 130
காடுவாழ்த்து ... 125
காண்டல் ... 134
காண்டல்வலித்தல் ... 136
காதலிற்களித்தல் ... 144
காந்தள் .. 50
கார்முல்லை ... 126
காவன்முல்லை 83,84
கிணைநிலை (பாடாண்) ... 96
ஷை (வாகை) ... 87
கிளிவென்றி ... 159
குடிநிலை ... 18
குடுமிகளைந்த புகழ்சாற்றுநிலை 97
குடைச்செலவு ... 34
குடைநாட்கோள் ... 47
குடைநிலை ... 20
குடைமங்கலம் ... 102
குடைமுல்லை ... 85
குதிரைமறம் (தும்பை) ... 63
ஷை (நொச்சி) ... 44
குதிரைவென்றி ... 160
குழவிக்கட்டோன்றிய காமப்பகுதி ... 110
குற்றிசை ... 155
குற்றுழிஞை ... 52
குறுங்கலி ... 155
குறுவஞ்சி ... 27
கூட்டத்துக்குழைதல் ... 145
கூத்தராற்றுப்படை ... 100
கூதிர்ப்பாசறை ... 79
கைக்கிளை ... 107
கையறுநிலை (கரந்தை) ... 17
ஷை (பொதுவியல்) ... 122
கொடிநிலை ... 105
கொடுப்போரேத்திக் கொடாஅர்ப்பழித்தல் ... 156
கொடை ... 10
கொடைவஞ்சி ... 26
கொண்டகம்புகுதல் ... 144
கொற்றவஞ்சி ... 22
கொற்றவள்ளை ... 23
கொற்றவுழிஞை ... 48
கொற்றவைநிலை (வஞ்சி) 21,22
ஷை (வெட்சி) ... 11
கோழிவென்றி ... 158
சால்புமுல்லை ... 86
சிருங்காரநிலை ... 70
சிவல்வென்றி ... 159
சுரத்துய்த்தல் ... 7

சுரநடை ... 117
சூதுவென்றி ... 161
செருவிடைவீழ்தல் ... 43
செல்கெனவிடுத்தல் ... 147
செலவழுங்கல் ... 148
செலவு ... 5
செவியறிவுறூஉ ... 102
தகர்வென்றி ... 158
தந்துநிறை ... 8
தபுதாரநிலை ... 118
தலைக்காஞ்சி ... 35
தலைத்தோற்றம் ... 8
தலைப்பெயனிலை ... 118
தலைமாராயம் ... 36
தலையொடுமுடிதல் ... 36
தழிஞ்சி (காஞ்சி) ... 32
ஷை (வஞ்சி) ... 28
தன்னைவேட்டல் ...71,72
தாபதநிலை ... 118
தாபதவாகை ... 79
தார்நிலை ... 64
தானைநிலை ... 69
தானைமறம் ... 62
திறைகொண்டு பெயர்தல் ... 59
துடிநிலை ... 11
துணிவு ... 131
தும்பை ... 61
தும்பையரவம் ... 61
துயரவற்குரைத்தல் ... 149
துயிலெடைநிலை ... 92
தூதிடையாடல் ... 149
தேர்மறம் ... 65
தேர்முல்லை ... 126
தேர்வென்றி ... 160
தொகைநிலை (உழிஞை) ... 60
ஷை (தும்பை) ... 72
தொட்டகாஞ்சி ... 38
தொடாக்காஞ்சி ... 39
தோலுழிஞை ... 51
நயத்தல் ... 134
நயப்புற்றிரங்கல் ... 133
நல்லிசைவஞ்சி ... 29,30
நலம்பாராட்டல் ... 132
நாடுவாழ்த்து ... 96
நாண்மங்கலம் ... 98
நாண்முல்லை ... 127
நாழில் ... 67
நாழிலாட்டு ... 67
நெஞ்சொடுமெலிதல் ... 138
நெடுமொழிகூறல் ... 17
நெடுமொழிவஞ்சி ... 24
நொச்சி ... 42
பகட்டுமுல்லை ... 128
பகன்முனிவுரைத்தல் ... 136
படைவழக்கு ...32,33
பயந்தோர்ப்பழிச்சல் ... 132
பரத்தைகூறல் ... 153
பரத்தையையேசல் ... 143
பரத்தைவாயில் பாங்கிகண்டுரைத்தல் ... 154
பரிசில்விடை ... 99
பரிசிற்றுறை ... 91
பரிசினிலை ... 99
பருவமயங்கல் ... 150
பழிச்சினர்பணிதல் ... 107
பள்ளிமிசைத்தொடர்தல் ... 146
பாசறைநிலை ... 28
பாசிநிலை ... 53
பாடகச் சீறடிபணிந்தபினிரங்கல் ... 146
பாடல்வென்றி ... 161
பாடாண்பாட்டு ... 89
பாண்பாட்டு ... 65
பாண்வரவுரைத்தல் ... 152
பாணாற்றுப்படை ... 100
பாதீடு ... 9
பார்ப்பனமுல்லை ... 81
பார்ப்பனவாகை ... 77
பான்முல்லை ... 128
பிடிவென்றி ... 162
பிரிவிடையாற்றல் ... 140
பிள்ளைத்தெளிவு ... 16
பிள்ளைப்பெயர்ச்சி ... 17
பிள்ளையாட்டு ... 16
பிள்ளைவழக்கு ... 10
பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல் ... 154
பின்றேர்க்குரவை (தும்பை) 68

பின்றேர்க்குரவை (வாகை) 76
பின்னிலைமுயறல் ... 140
புகழ்ந்தனர் பரவல் ... 106
புண்ணொடுவருதல் ... 14
புணராவிரக்கம் ... 133
புலவராற்றுப்படை ... 106
புலவரேத்தும்புத்தேளுடு ... 124
புலவிபொருளாகத் தோன்றிய பாடாண்பாட்டு ... 108
புலவியுட்புலம்பல் ... 142
புலனறிசிறப்பு ... 10
புறத்திறை (உழிஞை) ... 50
ஷை (வெட்சி) ... 6
புறத்துழிஞை ... 53
புறநிலைவாழ்த்து ... 104
பூக்கோணிலை ... 35
பூசன்மயக்கு ... 119
பூசன்மாற்று ... 7
பூவைநிலை ... 90
பூவைவென்றி ... 159
பூழ்வென்றி ... 158
பெண்பாற்கிளவி ... 151
பெருங்காஞ்சி (காஞ்சி) ... 33
ஷை (பொதுவியல்) ... 124
பெருஞ்சோற்றுநிலை ... 29
பெருந்திணை ... 108
பெருவஞ்சி ... 29
பேய்க்காஞ்சி ... 38
பேய்க்குரவை ... 68
பேய்நிலை ... 38
பேராண்முல்லை ... 84
பேராண்வஞ்சி ... 23
பொருண்மொழிக்காஞ்சி ... 124
பொருநவாகை ... 78
பொருநாற்றுப்படை ... 101
பொருளொடுபுகறல் ... 87
பொலிவுமங்கலம் ... 98
பொழுதுகண்டிரங்கல் ... 143
போந்தை ... 111
போர்க்களத்தொழிதல் ... 15
போர்மலைதல் ... 14
மகட்பாலிகல் ... 58
மகட்பாற்காஞ்சி ... 41
மகண்மறுத்துமொழிதல் ... 45
மங்கலநிலை ... 93
மடலூர்தல் ... 148
மண்ணுமங்கலம் (உழிஞை) 58
ஷை (பாடாண்) ... 103
மணமங்கலம் ... 98
மல்வென்றி ... 157
மழபுலவஞ்சி ... 26
மறக்களவழி ... 75
மறக்காஞ்சி ... 37
மறமுல்லை ... 85
மறனுடைப்பாசி ... 42
மன்னைக்காஞ்சி ... 39
மாராயவஞ்சி ... 24
மாலைநிலை ... 120
முதுகாஞ்சி ... 125
முதுபாலை ... 117
முதுமொழிக்காஞ்சி ... 123
முதுமொழிவஞ்சி ... 25
முதுவுழிஞை ... 55
முரசவாகை ... 75
முரசவுழிஞை ... 48
முல்லை ... 126
முற்றுமுதிர்வு ... 56
முற்றுழிஞை ... 50
முன்றேர்க்குரவை (தும்பை) 67
ஷை (வாகை) ... 76
முனைகடிமுன்னிருப்பு ... 41
மூதானந்தம் ... 120
மூதின்முல்லை ... 82
மெலிதல் ... 135
மெலிவொடுவைகல் ... 136
யாழ்வென்றி ... 160
யானைகைக்கோள் .. 56
யானைமறம் ... 63
யானைவென்றி ... 158
வஞ்சி ... 20
வஞ்சியரவம் ... 20
வஞ்சினக்காஞ்சி ... 35
வரவெதிர்ந்திருத்தல் ... 141
வல்லாண்முல்லை ... 83
வள்ளி ... 106
வாகை ... 73
வாகையரவம் ... 74
வாடைப்பாசறை ... 80

வாண்மங்கலம் ... 103
வாண்மண்ணுநிலை ... 57
வாணாட்கோள் ... 47
வாணிகவாகை ... 77
வாணிகவென்றி ... 156
வாணிலை ... 21
வாயினிலை ... 89
வாயுறைவாழ்த்து ... 101
வாராமைக்கழிதல் ... 141
வாள்செலவு ... 34
விரிச்சி ... 4
விளக்குநிலை ... 94
விறலிகேட்பத்தோழிகூறல் 153
விறலிதோழிக்குவிளம்பல் ... 153
விறலியாற்றுப்படை ... 101
வீற்றினிதிருந்த பெருமங்கலம் 97
வெட்சி ... 3
வெட்சியரவம் ... 4
வெருவருநிலை ... 70
வெள்ளிநிலை ... 95
வெளிப்படவிரத்தல் ... 133
வெறியாட்டு (பெருந்திணை) 152
ஷை (வெட்சி) ... 12
வேட்கைமுந்துறுத்தல் ... 139
வேத்தியன்மலிபு ... 18
வேம்பு ... 111
வேய் ... 5
வேள்விநிலை ... 95
வேளாண்வாகை ... 78
வேற்றுப்படைவரவு ... 57


---

# கொளுவின் முதற்குறிப்பகராதி.

(கொளுவென்பது ஒவ்வொரு வெண்பாவின்முன்னும் பெரும்பான்மை இரண்டடியாலும் சிறுபான்மை மூன்றடியாலும் ஆக்கப்பட்டு அதன்கருத்தைப் புலப்படுத்திநிற்பது ; கொளு - கருத்து; இதனைச் சூத்திரமென்றுங் கூறுவர்.)


அகத்தோன்காலை ... 56
அஞ்சொல்வஞ்சி ... 138
அடங்காதார் ... 53
அடரவிர்பைம்பூண் ... 94
அடல்வேலாடவர் ... 82
அடலஞ்சா ... 39
அடுதிறலணங்கார ... 76
அடுதிறலரணத் ... 59
அடுதிறன்மன்னரை ... 92
அடுமுரணகற்று ... 113
அடையாதார் ... 48
அண்ணனான்மறை ... 94
அணிவயலூர ... 143
அந்தமில்புகழான் ... 95
அந்தழையல்குல் ... 133
அயிற்படையின் ... 44
அரிபாயுண்கண் ... 128
அருஞ்சுரத்தும் ... 7
அருந்திறற் ... 126
அருந்திறை ... 23
அருமிளையோடு ... 43
அருமுனையான் ... 34
அவன்பெயர் ... 115
அழிகுநர்புறக்கொடை ... 28
அழிபடரெவ்வம் ... 132
அழிவின்றுபுகழ்நிறீஇ ... 72
அளப்பருங்கடற் ... 94
அறந்தருசெங்கோல் ... 98
ஆங்கவர்கூறிய ... 150
ஆங்கவன்மூப் ... 153
ஆடமைத்தோளி ... 121
ஆடியலவிர் ... 50
ஆழ்ந்துபடுகிடங்கோ ... 43
ஆற்றாரொழிய ... 14
ஆனாவென்றி ... 114
இகலடுதோள் ... 98

இணரார்கோதை ... 131
இமையாநாட்டத் ... 109
இருங்கண்வானத் ... 106
இருபடையும் ... 69
இல்லவைசொல்லி ... 142
இல்லும்பதியும் ... 83
இலைப்பொலிதார் ... 37
இலைபுனைவாகை ... 73
இழிபுடன்றிகல் ... 45
இவட்பயந்தெடுத் ... 132
இளமைந்தர் ... 110
இறுத்தபினழி ... 30
இறைவளைநெகிழ ... 140
இன்கதிர்முறுவற் ... 118
இன்னதுசெய்த ... 104
இன்னதொன்றெய் ... 106
இன்னோரின்னவை ... 91
ஈண்டியநிரை ... 10
உடல்சினத்தார் ... 54
உணராவெவ்வம் ... 133
உம்பிலரிவை ... 154
உரவெய்யோனினந் ... 8
உருத்தெழுமன் ... 126
உருவவால்வளை ... 150
உளம்புகல ... 84
உறுவரைமார்ப ... 144
ஊழிமாலை ... 149
எண்ணருஞ்சீர்த்தி ... 103
எண்ணார்பல்லெயில் ... 57
எம்மதிலினிகல் ... 60
எரிந்திலங்கு ... 124
எழுமரவக் ... 63
எழுவுறழ்திணி ... 67
எறிபடையானிக ... 63
ஏத்திச்சென்ற ... 100
ஏந்திழையாட்டரு ... 41
ஏந்துபுகழுலகி ... 113
ஏப்புழைஞாயி ... 42
ஏமாண்ட ... 44
ஏழகமூரினு ... 113
ஒண்டொடி ... 137
ஒருகுடைமன்னனை ... 64
ஒலிகடல்வையகத்து ... 87
ஒலிகழலானக ... 75
ஒளியினீங்கா ... 11
ஒளியுமாற்றலு ... 89
ஒளிற்றெஃகம் ... 69
ஒன்றல்ல ... 148
ஒன்னார்கூறு ... 135
ஒன்னாதார்படை ... 24
ஒன்னாதார்முனை ... 29
ஓங்கியகல் ... 115
கங்குற்கனைதுயி ... 93
கட்டேரதுவகை ... 27
கண்மகிழ்ந்து ... 16
கணம்பிறங்க ... 7
கதிர்வேற்கணவ ... 120
கயக்கருங்கடற் ... 103
கயலேர்கண்ணி ... 120
கருங்கடலுண் ... 50
கருங்கழன்மற ... 68
கருதாதார்மதிற் ... 52
கலந்தடையார் ... 47
கலவாமன்னர் ... 111
கலவார்முனைமேற் ... 4
கவர்கணைச்சுற்றங் ... 9
கழல்வேந்தர்படை ... 67
கழிந்தோன்றன் ... 122
கழுமியகாதற் ... 127
களங்கழுமியபடை ... 67
கறவைகாவல ... 90
கன்னவிறிணிதோட் ... 134
கன்னவிறோளான் ... 130
காண்டல்வேட்கை ... 142
காதல்பெருகக் ... 144
காதற்கணவனொடு ... 40
காம்புயர்கடத்திடை ... 117
காமுறுகாமந் ... 151
காய்கதிர்நெடுவேற் ... 72
